கலைமாமணி **விக்கிரமன்**

எழுதிய சமூகச் சிறுகதைகள்

# கதீஜாவின் உள்ளம்

தொகுதி

**6**

www.tamilnesan1981.blogspot.in

# கதீஜாவின் உள்ளம்

## சிறுகதைத் தொகுதி - 6

நற்கதை நம்பி

கலைமாமணி **விக்கிரமன்**

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

**யாழினி பதிப்பகம்**™

புதிய எண். 18, அம்பர்சன் தெரு,
முதல் தளம், குறளகம் எதிரில்
பிராட்வே, சென்னை - 600 108
தொ.பேசி 044-25369892, 25363186

# நூல் விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கதீஜாவின் உள்ளம் |
| ஆசிரியர் | : | கலைமாமணி விக்கிரமன் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | சிறுகதைத் தொகுப்பு |
| முதல் பதிப்பு | : | 2013 |
| உரிமை | : | © ஆசிரியருக்கு |
| அளவு | : | டெமி 1/8 |
| பக்கங்கள் | : | 160 |
| விலை | : | ₹ 100/- |
| நூல் வெளியீடு | : | யாழினி பதிப்பகம்™<br>பு.எண். 18, அம்பர்சன் தெரு,<br>முதல் தளம், குறளகம் எதிரில்,<br>பிராட்வே, சென்னை-600 108.<br>தொ.பேசி. 044-25369892, 25363186 |
| அச்சிட்டோர் | : | தி இம்பீரியல் கிராபிக்ஸ்,<br>சென்னை-600 001. |

# என்றும் புதிதாய்ப் பிறக்கும் இலக்கியவாதி

## சுப்ர.பாலன்

புறநானூற்றுப் பாடல் ஒன்று. அநேகமாக எல்லாரும் அறிந்ததுதான். பாரி என்ற நாடிழந்த மன்னனின் பெண்கள் பாடியதாய்க் காணப் படுகிறது. 'அற்றைத் திங்கள்...' என்று தொடங்குகிற 112-ம் பாடல். இதில் கூறப்பட்டுள்ள செய்தி - அதைச் செய்தியாகப் பார்க்காமல், ஒரு சிறுகதை நேர்த்தியோடு பார்த்தால், மனம் கனத்துப் போகும்.

'போன பௌர்ணமியின்போது... எங்கள் தந்தை இருந்தார். எங்கள் நாடும் இருந்தது. இந்தப் பௌர்ணமியில் எல்லாம் போய்விட்டன' என்பதே செய்தி. ஒரு முப்பது நாள்களுக்குள் என்னவெல்லாம் நிகழ்ந்து விட்டன என்பதைச் சிந்திக்க முடிந்தால், வியப்போடு நோக்க முடிந்தால், நீங்கள் ஓர் அருமையான சிறுகதை ஆசிரியர் அல்லது அப்படி ஒன்றை உணர்ச்சிவயப்பட்டு ரசிக்கும் திறமை உடையவர் என்று சொல்லி விடலாம்.

'பழம் தின்று கொட்டையும் போட்ட' என்று சொல்வார்களே, அந்த மாதிரி தமிழ்ச் சிறுகதைகள், நாவல் உலகில் மூத்த நிலையில் நின்ற வழிபடத்தக்க பெருமிதத்தோடு விளங்குகிறவர் கலைமாமணி விக்கிரமன் அவர்கள். 'நந்திபுரத்து நாயகியா?' என்று புருவர் உயர்த்த வைக்கும் விக்கிரமன் அவர்கள் மணிமணியான சிறுகதைகளையும் கணிசமாக எழுதியிருப்பவர்.

பல சிறுகதைத் தொகுதிகளை முன்பே வெளியிட்டிருக்கும் பெரியவர் விக்கிரமன் அவர்களின் இந்தச் சிறுகதைத் தொகுதி முற்றிலும் வித்தியாசமானது; நூறாவது சிறுகதையை உள்ளடக்கியது.

85 வயதைத் தொட்டு நிற்கும் ஆசிரியர், இந்தக் கதைகள் பலவற்றை எழுதிய காலம், காதலும் மீசையும் அரும்பிய காலம்! ஏறத்தாழ அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட கதைகளும் இதில் உண்டு. உதாரணமாகக் 'கல்கி' வார இதழ் 1945ஆம் ஆண்டில் நடத்திய சிறுகதைப் போட்டியில், தேர்வாகி வெளியான கதை 'கண்டக்டர்கந்தப்பன்'. அதற்கு முன்பே 1945ஆம் ஆண்டிலேயே அவர் கதைகளை, அவர் அச்சில் பார்த்து விட்டார்.

கலைமாமணி விக்கிரமன் அவர்கள், என்னை இந்தக் கதைகளைப் படித்துப் பார்த்து முன்னுரை எழுதுங்கள் என்று தந்தபோது எனக்குப் பிரமிப்பாக இருந்தது. தவிர, நான் சுமார் 150 கதைகள் மட்டுமே எழுதியிருப்பவன். பெரும்பாலும் கட்டுரையாளனாகவே 'அவதாரம்' நேர்ந்து விட்டது.

இந்நிலையில் கலைமாமணி விக்கிரமன் அவர்களின் கதைகளுக்கு நான் எப்படி கருத்துச் சொல்ல முடியும் என்று தயங்கினேன்.

''எழுதுங்கள். நீங்களும் சிறுகதை எழுதியவர், ரசிகர்தானே?'' என்று அன்புக்கட்டளையிட்டு விட்டார்.

கதைகளை வரிசைப்படி படிக்காமல் 'தொடுகுறி ஜோஸ்யம்' மாதிரி தேர்ந்தெடுத்துப் படிக்கத் தோன்றியது. இதுதான் நான் புத்தகம் படிக்கும் 'லட்சணம்' என்று வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளலாம். அதிலும் ஒரு சுவை உண்டு. அந்த முயற்சியில் எனக்கு முதலில் வந்த கதை 'எட்டாவது கடிதம்'. இதையும் இன்னும் சில கதைகளையும் படித்தபோதுதான் மேலே சொன்ன பாரி மகளிர் பாடிய புறநானூற்றுப் பாடல் நினைவுக்கு வந்தது.

கலைமாமணி விக்கிரமன் அவர்களைப் பொறுத்தவரையில், வெறுமனே கதை சொல்வதோடு மட்டும் நின்றுவிடாமல், கதைகள் எழுதப்பட்ட காலங்களின் சூழலை அப்படியே அவற்றில் பதிவு செய்திருப்பது ஒரு தனிச்சிறப்பு.

இன்றைக்கும் ரயில் வண்டிகளில் பிச்சை எடுக்கிறவர்களைப் பார்க்கிறோம். 'சுதந்திரப் பறவை' (தொகுதி 3 - 'அழகின் நிறம்' தொகுப்பில் வெளியான) கதையில் வருகிற மாதிரி எத்தனை பேரைப் பார்க்கிறோம்? எத்தனை பேருக்கு இந்த மாதிரி நாகராஜன்களை அச்சு வாகனத்தில் அமர்த்தி அழகுப் பார்க்கத் தோன்றுகிறது?

'கதீஜாவின் உள்ளம்' கதையிலும் ஒரு பிச்சைக்காரிதான் நாயகி.

'பிச்சைக்காரர்களிலேயும் புருஷன் - பெண்சாதி இருக்காங்களா?'

என்று யாரோ கேலி பேசுவதுபோல் ஆசிரியர் எழுதியிருந்தாலும் அந்த உறவை, காதலை மையப்படுத்தி அருமையாக எழுதப்பட்டிருக்கும் கதை இது.

இன்றைய குரோம்பேட்டை சுற்று வட்டாரம் தொட்டில் குழந்தையாக இருந்த காலங்கள் ஐம்பது வயதுக்குட்பட்ட யாருக்கேனும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. 'சுதந்திரப் பறவை' சிறுகதையில் அதைக் காணலாம்.

'குரோம்பேட்டை ஸ்டேஷனிலிருந்து ராமாராவின் வீடு இரண்டு பர்லாங் தொலைவில் இருந்தது. இப்போதுதான் அந்தப் பக்கத்தில் ஒன்றிரண்டு வீடுகள் ஏற்பட ஆரம்பித்திருக்கின்றன' என்று எழுதுகிறார்.

'இரண்டு பர்லாங்' என்பது அரை கி.மீ. கூட இல்லை! அதேபோல் 'நுங்கும் நுரையுமாக வைகை' ஓடுகிற அழகை 'முள்ளும் மலரும்' என்ற சிறுகதையில் பதிவு செய்திருக்கிறார் ஆசிரியர்.

'இந்த வருஷம்' சென்னையில் வெல்லம், சர்க்கரை எதுவும் பொங்கலுக்குக் கிடைக்காது என்று ஆகிவிட்டவுடன் சென்னையிலே பொங்கல் தினத்தைப் பொங்காத உள்ளத்துடன் கொண்டாடி என்ன பயன்?' என்று சிங்கபுரம் என்னும் கிராமத்துக்குக் கிளம்புகிறவர் சொல்வதாய் மலரும் கதை 'சிங்கபுரத்துச் சிங்காரி'.

அப்படியும் ஒரு பஞ்ச காலம் இருந்தது என்பது என்னைப் போல் எழுபதைத் தொட்டவர்களுக்கே தெரியும். கழுவக் கழுவ நாற்றம் போகாத ஒருவிதமான அரிசி உலையில் கொதிக்கும்போது வீட்டுக்குள் மனிதர்கள் இருக்கவே முடியாது. 'வெந்ததைத் தின்று' வாழ்ந்த நாள்கள் அவை. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலம் அது என நினைவு. இப்படி 'கால தரிசனம்' காட்டுகிற அருமையான கதைகளைப் படிக்கும்போது 'நாஸ்டால்ஜிக்' நினைவுகள் அலையலையாய் மேலெழுந்து வருகின்றன.

வாசகர்களையும் அந்த அந்தக் காலங்களுக்கே அழைத்துச் சென்று விடுகிற நேர்த்தி ஒரு தேர்ந்த படைப்பாளிக்கு மட்டுமே கைவரக்கூடிய அற்புதக் கலை. அதன் உச்சக்கட்டப் பரிணாம வளர்ச்சிதான் வரலாற்றுப் புதினங்களை உருவாக்கவும் உதவுகிறது. இல்லாவிட்டால் பல்லவர், சோழர்கள், சாளுக்கியர்கள் வாழ்ந்த காலங்களை நாம் இன்றும் கண் முன்னால் நடப்பவை போல் அனுபவித்து மகிழ முடியுமா?

ஜாம்ஷெட்பூர் 'திம்லானா' ஏரி இன்றைக்கும் இருக்கிறதா அல்லது அங்கேயும் வீடுகள் முளைத்துக் 'கான்கிரீட் ஜங்கிள்' உருவாகி இருக்குமா என்று சந்தேகம் வந்தது. 'இரு கடிதங்கள்' (தொகுதி 1 - 'செவ்வந்திப்பூ சிங்காரி' தொகுப்பில் வெளியான) கதையைப் படிக்கிறபோது, அந்த ஏரியின் குளுமையை நுகர முடிகிறதே! ஆனால், இன்றைக்கும் குடிநீர் வழங்கும் அருமையான நீர்நிலையான அந்தப் பகுதியில் தாகம் தீர்க்கிறது என்ற தகவலைக் கேட்டறிவதில் மகிழ்ச்சியாக இருக்கிறது. தமிழகத்திலிருந்த ஆயிரக்கணக்கான ஏரி குளங்களில் வீடுகளைப் பயிரிட்டு விட்ட காலத்தில் 'திம்லானா' போன்ற நீர்நிலைகள் பெருமிதம் தருபவைதாமே!

ஒரு கால் நூற்றாண்டுக்கு முன்னால் வரலாறு படைத்த கதாசிரியர்கள் பலர், கதை சொல்லும் பாங்கில் புதிய புதிய உத்திகளைக் கையாண்டார்கள். இன்றைக்கு அவையெல்லாம் காலம் கடந்தவை என்று தோன்றலாம். கதையின் பாத்திரங்களே மாறி மாறிப் பேசுவது, கடிதங்கள் பதில் கடிதங்கள் என்று நிகழ்வுகளை விவரிப்பது என்றெல்லாம் எழுதப்பட்ட காலங்கள் இலக்கியத்தின் பொற்காலமாய் இருந்தது.

இந்தச் சிறுகதைத் தொகுப்பிலும் கலைமாமணி விக்கிரமன் அவர்கள் எழுதியுள்ள சிறுகதை ஒன்றை அந்த முறையில் படிப்பது ஆரோக்கியமானதாக இருக்கிறது. 'சிங்கபுரத்து சிங்காரி'யில் குருமூர்த்தி, சிங்காரி, நடராஜன் ஆகியோர் அடுத்தடுத்துப் பேசிக் கதையை நகர்த்துகிற அழகைக் காணலாம்.

சர்க்கஸ் ஆட்டம் என்பது மிகவும் பிரபலமாக இருந்த காலங்கள் இனிமேல் வரப்போவதில்லை. பிராணிகளை வதைக்கக்கூடாது என்று மனிதாபிமானச் சட்டங்கள் நடைமுறைக்கு வந்துவிட்டதால், முன்போல் விலங்குகளை வைத்து வேடிக்கைக் காட்ட முடியாது. இந்தத் தொகுப்பில் உள்ள 'ஆசை வலை' கதையில் குடும்பமாக வாழும் சர்க்கஸ் கலைஞர்களை மையப்படுத்தி எழுதியிருக்கிறார்.

'புலிக்குகை' கதையிலும் 'அருள்' கதையிலும் அருமையான குடும்ப உறவுகள் பற்றிப் படிக்கிறோம். அதிலும் 'அருள் புரிவாய் கருணைக் கடலே' பாடித் தவமிருந்த தர்மு ஒரு வாழும் பாத்திரமாகவே கண் முன்னால் வந்து நிற்கிறாள். ஐம்பதுகளில் அநேகமாக எல்லாப் பெண் பார்க்கும் வைபவங்களிலும் மங்கல நிகழ்வுகளிலும் தவறாமல் ஒலித்த பாடல் அது. இப்போது அது எங்கே போயிற்று?

'எட்டாவது கடிதம்' - சீதாவும் பிரியம்வதையும் எத்தனை விதமான

மனப் போராட்டங்களைக் கண்முன்னால் கொண்டு வருகிறார்கள்! இப்படி, ஒவ்வொரு சிறுகதையாக ஆர அமரப் படித்து அனுபவிக்கலாம்.

மனம் என்றைக்குமே சிரஞ்சீவியானது. அதற்கு மட்டும் முதுமை என்பது கிடையாது. முதுமை, தளர்வு எல்லாம் உடலுக்குத்தான். கதாசிரியனுக்கு இருபதும் அறுபதும் - ஏன் எண்பதும் நூறும் கூட ஒன்றே தான். எழுதுகோலுக்கு முதுமையே கிடையாது. அது மனம் சார்ந்தது. எழுத்தாளர்கள் 'என்றும் புதிதாய்ப்' பிறப்பெடுக்கிறவர்கள்.

இந்தக் கதைகள் அவ்வளவையும் படித்து முடித்ததும் தோன்றுவது இதுதான்: கடவுளையே பக்தன் வாழ்த்தலாம், 'நமசிவாய வாழ்க; நாதன்தாள் வாழ்க' என்றெல்லாம்! அதே சம்பிரதாயத்தோடு பெரியவர் விக்கிரமன் அவர்களையும் வாழ்த்தத் தோன்றுகிறது. 'இளமை' மாறாமல் அவர் இன்னும் எழுத வேண்டும். குறிப்பாக - சிறுகதைகள் எழுத வேண்டும். துரதிஷ்டவசமாக நல்ல சிறுகதை எழுதுகிறவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகத் தோன்றுகிறது.

பெரியவர் விக்கிரமன் அவர்கள் அண்மைக்காலக் கணிப்பொறி, செல்பேசிக் காலத்துப் பதிவுகளையும் தம்முடைய பாணியில் புதிது புதிதாய் எழுத வேண்டும். அந்த வல்லமை மகாகவி பாரதியையும், அமரர் கல்கியையும் மனம் நிறைந்து போற்றி வழிபடும் கலைமாமணி விக்கிரமன் அவர்களின் பேனாவுக்கு உண்டு. இந்த ஆசையோடு, விண்ணப்பத்தோடு என்னுடைய சிந்தனைகளுக்குப் புள்ளி வைத்து மகிழ்கிறேன்.

தாம்பரம்

அன்புடன்,
**சுப்ர.பாலன்.**

www.tamilnesan1981.blogspot.in

| கதை வரிசை | சிறுகதையின் பெயர் | பக்க எண் |
|---|---|---|
| 77. | பாதுகாப்பு வளையம் | 7 |
| 78. | அழுக்கு | 23 |
| 79. | கதீஜாவின் உள்ளம் | 31 |
| 80. | முள்ளும் மலரும் | 45 |
| 81. | சிங்கபுரத்துச் சிங்காரி | 57 |
| 82. | பூங்கொடியின் ஆவி | 71 |
| 83. | கள்ளியின் உள்ளம் | 79 |
| 84. | கட்டாய தர்மம் | 87 |
| 85. | ஆசை வலை | 92 |
| 86. | சங்குத்தேவனின் புனர்ஜென்மம் | 102 |
| 87. | செங்கோடனின் மகள் | 117 |
| 88. | அவள் ஒரு குழந்தை அவளுக்கு ஒரு குழந்தை | 131 |
| 89. | யாருக்குக் கல்யாணம்? | 141 |
| 90. | புலிக்குகை | 152 |

# 77. பாதுகாப்பு வளையம்

மயில்கோட்டை முருகபிரான் அருள்சித்தர், முக்காலம் உணர்ந்த - சகலப் பிணி தீர்க்கும் - எல்லாவிதக் குறைகளையும் போக்கும் - தவத்திரு யோகானந்த சுவாமிகளைத் தரிசிக்க ஆண்களும் பெண்களும் கூடியிருந்தனர்.

அவரவர் சக்திக்கேற்ப பழங்கள், பூ, வெற்றிலை கொண்டு வந்திருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குறை.

சுவாமிகளை ஒருமுறை தரிசித்தாலே துன்பம், துயரம், பிணிகள் நீங்கிவிடும் என்ற நம்பிக்கை ஒவ்வொருவரிடமும் இருந்தது.

அந்தக் கூடத்தின் சுவர்களில் பல தலைவர்கள், நடிகர்கள், பிரபல அதிகாரிகள் தவத்திரு சுவாமிகளுக்குப் பொன்னாடை போர்த்தும் வண்ணப் போட்டோக்கள்.

வந்திருப்பவர்கள் தங்கள் கவலையைப் போக்க, சுவரில் இருந்த சுவாமிகளின் பெருமையை விளம்பரப்படுத்தும் படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தங்களை அழைக்கும் திருவுளம் எப்போது சுவாமிகளுக்கு வரப் போகிறதோ என்ற ஏக்கம் வேறு.

அழைத்தால்தான் போகலாம்!

ஒவ்வொரு முறையும் சுவாமிகளின் அறைக்கதவு திறந்து, அவர் சீடர் வெளியே வரும்போது ஒவ்வொருவருக்கும் தங்களைத்தான் அழைக்கப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு. அதனால் பரபரப்பு.

'ஹூம்... நம் கஷ்டங்கள் தீர்வதற்கு இன்னும் வேளை வரவில்லை' என்ற 'திருப்தி'யுடன் அவர்கள் முன் ஹாலில் ஏக்கத்துடனே அமர்ந்திருந்தனர்.

கதவு திறந்தது. சீடர் வெளியே வந்தார்.

''தேவகுஞ்சரி யாரம்மா?'' என்று குரல் கொடுத்தார்.

தேவதையே எழுந்து நடந்து செல்வதுபோல் இளம் பெண் ஒருத்தி தன் ஆடையைச் சரி செய்தபடி சுவாமிகளின் அறைக்குள் நுழைந்தாள்.

மற்றவர்களைப்போல்பூ, பழம்எதையும்கையில்வைத்திருக்கவில்லை. சிறு கைப்பை மட்டுமே.

சுவாமிகளை வணங்கி எழுந்து நின்றவளை, சுவாமிகள் ஒருமுறை உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை மேயவிட்டு விழுங்கினார்.

தாடி மீசைக்குள் மறைந்திருக்கும் பற்களை அதிகம் வெளியே புலப்படுத்தாமல் மெல்ல நகைத்து, ''அம்மா! உன் பெயர் என்ன?'' என்று கேட்டார்.

தேவகுஞ்சரி திடுக்கிட்டாள்.

'என் பெயரைத் தெரிந்து கொள்ளாமலா சுவாமிகள் அழைத்திருக் கிறார்? இதுவும் ஒரு பரீட்சையா?'

''மிஸ் தேவகுஞ்சரி'' என்று கூறிவிட்டுச் சுவாமிகள் விழிகளை நேருக்கு நேர் சந்தித்தாள்.

''மிஸ் தேவகுஞ்சரி எம்.ஏ., எம்.காம் மற்றும் இத்யாதி, இத்யாதி... புதிய படிப்புகளுக்கான பட்டங்கள்'' என்று கூறிய அவர், தனக்கு அவளைப் பற்றி முன்னமே தெரியும் என்பது போல் சிரித்தார்.

தேவகுஞ்சரி சில நாள்களுக்கு முன்பு தன் 'லெட்டர் ஹெட்'டில் அந்தத் தொழிற்சாலை அதிகாரிக்கு எழுதிய கடிதம் அவர் எதிரே இருந்ததை அறிந்து கொள்ளவில்லை.

''தேவகுஞ்சரி... நல்ல பெயர். முருகபிரானுக்குப் பரிசாகக் கிடைத்த தேவமகளின் பெயர். முருகன் அழகை, அறிவை, ஆற்றலை உனக்குக் கொடுத்திருக்கிறான். படித்த படிப்புக்கு உடனே பெரிய வேலை. நல்ல சம்பளத்தில் உத்தியோகம். அப்படியும் உனக்கு ஒரு குறை. அப்படித் தானே?''

தேவகுஞ்சரி சுவாமிகள் கூறும்போது தலைகுனிந்திருக்கவில்லை. சுவாமிகளுக்குத் தன் துயரம் எப்படித் தெரியும் என்பதுதான் வியப்பாக இருந்தது. அதைப் பற்றி ஆராய்ந்து சுவாமிகளின் சக்தியைப் பரிசோதிக்க அவள் விரும்பவில்லை.

மேலும் சுவாமிகளிடம் இரண்டே கேள்விகள் மட்டுமே கேட்கலாம். அதிலும் பத்து நிமிடங்கள் அவரிடம் சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி

செய்து கொள்ளலாம் என்ற கட்டுப்பாடு இருக்கும்போது. தேவகுஞ்சரி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. சற்றுப் [illegible] கூறினாள்...

"சுவாமிகளே! எல்லாமே முன்பாகத் தெரிந்து கொண்டு விட்டீர்கள். என் அழகே எனக்கு விரோதியாக இருக்கிறது. உங்களிடம் உண்மையைச் சொல்கிறேன். என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புபவர்களை விட என் உடலை விரும்பும் கழுகுகள் அதிகமாகிவிட்டனர். யாரையெல்லாம் நான் மதித்துப் பழகுகிறேனோ அவர்கள் கடைசியில் என்னை அனுபவிக்கவே விரும்புகிறார்கள். அவர்கள் பருந்துப் பார்வையிலிருந்தும் அவர்கள் பசியிலிருந்தும் எப்படி தப்புவேன் சுவாமி?'' - மிகத் துணிவுடன் தைரியமாகத் தன் குறையைத் தெரிவித்தாள் தேவகுஞ்சரி.

நாட்டிலேயே மிகச் சிக்கலான கணினித் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் முதன்மையாகத் தேறி அந்தத் தொழிற்சாலையின் பொருளாதார ஆலோசகராக - இவள் அந்த இளம் வயதிலேயே பொறுப்பை ஏற்றுக் கொண்டவள்.

அவளுடைய வார்த்தைகளைக் கேட்டுச் சுவாமிகள் ஒரு கணம் திடுக்கிட்டார்.

அவர் நெற்றியில் வியர்வை அரும்பியது.

பட்டுத் துணியால் துடைத்துக் கொண்டார்.

முருகன் உபாசனையில் வல்லவர் என ஆத்திகரால் மதித்துப் போற்றப்படும் அவருடைய உள்ளத்தைத் திறந்து காட்டும் கண்ணாடி ஒன்று இருக்குமானால், அந்த உள்ளத்தில் தேவகுஞ்சரியின் உருவம் இப்போது தெரியும்.

அவர் மிக ஜாக்கிரதையானவர்; எள்ளளவும் சலனமடையவில்லை.

அந்தத் தொழிற்சாலை நிர்வாக இயக்குநரின் மகன் மனோகரசாமி இரண்டு நாள்களுக்கு முன்பு அவரிடம் யோசனை கேட்டு வந்திருந்தான்.

''ஆசைப்படும் பெண்ணை அடைய ஹோமம் ஒன்று நடத்தி வசியச் சக்கரம் செய்து தரப்படும் என்று பத்திரிகை பேட்டியில் படித்தேன். நீங்கள் மிகவும் சக்தி வாய்ந்த முருக உபாசகர் என்று கேள்விப்பட்டேன். எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும் சுவாமிகளே! எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை. என் தொழிற்சாலையில் பெரிய

பதவியில் இருக்கும் பெண்ணை நான் அடைய வேண்டும். அதற்கு உதவி செய்ய வேண்டும்'' என்று காலில் விழுந்து கெஞ்சிப் பூஜை செலவுக்குப் புதுச் சலவை நோட்டுகளாக அவர் காலடியில் வைத்ததும் ஓரிரு நாள்களில் மறந்து விடுமா?

மனோகரசாமியின் தந்தை பெரும் தொழிலதிபர். அவரும் அவனுக்குப் பச்சைக் கொடி காட்டி விட்டார்.

மகனுக்குத் தந்தையின் ஆலோசனை... ''போடா பைத்தியக்காரா! கல்யாணம் செய்து கொள்கிறானாம், கல்யாணம்! நம்ம ஜாதியை விட்டு வேறு ஜாதியில் உன் உயிர் இருக்கும்வரைக் கல்யாணம் செய்து வைக்கவே மாட்டேன். நீ சொல்லும் அந்தப் பெண்ணைப் பார்த்தேன். உலகில் இப்படியும் ஓர் அழகுண்டா என்று வியப்படைந்தேன். ஆனால், ஜாதிக் கட்டுப்பாடு இருக்கிறதே. அவற்றையெல்லாம் விட என் 'பிரிஸ்டீஜ்' என்னவாவது?'' என்று சொல்லிப் பார்த்தார்.

மகன் சம்மதிக்கவில்லை. ''அடைந்தால் தேவகுஞ்சரியை... இல்லாவிடில் கல்லறையை!'' என்று வீர வசனம் பேசிவிட்டான்.

ரோசக்காரன்... சொன்னபடி செய்தாலும் செய்து விடுவான். பயந்து விட்ட தந்தை மிகவும் யோசித்து, ''டேய்! அந்த அழகிதானே உனக்கு வேண்டும்? சின்ன வீடாக வைத்து கொள்ளேன். நம்ம ஜாதியில் அது சகஜம். மிகவும் பிரஸ்டீஜாக இருக்கும். அந்தப் பெண்ணுக்கு வயதான தந்தையைத் தவிர வேறு ஆதரவில்லை என்று கூறுவதால், பெரிய தொகையை அவரிடம் நீட்டு. சம்மதித்து விடுவார். அதை விட்டு விட்டுக் கல்யாணம், குடித்தனம் என்று பேசுகிறாயே!'' என்று கூறி விட்டார்.

அது பச்சைக் கொடிதானே?

மனோகரசாமி தேவகுஞ்சரியைப் பலவிதத்தில் நெருங்கினான்.

தன் முதலாளியின் மகன் என்பதால் அவள் மிகுந்த மரியாதை காட்டினாள். எந்தவித விகற்பமுமில்லாமல் அவனுடன் ஆலோசனைக்காக அதிக நேரம் தங்கினாள்.

ஊட்டி, கொடைக்கானல் என்று 'கான்பரன்ஸ்' ஏற்பாடு செய்து அழைக்கும்போது அவனுடன் செல்வாள்.

முதலில் சகஜமாகப் பழகியவளுக்குப் பிறகு பயம் சூழ்ந்தது. அவனுடைய பேச்சும் நடவடிக்கையும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லியிருந்தாலும் அவள் யோசித்திருப்பாள்.

மிக மட்டமான ஆண் ஆதிக்கச் சொல்லான 'சின்ன வீடு' என்றவுடன் அவனிடமிருந்து தப்பவே துடித்தாள்.

தேவகுஞ்சரி வயதான தந்தையிடம் தன் நிலையைச் சொல்லி வேதனைப்பட்டாள்.

அழுகை வரவில்லை. தன் தந்தை ஆறுதல் சொல்வார்; தைரியம் சொல்வார் என்று நம்பினாள்.

''என்னை என்னம்மா செய்யச் சொல்கிறாய்? பெரிய படிப்பு படித்தால் நிறையச் சம்பளம் கிடைக்கும் என்று நீதான் சொன்னாய். வீட்டை விற்றுப் படிக்க வைத்தேன். அதிக மதிப்பெண்களுடன் நாட்டில் முதலாவதாகத் தேறினாய். அப்போதே கல்யாணம் செய்து கொடுத்து விடலாம் என்று நான் விரும்பினேன். நீ சம்மதிக்கவில்லை. 'இதற்குள் எதற்குக் கல்யாணம்?' என்று என் பேச்சைத் தள்ளி விட்டாய். பெண்கள் சுதந்திரம், உரிமை என்று வசனம் பேசினாய். 'உன் படிப்புக் கேற்ற மாப்பிள்ளை தேடுவதென்றால் அதிக வரதட்சணை கொடுக்க வேண்டுமே... அதற்கெங்கே போவது?' என்றேன். உனக்குக் கிடைக்கப் போகும் உத்தியோகத்தின் சம்பளம் ஐந்து இலக்கங்களுக்கு மேல் இருக்கும் என்றாய். நானும் உன் பேச்சுக்கு மறு பேச்சுச் சொல்லவில்லை. இப்போதாவது உன் கல்யாணத்தை நான் முடிவு செய்ய வேண்டும். உனக்குப் பாதுகாப்பு வேண்டும். பெண்ணுக்கு ஆண் துணை வேண்டும். அதனால்தான் நான் மனோகரசாமியை ஏற்றேன். அவனுக்குள்ள செல்வத்திற்கும் செல்வாக்குக்கும் அவன் என்னிடம் கெஞ்சாத குறைதான். அவனை நீ அலட்சியப்படுத்துகிறாயாம்? அவனுக்கெதில் குறைவு? அழகிலா? அந்தஸ்திலா? பணத்திலா? பத்து லட்சம் பாங்கியில் உன் பெயரில் போட்டு விடுகிறானாம்.''

தந்தை இவ்வளவு விரிவாக மனம் விட்டுத் தன்னிடம் பேசியதில்லை என்றுணர்ந்த தேவகுஞ்சரி அவர் ஒரு முடிவுடன்தான் பேசுகிறார் என்றறிந்து, ''அப்பா! என்னைச் சிறப்பாகப் படிக்க வைத்தீர்கள். தன் காலில் தான் நிற்கப் பெண்ணுக்குப் படிப்பு மிகவும் அவசியம் அப்பா! இல்லாவிடில் ஆண் ஆதிக்கத்தில் பெண் அல்லல்பட வேண்டியதுதான். மனோகரசாமிக்கு என்ன துணிவு இருக்க வேண்டும்? அழகு, அந்தஸ்து, செல்வாக்கு யாருக்கு வேண்டுமப்பா? அவரை எப்படி தேர்ந்தெடுத்தீர்கள்? என்னை அவர் திருமணம் செய்து கொள்வதை அவர் தந்தை ஏற்கவில்லை. அவர் ஜாதியிலேயேதான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமாம். என்னை அவர் 'சின்ன வீடாக' வைத்துக் கொள்கிறாராம். அதற்கு நீங்கள் சம்மதிக்கிறீர்களா?

மனைவி அந்தஸ்தைத் தராத ஆண்பிள்ளையின் ஆசைக்குப் பெண்ணைப் பெற்ற தந்தை இணங்குவதா? முடியாதப்பா! நான் கல்யாணம் செய்து கொண்டு வாழ்ந்து காட்டுகிறேனப்பா... இன்னொரு முறை அவர் பேச்சை எடுத்தால் நான் பத்ரகாளியாகி விடுவேன்.''

தேவகுஞ்சரி இதுவரை அதுபோல் பேசியதில்லை.

'தன்னிடம் மிக அன்பாக இருந்த அப்பாவுக்கு இப்போது என்ன நேர்ந்துவிட்டது? என்னை விலை பேசுகிறாரே?' என்ற கோபம்.

தேவகுஞ்சரிக்கு மன உளைச்சல் தாங்கவில்லை.

எந்த வேலையிலும் மனம் ஈடுபடவில்லை.

நெருங்கிய தோழியின் ஆலோசனைப்படி பிரபல மனோதத்துவ நிபுணர் நகுலதேவனிடம் சென்றாள்.

முன்பே தன் வருகையைத் தெரிவித்து நேரத்தைக் குறித்து ஏற்பாடு செய்து கொண்டுதான் அவரிடம் சென்றாள்.

நெற்றியில் பெரிய குங்குமப்பொட்டு. தோள் வரை தொங்கும் சிகை. கூர்மையான மூக்கு. எதிராளியைக் கவர்ந்திழுக்கும் கண்கள். பளபளக்கும் பற்கள்.

''வருக வருக தேவகுஞ்சரியே'' என்று மிகவும் அறிமுகமானவர் போல் வரவேற்றார்.

தேவகுஞ்சரி என்ற பெயரை அவர் தெரிந்து கொண்டிருப்பதில் ஒன்றும் அதிசயமில்லை. ஆனால், அடுத்து அவன் அவளைக் கேட்ட கேள்விதான் அவளுக்கு வியப்பை அளித்தது.

''உன் திருமண விஷயமாக என்ன முடிவெடுத்திருக்கிறாய்?'' என்று கேட்டதும், ஏக வசனத்தில் தன்னை மிகவும் உரிமையுள்ளவர் போல் அழைப்பதும், தன் மேனியை விழிகளால் விழுங்குவதும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

அவளை, அவர் பேசவிடவில்லை.

''என்னிடம் எதற்காக வந்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும்'' என்றார்.

அவர் கால்கள் மெல்ல அவள் பாதத்துடன் நட்புக் கொள்ள விரும்பின.

எப்படி தெரியும் என்று தேவகுஞ்சரி விழிகளால் வினவியபோது,

''எனக்குத் தெரியும். உன்னைப் போன்ற அழகிய பெண்களுக்கு பிரச்சனை அதிகம். கல்யாண விஷயமாக மனக்குழப்பம் அதிகம். காதலனா அல்லது கல்யாணத்திற்குப் பெற்றோர் முடிவு செய்திருக்கும் மாப்பிள்ளையா? என்று மனம் குழம்பும். அதற்காகத்தானே நீ வந்திருக்கிறாய்?'' என்று கேட்டார்.

மேலும் தொடர்ந்து, ''தேவகுஞ்சரி... எவ்வளவு அழகான பெயர்! ஹூம்! அழகு தேவதை உன் பெயரிலிருந்து தொடங்கி ஆரோகணித்திருக்கிறாள்'' என்று அவள் உடலை விழிகளால் அளந்து வர்ணிக்கத் தொடங்கினார்.

தேவகுஞ்சரி அவருடைய வர்ணனையால் நெளியவில்லை; நாணவில்லை.

எரிச்சல் பட்டாள்.

''மனோதத்துவ அறிஞர் இரண்டாம் தரக் கவிஞராகப் பெண்களை வர்ணிப்பார் என்பது எனக்குத் தெரியாது. நான் எதற்காக வந்தேன் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். விஷயத்துக்கு வருவோம்'' என்றாள்.

வார்த்தையில் உஷ்ணத்தைச் சிறிது ஏற்றி பிறகு, ''மனோதத்துவ மகாமேதையே! நானும் சிறிது மனோதத்துவம் படித்தவள்தான். ஆண் மனத்தை மிகவும் ஆராய்ந்தவள்'' என்றவளைக் குறிக்கிட்டு,

''பல ஆண்களின் மனத்தையா? வண்டுகள்தான் பல மலர்களிடம் செல்லும். மலர்கள் வண்டுகளிடம் சென்றதாகக் கேள்விப்பட்டதில்லை. உன் அழகுக்கு ஏங்கும் பல ஆடவர்களின் நெஞ்சை முறிப்பதில் உனக்குப் பெரும் சாமர்த்தியமுண்டு என்பதும் எனக்குத் தெரியும்'' என்றார்.

தேவகுஞ்சரியின் முகம் சிவந்தது.

''மனோதத்துவ நிபுணரின் மனம் இன்று சஞ்சலமடைந்திருக்கிறது போலிருக்கிறது. உங்களிடம் ஆலோசனை கேட்க வந்தது மகா தவறு!'' என்று கூறி எழப் போனவளை, நகுலதேவன் தாவிக் கரத்தைப் பிடித்து நாற்காலியில் அமர்த்தி,

''தேவகுஞ்சரி! கோபப்படும்போது கூட மிக அழகாய் இருக்கிறாய். ஆனால், இந்த அழகுதான் உனக்கு விரோதி. உனக்குப் பாதுகாப்பு தேவை. உன்னிடம் மண்டியிடும் அந்தப் பணக்கார இளைஞனை ஏற்றுக் கொள்வதுதான் நல்லது'' என்றார்.

குலதேவனின் கரம் தன் மேல் பட்டதும் நட்டுவாக்கிளி ஊர்வது போல் உணர்ந்து, "அந்த உபதேசம் கேட்க நான் வரவில்லை. என் தந்தையின் மனம் மாறியிருக்கிறது. அவர் சொல்லி இதுவரை நான் மறுக்கவில்லை. இப்போது அவர் உபதேசம் பிடிக்கவில்லை. அதைப் பற்றி உங்கள் யோசனை கேட்க வந்தேன். வந்த இடத்தில் உங்கள் மனம் வக்ரமடைந்து விட்டது. வருகிறேன் ஸார்!" என்றாள்.

"ஐ ஆம் ஸாரி... மிஸ் தேவகுஞ்சரி! உன்னைப் பார்த்தவுடன் என் மனமும் சஞ்சலமடைந்து விட்டது. மனோகரசாமி வர்ணித்தபோது அது வெறும் கற்பனை, பெண் பித்தால் பேசுகிறான் என்று எண்ணினேன். அவன் கூறியது மிக மிகச் சரி. அவன் உன்னை விரும்புவது சரிதான். அவன் கோரிக்கையை நீ ஏற்பது நல்லது. எவ்வளவு கொடுத்தாவது அவன் உன்னை அடைந்து விடுவான்" என்றார் மனோதத்துவ நிபுணர்.

"சே... மனோதத்துவ நிபுணரா? கல்யாணத் தரகரா? எல்லா ஆண்களும் இப்படித்தானா? பெண்களைப் பார்த்தவுடன் மனத்திலுள்ள பூதம் புறப்பட்டு விடுமா? மனோகரசாமியாம், வக்ரசாமி! அவனும் உங்களிடம் ஆலோசனைக்கு வந்தானா? வசிய மருந்துக்கு மாந்திரிகனிடம் செல்லாமல் மனோதத்துவ நிபுணரிடம் ஏன் வந்தான்? 'சின்ன வீடு' ஏற்படுத்திக் கொடுக்கும் புரோக்கரா நீ?" என்று சீறினாள்.

"தேவகுஞ்சரி! நாக்கை அடக்கு. உன் நன்மைக்குச் சொல்கிறேன். பெண்ணுக்குப் பாதுகாப்பு வளையம் ஓர் ஆண். மனோகரசாமியைப் போன்ற பலமும், பணமும், செல்வாக்கும் மிக்கவன் ஆசை வைத்தால் அடையாமல் இருக்க மாட்டான். அவ்வளவுதான் சொல்வேன்" என்றார்.

ஆவேசம் வந்தவள் போல் எழுந்த தேவகுஞ்சரி, "மனோதத்துவ நிபுணர் என்ற பெயரை மாற்றி மனோகரதாசன் என்று வைத்துக் கொள்ளுங்கள். நூறு மனோகரசாமி வந்தாலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது. அவனுடைய அலுவலகத்திலிருந்து என்னை நீக்கி விடுவான் என்று நினைக்கிறீர்கள். அதுதான் முடியாது. ஐந்து வருட கான்ட்ராக்ட் இருக்கிறது தெரியுமா? தேவகுஞ்சரி ஒரு கை பார்த்து விடுவாள்" என்று கூறி நாற்காலியை உதைத்துத் தள்ளி, மளமளவென்று வெளியேறினாள்.

அவளுக்கு மனதே சரியில்லை.

இரண்டு நாள்கள் அலுவலகத்துக்குச் செல்லவில்லை.

தந்தைக்கு உடல்நிலை சரியில்லை. மாரடைப்பு.

பெரிய ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு அவர் அருகிலேயே இருந்தாள்.

ஒருநாள் மனோகரசாமி தன் ஆட்கள் புடைசூழ ஆஸ்பத்திரிக்கே வந்தான்.

"இரவு பகலான நீ கண் விழிக்கலாமா தேவகுஞ்சரி? இதோ இரண்டு செவிலியரை நியமித்திருக்கிறேன். அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். வா... சற்று ஆறுதலாக வெளியே சென்று வருவோம்" என்றான்.

விழிகளில் காமம், குரோதம் இருந்தன.

தேவகுஞ்சரியின் கடுமையான பார்வையின் கனலை அவனால் தாங்க முடியவில்லை.

அவள் கரம் ஆஸ்பத்திரியின் வாயிற்படியைச் சுட்டியது. "உன் உதவி தேவையில்லை" என்று கூவினாள்.

"போ... போ... வெளியே போ!"

இறந்து போவதற்கு இரண்டு நாள்கள் முன்பு தேவகுஞ்சரியின் தந்தை சொன்னார்: "பெண்ணே! என் சரித்திரம் முடிந்து விட்டது. உன்னை நீதான் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நான் சொன்னபடி மனோகரசாமியை ஏற்றுக் கொள். உனக்குப் பாதுகாப்பு அவனே" என்றார்.

தந்தையின் கடைசி ஆசை என்றாலும் தேவகுஞ்சரி சம்மதிக்க வில்லை.

தந்தையை இழந்த துக்கம் தாங்காமல் அவள் வீட்டை விட்டு வெளியே வரவில்லை.

மூன்றாவது நாள் வாசலில் அலுவலகக் கார் வந்து நின்றது.

மனோகரசாமியின் தந்தை, தொழிற்சாலையின் மானேஜிங் டைரக்டர் அவளைத் தேடி வந்தார்.

துக்கம் விசாரித்தார். ஏதேதோ பேசினார்.

அவளுடைய தனிமையைப் பற்றிப் பேச்சு வந்தது.

இனி தனியே இந்த வீட்டில் இருக்க வேண்டாம் என்றும், தான் பங்களா ஏற்பாடு செய்திருப்பதாகவும் கூறினார்.

தன் மகன் மனோகரசாமியின் விருப்பத்தைத் தெரிவித்தார்.

''சொந்த மனைவியை விட அவன் உன்னை அக்கறையாகக் காப்பாற்றுவான்'' என்று உறுதி கூறினார்.

''பிரபல நிறுவன மானேஜிங் டைரக்டர் பேசும் பேச்சா இது? போங்கள் வெளியே. ஆசைக்கு ஒரு பெண்ணை ஆண் வைத்துக் கொள்வது போல், ஆசைக்கு ஓர் ஆணை உங்கள் மகள் வைத்துக் கொள்வதாகச் சொன்னால் சம்மதிப்பீர்களா?'' என்று முழங்கினாள்.

கடுமையான முகத்துடன் அவர் திரும்பினார். ஆனால், அடிபட்ட நாகம் போல் சீறிக் கொண்டே போனார்.

துக்கம்ஒருவாறுதணிந்துஒருவாரம்கழித்துஅவள்அலுவலகத்திற்குள் நுழையும்போது, பெரிய கேட் அருகே, தொழிற்சாலை பாதுகாவலர் - தலைமைக் காவலர் அவளை அழைப்பதாகக் கூறினார்கள்.

'எதற்காக என்னைக் கூப்பிடுகிறார்?' எனத் தயக்கத்துடன் சென்ற தேவகுஞ்சரியை, தலைமைக் காவலர் பீம்சிங் எழுந்து நின்று வரவேற்றார்.

தொழிற்சாலையின் தலைமைப் பாதுகாவலர் அவர். அறுபதுக்கு மேல் வயதான அவர் பார்க்க அச்சம் ஏற்படுத்தும் தோற்றத்துடன் இருப்பார்.

காயம்பட்ட தழும்புகள் நிறைந்த முகம், முறுக்கிவிட்ட மீசை, கூர்மையான முக்கு, தடித்த உதடுகள்.

''உட்காருங்கள், மிஸ் தேவகுஞ்சரி'' என்றார்.

'ஏன், எதற்காக?' என்று தயக்கத்துடன் உட்கார முயன்ற தேவ குஞ்சரியை நோக்கி, பாதி தமிழ், பாதி ஹிந்துஸ்தானி, கொஞ்சம் ஆங்கிலத்தில் பேசினார்.

பீம்சிங் தெரிவித்த செய்திகளைக் கேட்டு நடுங்கினாள் தேவ குஞ்சரி.

தேவகுஞ்சரி அலுவலகத்திலிருந்து திரும்பும்போது தொழிற்சாலைக் காரைப் பயன்படுத்துவாள். இன்னும் இருவரை வீட்டில் இறக்கி விட்டு கடைசியாக அவளை வீட்டில் இறக்குவார்கள்.

மற்ற இருவரின் வீடுகளும் ஒவ்வொரு மூலையில் இருந்ததால், கடைசியாக தேவகுஞ்சரியை வீட்டில் இறக்கும்போது நேரமாகி விடும்.

அப்போதுதான் அந்தச் சதித் திட்டத்தை நடத்த மனோகரசாமி முடிவு செய்திருந்தான்.

வீட்டில் இறக்காமல் நேரே, பெங்களூருக்கு அழைத்துச் சென்று அங்கே தங்க வைத்து அவளை வற்புறுத்தி மணந்து கொள்வதென்பது திட்டம்.

தன் பசியைத் தீர்த்துக் கொண்டால் பிறகு மனம் மாறி விடுவா ளல்லவா?

பீம்சிங் இதைச் சொல்லும்போது தேவகுஞ்சரி நடுங்கினாள்.

ஆண் பாதுகாப்பின்றி வாழ முடியும் என்ற துணிவு ஒரு பெண்ணுக்கு இருந்தாலும் கொடிய மனோகரசாமியிடமிருந்து பாதுகாப்பு பெற என்ன செய்வதென்று திகைத்தாள்.

பீம்சிங் ஆங்கிலத்தில் கொஞ்சம், தமிழில் கொஞ்சம் கலந்து கலந்து பேசியதிலிருந்து சில மாதங்களாகவே மனோகரின் நடவடிக்கை அவருக்குத் தெரிந்திருந்ததென்றும், தொழிற்சாலையை பாதுகாப்பதுடன் மனிதர்களைப் பாதுகாப்பதும் தன் கடமை என்றும் பீம்சிங் தெரிவித்தார்.

''தக்க பாதுகாப்பு இல்லாமல் வாழ முடியும் என்று நினைக்கிறீர்களா?'' என்று பீம்சிங் கேட்டதுடன், ''மனோவசிய நிபுணர், வசியம் செய்யும் மாந்திரிகன் ஆகியோரிடம் யோசனை கேட்க நீங்கள் சென்றதை விட, உங்களைப் பாதுகாக்க யோசனை கேட்டு தக்கவரிடம் சென்று இருக்கலாமல்லவா?'' என்றார்.

பீம்சிங் சொல்வது அவளுக்குப் புரியவில்லை.

''பாதுகாக்கக் கூர்க்காவையா் வைத்துக் கொள்ள முடியும்?'' என்றாள் தேவகுஞ்சரி, ஏதோ நகைச்சுவையைக் கூறியது போல.

பீம்சிங் சிரித்தார்.

''அப்படிச் சொல்லவில்லை. கல்யாணம் செய்து கொள்வதுதான் தக்க பாதுகாப்பு'' என்றார்.

''நான் மறுக்கவில்லை. அந்த மனோகரசாமியை நான் மணந்து கொள்ளத் தயார். ஆனால், அவர் என் உடலைத்தான் விரும்புகிறார். உள்ளத்தை இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன். பலரும் அப்படித்தான். அல்லது நான் வாங்கும் பெரும் சம்பளத்துக்காக என்னை விரும்புவார்கள்'' என்று வேதனையோடு சொன்ன தேவ குஞ்சரி, தொடர்ந்தாள்...

''அழகுதான் என் விரோதி. அடுத்தது என் படிப்பு. அடுத்தது என் சம்பளம். என் உள்ளத்தை விரும்பியவருக்கு என்னை ஒப்படைத்துக் கொள்ள நான் தேடிக் கொண்டிருந்தேன். எல்லாருமே வேஷக்காரர்கள். நான் என்ன செய்வது பீம்சிங்? மனோகரசாமி செல்வந்தரின் பிள்ளை. என்னை முறையாக மணக்கலாம். ஆனால், அப்படி அவர் விரும்ப வில்லை'' - தேவகுஞ்சரியின் குரல் தழுதழுத்தது.

''ஆமாம்... எப்படியாவது உங்களை அடைந்து விடப் பார்க்கிறார். உங்கள் தந்தை இறந்த பின் அவருக்கு மிகவும் சௌகரியமாகி விட்டது. உங்களுக்குப் பாதுகாப்பில்லை. அதனால்தான் உங்களைப் பெங்களூர் கூடத்த நாள், நேரம் குறிப்பிட்டிருக்கிறார்'' என்றார் பீம்சிங்.

''அது மட்டும் நடக்காது. என் உயிரற்ற உடலைத்தான் அவரால் அடைய முடியும்.''

''அது கோழைத்தனம். எதிர்த்து நிற்க வேண்டும்.''

''எப்படி? ஒரு துப்பாக்கியைக் கொடுங்கள். எதிர்த்து நிற்கிறேன். முடியாவிட்டால் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு மாய்கிறேன்.''

பீம்சிங் சிரித்தார். ''தேவகுஞ்சரி! வேறு யோசனை செய்யுங்கள். மனோகரசாமிக்கு மிக வேண்டியவர் அந்த மனோதத்துவ நிபுணர். அவரைக் கல்யாணம் செய்து கொண்டால், அவர் உங்களை மனோகர சாமியிடமிருந்து காப்பாற்றி விடுவார். அவரிடம் போதிய பணமும் இருக்கிறது. செல்வாக்கில் மனோகரசாமிக்குக் குறைந்தவரல்லர்.''

தேவகுஞ்சரி மவுனமானாள்.

மனோதத்துவ நிபுணரின் காம விழிகளும், பேச்சும், அவர் மனத்தில் என்ன நினைக்கிறார் என்பதை அவள் எப்போதோ புரிந்து கொண்டாள். அதில் அவளுக்கு இஷ்டமே இல்லை.

மனோதத்துவ நிபுணரை மனோகரசாமி தொலைபேசியில் அழைத்தான்.

''பெங்களூருக்குத் தேவகுஞ்சரியை அழைத்துச் செல்லத் தீர்மானித்து விட்டேன்'' என்றான்.

மனோதத்துவ நிபுணர் நகுலதேவன் திடுக்கிட்டார். ''அவள் சம்மதித்து விட்டாளா? கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயா?''

''சம்மதித்ததுபோல்தான். கல்யாணமா? எனக்கென்ன பைத்தியமா?'' அவன் சிரித்தான்.

தொலைபேசியை டக்கென்று வைத்து விட நகுலதேவன் நெற்றி நரம்புகள் புடைத்தன.

'தேவகுஞ்சரி சம்மதித்து விட்டாளா? இவன் பண பலத்தைக் காட்டிச் சம்மதிக்கச் செய்திருப்பான். அவனுக்கு நாம் எந்தவிதத்தில் குறைவு? நான் முயன்றால் முடியாதா? தேவகுஞ்சரியை ஒருமுறை சந்தித்தால் அவள் எனக்குக் கிடைத்து விடுவாள். அப்படி அவள் எனக்கு இசையா விட்டாலும் மனோகரசாமி அவளை அடையக்கூடாது. எதற்கும் யோகானந்த சுவாமிகளிடம் சென்று ஒரு தாயத்து வாங்கி வைத்துக் கொள்வோம். என்னதான் மனோதத்துவம் என்றாலும் மாந்திரிகத்துக்கு இணை வராது!' என்று நகுலதேவன் முடிவு செய்தான்.

மனோகரசாமியும் யோகானந்தரைத் தொலைபேசியில் அழைத்தான். விஷயத்தைச் சொன்னான்...

''காரிய வெற்றிக்கு ஒரு விசேஷ ஹோமம் வளர்த்துப் பூஜை செய்யுங்கள். மணக்கோலத்துடன் வந்து உங்களை வணங்குகிறேன். எவ்வளவு காணிக்கை வேண்டுமானாலும் செலுத்துகிறேன்'' என்றான்.

யோகானந்தர் விழிகளை மூடி நிஷ்டையில் அமர்ந்தார்.

'தேவகுஞ்சரியைப் போன்ற பேரழகியை இந்த இரு கயவர்களும் அடையப் பார்க்கிறார்கள். நான் முயன்றால் முடிந்திருக்காதா?' சிந்தித்தார்.

தன் அந்தரங்கச் சீடரை அழைத்து, தேவகுஞ்சரியிடம் தூது அனுப்பினார்.

'மயில்கோட்டை முருகனை இவ்வளவு நாள்கள் நான் வணங்கியது உண்மையானால், பேரழகி தேவகுஞ்சரி என் வயப்பட வேண்டும்' என்று பிரார்த்தித்தார்.

தேவகுஞ்சரிக்கு உறக்கமே வரவில்லை.

'நாளைக்கு என் நிலை என்ன ஆகுமோ? சமூகத்தில் நல்லவர்கள் போல் நடிக்கும் அந்த மூன்று பேரில் யார் என்னைக் கபளீகரம் செய்யப் போகிறார்கள்? அவர்களில் யாரேனும் ஒருவரிடம் சிக்கி நான் சின்னா பின்னம் அடையப் போகிறேனா?

அப்பா! நீங்கள் சொன்னதை நான் கேட்கவில்லை. பாதுகாப்பு வளையமாக நீங்கள் இருந்தீர்கள். இப்போது என்னைக் காப்பாற்ற யார் இருக்கிறார்கள்?' - விம்மியழுதாள்.

பொழுது புலர இன்னும் சில மணி நேரம் இருந்தது.

படுக்கையை விட்டு எழுந்தாள்.

குளிர் நீரில் நன்றாகக் குளித்தாள்.

தலைவாரிக் கொண்டாள்.

முகத்தில் இலேசாகப் பவுடர் ஒற்றினாள்.

பெட்டியைத் திறந்து தன் தாய் அணியும் பட்டுப் புடைவையை எடுத்து உடுத்திக் கொண்டாள்.

அவள் இதுவரை பட்டுப் புடைவை உடுத்தியதே இல்லை.

நெற்றியில் பளிச்சென்று குங்குமமிட்டாள்.

தாய், தந்தையின் படத்திற்கெதிரே விளக்கேற்றினாள்.

இருவரையும் வணங்கினாள்.

பீரோவிலிருந்து ஓர் அட்டைப்பெட்டியினின்று மஞ்சள்கயிறொன்றை எடுத்துத் தன் கைப்பைக்குள் திணித்துக் கொண்டாள்.

வீட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தாள்.

ரயில் நிலையத்திற்குச் செல்லும் ஆட்டோ ஒன்று வந்தது.

ஆட்டோ ஓட்டுநர் அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ''ரயில் நிலையத்திற்கா?'' என்று கேட்டார்.

அவள் குறிப்பிட்ட பகுதியைச் சொன்னாள்.

அந்த இடத்திற்குச் செல்லவே ஆட்டோ ஓட்டுநர்கள் சற்று யோசிப்பார்கள்.

''என்னப்பா தயங்குகிறாய்? மீட்டருக்கு மேலே தருகிறேன்'' என்றாள்.

ஆட்டோ கிளம்பியது.

குறிப்பிட்ட மாடிக் குடியிருப்பின் எதிரே நின்றவள், ஆட்டோ ஓட்டுநரைச் சிறிது நேரம் தாமதிக்குமாறு கேட்டுக் கொண்டாள்.

அந்தக் குடியிருப்பின், ஒவ்வொரு மாடியிலும் நான்கு குடித்தனங்கள்.

முதல் மாடி ஏறி ஒரு பிளாட்டின் கதவைத் தட்டினாள்.

முன்பே அந்தப் பிளாட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

கதவு திறக்கப்பட்டது.

பீம்சிங் கதவைத் திறந்தார்.

அந்த அதிகாலை வேளையில் குளித்து, புது மணப்பெண் போல் பட்டுப் புடைவை அணிந்து நின்று கொண்டிருக்கும் தேவகுஞ்சரியைப் பார்த்து முதலில் அதிர்ச்சியும் பிறகு திகைப்பும் அடைந்தார்.

அவரும் தொழிற்சாலைக்குப் புறப்பட ஆயத்தமாக இருந்தார்.

''என்ன வியப்படைகிறீர்கள்... உம்; புறப்படுங்கள். அருகே உள்ள ஏதாவதொரு கோயிலுக்குச் செல்வோம். பிளாட்பாரக் கோயிலாக இருந்தாலும், தெருமுனைக் கோயிலாக இருந்தாலும் பரவாயில்லை. இதோ இந்தப் பெட்டியைத் திறந்து பாருங்கள்.''

பீம்சிங் பெட்டியைத் திறந்தார். அதில் மஞ்சள் கயிற்றில் கோக்கப் பட்ட திருமாங்கல்யம் இருந்தது. தங்கச் சங்கிலி ஒன்றும் இருந்தது.

பீம்சிங்கிற்கு ஒன்றும் புரியவில்லை.

''என்ன திகைக்கிறீர்கள்? இன்னும் சிறிது நேரத்தில் என்ன விபரீதம் நேருமோ? மூன்று முதலைகளும் எனக்காக மோதிக் கொள்ளும். நான் முடிவு செய்து விட்டேன். எனக்குப் பாதுகாப்பு வளையம் அவசியம் தேவை என்று. அந்த வளையும் நீங்கள்தான். என் கழுத்தில் அந்த வளையத்தை அணிவித்து, பாதுகாப்பாக வாழ்நாள் முழுமையும் இருங்கள்.''

'இன்னும் வரக் காணோமே' என்று முணுமுணுத்து ஒலி எழுப்பினார் ஆட்டோ ஓட்டுநர்.

'யூனிபார்ம்' அணிந்த தொழிற்சாலைப் பாதுகாவலரும், சற்று முன் ஆட்டோவில் வந்த தேவகுஞ்சரியும் ஆட்டோவில் ஏறிக் கொண்டனர்.

''எங்கேங்க போகணும்?''

''முதலில் ஏதாவதொரு கோயிலுக்கு. பிறகு ஓர் ஓட்டலுக்கு.''

எல்லாம் முடிந்தது.

மணி பத்துக்கு மேலாகியது.

பீம்சிங்கும், தேவகுஞ்சரியும் தொழிற்சாலை மானேஜிங் டைரக்டர் அறைக்குள் நுழைந்தபோது அனைவரும் வியப்புடன் பீம்சிங்கையும் தேவகுஞ்சரியையும் பார்த்தனர்.

மனோகரசாமிக்குச் செய்தி போயிருக்கும்.

நகுலதேவனும் அறிந்திருப்பார்.

தவத்திரு யோகானந்தா தன் 'ஞானத் திருஷ்டி'யால் அறிந்திருப் பாரோ அல்லது யாராவது சொல்லியிருப்பார்களோ?

தேவகுஞ்சரி தொழிற்சாலைப் பாதுகாவலர் என்ற பாதுகாப்பு வளையத்துக்குள் பத்திரமாக நுழைந்து விட்டாள்.

● ● ● ●

# 78. அழுக்கு

மேல்நாட்டில் தயாரிக்கப்பட்ட புதிய ரகக் காரில் வந்திறங்கும் போது அவருக்கு மிகுந்த மன நிறைவு. ஆங்கிலத்தில் எம்.ஏ., பிறகு வக்கீல் படித்து பி.எல்., பிறகு அறிவியல் ஆராய்ச்சியில் ஒரு பட்டம். அவற்றுக்கெல்லாம் பிறகு, தமிழில் புலவர் பட்டம். அது போதாதென்று 'இலக்கியத்தில் ஒழுக்கம்' என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம்!

அவ்வளவுதான்... இன்னும் படிப்பு, படிப்பு. என்னென்ன பட்டங்கள் உண்டோ அவற்றையெல்லாம் வாங்கி விட வேண்டும் என்ற அசுர வெறி அவரிடம் ஏற்பட்டது. அவருடைய துணைவியார் தாமரைவிழி அம்மையார் திடீரென இயற்கை எய்தியதால் பட்டங்களுக்காகப் படித்து, தேர்வு எழுதுவதை நிறுத்தி விட்டார்.

நல்ல தோற்றம், பேச்சில் நளினம், இலேசான நகைச்சுவையுடன் அழுத்தமான ஆழ்ந்த சிந்தனைகளை இரண்டு மணி, மூன்று மணி நேரம் போவதே தெரியாமல் சபையைக் கட்டுண்ட நாகமாகச் செய்தல் போன்ற அவர் ஆற்றலுக்குப் பல பட்டங்கள். தேர்வு எழுதாத பட்டங்கள் பெயரின் முன்புறம் சேர்ந்து கொண்டே இருந்தன.

பல தேர்வுகளை மதிப்பீடு செய்யும் முக்கியமானவர்களுள் ஒருவராக விளங்கியதால், அவரால் காரியம் ஆக வேண்டியவர்கள் வலிந்து பாராட்டும் பட்டமும் அளித்த வண்ணமாயிருந்தனர்.

ஒவ்வொரு தமிழ்ச் சங்கமாக அழைத்துப் பாராட்டிப் பொன்னாடை அணிவித்து பெரிய அளவுக்கு விதவிதமான நகாசு வேலைப்பாட்டுடன் புகழுரைகள் எழுதப்பட்ட வாசகங்களுடன் கூடிய கண்ணாடிச் சட்டம் போட்ட பட்டங்கள் வீட்டில் மாட்ட இடமின்றித் தவித்தன.

''எல்லாம் என் தாமரைவிழியின் ஊக்கம்தான்'' என்று நண்பர்களிடம் சொல்லத் தவறமாட்டார்.

பல ஆண்டுகள் கழித்து அவரைப் பார்க்க வந்த கிராம உறவினரிடம் நெஞ்சு தழுதழுக்கத் தன் மனைவியின் பெருமையை எடுத்துச் சொல்வார்.

''ஏம்பா, சிங்காரம்! உன் பெயரைத்தான் முருகவேள் என்று மாற்றிக் கொண்டாய், போகட்டும். கமலாயதாட்சியின் பெயரையுமா மாற்றி விட்டாய்?'' என்று அப்பாவித்தனமாக உரிமையுடன் கேட்பது போலக் கேட்கும் உறவினருக்கு அவருடைய நெற்றிக்கண் பார்வை ஒன்றே பதில் சொல்லிவிடும். எழுந்து பேசாமல் உள்ளே போய் விடுவார்.

சிறிது நேரம் கழித்து முருகவேளின் மருமகள் ஒரு தட்டில் இரண்டு பிஸ்கெட்டும் கோப்பையில் காபியும் கொண்டு வந்து கொடுத்து 'போய் வாருங்கள்' என்று சொல்லாமல் சொல்லி விடுவாள்.

மருமகள் மங்கையர்க்கரசி தான் இப்போது அந்த வீட்டு ராணி. இல்லை ராணி என்று சொன்னால் முருகவேளுக்குப் பிடிக்காது. அரசி; எழிலரசி.

''அரசி!'' என்று அழைத்தவாறு முருகவேள் வீட்டினுள் வரும் அழகே போதும்.

சொல் நயம், பொருள் வளம் ஆகியவற்றுடன் அவருக்கே இயற்கையாக அமைந்த குரலினிமை அப்படியே சொக்க வைக்கும்.

''இதோ வந்து விட்டேன். என்ன மாமா?'' என்று எழில் கூப்பிட்டு வருவது நூறு யாழ்களை ஒரே சமயத்தில் மீட்டியதுபோல் வண்டிசை எங்கும் பரவும்.

அன்று அவர் கல்கத்தாவில் நடைபெற்ற திருக்குறள் தொடர் சொற்பொழிவில் கலந்து கொண்டு விமானத்தில் வந்து இறங்கினார்.

''எழில்! அதோ கொண்டு வருகிறார்களே... அவற்றையெல்லாம் எடுத்து வையம்மா!'' என்று அருகே இருந்த 'சோபா' (சோபாவுக்கு முருகவேள் இட்டிருந்த பெயர், 'இலவம்பஞ்சு மெத்தை வைத்த சாய்வுக் கட்டில்')-வில் சாய்ந்தார். சொற்களைத் தூயத் தமிழில் பேச, சொல்ல முயன்று கொண்டிருந்தார்.

''அந்த மின்விசிறியை சுழல விடம்மா'' என்று இனிய குரலில் கூறினார் தமிழவேள் முருகவேள்.

''மாமா'' என்றழைத்து அருகே வந்து நின்றாள் எழில்.

மாமாவுக்கு வியர்ப்பதை அவள் அறிவாள்.

மங்கையர்க்கரசியின் அன்றலர்ந்த செந்தாமரை முகத்தைக் கனிவுடன் நோக்கினார் முருகவேள்.

"ஏன் மின்விசிறியைப் போடக்கூடாதா?" என்ற கேள்வி அதில் கனிந்து நின்றது.

"மாமா! நீங்கள் கல்கத்தாவிற்குச் சென்ற பிறகு இங்கே எல்லாமே அப்செட்!"

"என்ன?"

"ஓ... பின்னடைவு. மின்சாரமில்லை. கழிவுநீர்க் குழாயில் அடைப்பு. குடிநீரில் சாக்கடை கலக்கிறதாம்" - அரசி அழாமல் சொன்னாள். அதிலும் ஓர் அழகை பைந்தமிழ் வேந்தர் கண்டு புல்லரித்துப் போனார்.

"அடடா... குளிர்ச்சாதனம் இல்லாவிடில் நீ உறங்க மாட்டாயே. உனக்காகத்தானே மேல்தளம் முழுமையும் மிதமான குளிர்காற்று பரவும் வகை செய்தேன்" என்று கூறி மூச்சை இழுத்து நுகர முயன்றார்.

"ஆமாம், மாமா! சாக்கடை நாற்றம் தாங்க முடியவில்லை. அதனால் தான் ஜாஸ்மின் செண்ட்டை உடம்பில் ஸ்பிரே செய்து கொண்டேன்."

"என்ன?" என்று சொல்லினிமை நாயகர் புருவம் உயர்த்திக் கேட்கும் பொருளுணர்ந்த அரசி, "இல்லை... இல்லை... மல்லிகைப்பூ நறுமணத்தைத் தூவிக் கொண்டேன்" என அழகுத் தமிழில் சொன்னாள்.

"அடடா... எப்படியெல்லாம் வியர்த்து விட்டது!" என்று பூத்துவாலை எடுத்து, அவர் அகன்ற நெற்றி வியர்வையை ஒற்றி ஒற்றி எடுத்தாள்.

சிக்கல் வேலரின் திருமேனியில் துளிர்விடும் நீர்த்துளிகளை வெல்வெட் துணியால் ஒத்தி எடுப்பதுபோல் ஒத்தி எடுத்தாள். மிக நெருக்கமாக அவள் குனிந்தாள்.

அவள் பூசிக் கொண்டிருந்த இனிய செயற்கை மணமும், காந்தள் விரல் படர நெற்றியில் துடைத்து விடும் இதமும் அவருக்குத் தெரியவில்லை. வயிற்றைக் குமட்டும் நாற்றம் அவரை மயங்கி விழுந்து விடுவது போல் செய்தன.

அவர் நிலை உணர்ந்த அரசி, "கவலைப்படாதீர்கள் மாமா! நம் கார்டனர் ஜகத்ரட்சகன் வொர்கர்ஸுடன் வந்து நைட் அண்ட் டே வொர்க் செய்து சூயேஜ் பிளாக்கை கிளியர் செய்து விட்டான்."

''என்ன?'' - முருகவேள் மீண்டும் சிவனானார்.

அரசி நெளிந்தாள். ''ஸாரி மாமா!''

''உம்...'' முக்கண் பார்வை.

''மன்னியுங்கள் மாமா!''

''உம்...'' மீண்டும் உறுமல்.

''பொறுத்தருளுங்கள் மாமா! நம் தோட்டக்காரர் உலகநாயகன் இரவு பகலாக மூன்று நாள்கள் முன்பு பணியாட்களுடன் வந்து சாக்கடை அடைப்பை நீக்கி விட்டார்'' என்று சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு மூச்சு வாங்கியது.

''பேஷ்... பேஷ்...''

''மாமா... நீங்கள் மட்டும்...''

''ஓ! வட மாநிலம் சென்று வந்த எதிரொலியால் வடமொழி சேர்கிறது. நன்று, நன்று, மிக நன்று. என் மருமகளே! நன்று செய்தாய்... நான் வரும் இன்றே செய்தாய்!''

''வாருங்கள்... தாமதமில்லாமல் மேல்தளம் செல்வோம். வாட்டர் ஹீட்டர் சரியாகியிருக்கும். இல்லை... இல்லை... பொறுத்தருளுங்கள். சுடுநீர் ஆக்கும் கருவி - சரியாகியிருக்கும். சுடுநீர் ஆடி, சிற்றுண்டி அருந்தி மென்துயில் பயின்று...''

''ஆகா... ஆகா! நன்கு பழகிவிட்டாய். என் அடுத்த வாரிசு நீதான்.''

''வாரிசு தமிழ்ச் சொல்லா மாமா?''

முருகவேள் நகைத்தார்.

சிரிக்கும்போது இரண்டு தங்கப்பற்கள் ஓரத்தில் மின்னின.

''சிறிது சிறிதாகப் பழக வேண்டும் பெண்ணே! செந்தமிழாம் அழகியிருக்கக் கொடுமொழியாம் மாற்றாளைக் கண்ணெடுத்துப் பார்ப்பதோ? கல்கத்தாத் தமிழர்களே, தமிழர்கள்! குறைந்த அளவு தமிழர்கள் தவறியும் அந்தப் பழைமையான நகர்த் தமிழர்களின் தமிழ்ப்பற்று தான் என்னே!''

''என்ன பேசினீர்கள்?''

''மூன்று நாள்களும் திருவள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி!''

''அய்யன் வள்ளுவர் என அடிக்கொரு முறை சொன்னீர்களா...

இல்லையா?''

''ஆமாம்... மறக்காமல் சொன்னேன். இல்லாவிடில் முதல்வரிடம் கோள் சொல்லி விடுவார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவி கிடைக்காமல் போய்விடும்'' என்று சிரித்த முருகவேள் சிரிப்பை மெல்ல நிறுத்தினார்.

''மனத்தின் கண்மாசிலன் ஆதல்; பிறன் மனை விழையாமை; ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்... என்ற உங்களுக்கே உரித்தான எல்லா தலைப்புகளிலும் மறவாமல் பேசினீர்களா?'' என்று கேட்டாள் அரசி சிரித்துக் கொண்டே.

''மறப்பேனா... அந்தத் தலைப்புகளை? பின்னி விட்டேன், பின்னி...'' என்றார் மாமா.

''யாரை?'' என்று முத்துப்பல் தெரியச் சிரித்த அரசி, ''மேலே போய் ஸ்நானம் செய்து கொண்டே பேசுவோம்.''

''அது என்ன ஸ்நானம். 'பாத்' என்று சொல்லாமல் இருந்தாயே!''

''சரி... நீராடிக் கொண்டே...''

மேல் மாடியில் உள்ள விசாலமான அறையில் சிற்றுண்டி அருந்தியவாறு முனைவர் முருகவேள் தான் பேசியவற்றின் சுருக்கம் சொன்னார்.

''நாமக்கல் கவிஞர் பல ஆண்டுகளுக்கு முன் ஓர் இலக்கிய இதழில் பிறன் இல்விழையாமை என்ற குறளுக்குக் கருத்துக் கட்டுரை எழுதியிருந்தார். நாமக்கல் கவிஞர் என்பதற்காக அவ்விதழ் ஆசிரியர் அந்தக் கட்டுரையை வெளியிட்டு விட்டார் போலும். பிய்த்து உதறி விட்டேன். விரிவாகப் பிறகு சொல்கிறேன். எனக்குக் கல்கத்தாத் தமிழர்கள் அளித்த பட்டம் என்ன தெரியுமா? 'குணக்குன்று'...''

அரசியின் சிரிப்பு... பல தம்பூராக்களிலிருந்து எழுந்த இனிய ஒலி சட்டென்று அடங்கியது.

அங்கே நிசப்தம் - ஒலி ஓசை இல்லை.

தடங்கலுக்கு வருந்துகிறோம். நாம் ஏற்படுத்தவில்லை.

குணமெனும் குன்றேறி நின்ற தமிழாகரர், பண்பாட்டுக் காவலர், திருக்குறள் நெறிபரப்புச் செல்வர் முருகவேள்தான் 'மெயின் ஸ்விட்'சை 'ஆஃப்' செய்து விட்டாரே! அங்கு அமைதிக்குக் காரணமானார். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

படுகளைப்பு. பயணக் களைப்பு நீங்க இனிய உறக்கம்.

கீழே இருந்து ஒரு குரல் - மீண்டும் அக்குரல் பலமான குரல்...

"அம்மாவ்... சின்ன அம்மாவ்... மேடம்..." - இப்படியாகப் பலத்த விளிப்பு!

அருகே உறங்கிக் கொண்டிருந்த அரசியின் காதிலும் மெல்லக் கேட்டிருக்க வேண்டும்.

"யார்ரா அது நியூசென்ஸ்... ஏன் ஷவுட் பண்றே?" என்று குரல் கொடுத்துக் கொண்டே, தட்டுத் தடுமாறிப் படி இறங்கி வந்தார் ஒழுக்கக்குன்று, தூயத் தமிழ்க்காவலர்!

கண்களைக் கசக்கிக் கொண்டு, "ஏண்டா கத்தறீங்க... மேனர்ஸ் இல்லாம? நல்ல ஸ்லிப்பை டிஸ்டர்ப் செய்துட்டீங்க... ஹூம்..."

கீழே நான்கு ஐந்து பேர் நின்று கொண்டிருந்தார்கள்.

உடலெல்லாம் சேறு. ஜட்டி மட்டும் அணிந்திருந்தார்கள்.

உடலிலிருந்து கழிவுநீர் சொட்டிக் கொண்டிருந்தது.

"அய்யய்யோ... தரையையெல்லாம் அழுக்காக்கிட்டீங்களே..."

"ஸார்..."

"ஐயான்னு சொல்லு" - ஒருவன் மெல்லிய குரலில் திருத்தினான்.

"ஏன் ஐயாவுக்கு இங்கிலீஷ் தெரியாதா? சற்று முன்புதான் இங்கிலீஷில் பேசினாரே?"

"தெரியும்... தெரியும்... அவர் செந்தமிழ்க் காவலர்!"

"சரிதான்யா.. துட்டு வாங்கிக் குடு... உடம்பெல்லாம் கசகசக்குது. எம்மாம் நேரம் நிக்கறது?"

"நான் என்ன செய்யறது? இருங்கடா... மேலே அய்யா ரெஸ்ட் எடுத்துண்டிருந்தார். அவரை டிஸ்டர்ப் செய்ய விரும்பலை."

"நாங்க ஊட்டே போயி குளிச்சு சோறு துண்ண வேணாமா?"

தமிழ்மொழிச் செம்மல் பொறுமையிழந்து, "தம்பிகளா! உங்களுக்கே நியாயமா? இராஜஸ்தானிலிருந்து வாங்கி வந்த விலை மதிப்பற்ற தரையில் பதிக்கப்பட்ட பளபளப்புப் பாளங்களை அழுக்காக்கி விட்டீர்களே. காஷ்மீர்க் கம்பளம் உங்கள் கால் மாசுபட்டு பாழாகி விட்டதே! ஐயோ... நாற்றம் இல்லை... கெட்ட மணம்!

போங்கள்... போங்கள்... இங்கிருந்து போய் நன்றாகக் குளித்து, புத்தாடை அணிந்து வாருங்கள். பிறகு செய்த பணிக்குக் கூலி தருகிறேன்!'' தோட்டக்காரனைப் பார்த்து, ''ஏ... உலகநாயகரே! நீ அந்தத் தாடி, மீசையை எடுத்து விட்டுத்தான் வர வேண்டும். என் வீட்டில் எல்லாம் தூய்மையாக, ஒழுங்காக அழுக்கில்லாமல் இருக்க வேண்டுமென்று உனக்குத் தெரியாதா?''

''அய்யா! ஐயப்பன் தரிசனத்துக்காகச் சபரிமலைக்குப் போறதுக்கு நான் முடி வளர்க்கிறேங்க...''

''எனக்குத் தெரியாது. நன்றாக முகத்தை மழித்துத்தான் என் எதிரே வர வேண்டும். பார்க்கப் பிடிக்கவில்லை'' என்று கூறித் தன் தாடியை மெல்லத் தடவிக் கொண்டார்.

'ஓ... அதான் குத்துகிறது என்று அரசி சொன்னாளோ?' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

மாடிப்படியில் ஆடை திருத்திக் கொட்டாவி விட்டவாறு வந்து நின்ற அரசியிடம் முருகவேள் சொன்னார்: ''பார்... பார் விலை மதிப்பற்ற தரைக் கம்பள விரிப்பையும் டர்ட்டி ஆக்கி விட்டார்கள்'' என்ற போது அரசி சிரித்தாள்.

அவள் எதற்காகச் சிரிக்கிறாள் என்று தெரியாமல், ''ஓ, 'டர்ட்டி' என்று சொல்லி விட்டேனா? அழுக்காக்கி விட்டார்கள்'' என்றார்.

மேலும் அவள் சிரித்தாள்.

வீட்டு அழுக்கைப் போக்கச் சாக்கடையில் இறங்கித் தங்களை அசுத்தப்படுத்திக் கொண்ட பணியாளர்கள் தங்களைத் தூய்மைப் படுத்தி வரச் சென்றார்கள்.

போகும்போது ஒருவன் கேட்டான்.

அவன் கேட்பதைக் கேட்டு ஜகத்ரட்சகன் சிரித்தான்.

டி.வி.யில் வள்ளுவர் குறளினின்று சிறந்த குறளுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தார் ஓர் இளம் புயல்.

'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'

ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருகிறது. அதனால் அந்த ஒழுக்கத்தை உயிரை விடச் சிறந்ததெனப் போற்றுகிறோம்.

‘பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு’

பிறருடைய மனைவியை விரும்பி நோக்காமல் இருப்பதே ஆண்மைக்கு அழகு. சான்றோர்க்கு அது மிக முக்கிய அறம் மட்டுமன்று; சிறந்த ஒழுக்கமுமாகும்.

தொடர்ந்து டி.வி.யில் பாரதியின் பாடல் ஒலித்தது.

‘உலகத்துக்கு நாயகியே - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
துணி வெளுக்க மண்ணுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
மணி வெளுக்க சாணையுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
மனம் வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!’

‘‘டி.வி.யை நிறுத்து’’ என்று கூவினார் முனைவர் முருகவேள்.

‘‘தொலைக்காட்சியை என்று சொல்லுங்கள்’’ என்று கூறிக் கொண்டே ஜகத்ரட்சகன், பணியாட்களை அழைத்துக் கொண்டு தோல் வெளுக்கவும், துணி வெளுக்கவும் சென்று கொண்டிருந்தான்.

● ● ● ●

# 79. கதீஜாவின் உள்ளம்

கல்கத்தா மெயிலின் வேகம் நாயுடுபேட்டைக்கருகேயே அதிகமாகத் தொடங்கி விட்டது. விபத்துக்கு ஒரு மாதம் முந்திய சமயமாதலால், புதிய அந்த அமெரிக்க என்ஜினின் வேக அளவு இந்திய ரயில்வே சரித்திரத்திலேயே பிரமிக்கத்தக்கதாக இருந்தது. அந்த இருட்டு வேளையில் காற்றைக் கிழித்துக் கொண்டு அது போகும் வேகம் வண்டியின் உள்ளே நம்மை இன்பமாகத் தாலாட்டுவது போலிருந்தது.

நீளமான கம்பார்ட்மென்ட் அது. புளி மூட்டை அடைவதுபோல் மக்கள் இப்பொழுதெல்லாம் ஏற முடியாதபடி, 'ரிசர்வ்' செய்யப்பட்ட 350 மைல்களுக்கு மேற்பட்டவர்களின் கம்பார்ட்மென்ட் அது. அப்படியும் வண்டி முழுவதும் பயணிகள் நிறைந்திருந்தனர்.

சென்டிரலை விட்டு வண்டி நகர்ந்தவுடனேயே 'அவளும் அவனும்' வண்டியில் ஏறியிருக்க வேண்டும். பூட்டப்பட்ட அந்தப் பெட்டியின் ஜன்னல் வழியே, ஓடும் வண்டியின் வேகத்திலும் அவள் முதலிலேயே துணிவுடன் ஏறி, பிறகு அவனையும் கைலாகு கொடுத்து உள்ளே அழைத்துக் கொண்டாள்.

'உஷ்... போ...போ... ஆ... ஊ' என்று ஜன்னலருக்கே உட்கார்ந்திருந்த ஒரு சிலர் அவர்கள் ஏறுவதைத் தடுக்க முயன்று பிறகு சும்மாயிருந்து விட்டனர்.

அவனுக்கு ஒரு கால் இல்லை. ஆனால் அந்தக் 'கோல்' ஒரு காலுக்கும் மேலாக உதவி செய்தது. கிழிந்த நீண்ட சில்க் ஜிப்பா முழங்கால் வரை தொங்கியது. இடையில் ஒரு லுங்கி, கழுத்திலே ஓரிரண்டு வர்ண மணிமாலை, தலையிலே பச்சை வர்ணத் தொப்பி, ஒரு கையிலே கஞ்சிரா போன்ற வடிவமுள்ள சிறு தாளம்.

அவளது தோளிலே ஒரு நீண்ட பை. அவன் பாடும்போது அவளும் சேர்ந்து பாடினாள். அவன் நிறுத்தி விட்டபோது அவள் மட்டும் பாடினாள். அவன் தாளம் போட்டான். 'ஜிலுக் ஜிலுக்' என்று தாளத்தின்

ஓரத்திலே மாட்டியிருந்த சதங்கை சப்திக்க அந்த இனிமையான இசை அச்சமயம் வண்டியில் இருந்தவர்கள் எல்லாருக்கும் கேட்க மன நிறைவாக இருந்தது. தொட்டிலாட்டுவதைப் போன்ற வண்டியின் ஆட்டமும், இவர்களின் தாலாட்டுப் பாட்டும் தூக்கத்தை வா என்று அழைத்தது எனலாம்.

'பிச்சையெடுப்பதைத் தடை செய்யுங்கள்' என்கிற உத்தரவு யாருக்குத்தான் அச்சமயம் கவனத்துக்கு வரப் போகிறது? அழகான இந்தி மெட்டுகளில் இனிய குரலுடன் கூடிய அந்தப் பாட்டு எல்லாரையும் கட்டுண்ட நாகம் போலாக்கி விட்டது. இரு நீண்ட பிரிவுகளையுடைய அந்தக் கம்பார்ட்மென்ட் முழுவதும் சுற்றி வந்தார்கள்.

காலணா, அரையணா என்று தடையின்றி எல்லாரும் போட்டதை அவன் வாங்கிக் கொண்டான். கொடுக்கச் சற்று தாமதிப்பவர்களிடம், கல் மனதாக 'கம்'மென்று சும்மாயிருப்பவர்களிடம் அவள் சற்று நேரம் நின்று இந்தியிலேயே பேசி, வெண்பற்களைக் காட்டி, கொடுக்காதவர் களையும் கொடுக்கும்படி செய்து வாங்கிக் கொண்டிருந்தாள். நம் மக்களுக்கு இன்னும் தர்மத்திலே நம்பிக்கையிருக்கிறது என்று எண்ணினேன்.

ரயில் ஓடிக் கொண்டிருந்தது. சில நிமிஷங்களிலேயே அவர்கள் வேலை முடிந்து விட்டது. வண்டியின் கதவுக்கருகில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள், அந்த யாசகக் காதலர்கள்.

துறுதுறுவென்று களைகொண்ட முகம், வாரப்படாததலையானாலும் நீண்டு சுருண்ட கூந்தல், அதை அரைகுறையாக மறைக்கும் அந்தப் புடைவை... இவற்றுடன் கூடிய அவள், அவனுடன் சரளமாகப் பழகினாள்.

அவன் சில்லறையை எண்ண ஆரம்பித்தான். அவள் கவனித்துக் கொண்டே வந்தாள். ஏழரையணா... எட்டணா...

சட்டென்று அவன் கையிலிருந்ததை அவள் வெடுக்கென்று பறித்துக் கொண்டாள். முதலில் அவன் சிறிது தடுத்து இழுத்துக் கொண்டாலும், பிறகு விட்டுக் கொடுத்து விட்டான்.

இந்தியில் அவன் பேசினான்: "எல்லாமே உனக்குத்தானே... ஏன் அதற்குள் அவசரப்படுகிறாய்? எண்ணிப் பார்த்து நானே தர மாட்டேனோ?"

"ஆகா... எண்ண வேறு வேண்டுமா? எல்லாமே எனக்கு என்றால் நானே எண்ணிக் கொள்கிறேன். கொடுத்து விடேன்" - அவளுடைய

பேச்சிலே ஒரு குழைவு; கண்ணிலே ஒரு சுழற்சி; அந்த இரு விழிகளின் சுழற்சியிலே அவன் மயங்கிவிடாமலா இருப்பான்?

காவி ஏறிய தன் பற்களைக் காட்டிக் கொண்டே மெல்ல அவள் கன்னத்தைத் தட்டினான். அவளும் மெல்ல அவன் மேல் சாய்ந்தாள். தங்களைச் சுற்றி ஏராளமானவர்கள் இருக்கிறார்கள் என்ற கூச்சமில்லை அவர்களுக்கு.

சட்டென்று அவள் எழுந்தாள். தன் தோளில் மாட்டியிருந்த பையைத் துழாவினாள். இரண்டு ரெட்டித் துண்டுகள். இருவரும் சுவைக்க ஆரம்பித்தனர்.

அவன் மெல்ல என் பக்கம் திரும்பினான். ''பாபுஜி மணி என்ன?'' என்றான்.

''பத்தரை'' என்றேன்.

''உம் இன்னும் இருக்கிறது'' என்றான் சற்றுச் சலிப்புடன்.

''என்னப்பா இன்னும் இருக்கிறது என்கிறாயே...'' என்றேன். அவர்களுடன் பேச ஒரு சிறு வாய்ப்பு அகப்பட்டு விட்டால் போதாதா?

''அடுத்த ஸ்டேஷன் நெல்லூரு இல்லைங்களா? அது வரதுக்குத் தான் மணி பதினொன்று ஆகிடுமே'' என்றான்.

''அத்துடன் நீ இறங்கி வேறு கம்பார்ட்மென்ட்டுக்குப் போய் விடுவாயா?'' என்றேன்.

'ஹூம்ஹூம்...' என்று தலையாட்டினான் அவன். பிறகு, ''இன்றைய தொழில் இவ்வளவுதான். நெல்லூரிலே அந்தச் சத்திரத்திலே படுத்துத் தூங்கி விட்டு மறுபடியும் எங்கள் தொழிலைத் தொடங்குவோம்'' என்றான் அவன்.

''கிடைத்த காசு போதுமா? இன்னும் வேண்டாமா? இந்தப் பெட்டி யிலேயே எட்டணாவுக்கு மேலே கிடைச்சிருக்கே. இன்னும் இரண்டு மூன்று கம்பார்ட்மென்ட்கள் போனால் இன்னும் கிடைக்குமே'' என்றேன் நான்.

அவன் சிரித்தான். ''எதுக்கு சாமி? கிடைச்சது போதும். நான் யாரைக் காப்பாத்தணும்... இந்த ஒரு ஜீவன்தானே!'' என்று கூறிக் கொண்டே அவளைப் பார்த்தான். அவள் முகத்தில் ஒரு மாறுதலும் இல்லை. லேசான புன்னகை மட்டும் படர்ந்திருந்தது.

‘‘என்ன... உன்னை மட்டும் காப்பாற்றிக் கொள்ளத்தானா... அவள் உன் மனைவிதானே...’’ என்று கேட்டேன்.

இந்த அதிகப் பிரசங்கித்தனமான கேள்விகள் கேட்டிருக்க வேண்டாம் தான். தூக்கம் வராத நேரத்தில் பொழுது போக வேண்டுமே!

அவன் மீண்டும் சிரித்தான். ‘‘ஆமாம்... அவளையும்தான் காப் பாத்தணும். காப்பாத்தலைன்னா சும்மா விடுவாளா? நான் வாழறதே அவளுக்காகத்தானே சாமி. இருந்தாலும் அவளுக்கு அப்பன் இருக்கான். இன்னிக்கு நான் துட்டுக் கொடுக்கலைன்னாலும் காப்பாத்த ஆள் இருக்கு. எனக்கு அப்படி இல்லைங்களே’’ என்றான்.

‘‘சுத்தமா தமிழ் பேசறயே... நீ தெற்கத்திப் பக்கமா?’’ என்று கேட்டேன்.

‘‘ஆமாங்க... என்னைப் பார்த்தா பஞ்சாபி மாதிரி தெரியும். ஆனால், எனக்குத் திண்டுக்கல் பக்கங்க...’’ என்றான்.

நான் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டேன். ‘‘திண்டுக்கல் பக்கம் அழகா வெற்றிலைத் தோட்டத்திலே இருக்கலாமே... இந்தத் தொழில் ஏனப்பா?’’ என்றேன்.

கபடமில்லாமல் சிரித்தான் மறுபடியும். ‘‘சாமி! இந்தத் தொழிலில் ருசி கண்டவர்களுக்கு... அதுவும் இந்தக் கதீஜாவைப் போல ஒருத்தியைத் துணைக் கொண்டவர்களுக்கு இந்தத் தொழிலில் வெறுப்பு ஏன் வரப் போகுது?’’ என்றான்.

ஒரு முறை அவளைப் பார்த்தான். அவள் கண்களில் அன்பு கனிந்திருந்தது. முகத்திலே விவரிக்க முடியாத ஒரு விஷமச் சிரிப்பு. ஆனால், விஷச் சிரிப்பன்று.

‘‘சாமி...’’ என்று ஆரம்பித்தான் அவன். சரி... நல்ல கதையொன்று கிடைக்கப் போகிறது என்று அரைகுறையாகக் கண்களைச் சுழற்றம் தூக்கத்தையும் துடைத்துக் கொண்டேன். எதிரே என் மனைவியோ நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

‘‘எனக்கு திண்டுக்கல் பக்கத்திலே நாஞ்சில் குப்பம் ஊருங்க. நான் நாலு வயசுப் பையனா இருக்கிறபோதே எங்கப்பாரு எங்களை யெல்லாம் விட்டுட்டு சிங்கப்பூருக்கோ, எங்கேயோ போயிட்டாரு.

அப்புறம் அவர் செத்துட்டாருன்னு நிச்சயமா எங்கம்மாவுக்குத் தெரிஞ்சுப் போயுடுச்சு. அஞ்சு வயசுப் பையன் நானும் அம்மாவும்

எங்களுக்கு இருந்த அந்த சிறு வெத்திலைத் தோட்டத்திலே உழைச்சுக் கஷ்டப்படுவோம்.

தண்ணியில்லாமே போயிட்ட சமயம் அம்மா எங்கெங்கெல்லாமோ சுற்றி அலைஞ்சு கவலை மாடுகள் இரண்டு ஜோடி குத்தகைக்கு வாங்கி வந்து தண்ணி எடுக்க ஓர் ஆளை வேலைக்குச் சேர்த்தாள்.

அவளாலும் ஓடி ஆடி வேலை செய்ய முடியலை. பெண்பிள்ளை என்ன செய்வா? அவளுடைய தாய் வகையில் சொந்தக்காரர் ஒருத்தர் யோசனையின் பேரில் தோட்டத்தைக் குத்தகைக்கு விட்டாள். அதிலிருந்து பிடித்தது சனியன். குத்தகைப் பணம் சரிவர வராது. மழையில்லை அந்த வருஷம். ஏதாவது காரணம்... கடைசியில் தோட்டத்தைக் கால் விலைக்கு வித்துட்டோம்.

அப்புறம் ஓரிரண்டு வருஷங்கள்தான் அம்மா உயிரோட இருந்தாள். எனக்கு வயது அப்போ எட்டு. அநாதையாய் நான் விடப்பட்டேன்.

இந்த உலகமே என்னன்னு புரியாத என்னை ஊராருங்க திண்டுக்கல்லுலே ஒருத்தர் கடையிலே வேலைக்கு அமர்த்தினாங்களே அதுதான் தெரியும்.

இப்பத்தான் தெரியுது... என்னுடைய வயசுக் காலத்திலே ஏழெட்டு வருஷங்கள் ஜெயில் மாதிரி அந்த மஸ்தான் சாய்பு கடையிலே, வெளி உலகத் தொடர்பு இல்லாமலே 'வேலை வேலை'ன்னு உசிரை விட்டோமேன்னு.

காலையிலே எங்க முதலாளி வீட்டுலே பழையது பிழிஞ்சு வைப்பாங்க. கடிச்சுக்க வெங்காயம்தான். அவங்க எல்லாம் சொல்ற மாதிரி 'திம்னு மூக்கைப் பிடிக்க' ஓர் இழு இழுத்துவிட்டு முதலாளியோட கடைத் தெரு புகையிலை மண்டிக்குப் போய் கடையைத் திறந்தா, அவ்வளவுதான். என்னை உள்ளே சைஸ் பிரிக்க வேலைக்கு விட்டார் நம்பிக்கையான ஆளுன்னு.

அந்த இருட்டு அறையில் போர் போரா புகையிலை கட்டு அடுக்கி இருக்கும். முதலிலே புகையிலை நெடி குமட்டியது. தலையைச் சுற்றியது. இதைப் போக்கச் சுண்ணாம்பு தடவி வெத்திலையும், அதே புகையிலையையும் போடச் சொல்லிக் கொடுத்தாரு முதலாளி. அப்புறம் கிறுகிறுப்பு எங்கேயோ போச்சு!

சாயங்காலம் ஆறு, ஏழு மணி வரை ரகம் வாரியா பிரிப்பேன். வெளியிலே மழை கொட்டினாலும் சரி; வெயில் கொளுத்தினாலும் சரி... எனக்கு ஒண்ணுதான்.

எப்படியோ துக்கமும் கஷ்டமும் தெரியாமே வேலை செஞ்சுட்டேன். இப்போ நெனைச்சுப் பார்த்தாலும் அந்த எம வேலையை, பாதாள குகை போல இருந்த இடத்திலே எப்படி செஞ்சோம்னு தோணுது.

வயது பதிமூணு பதினாலு ஆகியிருக்கணும் எனக்கு. அந்த இருட்டறையிலே தொழிலு - வேலைன்னு - வளர்ந்தாலும் எனக்கு வயது மட்டும் கபகபன்னு வளர்ந்து விட்டது. ஆளும் வளர்ந்துட்டேன். அப்பொழுதுதான் மஸ்தான் சாய்புவின் நாலாம் மகன் சகவாசம் ஏற்பட்டது.

படிப்பு ஏறாத அவனை என்னோடேயே வேலை செய்யப் போட்டாரு முதலாளி.

நல்ல காலமோ, கெட்ட காலமோ அவன்தான் உலகம்னா என்னன்னு காட்டிக் கொடுத்தான். 'இப்படி உழைக்கிறதை விட வேறே எங்கேயாவது ஓடிப் போய் விடலாம்' என்பான்.

அப்ப, எட்டு வருஷத்துக்கு முன்பு மிலிட்டரிக்கு ஆள் எடுக்கற சமயம். ஞாயிற்றுக்கிழமை. கடையில்லை. முதலாளியும் ஊரில் இல்லை.

இப்படி வெளியே சுத்தி வரலாமுன்னு கிளம்பினோம். மிலிட்டரிக்கு ஆள் எடுக்கறவங்க கண்ணிலே பட்டாங்க. அவனது தூண்டுதல் பேரில் எப்படியோ அதிலே சேர்ந்துட்டோம்.

மனசு குஷியாகத்தானிருந்தது. அந்த உடுப்பு, தலையிலே தொப்பி, தோளிலே துப்பாக்கி, 'ரைட் லெப்ட்' நடை எல்லாத்தையும் விட வெளி உலகத்தைப் பார்த்தேனே! அதுவே போதும்...''

இடையே அவன் மெல்ல எழுந்து ஜன்னல் வழியே அந்த இருட்டில் எதையோ பார்த்தான்.

''சாமி... ஆச்சு இன்னும் கொஞ்ச நேரம்தான். ஊரு வந்துடும் போல இருக்கு. நான் மிலிட்டரிலே சேர்ந்து சுத்தி... பர்மா போயிருந்த கதையெல்லாம் சொல்றதுன்னா... கல்கத்தா போற வரை சரியாயிருக்கும்.

பர்மா சண்டை சமயம் மிலிட்டரியிலேர்ந்து தப்பி எங்கெங்கோ திரிஞ்சேன். கல்கத்தா வந்து சேர்ந்தேன். மலபார் டீ ஓட்டல் ஒண்ணிலே சேர்ந்தேன். அப்பப்பா புகையிலை மண்டியே தேவலை. அந்தப் பெரிய அடுப்பெதிரே நான் பட்ட கஷ்டம்...

மனசே சரியில்லாமே போயிடிச்சு. செத்துப் போன அம்மாவும் பழைய முதலாளி மஸ்தான் சாய்புவும் அடிக்கடிக் கண்முன் தோன்றுவார்கள்.

கஷ்டமோ, தொந்தரவோ ஊரோடயே இருந்துட்டா எவ்வளவோ சுகமென்று நெனைச்சேன் பேசாமல் நம்ம ஊரு பக்கம் போகலாம்னு ஒருநாள் ரயில் ஏறிட்டேன். கையிலே துட்டு கூட இல்லை. ஆனா, நான் செய்து கொண்டிருந்த டிரஸ்ஸுலே குறைச்சல் இல்லை.

அப்பத்தான் இவளைச் சந்திச்சேன். (அவன் கதீஜாவின் பக்கம் திரும்பி) கதீஜா! அதுக்கப்புறம்தான் உனக்குத் தெரியுமே. நீதான் சொல்லேன் சாமிக்கு. என் வாய் வலிக்கிறது. கொழுக்கட்டை போல உட்கார்ந்திருக்கியே...'' என்று கூறிக் கொண்டே உலர்ந்த வெற்றிலையைக் கையிலெடுத்தான்.

கதீஜா பிகு செய்து கொள்ளவில்லை. அந்தக் கயல்விழியால் தன் காதலனை அன்புக் கோபம் கோபித்துக் கொண்டு ஆரம்பித்தாள். பெண்களுக்கே உரிய இனிய குரலிலே அவள் சொன்ன கதை இன்னும் என் காதுகளிலே ரீங்காரமிடுகிறது.

என் கதை முழுசும் சொல்லணுமின்னா எத்தனையோ நாளாகலாம். எனக்கு விவரம் தெரிஞ்சு எங்கம்மா யாருன்னே தெரியாது. எங்கப்பாவோடேயே வளர்ந்தேன். சில சமயங்களில் ரெண்டு நாள் சேர்ந்தாப் போலே கண்காணாம அப்பா விட்டுட்டுப் போயிருக்கார். எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் அழுது அழுது அசந்து தூங்கிடுவேன். இதே கல்கத்தா மெயில் இல்லாக்காட்டி, பெஜவாடாவிலிருந்து இன்னொரு சின்ன ரயில்தான் எங்கள் தொழில் செய்யும் இடம்.

நான் நல்லாப் பாடறேன்னு எல்லாரும் சொல்வாங்க. 'சினிமாவுல இவ்வளவு நல்ல குரலோடே எங்கேங்க பாடறாங்க?' என்று கூற ரயிலிலே இருக்கறவங்க அசைப்பிலே சில சமயம் பேசிப்பாங்க.

எங்கப்பாவுக்கு என்னை வைத்துக் கொண்டு பிச்சை எடுத்துச் சம்பாதிக்கறது ரொம்ப சுக வாழ்வாய்ப் பட்டுடுத்து. காலையிலே பொழுது விடிஞ்சதுன்னா தொழிலு ஆரம்பமாகிவிடும். ரெண்டு மூணு பாட்டு எனக்குத் தெரிஞ்சிருந்தது. திருப்பித் திருப்பி அதையே பாடுவேன்.

தனது கரகரப்பான குரலிலே அப்பா பல பாஷைகளிலும் சொல்லிப் பிச்சையெடுப்பார். காலணா... அரையணான்னு விழும். கிழிந்த கவுனுடன் ஒர் அழுக்குச் சட்டையை அணிந்திருப்பேன். பிறகு முடியாம போயிட்டது. அப்பா எங்கெங்கெல்லாமோ சுற்றி ஒரு புடைவை வாங்கியாந்தார். பிடிச்சதோ பிடிக்கலையோ அதையே கட்டிக் கொண்டேன். எப்போவாவது ஒருமுறை தண்ணிலே நனைச்சு உடுத்துவேன்.

அன்னிக்கு முழுக்க எங்கேயும் போக முடியாம போயிடும். எனக்கு வயது ஏறிட்டே வந்தது எனக்கே சில சமயங்களில் புரிஞ்சது. எப்போவாவது சினிமா பார்க்கப் போனா, அதுலே விசித்திரம் விசித்திரமா என் வயதுப் பொண்ணுங்க உடுத்திக் கொள்றதைப் போல நானும் சிங்காரிச்சுக்கிடலாம்னு எண்ணுவேன். ஆனா வழி?

எங்க தொழிலுக்கு ஒரு நல்ல காலம் அப்போ... எனக்குக் கூட என்றுதான் சொல்லணும். (இப்படிச் சொல்லி விட்டு அவள் தன் காதலனைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்) இந்த மிலிட்டரிக்காரங்க இங்கேருந்து அங்கேயும் அங்கேருந்து இங்கேயுமா தினமும் ரயிலில் போயிக்கிட்டிருப்பாங்க. என்னா கும்பல்... என்னா கும்பல்!

நாங்க இந்த மாதிரி ஜனங்க பிரயாணம் செய்யுற வண்டியை எல்லாம் சட்டை செய்யறதில்லை. மிலிட்டரிக்காரங்க எங்கே ஏறியிருக்காங்கன்னு பார்ப்போம். ஒரு நாளைக்கு அஞ்சு, பத்துன்னு கூட சில சமயம் கிடைக்கும். ஆனா எங்க அப்பாரு அத்தனையும் குடிச்சு ஒழிச்சிடுவாரு. அசாத்தியக் குடி... சில சமயம் அந்தச் சத்திரத் திண்ணையில் படுத்து ஓவென்று புலம்புவேன்.

கெஞ்சிக் கெஞ்சிக் கூப்பிட்டாலும் பிடிவாதமா முடியாதுன்னு படுத்துக் கிடப்பேன். 'இனிமே குடிக்கறதுல்லே... வர துட்டுலே உனக்குப் புடைவை, ஜாக்கெட், சோப்பு, சீப்பு எல்லாம் வாங்கித் தர்றேன்...' என்று பல தடவை சொன்ன பிறகுதான் அன்றைய தொழிலை ஆரம்பம் செய்வேன்.

பின்னே என்னவாம்... நானு பாடி சம்பாதிக்கிறது, ஆம்பிளை ஜோரா செலவு பண்றது! (மறுபடியும் அவள் அவனைப் பார்த்தாள். அவன் 'ராணியம்மா! அதனாலதான் இப்ப சரிபாதி துட்டு வாங்கிக்கிறீயே!' என்றான்)

ஒருநாள் அப்பா ரொம்ப குடிச்சுட்டார். எழுந்திருக்கவேயில்லை. கால் துட்டுக்கூட கையிலே இல்லை. அன்னிக்கு வண்டியிலே எதனாச்சும் கிடைச்சாத்தான் உண்டு. என்ன செய்யறது? நானே அப்பாவை விட்டுட்டுக் கிளம்பிட்டேன்.

பயம், கூச்சம் அப்படின்னு ஒண்ணும் தோணலை. சின்ன வயசுலேர்ந்து ஓடற வண்டியிலே ஏறுகிறதும், பிச்சையெடுப்பதுமாக இருந்து விட்ட எனக்கு என்னா பயமாம்? மிலிட்டரி கம்பார்ட்மென்ட்டில் ஏறினேன்.

வழக்கப்படி நான் அந்தப் பக்கம் ஜன்னல் வழியா ஏறி உள்ளே வர்றதுக்கும் இவரும் என் கூடவே உள்ளே வர்றதுக்கும் சரியா இருந்தது.

'தொழில்லே போட்டி வந்துடுச்சு டோய்' என்று எண்ணினேன். அவர் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடி நாம் பாட ஆரம்பிச்சுடணும்னு டக்குன்னு ரொம்ப பலமா பாட்டைத் தொடங்கினேன்.

வண்டி கிளம்பிடுச்சு. அவர் ஒண்ணும் பாடலை. கம்முன்னு இருந்தார். ஆனா, அதிர்ஷ்டம் பாருங்க... டிக்கெட் செக்கர் எங்களைப் போலவே குபீர்னு வண்டியிலே அதே பெட்டியிலே ஏறினார்.

அப்படியே நடுங்கிட்டேன். இதேதடா வம்புன்னு... எங்கேயாவது நடுவே இறக்கி விட்டார்னா? அப்பாவும் இல்லையேன்னு நினைச்சுட்டு பாட்டை நிப்பாட்டிட்டேன்.

டிக்கெட் செக்கர் என்னென்னமோ பேசினார். எங்கள் இருவரையும் சேர்த்துச் சேர்த்துப் பேசினார். அவர் (அதான் இவர்) வாயைத் தொறக்க வேயில்லை.

அடுத்த ஸ்டேஷன்ல வண்டி நின்னது. அவர் எங்களைக் கீழே இறக்கி விட்டுட்டார். ஆனா, ஐயோ... வண்டி மாற்றின்னா ஏறிட்டோம் என்பது அப்பத்தான் தெரிஞ்சது. பட்டணம் போற வண்டின்னா இது... என்னடா சங்கடம் என்று வேறே தோணுச்சு. என்ன செய்யறது, இந்த ஊரிலே உட்கார்ந்து என்ற் யோசனை வேற கிளம்பிடிச்சு.

அந்தச் சின்ன ஸ்டேஷன்ல நாங்க ரெண்டு பேர் மட்டும் தனியா நின்னோம். இவர் ஆடு மாதிரி முழிச்சுக்கிட்டு இருந்தார். (இருவரும் இந்த இடத்தில் குபீரென்று சிரித்தனர்).

'ஏம்பா! இன்னிக்கு யாரு முகத்துல முழிச்சே? உனக்குக் கூட ஒரு காசும் கிடைக்கலை போலிருக்கே!' என்றேன், அவரும் பிச்சை எடுக்கிறவர் என்று எண்ணி.

அப்ப இவருக்குக் கோபம் வந்ததை பார்க்கணுமே... ஆனா, கோபமெல்லாம் இந்தக் கண்ணின் மந்திரச்சக்தியிலே அப்படியே சாம்பலா போயிடுச்சு (என்று கூறி சிரித்துக் கொண்டே தன் காதலனைப் பார்த்தாள். அவனும் புதுப் புன்னகையொன்று புரிந்தான்).

ரெண்டு பேருக்கும் ரொம்பப் பசி. ரொம்ப 'தோஸ்தா' ஆயிட்டோம். இப்பவாவது ஆளு மெலிஞ்சு போயிட்டார். அப்பப் பார்க்கணுமே... என்ன வாட்டசாட்டம்!

அன்னிக்குப் பொழுது வயிற்றுக்கு என்ன பண்றதுன்னு யோசிச்சுக் கிட்டேயிருந்தேன். ஊருக்குள்ளாற போய் பிச்சையெடுத்துண்டு வந்தாக்கா என்னன்னு யோசனை வந்துச்சு. ரெண்டு பேரும் அந்த ஊர்

கடைத் தெருவுக்குப் போனோம். ரெண்டு பேருமா பாடினோம். அவர் நல்லா பாடறது அப்பத்தான் தெரிஞ்சது. இல்லாப்போனா சரியான தோஸ்தாகி இருக்க முடியுமா?

மறுநாள் அப்பா இருக்குமிடம் போய்ச் சேர்ந்தோம். என்னையும் இவரையும் ஏற இறங்கப் பார்த்தார் அப்பா.

கத்து கத்துன்னு கத்தினார். பின் சாந்தமானார். இவர் அந்த இடத்தை விட்டு நழுவி கண்ணுக்குத் தெரியற பக்கமா சுத்திக்கிட்டு இருந்தார்.

மறுநாளிலிருந்து ரயில் ஏறும்போது இவரும் வேறே பெட்டியில் ஏறுவார். இவரையும் பிச்சையெடுக்கும் தொழிலிலே சிக்க வைச்சுட்டோமேன்னு நினைப்பேன்.

நான் இங்கே பாடுவேன்... சற்று நிறுத்துவேன். அதே பாட்டின் அடுத்த அடி அங்கு பாடப்படும்.

தினமும் நாங்கள் சந்திக்கத் தவறுவதில்லை. அன்று நாங்கள் ராத்திரி சந்திரக் கிணற்றடியில் பேசிக்கிட்டிருந்தோம். மங்கிய நிலா வெளிச்சத்தில் மயங்கியே இருந்தோம்.

திடீர்னு அப்பா வந்துட்டார். இவருடைய சட்டையைப் பிடிச்சுக் கிட்டார். என்னென்னமோ கத்தினார். இவர் ஒரு திமிரு திமிரிட்டு ஓடிப் போயிட்டார்.

ராவெல்லாம் அப்பாவுக்கு ஆத்திரம்.

காலையிலே அந்த மெயிலிலே பிச்சையெடுக்க ஆரம்பிக்கணுமே! நான் பொறுமையா காத்துக்கிட்டிருந்தேன்.

நான் கெட்டுப் போயிட்டதாகவும் அப்படியே கொலை செஞ்சி குழி வெட்டி மூடிடப் போறதாகவும் அப்பா புலம்பினார். ஆனா, அவருக்கு என்னா தெரியும் எனக்கு இவர் மேலேயுள்ள ஆசை?

என்னங்க... நீங்கதான் மேலே சொல்லுங்களேன். இதுக்கு மேலே என் வாய் மட்டும் வலிக்காதா? இடிச்ச புளி மாதிரி உட்கார்ந்திருக் கிங்களே'' என்றாள் அவள்.

**வா**யிலிருந்த புகையிலையைத் துப்பி விட்டு அவன் ஆரம்பித்தான்: ''அன்னிக்கு ராத்திரி நானும் கதீஜாவுமா உட்கார்ந்திருந்தோம். அவளுடைய உள்ளம் எனக்கு நன்றாகப் புரிஞ்சிருந்தது. கதீஜாவை விட்டு ஒரு நிமிஷம் கூட பிரியக்கூடாதுன்னு அவ்வளவு ஆசை தோணிடிச்சு.

சிரிச்சு விளையாடறதும், பேசறதுமா நேரங்கழிக்கணும் போல இருந்தது. என் மனசும் இவளுக்கு நன்றாகத் தெரிஞ்சிருந்தது.

அன்னிக்கு வந்த சில்லறைகளை எண்ணினேன். இவளும் தன் மடியிலிருந்த சில்லறைகளை எடுத்து, 'உமாரு... இந்தா, எங்கப்பன் பார்த்தா பிடுங்கி இன்னிக்குக் குடிச்சுப் போடுவார். வெச்சுக்கோ கேட்கறபோது கொடு'' என்று கொடுத்தாள். நானும் சரின்னு வாங்கிட்டேன்.

திடீர்னு இவ அப்பா வந்து என் சொக்காயைப் பிடிச்சுக் குலுக்கவும் அப்படியே சமாளிச்சுக்கிட்டு ஓடிப் போயிட்டேன்.

இவ கொடுத்த துட்டெல்லாம் எங்கிட்டேயே இருந்தது. ஐயோ பாவம்... அவ அப்பா சொன்ன மாதிரி 'உங்கிட்டே இருக்கும் துட்டை வாங்கிக்கிறவரை கொஞ்சுவான். அப்புறம் ஓடிப் போயிடுவான்' என்பது போலவே இச்சந்தர்ப்பம் நேர்ந்து விட்டது.

ஆனா, கதீஜா இதை நம்பலையே... இவளுடைய உள்ளம் அப்பத்தான் எனக்கு நல்லா விளங்கிச்சு. என் மேலே உசிரே ஏற்பட்டிருக்குன்னு முடிவு செஞ்சேன்.

மறுநாளைக்கு மறுநாள் நான் துட்டெல்லாம் எடுத்துக்கிட்டு ஓடிட்டதைக் கேள்விப்பட்ட இவ அப்பன் அடங்காக் கோபம் கொண்டான். என்னைக் கண்டா மண்டையை உடைச்சுடறதா முடிவு செய்துட்டானாம்!

அன்று வழக்கம்போல் மெயிலிலே பிச்சையெடுக்கத் தகப்பனும் பொண்ணும் வந்தார்கள்.

நான் அடுத்த பெட்டியிலே ஏறப் போனேன். அங்கே டிக்கெட் செக்கர் இருந்ததைக் கண்டேன். வண்டியும் கிளம்பிடிச்சு. இப்படியும் அப்படியுமா தவிச்சுச் சட்டுன்னு இவங்க ஏறியிருந்த பெட்டியிலேயே நானும் தெரியாம ஏறிட்டேன். திரும்பிப் பார்த்தான் கிழவன்.

'அட... போக்கிரி ராஸ்கல்'ன்னு கத்தினாரு பாரு!

வண்டியிலே இருந்தவங்கள்லாம் அசந்துட்டாங்க. கிடுகிடுவென்று நான் ஒரு காலை வச்சு ஏறிக்கிட்டிருந்த வாசல்கிட்டே வேகமாக வந்தாரு.

கதீஜா கீச்சுன்னு கத்தினாள்.

எனக்குச் சட்டென்று ஒண்ணும் செய்யத் தோணலை.

'படுவா! மகளிட்டே சரசமா பேசி அவ துட்டெல்லாம் எடுத்துக்கிட்டும் போயிட்டியே எம்மாம் சாமர்த்தியம்'ன்னு கர்ஜித்து ஓங்கித் தன் தடியாலே வண்டிக் கம்பியைப் பிடிச்சுக்கிட்டிருந்த என் கை மேலே ஒரு போடு போட்டார்.

என் கை நழுவியது. தலை சுழன்றது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.''

வருத்தம் தோய்ந்த முகத்துடன் கதீஜா மீதியைச் சொல்லத் தொடங்கினாள்.

''ஐயோ சாமி! வண்டியிலேர்ந்தவங்கள்லாம் ஒவென்று கத்தி வண்டியை நிறுத்திப்புட்டாங்க.

அப்பப்பா... இவருடைய காலு சக்கரத்தில் சிக்கி ரத்த வெள்ளத்திலே கிடந்தாரு. உசிரே போயிடிச்சுன்னுதான் எனக்குத் தோணிப்புடிச்சு.

இந்த அப்பா இருக்காரே இரும்பு மனுஷன். இந்தச் செயலை செஞ்சதும் இல்லாமே வண்டி நின்னவுடனேயே அந்தக் குழப்பத்திலே என்னையும் விட்டுட்டு நழுவி ஓடிட்டாரு.

நான் திக்பிரமை புடிச்ச மாதிரி நின்றுக் கொண்டிருந்தேன்.

எல்லாரும் 'அந்தக் கிழவனைப் பிடிங்கோ'ன்னு கூக்குரலிட்டனர்.

அப்பா எங்கேயோ ஓடிட்டார். ஆனா, போலீஸாரு தேடிக்கிட்டே யிருந்தாங்க.

அதே வண்டியில் இவரை ஏத்திக்கிட்டு அடுத்த ஸ்டேஷன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனாங்க. நானும் துணிஞ்சு கூடப் போனேன்.

'உன் புருஷனா?' என்று ஆஸ்பத்திரியிலே கேட்டாங்க.

'ஆமாம்' என்றேன்.

'தொழில்?'

'பிச்சையெடுக்கிறது' என்றேன்.

'பிச்சைக்காரர்களிலேயும் புருஷன் பெண்சாதி இருக்காங்களா?' என்று கேலியாப் பேசினாங்க.

உண்மையிலே சொல்லுங்க... அந்த மாதிரிஆபத்து சமயத்திலே அவங்களே 'உம் புருஷனா?'னு கேட்டதற்கு 'ஆமாம்'னு பதில்

சொல்லாமே 'இல்லை'னு சொன்னா... 'சீ... போ வெளியே... உனக்கு இங்கே என்ன வேலை?'னு சொல்லியிருக்க மாட்டாங்களா?

நானும் கூட இல்லைன்னா என் ராசாவை எப்படிக் காப்பாத்தி இருக்க முடியும்?''

''ஆமாம்... கதீஜா இல்லைன்னா நான் பொழைச்சிருக்கவே முடியாது.

டாக்டரே சொன்னாரே... 'அப்பா நீங்கள்லாம் பிச்சைக்காரங்களே இல்லை. உன் பெண்சாதி ராத்திரிப் பகல் தூக்கம், சாப்பாடு இல்லாம உனக்கு உழைக்காமல் இருந்தா நீ எப்படி பிழைச்சிருக்க முடியும்? அதோட தன் ரத்தத்திலேயும் கொஞ்சம் கொடுத்தாப்பா' என்று டாக்டர் கூறியபோது என் கண்கள் ஆவலுடன் அவளைப் பார்த்தன.

உலகத்திலே பொண்ணுன்னு சொன்னா கதீஜா மாதிரின்னா இருக்கணும். நான் யாரோ; அவள் யாரோ!

திண்டுக்கல்லுலே பிறந்து தேசாந்திரியா வந்தேன் நான். இவளுடைய அந்தக் கண் பார்வையிலே உண்டான மயக்கும் சக்தி என்னை நினைவிழக்கச் செஞ்சுட்டதை எண்ணினால்...

இவ ஒருநாள் ஆஸ்பத்திரியிலேருந்து வெளியே எனக்கு புகையிலை வாங்கியாறப் போனாளாம். அப்போ இவ அப்பன் அங்கே வந்துட்டானாம்.

'ஏ கதீஜா! எங்கே இருக்கே? என் கதி என்னா ஆவுறது? அவனோடே போயிட்டியே... வா வந்துடு' என்று பலவந்தமாக் கூப்பிட்டானாம்.

ஒரு கணம் யோசித்து விட்டு, கதீஜா ஓவென்று கூச்சல் போட்டு எல்லாரையும் கூப்பிட்டு, 'பிடியுங்கோ... பிடியுங்கோ... இவர்தான் ரயிலிலேருந்து ஆஸ்பத்திரியிலே இருக்கிறவரை தள்ளி விட்டவரு' என்று சொல்லிவிட்டாளாம். உடனே அப்பாவைப் பிடிச்சு ரிமாண்டிலே வச்சுட்டாங்க.

என்னை விசாரிக்க ஆஸ்பத்திரிக்கே மாஜிஸ்டிரேட் வந்தார். நான் நடந்தவற்றை சொல்லி, 'அவர் என்னை அடிக்கவேயில்லை. அவரைப் பார்த்தவுடனே நானே மயங்கிக் கீழே விழுந்துட்டேன். என் கால் போக அவர் காரணமில்லை' என்று சொல்லிவிட்டேன்.

அருகிலிருந்த கதீஜாவின் முகம் வியப்பால் மாறியது. புரிந்து கொள்ள முடியாத வித்தியாசமான ஒளி முகத்தில் தோன்றியது.

கதீஜாவின் அப்பாவை விட்டுவிட்டார்கள். ஆனா, அவர் ஓடி வந்தார் பாருங்கோ... அப்படியே என் காலிலே விழுந்துட்டார். 'உன் குணம் போல வராது. உண்மையிலேயே நான் ஆத்திரத்தால் தள்ளியிருக்க, நீ உண்மையைச் சொல்லியிருந்தயானா ஏழு வருஷம் உள்ளே போட்டிருப்பாங்களே. தெரியாம உனக்குத் தீங்கு செஞ்சுட்டேன். ஒரு காலு போன உனக்கு ஒரு காலாகவே இருக்க முழு மனசுடன் என் பொண்ணைக் கொடுத்துடறேன்' என்று கதீஜாவின் கையையும் என் கையையும் சேர்த்து வைச்சார்.

காயம் ஆறி விட்டது. நான் நொண்டியாகி விட்டேன். ஆனா, கதீஜா எனக்குச் சகல உதவியையும் செய்து வந்தாள். இப்ப நல்லாப் பழகிட்டது.

ஒருநாள் என்னைக் கதீஜா கேட்டாள்: 'என்னங்க... உலகத்துலே யாருமே இப்படிக் கெடுதல் செஞ்சவங்களுக்கு நல்லது செய்யறதில்லையே... அப்பாவே கண்ணெதிரே உங்களைத் தள்ளியிருக்கச்சே இல்லைன்னு சொல்லிட்டீங்களே' என்றதற்கு நான், 'கதீஜா! அதற்கும் நீதான் காரணம். நான் யாரோ, நீ யாரோவாக வளர்ந்திருந்தோம். எதிர்பாராம சந்திச்சோம். நாடோடியா அலைஞ்சு கொண்டிருந்த என்னை ஓரிடத்திலே கட்டிப் போட்டதைப் போல் இருக்கச் செய்தாய். என் மேல் உனக்கு உள்ள ஆசையால்தான் அப்பாவையே பிடிச்சுக் கொடுத்தே... என் மேல் இவ்வளவு ஆசை உடைய உனக்கு வருத்தம் ஏற்பட வைக்கலாமா? உங்கப்பன் ஏழு வருஷம் சிறைக்குப் போனா நீ சந்தோஷப்பட்டிருப்பாயா? உன் உள்ளம் வாட நான் பார்த்திருப்பேனா?' என்றேன்'' - அவன் பேச்சை நிறுத்தினான்.

இருவரும் மௌனமாக இருந்தார்கள். மீண்டும் சொல்ல முடியாத புன்னகை அவள் முகத்தில் படர்ந்தது.

வண்டி நெல்லூரிலே நின்றது. அவர்கள் இருவரும் அவசர அவசரமாக ஸ்டேஷனின் எதிர்ப்பக்கமாக இறங்கினார்கள். ரயில் நகர்ந்தது. கதீஜாவும் அவள் கணவனும் கையசைத்துக் கொண்டிருந்தனர்.

உமாரின் உள்ளம் ஒசத்தியா, கதீஜாவின் உள்ளம் ஒசத்தியா என முடிவு செய்யப் பாடுபட்டுக் கொண்டிருந்தது என் மனம்.

● ● ● ●

# 80. முள்ளும் மலரும்

இயற்கையிலேயே சிவந்த அந்தக் கன்னங்கள் இன்னும் சிவக்க ஹேமா அழுது கொண்டே வந்தாள் அவள் சித்தியிடம். அவள் சித்தி மேகலா, அவளைத் தட்டிக் கொடுத்து அவளுக்குண்டான துன்பத்தின் காரணம் என்ன என்பதைக் கேட்டபோது ஹேமா விம்மிக் கொண்டே சொன்னாள்: ''தோட்டத்திலே நேத்து மொக்காக இருந்ததே ரோஜாப்பூ அதைப் பறிக்கப் போனேன், சட்டுனு கையிலே முள்ளு குத்திடுத்து ரத்தம் வருது... சித்தி!'' என்று.

கூடத்து ஊஞ்சலில் அமர்ந்தவாறு காவேரி இச்சம்பவத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். தன் தங்கை மேகலா, ஹேமாவைத் தேற்றும் முறையும், அவள் அப்பாவை அப்படியே பிரதிபிம்பம் போல் கொண்டிருக்கும் ஹேமாவின் சிவந்த முகமும் அவள் நினைவை எங்கெங்கோ ஓட்டின. சென்று போன நாள்களில் நினைவின் நிழல்கள் மனத்திரையில் படிந்த ஒரு கணம் அந்த நாளைக்கே அவளைக் கொண்டு சென்று விட்டன.

நுங்கும் நுரையுமாகச் செல்லும் வைகை ஆற்றின் கரையிலே அமைந்த மதுரையில், காவேரியின் அப்பா அதிக வருமானம் இல்லாத வக்கீல். இருந்தாலும் இரண்டு பெண்ணும் ஒரு பிள்ளையுமாக லட்சுமிகளைத் தாண்டவமாடும் அந்தக் குடும்பத்தைத் தட்டுத் தடங்கலின்றி நிர்வகித்துச் சென்றார் பாலகிருஷ்ணன். இன்னும் அவருடைய வாழ்க்கைத்துணைவி மரகதமும் சிறிது ஒத்துழைத்திருந்தால் அந்தக் குடும்பத்தின் பெருமையை அகில உலக ராஜ்யங்களும் நிச்சயம் சொல்லிவிடும்.

காவேரியை உள்ளூர் 'கான்வெண்ட்'டில் சேர்க்கலாம் என்பார் வக்கீல். 'நன்றாக இருக்கிறது. நாங்களெல்லாம் கான்வெண்ட்டில்தான் படித் தோமா? கிட்டாவையர் திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்புக்கு இணை யாகுமோ?' என்று கூறிவிட்டு விர்ரென்று உள்ளே போய் விடுவாள் மரகதம்.

எப்படியோ தன் மகளை உயர்படிப்புப் படிக்க வைக்க வேண்டும் என்ற அவர் கருத்து நிறைவேறாமலே இருந்தது.

தன் மூத்த மகன் கந்தநாதனையும் இப்படித்தான் ஏதாவது சொல்லி அரிச்சுவடியோடு நிறுத்தி விடுவாரோ என்று அஞ்சாமல் இருக்க அவரால் முடியவில்லை.

இந்தச் சமயத்திலேதான் பாஸ்கரன் வந்து சேர்ந்தான். அவன் தாயார், ஒரே தங்கை இருவரும் ஜீவிக்க அவன் இருந்தவரையில் கவலையே அறியாதிருந்த அந்தக் குடும்பத்துக்கு, அஸ்தமனத்திற்குப் பிறகு நட்சத்திரங்கள் தோன்றுவது போல் கடனும் கஷ்டமும் ஒவ்வொன் றாகத் தோன்ற ஆரம்பித்தன.

தந்தைக்குப் 'பிராவிடண்ட் பண்ட்' முழுசாகப் பத்தாயிரமாவது வரும் என்று எண்ணியிருந்தான். அதில்தான் அவர் கடன் வாங்கித் தன் தங்கைக்கு முதல் வருஷம் கல்யாணம் செய்தார் என்பது அவனுக்குத் தெரியாது.

கடைசியில் மிச்சமாக வந்த ரூபாய் ஆயிரத்தையும் பாகம் போட்டுப் பிரித்துக் கொண்டு போக கடன்காரக் கழுகுகள் பறந்து வந்தன.

ஆக... தாயார், கல்யாணமாகி வருஷத்தில் ஆறு மாதங்கள் வீட்டிலே இருக்கும் தங்கை... இவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு பாஸ்கரன் மேல்தான் விழுந்தது.

திக்கொன்றும் காணாமல் இருந்தவனுக்குத்தான் மதுரையில் ஒரு பள்ளிக்கூடத்திலிருந்து இந்தி ஆசிரியர் வேலைக்கு அழைப்பு வந்தது.

நல்லவேளை படிக்கும்போதும், படித்த பின்னும் இந்தியை விளையாட்டாகக் கற்று அதிகமாக எவ்வளவு பரீட்சைகள் தேர்ச்சி அடைய முடியுமோ அவ்வளவும் பெற்றிருந்தான்.

எல்லாம் நன்மைக்கே என்று அந்த நாற்பத்தைந்து ரூபாய் சம்பளத்தை ஒப்புக் கொண்டு மதுரையை அடைந்தான் குடும்பத்துடன். வீடு ஏது? ஊரை மும்முறை வலம் வந்த பிறகு கடைசியில் நகர எல்லையைத் தாண்டி வைகையின் மறுகரையில் சிறு கிராமத்தில் வீடு ஒன்றைப் பிடித்தான். தினமும் அங்கிருந்து மதுரைக்குப் போவதெனத் திட்டம் வகுத்துக் கொண்டான்.

அது சமயம் கந்தநாதன் பட்டணத்தில் டாக்டர் பரீட்சை பாஸ் செய்து தொழில் தொடங்க மதுரை வந்து விட்டான். 'கே. கந்தநாதன் எம்.பி.பி.எஸ்.,' என்ற அழகிய போர்டு மாட்டப்பட்டது.

முதல் 'போணி'யாக அங்குதான் பாஸ்கரன் வந்து சேர்ந்தான். தன் தாயார் தினமும் 'தலைவலி தலைவலி' என்று தவிப்பதைக் காட்டி அது தீர ஏதாவது செய்வோமென்று எண்ணியவன் எந்த டாக்டரிடம் போகலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் 'கந்தநாதன் எம்.பி.பி.எஸ்.,' என்ற பெயர்ப் பலகை தென்பட்டது. மருந்தும் வாங்கியாகி விட்டது.

அன்று மழை பிசுபிசுவென்றுத் தூறிக் கொண்டிருந்தது. வானத்தின் பயங்கர ரூபம் இன்னும் இன்னும் மழையைக் கொட்டும் என்பதன் அறிகுறியாக விளங்கியது.

பாஸ்கரனின் தாயாருக்கு இரண்டு நாள்களாக இருந்த சாதாரண காய்ச்சல் இரவு எட்டு மணிக்கு அதிகமாகிவிட்டது. ஹரிக்கேன் விளக்கை எடுத்துக் கொண்டு ஓடினான் மதுரையை நோக்கி.

கையிலே காலணா காசு இல்லை. இருந்தாலும் தங்கமான குணமுள்ள கந்தநாதன் டாக்டர் மாட்டேன் என்று கூற மாட்டார் என்ற எண்ணம் வலுவாக அவன் உள்ளத்திலிருந்து அவனை அந்த வேளையில் ஓட வைத்தது.

பிசுபிசுவென்ற மழை பலப்பதற்குள் ஓடியாக வேண்டும். ஓட்டமும் நடையுமாக வைகைப் பாலத்தைக் கடந்தான். கல் பாலத்தைக் கடந்தான். கல் பாலத்தையொட்டி ஹோவென்ற ஒலியுடன் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. மங்கிய விளக்குடன் கூடிய அந்தத் தெருவிலே டாக்டரின் வீட்டை அடைந்து 'டாக்டர்... டாக்டர்...' என்று கதவைத் தட்டினான் பாஸ்கரன்.

பாலகிருஷ்ணன் படுத்துத் தூங்கிவிட்டார். கந்தநாதன் மட்டும் மாடியில் மேஜை அருகே உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தான்.

"நல்லாயிருக்கு. வேலை கீலே இல்லே போலிருக்கு. டாக்டராமே... டாக்டர்!" என்று அலுத்துக் கொண்டாள் மரகதம் அம்மாள் படுக்கையில் புரண்டவாறு.

காவேரி மட்டும், "அண்ணா! யாரோ கதவைத் தட்டுவதுபோல் இருக்கு. நான் போய்ப் பார்த்து வர்றேன். என்ன அவசரமோ கூப்பிடுகிறார்கள்" என்று ஹரிக்கேன் விளக்கை எடுத்துக் கொண்டு கதவைத் திறந்தாள்.

"டாக்டர் இல்லையா?" என்று படபடத்த குரலில் கேட்டான் பாஸ்கரன்.

அவன் உடம்பு முழுவதும் நனைந்திருந்தது. ஒவ்வொரு நீர்த் துளியும் ஹரிகேனின் மேல் பட்டு 'சொய்', 'சொய்' என்று தெறித்தது.

ஒருகணம் அவனையே பார்த்து நின்ற காவேரி, ''இதோ கூப்பிடுகிறேன்'' என்று ஓடினாள் மாடிக்கு.

கந்தநாதன் எதுவும் பதில் சொல்லவில்லை. தன் கைப்பையையும் 'ஸ்டேதாஸ்கோப்'பையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

அவன் மறுபடியும் வீடு திரும்பும்போது நல்ல மழை.

டாக்டரின் மேன்மையான குணத்தை வீட்டிலே பாஸ்கரன் புகழ்ந்து கொண்டிருக்கும்போது, அங்கே கந்தநாதன் ''ஏன் அப்பா... காவேரியை மேலே படிக்க வைக்க முடியவில்லை என்று வருத்தப்படுகிறீர்களே... இந்தியாவது சொல்லித் தர ஏற்பாடு செய்யுங்களேன்'' என்று பாஸ்கரனைப் பற்றியும், அவனுடைய பணிவான குணத்தையும், கம்பீரமான தோற்றத்தையும் எடுத்துக் கூறினான். அத்துடன் அவர் காதருகே 'குசுகுசு'வென ஏதோ கூறினான்.

''எனக்கொன்றும் தடையில்லை. நீ பிரியப்பட்டால் எனக்கு ஆட்சேபணையிருக்கப் போகிறதா?'' என்றார் வக்கில் ஸார்.

பாஸ்கரன் இந்தி கற்றுத் தரும் ஆசிரியராக தன் மகளுக்குப் பாடம் சொல்ல வருவது மரகதத்திற்குச் சிறிதும் பிடிக்கவில்லை.

''பெண்ணுக்குக் கல்யாண வயசாயிடுத்து. இப்ப யாரோ வயசுப் பிள்ளையைக் கூப்பிட்டு இந்தி சொல்லிக் கொடுக்க வேண்டும் என்கிறீர்களே... என்ன இது இந்தக் காலத்து நாவல் கதை போல இரண்டு பேரும் 'லவ்' பண்ணவா?'' என்றாள்.

''அப்படித்தான் மனமொத்துப் போய் நீ சொல்வது போல் 'லவ்' பண்ணட்டுமே... வரனுக்கு அலைய வேண்டிய கஷ்டம் குறைந்தது'' என்றார் பாலகிருஷ்ணன் சிரித்துக் கொண்டே.

இந்தி சொல்லிக் கொடுக்க வந்த இடத்தில் பாஸ்கரனுக்கு விவாகம் நிச்சயமானது. வரன் வேட்டைக்காக வருடக்கணக்கில் சுற்றுபவர்களுக்கும் ஓர் அதிசயமாகத்தான் இருந்தது. எனினும் பாஸ்கரனின் தாயாருக்கு இது பிடிக்கவில்லை.

''இது என்னடா கலிகாலம்? ஜாதகத்தைப் பெண் வீட்டிலிருந்து ஒரு பெரியவர் பிள்ளை வீட்டாரிடம் கொடுப்பார்கள். ஜாதகம் பொருந்தினால் பிறகு சீர் வகையறாக்கள்... கையில் எவ்வளவு கொடுப்பார்கள் என்பது பற்றி பேசிப் பிறகல்லவா கல்யாணம்? என்னமோ பிள்ளையைப்

பார்த்தவுடன் பிள்ளையிடமே கல்யாண ஏற்பாட்டைப் பற்றி பேசி விடுவதா?'' என்றாள்.

பாஸ்கரன் உதட்டைக் கடித்துக் கொண்டான். அந்த இக்கட்டான நிலையை நீடிக்கவிடாமல் வக்கீல் ஸாரே தாம்பூலத்தை எடுத்துக் கொண்டு பாஸ்கரன் தாயாரிடம் வந்துவிட்டார்.

எப்படியோ கல்யாணம் நடந்து, காவேரி புக்ககம் வந்துவிட்டாள்.

காவேரியின் கல்யாணம் நடந்து மூன்றாது மாதம் ஒருநாள் கோர்ட்டில் வாதாடிக் கொண்டிருந்த பாலகிருஷ்ணன் திடீரென நெஞ்சு வலிக்கிறது என்றார்.

வீடு வந்து படுக்கையில் போட்டு டாக்டர் பார்ப்பதற்குள் அவரது ஆவி பிரிந்தது. ஒரே சோகமயம்தான். எல்லாவற்றையும் விட காவேரிக்குத்தான் கஷ்டம். அவளுக்கு ஆதரவாக இருந்தவர்களில் ஒருவர் போய்விட்டார் என்றால்... இனி எல்லாம் அண்ணாதான்!

குடும்பத்திலே காவேரிக்கும் அவள் மாமியாருக்கும் ஒத்து வருவதேயில்லை. கணவனுடைய இன்ப முகம் ஒன்றுதான் அவளுக்கு வாழ்க்கை.

''காவேரி! அவர்கள் சொல்லட்டுமே. அதனால் என்ன குறைந்து விடுகிறாய்? காலையில் எழுந்து சமைக்க வேண்டும் என்றுதானே சொல்கிறார்கள். சமைத்து விடு. தண்ணீர் இழுத்துக் கொட்ட வேண்டுமா? கொட்டி விடேன். சலவைக்குப் போடாமல் துவைக்க வேண்டுமென்கிறார்களா? இதையெல்லாம் எப்படியும் செய்துதானே ஆக வேண்டும்'' என்பான், இனிய சொற்களுடன் அவள் தலையை வருடிக் கொண்டே.

கணவனின் அந்த ஆதரவுப் பேச்சில்லாவிடில் என்றோ காவேரி புக்ககத்துக்குக் கும்பிடு போட்டிருப்பாள்.

ஆனால், கணவனின் ஆதரவு நீண்ட நாள் இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் மறைய ஆரம்பித்தன. காவேரி பிறந்தகத்துக்குப் போயிருந்தபோது பாஸ்கரனின் தாய் ஓயாமல் தினமும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகவே இருந்தாள்.

தன் மகள் இன்னும் கணவனுடன் வாழாமல் இருப்பதுதான் அக்குறை என்று அவள் தன் மகனிடம் தெரிவித்துக் கொண்ட போதிலும் உள்ளூற அவளுக்கு வேறு எண்ணமிருந்தது. தன் மகள் ஒவ்வொரு நாளும் வேதனையால் உருகி வாடும்போது, மருமகள் கணவனுடன் குதூகலமாக

வாழ்வது அவள் உள்ளத்தில் பொறாமைத் தீயை மூட்டியது. அதிலும் பாஸ்கரன், காவேரிக்கு ஆதரவாக இருப்பது அவளுக்கு மேலும் ஆத்திரத்தை அளித்தது.

காவேரியை அதிகமாகக் குறை கூறுவதையும் கண்டிப்பதையும் விட்டுத் தன் மகன் மனத்தை மாற்றப் பிரயத்தனப்படுவது தான் தனது அடுத்த போர்முனையாகக் கருதினாள்.

அதற்கேற்றாற்போல் பாஸ்கரன் இரவு களைப்புடன் வீடு திரும்பும் போது வீட்டில் விளக்குக் கூட இல்லாமல் தாயார் சமையலறையில் படுத்துக் கொண்டிருப்பதைக் காண அவனுக்கு ஆத்திரமாக வரும்.

அவனுடைய தங்கை கைச் சிம்னியை வைத்துக் கொண்டு அப்பொழுதுதான் சாதம் வடித்துக் கொண்டிருப்பாள்.

வீட்டின் அலங்கோல நிலையும், தாயாரின் 'கைகேயி' நிலையும் அவனுக்கு அருவருப்பை உண்டாக்கும். தினமும் ஏதாவது கூச்சல், அழுகை இல்லாமல் சாப்பாடு நடக்காது.

''ஏண்டா பிள்ளே! தினமும் உன் தங்கைதான் சமையல் செய்து போடுகிறாள். இந்த நேரத்துக்குத்தான் எல்லாம் ஆகும். உன் பெண்சாதி இருக்கும்போது மட்டும் வாலைச் சுருட்டிச் சாப்பிட்டுப் போகும் நீ, இன்று மட்டும் அமர்க்களம் செய்கிறாயே'' என்பாள்.

மெல்ல, நாசுக்காகப் பேசினாள். ஆனால் இது ஓர் அஸ்திரமல்லவா? அப்படியென்றால் தன் மனைவி சமைப்பதே இல்லையா? பாஸ்கரன் சிந்தித்தான்.

இன்னும் எத்தனை எத்தனையோ சம்பவங்கள் புதிதாகக் கூடக் கற்பனை செய்யத் தொடங்கிக் கூறவும் ஆரம்பித்து விட்டாள். தான் பிறந்த இடம் பணக்கார இடம் என்றும், அதனால் எளிதில் வேண்டிய சீர்வரிசைகளுடன் தன்னைத் தன் பெற்றோரால் கொண்டு விட முடிந்ததென்றும், தன் நாத்தனாருக்கு அந்தப் பாக்கியம் கிடைக்க வில்லையென்றும் காவேரி 'குத்தி'க் காட்டுவதாக ஒருநாள் பாஸ்கரனிடம் கூறிவிட்டாள்.

காவேரி சொன்னதென்னவோ வாஸ்தவம்தான். ஆனால், அவள் செருக்குடன் கூறவில்லை. தன்னை அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாகக் கருதி, 'தன் பெற்றோர் போல் பணம் காசு இருந்தால் சீர் செனத்தி செய்யாமல் இருப்போமா? இந்தப் பிள்ளை வீட்டாருக்குக் கொஞ் சமேனும் தெரிய வேண்டும். அக்கா கஷ்டப்படுவது எனக்கு வேதனையாக இருக்கிறது' என்றுதான் அனுதாபப்பட்டுக் கூறினாள்.

இதில் குற்றமில்லைதான். ஆனால், புதை வாணத்தில் சிறு பொறி விழுந்தால் போதாதா புஸ் என்று கிளம்ப! பாஸ்கரன் மனமும் கொஞ்சம் மாறியது. அதற்கேற்றாற்போல் காவேரி ஊரிலிருந்து வரும்போது உடன் ஒரு பிடிலையும் வாங்கி வந்தாள். குழந்தை மனம் கொண்ட அவள் பிடிலின் புது மோகத்தில் எப்பொழுதும் அதை எடுத்து வைத்துக் கொண்டாள்.

''பாருடா... பாரு! அவ சமைக்கறா, ஜலம் இழுத்துக் கொட்டறா. இவ பிடில் வாசிக்கிறா... சொன்னால் மாமியார் கஷ்டப்படுத்துவதாகப் பெயர் வரும்'' என்பாள் பாஸ்கரனின் தாயார். தலையைப் பிடித்துக் கொள்வான் பாஸ்கரன்.

காவேரி தன்னிடம் குறையைக் கூறும்போது அவள் கூறுவது சரியெனப்படும். அவள் தாயார் புகார் கூறுவதோ மிகப் பொருத்தம் எனப்படும்.

தன் தங்கை கண் கலங்கி நிற்பதோ உள்ளத்தை உருக்கும்.

அவனுள்ளத்தை என்னமோ செய்தது. தினமும் வீட்டை அடையும் போது பயங்கர வேதனை பேருருவம் எடுத்தது. நாள் முழுதும் தொண்டை வலிக்கக் கத்திவிட்டு சோர்ந்த உள்ளத்துடன் வீடடைந்தால் அமைதியற்ற வீடு, சித்திரவதை செய்யும் அவனை.

இதில் வருமானக் குறைவுப் பயங்கரம் வரவர அதிகமாகியது. மூன்று பேராக இருந்த குடும்பம் நால்வராக ஆனவுடன் அதற்காக வருமானம் அதிகமாகவில்லை.

இவ்வளவும் சேர்ந்து ஆத்திரமும் வேதனையின் கோர விஸ்வரூபமும் காவேரியின் மீது பாயத் தொடங்கியது.

பிடில் உடைந்தது. காவேரியின் ஆசை உள்ளம் உடைந்தது. கொடுஞ் சொற்களால் கணவனின் அன்பற்ற அபாண்ட வார்த்தைகளால் அவளுடைய இன்பக் கோட்டைகள் இடிந்தன.

இடையே ஒருமுறை பிறந்த வீடு போனபோது, இளைத்துப் போன அவளுடைய நிலையைக் கண்டு மரகதம் நடுநடுங்கினாள்.

அப்பொழுதே கல்யாணத்தின்போது தடை செய்த அந்த நினைவு வந்தது. மகளிடம் வேறு ஏதும் சொல்லாமல் ஒரு மாதம் அங்கேயே தங்கிவிடுமாறு கூறினாள்.

போனவளிடமிருந்து கடிதமே கிடையாது; அவளாக வரட்டும் என்று பாஸ்கரன் இருந்தான்.

ஒருமுறை அங்கே போனவன் சுந்தநாதனுடன் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பும்போது காவேரியைத் தனியே அழைத்து உடன் வருமாறு கூப்பிட்டான்.

''நீங்கள் அன்பாக நடப்பதாக வாக்குறுதி கொடுங்கள்'' என்றாள் காவேரி செல்லமாக.

''சீ... வாக்குறுதியா... கழுதை! இங்கேயே கிட, சத்தியமாக உன்னை அழைப்பதில்லை'' என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு 'விர்'ரென்று திரும்பி விட்டான்.

'சத்தியமாக... சத்தியமாக... சத்தியமாக அழைப்பதில்லை' - காவேரியின் தலை சுழன்றது. அப்படித்தானென்ன குற்றம் செய்து விட்டோம் என்று எண்ணினாள்; விம்மினாள்.

'இவருக்கு இவ்வளவு பிடிவாதமும் ஆத்திரமும் இருந்தால் நமக்கு மட்டும் இருக்காதா? பார்த்து விடுவோம்... இவரே வந்து வருந்தி வருந்தி அழைக்கும்படி செய்கிறேன் பார்' என்று அசட்டு தைரியம் கொண்டாள், பாவம் காவேரி!

அவள் எண்ணிய எண்ணம் ஈடேறவேயில்லை. பாஸ்கரன் வந்து அழைக்கவேயில்லை. 'சத்தியமாக உன்னை அழைப்பதேயில்லை' என்று சொன்னது அழைக்க இயலாமலே போய்விட்டது.

இரண்டு வருடங்களாக அழைக்காமல் இருந்த பாஸ்கரனுடைய தங்கையின் கணவன் திடீரென்று ஒருநாள் குளிர் ஜுரத்துடன் வீட்டிற்கு வந்தான். ஜுரம் தெளிந்த பிறகு அங்கேயே தங்கிவிட்டான்.

ஐந்து பேர் அடங்கிய அந்தக் குடும்பத்தைச் சமாளிக்கப் பாஸ்கரனால் எப்படி முடியும்?

அந்தச் சமயம் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. மிலிட்டரியில் இருப்பவர்களுக்கு இந்தி கற்றுத் தர ஆசிரியர் தேவையென்று 'ரெக்ரூட்டிங்' ஆபீஸிலிருந்து அறிந்தான் பாஸ்கரன். இந்தக் குடும்ப வேதனையை மறந்திருக்க கண்காணாத தேசத்திற்குப் போய் வருவது உசிதமெனக் கருதினான்.

அதிகச் சம்பளம் வாங்கியனுப்பினால் குடும்பம் கஷ்டப்படாமல் நடக்குமெனக் கருதினான். கர்வத்துடன் தாய் வீட்டிலிருக்கும் காவேரியின் கொட்டமாவது அடங்குமெனக் கருதினான்.

அஸ்ஸாமில் ஒரு முகாமுக்கு அவனை அனுப்பி வைத்தார்கள்.

இருநூறு ரூபாய் மணியார்டர் மட்டும் மாதம் ஒருமுறை வீட்டிற்கு வரும். சௌக்கியத்தைப் பற்றி ஒரு கடிதமும் கிடையாது.

இந்தச் சமயத்தில்தான் காவேரி கருவுற்றிருந்தாள்.

ஏதோ அவசரத்தில் பேசிவிட்ட வருத்தம் அவளுக்கு இதயத்தை என்னவோ செய்தது. தன் கணவன் தன்னிடமும் கூறாமல் இராணுவத்தில் சேர்ந்து விட்ட ஆத்திரம் வேதனையையும் மீறி பெரும் போராட்டத்தை மனத்தில் உண்டாக்கின.

ஆனால்... ஆனால்... பத்து மாதங்கள் கழித்து ஹேமா பிறந்தவுடன் சம்பந்திகளுக்கிடையே இருந்த கோபம் மாறியது. வளைகாப்பு, சீமந்தம் ஏதுமின்றி 'தள்ளி வைத்தது' போல இருந்த தன் மருமகளைக் காண வந்தாள் பாஸ்கரனின் தாய்.

பாஸ்கரனிடமிருந்து கடிதமே வராததையும், இந்தப் பாழும் வயிற்றுக்கு ரூபாய் மட்டும் 'வள்ளிசாக' வருவதாகவும் சொல்லி மனக்குறை தீர ஒரு குரல் அழுதாள். பேத்திக்கு ஆசையாக பார்க்க வந்ததற்கு இந்தக் கைக்கு ஒரு ரூபாய், அந்தக் கைக்கு ஒரு ரூபாய் கொடுத்தாள். மூன்று மாதம் கழித்து ஒருமுறை தலைக்கு விட்ட பிறகு அழைத்துப் போய் ஒரு மாதம் வைத்துக் கொள்வதாகவும் கூறினாள்.

பாவம்! அந்த மாதிரி அவளுக்கு நேரவில்லை. ஒரே வாரத்தில் திடீரென காலராவில் இரண்டே நாளில் அம்மாள் இந்த உலகத்தையும் குடும்பத் தொல்லையையும், மருமகள் - மாமியார் என்ற உயர்வு தாழ்வுச் சண்டையையும், பெண் - மாப்பிள்ளை என்ற கவலையையும் விட்டுவிட்டுப் பேரின்ப உலகை நாடிவிட்டாள்.

தாயார் இறந்தது பற்றி பாஸ்கரனுக்குத் தந்தி போனது. தந்தி கிடைத்ததோ இல்லையோ ஒரு விவரமும் தெரியவில்லை. 'யுத்த ரகசியத்தில்' ஒன்றான அதைப் பற்றி யாருக்கும் பதில் தெரியாது.

கந்தநாதன் எம்.பி.பி.எஸ்., அப்பொழுது மதுரையிலேயே பிரபல டாக்டர். சொந்தமாக ஒரு மருத்துவமனை நடத்தி வந்தான். கைராசிக் கார டாக்டரை நாடி நோயாளிகள் வரக் கேட்பானேன்!

கந்தநாதன் தன் தங்கையையும், அவளது தங்கப் பதுமை போன்ற கைக் குழந்தையையும் பார்த்துப் பார்த்து வேதனைப்படுவான்.

தன் தாயாரின் போதனையால்தான் தன் தங்கையின் வாழ்வு பாழானதாக வருந்துவான்.

இராணுவ மேலதிகாரிகளுக்கு எழுதியிருப்பதாகவும் ஒரு மாத விடுப்பில் எப்படியும் பாஸ்கரன் வருவானென்றும், அவனிடம் தாயும் மகளும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும் ஒரு பெரிய பிரசங்கமே செய்வான்.

தன் தங்கை மீண்டும் புது வாழ்வு வாழத் தொடங்கும் வரை தனக்குக் கல்யாணமே வேண்டாம் என்று மறுத்து விட்டான்.

இரண்டு வருடங்கள் ஓடி மறைந்தன.

கந்தநாதன் பாஸ்கரனை வரவழைக்கும் முயற்சி பலித்ததோ இல்லையோ... பாஸ்கரன் மதுரைக்கு வந்து சேரும்படி நேரிட்டது.

மலேரியாவினாலும் மற்றும் பலவித மலை நோய்களாலும் பீடிக்கப்பட்ட பாஸ்கரனைக் கொஞ்சம் குணப்படுத்தி உடனே சொந்த ஊர் போகும்படி அனுப்பினார். அத்துடனில்லாமல் ஒரு கண்ணிலே இடையில் ஏற்பட்ட குண்டுக் காயம் சிறிது குணமாகியிருந்தது. சென்னை வரும்போது என்ஜினிலிருந்து பட்ட நிலக்கரியின் சிறு பொறியால் அதிகமாகி விட்டது.

அதுவரை அவன் உள்ளம் பட்ட வேதனையை எப்படியெல்லாம் கூற முடியும்?

கடினமானதாக இருந்த தன் உள்ளத்தை நொந்தான். இளம் மனைவியின் இன்ப வாழ்வை வெதும்பச் செய்ததற்காக வருத்தப் பட்டான். மதுரை போனவுடன் நேரே கந்தநாதனைச் சந்தித்து தன் பைத்தியக் காரச் செயல்களுக்காக மன்னிப்பு கேட்க வேண்டும் என்று எண்ணினான்.

ஆனால், நோயின் உபாதை அதிகமாகி மதுரை வந்து இறங்கும்போது பேசவரவில்லை. நா குழறியது. 'டாக்டர் கந்தநாதன்' என்ற வார்த்தைகள் மட்டும் வந்தன. ஸ்டேஷன் போர்ட்டர்கள் மெல்ல அவனை வண்டியில் ஏற்றி கந்தநாதன் மருத்துவமனையில் கொண்டு சேர்த்தனர்.

கந்தநாதன் நோயாளிகளைப் பரிசோதித்துக் கொண்டே வரும்போது பாஸ்கரன் வண்டியினின்று இறக்கப்படுவதைக் கண்டான்.

பாஸ்கரனின் அடையாளம் சரிவர முதலில் தெரியாவிடினும், சட்டெனக் கண்டு கொண்ட கந்தநாதன் ஓடோடிப் போய் அவனைத் தோளில் தாங்கிக் கொண்டான்.

படுத்த படுக்கையாகக் கிடந்தான் பாஸ்கரன். ஜுரம் வேறு நன்றாகக் காய்ந்து கொண்டிருந்தது. கண்களில் செப்டிக் ஆகாமல் இருக்க இரு

கண்களிலும் உடனே சிறு ஆபரேஷன் செய்து விட்டான் கந்தநாதன். அதிர்ச்சி ஏதுமின்றி, உடலை அலட்டிக் கொள்ளாமல் குறைந்தது ஒரு வாரமாவது படுக்கையில் ஓய்வாக இருக்க வேண்டும்; இருந்தால் பாஸ்கரன் நிச்சயம் பிழைத்து விடுவான்.

கந்தநாதன் அந்த ஒருநாள் எப்படியோ மனத்தை அடக்கிவிட்டான்.

சோகமே உருவாகி இந்த உலக வாழ்க்கையை சூன்யம் என்று நடைப்பிணமாக வாழ்க்கை நடத்தும் தன் தங்கையின் சோக முகத்தைப் பார்த்தான் கந்தநாதன்.

ஒருபுறம் சந்தோஷச் செய்தியை உடனே கூற வேண்டும் என்ற ஆவல். மறுபுறம் இந்தச் செய்தியை காவேரியிடம் கூறினால் அவள் ஆர்வ மிகுதியால் மருத்துவமனைக்கு விரைந்து வந்து கணவனைக் காணுவாள். பாஸ்கரனுக்கு நிச்சயம் அதிர்ச்சி ஏற்படும்; பழைய எண்ணக் குமுறலால் உடலில் இரத்தக் கொதிப்பு உண்டாகும்... பிறகு, பிறகு... ஐயோ அவனால் எண்ணவே முடியவில்லை.

ஆனால், கந்தநாதன் அதுபோல் சும்மா இருந்து விடவில்லை. தன் தங்கை மேகலாவிடம் அக்காவுக்குப் புது வாழ்வு பிறந்து விட்டதென்றும், அவள் கணவன் ஆஸ்பத்திரியில் இருக்கிறான் என்றும் சொல்லி வைத்தான். மேகலா தன் தாயிடம் பரபரப்புடன் சந்தோஷம் இதயத்தை அமுக்கக் கூறினாள்.

கேட்பானேன்... அடுத்த அறையினின்று இச்செய்தியை அறிந்த காவேரியால் ஒரு நிமிடம் கூட பாஸ்கரனைப் பார்க்காமல் இருக்க முடியாது என்பது உடனே ஏற்பட்டுவிட்டது. மூன்று வருடங்களாக அடக்கப்பட்ட ஆர்வம் ஒரு விநாடியில் கடலைப் போல் விரிந்தெழுந்து கரையை உடைத்து விடும் அளவுக்கு வந்துவிட்டது.

"அத்தான்..."

"காவேரி... காவேரியா... காவேரியா... என் கண்மணியா? என்னை உடனே மன்னித்துவிடு... உன்னை... உன்னை..." என்று ஏதேதோ கூறிக் கொண்டே படுக்கையை விட்டுத் துள்ளி எழுந்தான். கட்டப்பட்டிருந்த கண் கட்டுகளை ஒரு கை பிடித்து இழுத்தது. மற்றொரு கை கட்டிலை விட்டுக் கீழே இறங்க உதவி செய்தது... ஐயோ... ஐயோ... ஒரு விநாடி... தடாரென்று பாஸ்கரன் கீழே விழுந்தான்.

அங்கே கந்தநாதன் கையிலிருந்த தர்மாமீட்டர் இந்தப் பேரொலியைக் கேட்டு கீழே நழுவி விழ்ந்து தூள் தூளாகியது.

''அடி பாவி...'' என்று கூவிக் கொண்டே ஓடி வந்தான்.

திக்பிரமையால் கல்லாய் நின்ற காவேரிக்குத் தன் வாழ்வின் புனிதத் தன்மை அந்த விநாடியுடன் சிதறுண்டு போகப் போகிறதென்று தெரியுமா?

இப்பொழுது நினைத்தாலும் காவேரிக்கு அந்தப் பயங்கர நினைவு ஏதோ ஈரேழு பதினான்கு உலகங்களையும் அண்ட பகிரண்டங்களையும் சேர்த்துத் தன்னை எழ முடியாதபடி அந்தகாரத்தில் அமிழ்த்தியது போல் தோன்றும்.

கணவனை ஒரு விநாடிகூட காண முடியவில்லை. மலர் பறிக்க ஆசைக் கொண்டது உள்ளம். ஓடோடினாள். ஆனால், பறிக்கப் போகும்போது தைத்ததே முள், வாழ்க்கையே ரோஜா முள் போலத் தானோ... வருடங்கள் ஓடிவிட்டன.

இதை ஊஞ்சலில் உட்கார்ந்து எண்ணும்போது ஊஞ்சலை அதி வேகமாக யாரோ ஆட்டிவிடும் உணர்ச்சி தோன்றியது. தலை சுழன்றது. சுழலும் வேகத்திலும் தங்கை மேகலா, பெண் ஹேமாவைத் தேற்றும் குரல் காதில் விழுந்தது.

என்ன சொல்லித் தேற்றுகிறாள்?

'வாழ்க்கையே அப்படித்தான். மலரென நாம் எண்ணுவதும், துன்பம் போல் முள் என எண்ணுவதும் சேர்ந்தேதான் இருக்கின்றன. ஒரே செடியின் இரு குழந்தைகள். சில வேளைகளில் மலரே முள்ளாகக் கூடும். முதலில் அழகிய சிறு மலராக இருக்கும் நெருஞ்சி மலர் பின் காய்ந்துப் பழுத்து முள்ளாகி விடுகிறது.'

புன் புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முள்பாய்ந்தா அங்கு.

- குறுந்தொகை 202

● ● ● ●

# 81. சிங்கபுரத்துச் சிங்காரி

அப்பொழுதுதான் ஒரு வண்டி போயிருந்தபடியால், மறுவண்டி புறப்படும் வரை ஸ்டேஷனில் உட்கார்ந்திருந்தே தீர வேண்டும் என்ற நிலைமை சென்ற ஞாயிற்றுக்கிழமை எங்களுக்கு ஏற்பட்டது.

நண்பருக்கு அன்று ஏற்பட்ட 'நடராஜா சர்வீஸ்' அனுபவம், துவளும் கால்களின் பரிதாபக் கூக்குரல் உடனேயே அங்கேயிருந்த 'மூட்டைப் பூச்சிப்' பெஞ்சு ஒன்றில் 'அப்பாடா' என்று உட்காரச் செய்தன.

எதிரேயிருந்த துறைமுகத்துக் 'கிரேன்கள்' வேலை செய்யும் ஓசையும், 'பூம்பூம்' என்ற ராட்சதக் குரலில் கப்பல் கூவும் ஒலியும், கூட்ஸ் வண்டிகள் முன்னுக்குப் போய் பின்னுக்குத் திரும்பும் 'ஷண்ட்டிங்' காட்சியும், சாலையில் டிராம் வண்டிகள் போவதால் உண்டாகும் பேரொலியும் எங்கள் அமைதியைக் கலைத்தன.

அந்த மத்தியான வேளையில் பிளாட்பாரத்தில் எங்களைத் தவிர ஓரிருவரும் வண்டிக்காகக் காத்திருந்தனர். அதில் ஒருவர் எனக்குப் பரிச்சயமானவர். அவர் - இல்லை அவள்தான்; தினம் பல்லாவரத்தி லிருந்து அடுக்குப் புத்தகங்களுடன், நாளுக்கு ஓர் அலங்கார உடையுடன் பள்ளிக்கூடத்துக்கு வரும் மாணவி.

தினம் நான் ஏறிவரும் அதே வண்டியில் வருவதால்தான் 'தெரியும்' என்றேனே தவிர, வேறு அறிமுகமில்லை.

''ஞாயிற்றுக்கிழமை கூடவா, பதைபதைக்கும் வெயிலில் பள்ளிக்கூடம் வைக்கிறார்கள்?'' என்றார் நண்பர்.

''ஹஹ்ஹா...'' என்று சிரித்து விட்டு, ''ஞாயிற்றுக்கிழமைகளில் பள்ளிக்கூடம் ஏன் வைக்கிறார்கள்? அவர்களுக்குப் பைத்தியமா? தினம் பள்ளிக்கூடம் போய்ப் பழக்கமாகியதால் இன்றும் வீட்டிலே அந்தப் பெண்ணுக்குப் பொழுது போகாதிருந்திருக்கலாம்'' என்றேன்.

''நன்றாய் சொன்னாய்! பொழுது நம்மைப் போக்கடிக்குமா? அல்லது அதுவாகப் போகுமா? எல்லாம் விசித்திரமாக இருக்கு... நண்பன்

குருமூர்த்தி சொன்னதில் எவ்வளவோ உண்மை இருக்கு'' என்றார் நண்பர்.

''எந்த குருமூர்த்தி? சிங்கபுரம் குருமூர்த்தியா? நீ சிங்கபுரம் எப்போ போயிருந்தே?'' என்றேன் நான். அப்படியெல்லாம் பீடிகை போட்டால் தான் நண்பரின் வாயினின்று வார்த்தைகள் கிளம்பும் என்பது எனக்குத் தெரியும்.

''இந்த வருஷம் சென்னையில் வெல்லம், சர்க்கரை எதுவும் பொங்கலுக்குக் கிடைக்காது என்று ஆகிவிட்டவுடன் சென்னையிலேயே பொங்கல் தினத்தைப் பொங்காத உள்ளத்துடன் கொண்டாடி என்ன பயன்? அதனால் சிங்கபுரத்துக்காவது போய் வரலாம் என்று எண்ணிக் கிளம்பினேன் குடும்பத்துடன். மனைவியின் தாய்மாமன் அந்த ஊரிலிருந்து எங்களை எவ்வளவோ முறை வருந்தி வருந்தி வாவென்று அழைத்திருக்கிறார்.

''எனக்கு அங்கே போக என்ன பயம் என்றால், அங்கே தெள்ளத் தெளிந்த நீருடன் ஆறு ஓடுகிறது; பிரம்மாண்டமான கோயில் இருக்கிறது. ஆனால், சினிமாக் கொட்டகை இல்லை; தார் ரோடு இல்லை. தினமும் கார்ப்பரேஷன் குழாயில் குளித்துக் களிக்கும் நம்மால் அதிகாலையில் ஓடும் ஆற்றிலே குளிக்க முடியுமா? குளிருமே!

''வாரந்தோறும் சினிமாக் கொட்டகையைத் தரிசிக்கும் நமக்குக் கோயிலுக்கு வீட்டாருடன் போவது சங்கடமாயிருக்காதா? இந்தப் பயத்தைப் பொங்கல் ஓட்டிவிட்டவுடன் சிங்கபுரம் 'கேம்ப்' ஏற்பட்டு விட்டது.

''அங்கேதான் இந்தக் குருமூர்த்தியும் வந்து சேர்ந்தான். அவனது மாமனார் மாதம் ஒருமுறை விஜயம் செய்யாமல் இருக்க மாட்டார். பொழுது போகாமல் நான் அந்த குருமூர்த்தியுடன் ஆற்றங்கரைப் பக்கமாக உலாவப் போகும்போதுதான் அவன் சிங்காரியின் கதையைச் சொன்னான்:

## குருமூர்த்தி சொன்னது

சிங்கபுரம் ஜமீன்தார் கொஞ்சம் புத்திசாலித்தனமானவர். ஜமீன்தாருக்கான 'டிப்டாப்' குணங்களும், நடவடிக்கைகளும் இருந்தாலும் அவரது குணத்தை அறிந்தவர்கள், அவர் ஒரு தொழிலாளர் தலைவராகப் பிறந்திருக்க வேண்டுமென்று கூறுவார்கள். சிங்கபுரத்தையும் அதைச் சுற்றி விரிந்து பரந்திருந்த பசும் வயல்களையும்,

பரம்பரைச் சொத்துகளாகக் கொண்ட திருவாளர் ஜமீன்தார் வெறும் நிலத்திலிருந்து கிடைக்கும் குத்தகை வருவாயை மட்டும் நம்பாமல் வனஸ்பதி தொழிற்சாலை இரண்டு, சோப்பு தொழிற்சாலை ஒன்று, நவநாகரிக மங்கையர் இப்பொழுதெல்லாம் விரும்பும் பிளாஸ்டிக் வளையல்கள் தொழிற்சாலையொன்று இத்யாதி அமைத்து பூமிக்கு மட்டும் உரியவராய் இல்லாமல் பெரும் ஆலைகளுக்கும் உரியவரானார்.

ஜமீன் ஒழிப்புச் சட்டம் பற்றி அவருக்கு என்ன கவலை? பாவம், அவருக்குக் களங்கம் ஏற்பட வாய்த்து விட்டாளே!

சரி, நமக்கு இந்தக் கதையெல்லாம் இப்பொழுது அவசியமில்லை. மனைவி இறந்த பிறகு அவ்வளவு வருத்தப்படாத ஜமீன்தார் தன் உயிர் முழுவதையும் சிங்காரியின் மீது வைத்திருந்தார்.

'வாரிசுக்கு ஆண்தான் இருக்க வேண்டுமா? என் சிங்காரி எப்படியெல்லாம் எஸ்டேட்டை நிர்வகிக்கப் போகிறாள் பாருங்கள்' என்று ஜமீன்தார் கூறும்போது அவரது முகத்தில் ஒளிவிடும் பெருமிதத்தைக் காண வேண்டுமே!

பூங்கொடி போல் அழகு பூத்துக் குலுங்க வளர்ந்து வந்த சிங்காரியை சிங்கபுரத்து ஆரம்பப்பள்ளி படிப்பு முடிந்தவுடன் நிறுத்திவிட ஜமீன்தார் விரும்பவில்லை.

சென்னைக்கு அனுப்பி சிங்காரியே மேற்படிப்பு போதும் என்கிற வரையில் படிக்க வைக்க எண்ணம் கொண்டார். சென்னையில் 'கான்வென்ட்'டில் சேர்க்க அவர் உள்ளம் பிரியப்படவில்லை.

'கான்வென்ட்'டில் படிக்கும் பெண்களுக்குத் தமிழும் சரியாக வராமல் போய், கணக்கிலும் பூஜ்ஜியம் ஏற்பட்டு, இங்கிலீஷில் ரொம்பப் பிரமாத புத்திசாலியாகவும் ஆகாமல் திண்டாடுவார்கள் என்பது அவரது திடமான எண்ணம். எனவே, பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றில் சேர்த்தார்.

அதற்காக அவரே சென்னைக்குக் குடும்பத்துடன் போய்விட முடியுமா? 'ஒருநாள் ஆபீஸைப் பார்க்காவிடில் என்ன குட்டிச் சுவராகி விடுமா' என்கிற 'சந்தேகப்' பிராணியாகிய அவரால் ஒரு விநாடி கூட சிங்கபுரத்தை விட்டுப் பிரிய முடியுமா?

அதனால், சென்னையில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கிப் பெண் படிப்பதற்கு ஏற்பாடு செய்யலானார்.

ஜமீன்தாரின் சகோதரி ஒருத்தி சென்னையில் சிங்காரியுடன் கூட இருக்க ஒப்புக் கொண்டாள். ஒரு சமையல்காரன், இரு வேலையாட்கள் ஆகியவர்களுடன் நல்ல நாள் பார்த்து சிங்காரியின் பட்டணப் பிரவேசம் நடந்தது.

ஒரு வருடம், இரண்டு வருடங்கள் ஓடி விட்டன. சிங்காரியின் வயதும் பதினைந்து பதினாறு என ஓடியது.

''இப்பொழுது எத்தனாவதம்மா படிக்கிறே?'' என்று வினவும் ஜமீன்தாருக்கு சிங்காரியின் பவழ வாயினின்று ''இந்த வருஷம் 'பிப்த் எண்டர்' ஆகியிருக்கிறேன்'' என்ற முத்து உதிரும் பதில் சொட்டும்.

வயதின் செழிப்படைந்த பருவத்தின் திருப்பத்தே வந்தடைந்த சிங்காரிக்கு இப்பொழுது உலகம் புத்துணர்வு பெற்றிருப்பதுபோல் காணப்பட்டது.

மலர்கள் சிரிப்பது போலவும், வானத்துத் தாரகைகள் அவள் எழிலை எண்ணிக் கண்சிமிட்டுவது போலவும், வட்ட முழுமதி அவளது உடலில் உராய்ந்து செல்லும்போது அவள் இதுவரை அறியாத புதிய செய்தியைக் கூறிக் கிளுகிளுப்பைக் கொள்வது போன்ற உணர்வும் ஏற்பட்டது.

அவள் இப்பொழுது விதவிதமாகச் சிங்காரித்துக் கொண்டாள். வாரி விடப்பட்ட கருங்கூந்தலை இரட்டையாகப் பின்னி இரு கரு நாகங்கள் அவள் கழுத்திலே தொங்குவது போல் செய்து கொண்டாள். நெற்றியின் நடுவே கண்ணுக்குத் தெரியாத அளவுக்குச் சிறு பொட்டு வைத்துக் கொண்டாள்.

இயற்கையான அவள் முகத்தாமரையை 'பவுடர்' அலங்கரித்தது. அதன் மேல் இன்னும் வார - தினப் பதிப்புகளில் வரும் அழகை அதிக மாக்குவதற்கெனக் காணப்படும் பூச்சுகளையும் உபயோகித்தாள்.

தாம்பரத்தினின்று சென்னைக்கு மின்சார வண்டியின் இரண்டாம் வகுப்பில் ஏறி அவள் தினமும் போகும்போது, பள்ளிக்கூடம் போகிறோம் என்ற நினைவே இராது. 'தடதடால்' என்று செல்லும் மின்சார வண்டி புஷ்பக விமானமாகத் தோன்றும் அவளுக்கு.

அடுக்கடுக்காகப் புத்தகங்களை அணைத்துக் கொண்டு ஸ்டேஷன் படிக்கட்டுகளில் இறங்கி வரும்போது புவன மோகினியாகவே காணப்படுவாள். அநேக ஜோடிக் கண்களுக்கு அவள் காலை ஒன்பது மணிக்குக் காட்சியளிக்காவிடில் பலருக்கு ஏக்கம் ஏற்படும்.''

‘‘சரிதாம்பா... சிங்காரியின் அழகை வர்ணிக்க ஆரம்பித்து விட்டாயே! மேலே சொல்லு’’ என்று நான் நினைவூட்டிய பிறகுதான் குருமூர்த்தி வர்ணிப்பு வானத்தினின்று இறங்கி வந்தது.

‘‘இனி நடந்த சில சம்பவங்களைக் கூறினால்தான் முழு விவரமும் அறிவதற்குச் சௌகரியமாயிருக்கும். பள்ளிக்கூடம் போவதிலே சிங்காரிக்குத் தனி இன்பம் தோன்றக் காரணம் இல்லாமல் இல்லை. அதுதான் அவளுக்கேற்பட்ட புது நட்பு.

அன்று ஞாயிற்றுக்கிழமை. பள்ளிக்கூடத்திற்குப் போவதாகக் கூறி சிங்காரி அடுத்த வீட்டுச் சிறுவர்களுடன் புறப்பட்டாள். அன்று ‘ஸ்பெஷல் கிளாஸ்’ வைப்பதாகக் கூறப்பட்டது. ஆனால், அதுவும் ரத்து செய்யப்பட்டது.

தினமும் வெளியே காலை முதல் மாலை வரை கழிக்கும் அவளுக்கு அன்று வீட்டிலே கழிக்க எப்படி மனம் வரும்? அந்தச் சிறுவர்களும் ‘அக்கா அக்கா’ என்று சூழ வந்தார்கள்.

மாம்பலம் ஸ்டேஷனிலே காத்திருக்கும்போதுதான் அச்சிறுவர்கள் கவனம் அங்கு விற்கும் ஐஸ்கிரீமின் மீது சென்றது.

‘அக்கா ஐஸ் பிடிக்குமோ?’

‘உனக்கு வேண்டுமென்றால் வாங்கிக் கொள். இந்தா நாலணா!’

சிறுவர்கள் ஓடினார்கள். ஆளுக்கு ஓர் ஐஸ்!

வெகு சீக்கிரத்தில் ஐஸ் கரைந்தது. வண்டி இன்னும் வரவில்லை.

‘இந்தா இன்னொரு நாலணா’ என்று மறுபடியும் நீட்டினாள்.

அந்த வெயில் வேளையில் ஸ்டேஷனிலே அவ்வளவாக யாரும் இல்லை. ஆனால், நடராஜன் மட்டும் புகையை ஊதிய வண்ணம் ரயிலுக்காகக் காத்திருந்தான்.

‘தம்பி! இந்த நாலணா செல்லாது’ - கடைக்காரன் கூறிவிட்டான்.

‘செல்லாதா?’ என்று இரண்டு முறை காசைத் திருப்பிப் பார்த்தனர்.

‘அக்கா! காசு செல்லாதாம்’ எனக் கூறிக் கொண்டே ஓடினர் சிறுவர்கள்.

‘செல்லாவிட்டால் வேண்டாம்... வேறு காசு இல்லை. நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்’ என்று சொல்லிவிட்டாள் சிங்காரி.

நடராஜன் புன்முறுவல் பூத்துக் கொண்டான்.

அவன் சட்டைப் பையை நோக்கினான் ஒருமுறை. ஏழெட்டணா சில்லறை இருந்தது.

'தம்பி... தம்பி' என்று கூப்பிட்டான்.

சிறுவர்கள் இவன் பக்கம் திரும்பினர்.

'இந்தா நாலணா... ஐஸ்கிரீம் வாங்கிக்கோ...'

'அக்கா... அக்கா! அதோ அவர் நாலணா கொடுத்தார். ஐஸ்கிரீம் வாங்கிக்கிறோம். உனக்கும் தரட்டுமா?' என்றனர் கபடமறியாத அச் சிறுவர்கள்.

'அச்சச்சோ... அதெல்லாம் வாங்கிக்கக்கூடாது' என்று கூறிக் கொண்டே சிங்காரி திரும்பினாள்.

அதே முகம். அவள் தினமும் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் கிண்டி ஸ்டேஷனில் ஏறும் அதே 'அவர்'தான். அவளுக்கு ஏனோ மேற்கொண்டு பேச நாக்கு எழவில்லை. இதயம் படபடத்தது.

நல்லவேளை. அப்பொழுது வண்டி வந்து அவளைக் காப்பாற்றியது. மறுபடியும் அவளுடைய சுழலும் கண்கள் ஒருமுறை வட்டமிட்டன.

அந்த வாலிபன் அந்த வண்டியில் ஏறவில்லை. ஆனால், அவன் கண்கள் இவள் கண்களுடன் ஏதோ பேசின.

இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும் என்கிறீரா? தற்செயலாக ஒருநாள் சிங்காரியை ஸ்டேஷனில் சந்தித்தேன்.

நான்தான் துணிவுள்ள பேர்வழியாயிற்றே! துணிந்து ஒருநாள் 'நீ சிங்கபுரம் ஜமீன்தார் மகளல்லவா?' என்று கேட்டேன்.

பத்தாம் பசலியா அவள் பதில் சொல்லப் பயப்பட?

என் மாமனார் வீட்டுப் பெயரைக் கூறி அறிமுகம் செய்து கொண்டு அவர்களுடைய குடும்பம் தாம்பரத்தில் தங்கியிருக்கும் இடத்தை விசாரித்துக் கொண்டேன்.

அப்பொழுது அறிமுகம் செய்து கொண்டதனால் ஒருமுறை அவள் என்னிடம் தன் கதையைக் கூற வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது. அதை, அவள் சொல்லி அதே வார்த்தைகளில் கூறினால்தான் நல்லது. ஆனால், தன் கதையை அவள் கூறிய சூழ்நிலை மகிழ்ச்சிகரமானது இல்லையெனினும் அவள் கூறியவற்றை அப்படியே கூற விரும்பு கிறேன்.

அந்த ஐஸ்கிரீம் சம்பவம் சாதாரணமானதென்றாலும் அது என்னுள்ளத்தே பெரிய புரட்சியை ஏற்படுத்தி விட்டது. அவர் - நடராஜன் - எனக்குப் பரிச்சயமானார். சென்னையில் ஏதோ கம்பெனியின் பெயரைச் சொன்னார் - அதிலே நூறு ரூபாய் சம்பளமாம்!

முதலிலே எனக்கு இந்தச் சுற்றுப்புற விஷயத்திலே நாட்டம் செல்லவில்லை. ஆனால், அவரேதான் இதையெல்லாம் ஒப்பித்தார். தனக்கு இன்னும் கல்யாணமாகவில்லை என்றும், தானும் தாயாரும் மட்டும் வசிப்பதாகவும் சொன்னார். மேலும் அவர், கதை நாவல்களிலே படித்துள்ள கதாநாயகர்கள் பேசுவது போல் பேசினார்.

பள்ளிக்கூடம் விட்டவுடன் வீட்டுக்குப் பறந்த என் கால்கள் இப்பொழுதெல்லாம் அவர் நிற்கும் இடத்தை நோக்கிப் பறக்கத் தொடங்கின. விடுமுறை நாள்களில் ஊருக்குப் போகும் சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் எனக்கு வேதனையாக இருக்கும்.

என் அத்தைக்கு நடப்பது ஒன்றும் தெரியாது. 'மகளின் மனம் கோணாமல் நடந்து கொள்ளுமாறு' தகப்பனார் உத்தரவிட்டிருந்தபடியால் அவள் எதையும் ஆழ்ந்து ஆராய்வதில்லை.

தசரா விடுமுறை சமயம் அவரும் நானும் வெளியூர்களுக்குக் குஷியாகக் கிளம்பி போய் விடுவதென முடிவு செய்தோம். பள்ளிக்கூடப் படிப்பைப் பற்றி அக்கறையே ஏற்படவில்லை. எனக்குப் பள்ளிக்கூடப் படிப்பை விட்டுவிடும் அளவுக்குக்கூட வேகம் பிறந்து விட்டது. ஆனால், தசரா லீவுக்கு அப்பாவே இங்கே வந்துவிட்டார். எப்படித் தட்டிக் கழித்துப் போவதென எனக்குத் தெரியவில்லை.

தைரியமாக நான் ஒரு பொய் சொல்லத் துணிந்தேன். 'பள்ளிக்கூடத்திலே பெங்களூருக்குச் சுற்றுலா போகிறார்களாம்; நானும் போய் ஒரு வாரத்தில் வந்து விடுகிறேன்' என்று கொஞ்சிக் கொண்டே கூறினேன்.

அவர் ஆயிரம் குறுக்குக் கேள்விகளைக் கேட்டார். சென்னையில் ஏதோ முக்கிய வேலை அவருக்கு இருந்ததால்தான் எக்ஸ்கர்ஷன் போவதைப் பற்றி விசாரிக்கவும் அவரால் முடியவில்லை.

நடராஜன் சென்டிரல் ஸ்டேஷனில் குறித்த நேரத்திற்கு வந்து காத்திருந்தார். நான் அவர் யோசனையின்படியே சூட்கேஸில் ஐநூறு ரூபாயும் புடைவைகளும், அவருக்கு வாங்கிய டிரஸ்களுமாக எடுத்துக் கொண்டு புறப்பட்டேன்.

எங்கோ கந்தர்வபுரியை அடையப் போகும் உணர்ச்சியே எனக்கு உண்டாயிற்று.

## குருமூர்த்தி சொல்கிறான்

சிங்காரி, நடராஜனுடன் கிளம்பிப் போன அன்றுதான் ஜமீன்தார் அவசரமாக ஊர் திரும்பினார். தாம்பரத்தில் இறங்கித் தன் சகோதரியிடம், பெண் எக்ஸ்கர்ஷன் போய் வந்த பிறகு தனக்குக் கடிதம் எழுதுமாறு கூறிவிட்டு அவசரமாகத் திரும்பி விட்டார்.

'ஆகாய விமானத்திலே பறந்து செல்வோமே சிங்காரி' என்றான் நடராஜன்.

'வேண்டாம்... வேண்டாம். இந்த வண்டியில் ஏறினால்தான் எல்லா ஸ்டேஷன்களையும் பார்த்துக் கொண்டே செல்லலாம்' என்றாள் சிங்காரி.

இருவரும் கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸில் முதல் வகுப்புப் பெட்டியில் இன்பக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு பிரயாணமாயினர். செலவு சிங்காரியினுடையது. புதுடில்லியை வந்தடைந்தனர். ஒன்று முழுவதையும் சொல்ல மறந்து விட்டேனே. இடையே இவர்களுக்கு விசித்திர அனுபவம் நேர்ந்தது. சிங்காரி ஐநூறு ரூபாய் கொண்டு வந்திருந்தாள் எனச் சொன்னேனல்லவா? எல்லாம் நூறு ரூபாய் நோட்டுகள். வழியில் எங்கும் சில்லறை கிடைக்காததால் பாவம் அரைப் பட்டினியாக அவர்கள் டில்லியை அடைய நேரிட்டது.

அந்தப் புராதன நகரின் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஒவ்வோர் இடத்தையும் சிங்காரி காணும்போது அவளுடைய குதூகலம் எல்லைக் கடங்காமல் போயிற்று. ஆனால், நடராஜன் மட்டும் ஏதோ எதிலும் பற்று இல்லாதவன்போல் நடந்து கொண்டான்.

மூன்றாவது நாள் அவனுக்கு ஹோட்டலில் இருப்பே கொள்ள வில்லை. சிங்காரியிடம், அங்கேயே இருக்கும்படியும் டில்லியில் சில்லறை அகப்படுவது கஷ்டமாக இருக்கிறபடியால் மீதி இருக்கும் முந்நூறு ரூபாய்க்கும் சில்லறை வாங்கி வருவதாகவும் அத்துடன், செலவுக்குக் கையிலுள்ள ரூபாய் போதாதாகையால், டில்லியிலுள்ள தன் கிளை ஆபீஸிலிருந்து ரூபாய் வாங்கி வருவதாகவும் கூறினான்.

தானும் கூடவே வருவதாகச் சிங்காரி முதலில் சொன்னாலும் அலைச்சலால் உண்டான சோர்வு அவளை அறையிலேயே இருக்குமாறு செய்து விட்டது.

நீண்ட நாளாகக் காத்திருந்த சந்தர்ப்பம் அப்பொழுது கிடைத்தவுடன் நடராஜன் ஹோட்டலை விட்டு வேகமாக நடந்தான். அந்த ஏழு மணி அந்தி மங்கி இருள் கவிந்த வேளையில் நடராஜன் எங்கோ வேகமாக நடந்தான்.

இதன் இடையில் சிங்கபுரம் போன ஜமீன்தாருக்கு ஓர் அவசரச் செய்தி காத்திருந்தது. அவர் புதிதாகக் கட்டி முடித்திருந்த ஒரு பாக்டரிக்கு, தொழில் ஆரம்பிக்க உரிய காலத்தில் லைசென்ஸ் வரவில்லை. தொழிற்சாலை வேலை செய்யத் தாமதமாகும் ஒவ்வொரு நாளும் ஆயிரம் ரூபாய் வருமான நஷ்டம் எனக் கணக்கிட்ட ஜமீன்தார் டில்லிக்குப் போய் அதற்கான உத்தரவுகள் வாங்க விமானத்தில் பறந்தார்.

சிங்காரி தங்கியிருந்த தெருவிலுள்ள மற்றொரு ஹோட்டலிலேயே ஜமீன்தார் தங்கினார்.

நடராஜன் போனவன் போனவனே! சிங்காரி அறையில் கதவைத் தாளிட்டுப் படுத்தவள் நன்றாகத் தூங்கி விட்டாள். மறுநாள் அவள் கண் விழிக்கும்போது சூரியன் உதயமாகி வெகுநேரம் ஆகியிருந்தது. ஒரு விநாடி 'தான் இருப்பது எங்கே?' என்று கூட அவளுக்குத் தோன்ற வில்லை. பள்ளிக்கூடம் கிளம்ப நேரமாகிவிட்டது போல் அவளுக்குப் பட்டது. சிங்கபுரத்தில் 'ஹாயாக' விடுமுறை கழிப்பதாகத் தோன்றியது.

இல்லை... இல்லை... டில்லியிலே ஹோட்டலில்... அதோ கீழே கோப்பைகளின் ஒலி கேட்கிறதே... பூம் பூம் என்று கார் செல்லும் சப்தம் கேட்கிறதே... 'காரே பூரே' என்று வேறு மொழியாளர் பேசும் ஓசை கேட்கிறதே...

சிங்காரிக்கு நேற்று மாலை நடராஜன் ரூபாயுடன் போனது நினைவுக்கு வந்தது. திடீரென்று உடம்பெல்லாம் என்னவோ செய்தது. 'ஒருவேளை அப்படியிருந்தால்? சேச்சே... அவர் அதுபோல் செய்யவே மாட்டார்' என்றெல்லாம் உள்ளம் வாதப் பிரதிவாதங்கள் செய்த வண்ணமிருந்தன.

அன்று பகல் பொழுது கழிந்தது. மாலை வரை, அவள் 'கொட்டு கொட்'டென்று ரூமிலேயே உட்கார்ந்திருந்தாள். மாலையிலே ஹோட்டல் வேலையாள் ரூம் வாடகை மாலை ஆறு மணியுடன் முடிவடைவதாகத் தெரிவிக்க வந்தவுடன்தான் அவளுக்குத் திக்பிரமை பிடித்துக் கொண்டது.

ஹோட்டலிலே ஒரு நிமிடம்கூட இருக்க வழியில்லை. ஹோட்டல் தலைவரிடம் போய் நடராஜனின் அங்க அடையாளங்களைச் சொல்லிக்

கேட்டாள். அவர் இவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு பதில் கூடச் சொல்லாமல் போய் விட்டார்.

நடராஜன் பேச்சுவாக்கில் சொன்ன அடையாளம் கொண்ட கம்பெனி டில்லியிலே கிடையாது என்றும் அவள் தெரிந்து கொண்ட போது அவளுக்கு அழுகையாக வந்தது. எங்கோ மாட மாளிகையின் உச்சி யிலிருந்து கீழே அதள பாதாளத்தினடியில் பிடித்துத் தள்ளப்பட்டது போல் உணர்ந்தாள்.

கையிலிருந்த ஐந்து ரூபாயைக் கொண்டு அன்றைய இரவை ஹோட்டல் அறையில் அழுது அழுது கழித்துவிட்டுக் காலையில் மதராஸ்காரர்கள் வசிக்கும் இடத்திற்குச் சென்றாள்.

இதனிடையில் ஜமீன்தார் டில்லி வந்தவர் நண்பரொருவரின் கார் ஒன்றை எடுத்துக் கொண்டு ஆக வேண்டிய காரியங்களுக்காக ஊர் முழுமையும் சுற்றலானார்.

அப்படிச் சுற்றி இரவு எட்டரை மணிக்குக் காரிய வெற்றியுடன் திரும்பிய சமயம் காரை வெகு வேகமாக ஓட்டி வந்தார். ஓரிடத்திலே கார் வேகமாகத் திரும்புவதற்கும் நடராஜன் குறுக்கே தெருவைக் கடப்பதற்கும் சரியாக இருந்தது.

'கிரீச்'சென்ற சப்தம். கார் குலுக்குக் குலுக்கி நின்றது. ஜமீன்தார் பயந்தே விட்டார். நடராஜனுக்குப் பலமான காயம்.

மனித நடமாட்டம் அவ்வளவாக இல்லாத அந்த வீதியில் படுகாயத்துடன் கிடந்த நடராஜனை தன் காரிலேயே போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றார் ஜமீன்தார்.

அவருடைய குதூகலம் நிறைந்த உள்ளத்தில் வேதனை படர்ந்தது. எப்படிப்பட்ட ஆபத்து வந்தாலும் அவர் சமாளித்துக் கொண்டு விடுவார். பணம்தான் பேசுமே! ஆனால், ஊரை விட்டு ஊர் வந்து இதுபோல் நேர்ந்ததை எண்ணும்போது அவர் வேதனையடையாமல் என்ன செய்வார்?

இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. தம் மீது கேஸ் ஏற்படா வண்ணம் தப்பித்துக் கொள்ள வழி செய்து விட்டாராயினும் ஏனோ அவரது உள்ளத்தே வேதனை தாங்க முடியவில்லை.

அங்கே மறுநாள் காலையில் சிங்காரி தளர்ந்து இடிந்து போன உள்ளத்துடன் புது டெல்லியில் தமிழர்கள் வசிக்கும் இடத்தில் எல்லாம் நடராஜனைத் தேடினாள்.

ஒருவிதமாக அவளைப் பார்த்தார்கள் சிலர்; கிண்டல் பேசினார்கள் சிலர்; 'அப்பப்பா நமக்கு வேண்டாம்' என்று ஓடி ஒளிந்தார்கள் சிலர்.

சிங்காரிக்கு உலகம் புரிந்தது. வீடுண்டு பள்ளிக்கூடம் உண்டு என்று இந்தப் பரந்த உலகை அறியாத அவளுக்கு இப்பொழுது இந்த விரிந்த உலகின் விபரீதங்கள் தெரிய வந்தன.

கடைசியில் அனுதாபப்பட்டு ஒருவர் சென்னைக்கு டிக்கெட் எடுத்துக் கொடுத்தார்.

தாம்பரத்திலே... அத்தைக்கு யாரோ சொன்னார்கள், சுற்றுலா செல்லவில்லை என்று!

அத்தைக்குப் பயம் பிடித்துவிட்டது. உடனே சிங்கபுரத்துக்குத் தந்தி அடித்து விட்டாள். திடுக்கிட்டு ஓடிவந்த ஜமீன்தார் விஷயம் அறிந்தார். அவருக்கு மேற்கொண்டு என்ன செய்வதென்று யோசனை தோன்றுவதற்குள் சோர்ந்து போன உள்ளத்துடன், மெலிந்து கண்கள் பஞ்சடைந்து வீட்டிலே வந்து விழுந்தாள் சிங்காரி.

தந்தையைக் கண்டவுடன் ஏனோ அவளுக்கு இதயம் பொத்து விடும்படி அழுகை வந்தது. தந்தையின் தோளில் சாய்ந்து கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

(குருமூர்த்தி இதைக்கூறும்போது அவன் குரலும் ஏனோ தழுதழுத்தது. 'அப்பனே! நீ அவள் நிலை கண்டு கைகொட்டிச் சிரிப்பதற்குப் பதிலாக உனக்கு ஏன் நெஞ்சு தழுதழுக்கிறது?' என்றேன்).

''பச்சாதாபப்பட வேண்டிய ஒரு காரியம்தான். ஆனால், பயமறியாத அந்த இளங்கன்று ஒரு வேகம் உந்தித் தள்ள, இவன் மேல் புது மோகம் கொண்டு விட்டாள். அதைப் பயன்படுத்தி அடாது செய்த இந்தக் கபட ஆண்பிள்ளையை என்ன செய்தால்தான் என்ன?''

''என்ன செய்தால்தான் என்னவா? அதுதான் டெல்லியிலே சரியான தண்டனை நடராஜனுக்குக் கிடைத்து விட்டதே'' என்றேன்.

''ஆமாம்... ஆமாம்.. அதோடு விட்டுவிட்டேனே... ஆஸ்பத்திரியில் கிடந்த நடராஜன் குணமடைந்தான். அவன் கால்கள் உபயோகமில்லாது போய் விட்டன. கட்டை கொண்டு ஊன்றி நடக்கும் நிலை.

அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆஸ்பத்திரியில் ஜமீன்தார் கொடுத்த அட்ரஸைக் கொண்டு அவரிடமிருந்து கால் உடைந்ததற்கு நஷ்டஈடு கேட்டு நிறையப் பணம் வாங்கலாம் என்னும் எண்ணத்துடன் சிங்கபுரம் வந்தான்.

தாம்பரம் குடித்தனம் கலைக்கப்பட்டு சிங்காரியை ஊருக்கே அழைத்து வந்து விட்டார் ஜமீன்தார்.

சிங்காரிக்குப் பெரும் அதிர்ச்சியாலும், அவமானத்தாலும் அடிக்கடி மயக்கம் வந்தது.

'குல கௌரவமே போய்விட்டதே' என்று ஜமீன்தார் வருந்தினாலும் அவர் சிங்காரியைக் கோபிக்கவே இல்லை. 'டில்லிக்கு உன்னை அழைத்துச் சென்றவனை எப்படியாவது அடையாளம் காட்டு' என்று அவர் சிங்காரியிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

இச்சம்பவத்தைப் பிரபலப்படுத்தினால் தன் கௌரவம் கெட்டு விடும் என்று வெளியே சொல்லாமலே விட்டுவிட்டார். ஆனால், உள்ளூர பயம் வந்தது. அவருக்குப் பழைய நினைவு வந்தது. 'அவருடைய மனைவி... பாவம்' அவளையும் தான் கல்யாணமாகும் முன் இதுபோல் தானே பணத்தைக் காட்டி கல்கத்தாவுக்கு அழைத்துச் சென்றோம் என்று பழைய சம்பவத்தை நினைவுபடுத்திக் கொண்டார்.

அப்பொழுதுதான் நடராஜன், சிங்கபுரம் வந்து சேர்ந்தான்.

எவ்வளவுக்கெவ்வளவு கோபத்தோடு வந்தானோ, பங்களாவுக்குள் நுழைந்ததும் அவனுடைய நிலை தடுமாறியது.

'தங்களைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்' என்று வேலைக்காரன் சொன்னதும், சிங்காரியும் ஜமீன்தாரும் ஹாலுக்கு வந்தனர்.

நடராஜனைக் கண்டவுடன் ஜமீன்தார் திடுக்குற்றார். ஆனால், நடராஜனோ சிங்காரியைக் கண்டவுடன் நடுநடுங்கி விட்டான்.

சிங்காரிக்கோ அந்தக் குழப்ப நிலையில் மயங்கிக் கீழே விழுவதை விட வேறு ஒன்றும் தோன்றவில்லை.

நடராஜன் நழுவ யத்தனித்தான்.

என்ன தோன்றியதோ என்னவோ... தலையைப் பிடித்துக் கொண்டு சோபாவில் சாய்ந்து விட்டான்.

ஜமீன்தாருக்கு ஒன்றும் புரியவில்லை.

மயக்கம் தெளிந்து எழுந்த சிங்காரிக்கு ஆத்திரம் தாங்கவில்லை. அவள் இதயத்திலே இத்தனை நாள் அடக்கி வைத்திருந்த ஏமாற்றம் - முறிந்த எண்ணங்கள் - அவமானம் அத்தனையும் கொந்தளிக்கக் கூவினாள்.

ஜமீன்தார் தீவிரமாக யோசித்தார்.

நடராஜனைக் கூப்பிட்டார்.

இருவரும் ஆலோசித்தனர்.

கண்ணீர் உகுத்துக் கொண்டே நடராஜன் கூறினான்.

## நடராஜன் கூறுகிறான்

"சிங்காரி மீது எனக்கு அன்பு உண்டானது உண்மையே அவளைத் தவிர உலகத்தில் வேறு எதுவுமே தேவையில்லை என எண்ணினேன். டெல்லியிலே அவளுடன் போயிருந்தபோது இந்தப் பாழும் மனம் வேறு பெண் மீது தாவியது.

சிங்காரிக்கு துரோகமிழைத்து ரூபாயுடன் அவளையடைந்தேன். அவள் என்னையும் ஏமாற்றிவிட்டுக் கம்பி நீட்டிவிட்டாள்.

திக்பிரமை பிடித்து டெல்லியிலே அன்று இரவு திரும்பும்போது தான் தங்கள் காரில் மோதுண்டேன்.

எனக்குச் சரியான தண்டனைதான். நன்றாக வேண்டும் எனக்கு!

ஆனால், மறுபடியும் எனது திமிர் பிடித்த உள்ளம் உங்களிடம் பணம் பறிக்க வந்ததே!

உங்கள் மகளைக் கெடுத்ததோடன்றி, உங்களையும் தொந்தரவு செய்ய வந்தேனே!

எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள்" என்று கண்ணீர் விட்டு அழுதான் நடராஜன்.

ஜமீன்தார் அவனுக்குத் தண்டனைக் கொடுப்பதற்குப் பதிலாக அவனைத் தடவிக் கொடுத்தார்.

"அப்பா, நடராஜா! வருத்தப்படாதே. நீ செய்தது மகத்தான தவறுதான். ஆனால், மனிதன் செய்த தவற்றை ஒப்புக் கொள்ளும்போது அவன் குற்றம் மறைந்து விடுகிறது. அத்துடன் உனக்குத்தான் என் கையால் ஏற்கெனவே தண்டனை கிடைத்து விட்டதே.

பாவம்! உன் கால் என்னால் போய்விட்டது. எப்படிப் பிழைக்கப் போகிறாய்? அதுவே உன் வாழ்க்கைப் பிரச்னையாகி விட்டதே!

என் மகள் - அவளை போன்ற பெண்கள், கண்டதும் காதல் கோலத்திலே நிலை தவறி விடுகிறார்கள். முக்கியமாக இன்றைய புதுரகப் பத்திரிகைகளும், பாழும் சினிமாக்களும் இளம் உள்ளங்களை

விஷமாக்கி விடுகின்றன. நல்லவேளை... என் மகள் தான் தவறான வழியில் சென்றதை உணர்ந்து என்னிடம் ஒப்புக் கொண்டு விட்டாள்.

வசதியுள்ள இவளைப் போன்றவர்களுக்கு இத்தவறான வழி சில சமயம் நிரந்தரமான வழியாகி விடும்.

நல்லவேளை என் கௌரவம் கெடவில்லை.

எல்லாரும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்... மன்னிக்கப்பட வேண்டியவர்கள்'' என்று உணர்ச்சியோடு கூறினார்.

அவர் கண்களிலே நீர் தளும்பியது.

நடராஜன் தலைகுனிந்து கண்ணீர் விட்டான்.

கதவு மூலையில் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த சிங்காரியிடமிருந்து விம்மும் ஒலி மெல்லியதாகக் கேட்டது.

''குருமூர்த்தி சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்தான்'' என்று கூறிவிட்டு என் நண்பனும் அப்பொழுது வந்த வண்டியிலேறக் கிளம்பினான்.

அவசரத்தோடு அவசரமாக ''ஏம்பா... கடைசியில் முடிவை கூற வில்லையே!'' என்றேன்.

''முடிவு! என்ன முடிவு? திருவாளர் நடராஜனுக்கும், சிங்கபுரம் ஜமீன்தார் சங்கர சிவசுப்ரமண்ய ராமச்சந்திரராஜா மகள் சிங்காரிக்கும் சுபயோக சுப லக்னத்தில் திருமணம் நடந்து முடிந்தது. அவ்வாறு நடைபெறாமல் இருந்தால் சிங்காரியின் நிலை என்னவாகியிருக்கும்?'' என்றான்.

● ● ● ●

# 82. பூங்கொடியின் ஆவி

சில்லென்று காற்று வீசிக் கொண்டிருந்தது. பகலில் காய்ந்த வெயிலின் கொடுமையால் வாடிய உள்ளத்திற்கு அந்தக் காற்றின் மென் வருடல் சுகமாயிருந்தது. பத்தரை மணி பாஸஞ்சரும் போய் விட்டது.

தேவேசம் பிள்ளை திரும்பிப் படுத்தார். தலையணை உயரமாக வைத்துக் கொண்டு படுத்தார். அவர் இதய படபடப்பு சற்று அதிகமாகவே இருந்தது. மங்கிய நிலவொளியில், ஜன்னலின் ஓரமாகத் தோட்டத்தை வெறித்துப் பார்த்தபோது ஆத்திரம் ஒரு பக்கம் பொங்கி வந்தது.

கடந்த ஒரு வாரமாக தூக்கம் வராததால் மனவேதனை மூன்று அ.வி.நாயகம் சொன்னது உண்மைதான் என்ற முடிவுக்கு வந்து விட்டார்.

தேவேசம் பிள்ளை அந்தக் காலத்தில் சைகோனுக்கு வியாபாரம் செய்யச் சென்று, அங்கேயே முப்பது வருடங்களுக்கு மேல் தங்கி விட்டார். பிறகு நிறைய பொருளுடன் காட்டுப்பாக்கத்தில் வந்து குடியேறினார். கள்ளிச் செடியும், புதருமாக இருந்த இடத்தை வாங்கிச் சீர்திருத்தி நடுவே சிறு வீடும் சுற்றிலும் தோட்டமும் ஏற்படுத்தினார்.

அழகான வீட்டையும், பூத்துக் குலுங்கும் மலர் வனத்தையும், பழ மரங்களையும், அகண்ட கிணற்றையும், கொடி வீட்டையும் காண அவர் மனைவி கொடுத்து வைக்கவில்லை. பூங்கொடியைப் பெற்ற ஆறாவது மாதமே திடீரென இறந்து விட்டாள்.

மனைவியை இழந்த தேவேசம் பிள்ளைக்குப் பூங்கொடியின் மழலைப் பேச்சு இன்பத்தை அளித்தது. மனைவியை இழந்தவுடன் வீடும், வீட்டைச் சுற்றித் தோட்டமும் பாலைவனமாகத் தோன்றிய பிள்ளைக்குப் பூங்கொடியின் தளிர் நடை தண்மை அளித்து. சொத்துச் சுகமும், எதற்கு என்ற விரக்தி மனப்பான்மை கொண்ட தேவேசம் பிள்ளைக்கு வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்பட்டது.

பூங்கொடி வளர்ந்தாள். பள்ளிக்கு அழைத்துச் செல்ல ஆயா; பாடங்கள் வீட்டில் கற்றுக் கொடுக்க டீச்சரம்மா; சமையற்காரி... இத்யாதி, இத்யாதியாகப் பூங்கொடிக்குக் குறை ஏதும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டார் பிள்ளை.

ஆரம்ப பாடசாலைப் படிப்பு முடிந்து, மிடில் ஸ்கூல் படிப்பு முடிந்து, ஹைஸ்கூல் படிப்பு முடிந்து... காலேஜில் கால் வைக்க ஆசை கொண்ட பூங்கொடியை நோக்கித் தேவேசம் பிள்ளைச் சொன்னார்:

''அம்மா! போதும் படிப்பு. நீ படித்து எனக்கு என்ன செய்ய வேண்டும்? உன் கவலை எனக்கு நாளுக்கு நாள் பெரிதாக வளர்கிறது. உன்னை நல்ல கணவனாகப் பார்த்துக் கொடுத்து இந்த வீட்டில் அமர்த்தி விட்டு வெளியூர்களுக்குச் சுற்றுலா செல்ல எண்ணியுள்ளேன்.''

பூங்கொடி முகத்தைச் சிணுங்கினாள்... ''கல்யாணம், கல்யாணம்... என்னப்பா கல்யாணம் வேண்டியிருக்கிறது? கல்யாணம் என்றாலே பிடிக்கவில்லை. நான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை அப்பா! அந்த மலர்வனத்து வளர்நிழலில் அமர்ந்து வீணை வாசித்தே காலம் கடத்தப் போகிறேன். மாதவிக் கொடி அசைந்தாடுவதற்கேற்ப இன்னிசை முழங்கப் போகிறேன். நம் கொடி வீட்டு மல்லிகை நிழலிலே, கண்ணை மூடிய வண்ணம் இசைபுரிக்குப் போகும் இன்பப் பாதையைத் தேடி முன்னேறப் போகிறேன்'' என்று மேடைப் பிரசங்கி மாதிரியும், நாடகக் கதாநாயகி போலவும், பேசவும் கேட்ட திருவாளர் பிள்ளை திடுக்கிட்டார்.

'கல்யாணம் செய்து கொண்ட நீ என்னத்தைக் கண்டாய்?' என்று தன் மகள் கேட்பது போல் தோன்றியது. 'நான் கண்டதைத் தான் அவள் கணவனும் காணுவனோ ஓ... ஓ... ஓ' என்று கண் சுழல எண்ணியவாறு நாற்காலியில் சாய்ந்தார், இதுவரை வராத உறக்கம் சூழ்ந்தது.

கூவென்று கூவிக் கொண்டு பத்தரை பாஸஞ்சர் கடபுடா சப்தத்துடன் சென்றது. கொடி வீட்டு மல்லிகை மணம் குப்பென்று எங்கும் பரவியது.

அவள் விருப்பப்படியே திருவாளர் பிள்ளை அவளைக் காலேஜில் சேர்த்து விட்டார்.

காட்டுப்பாக்கத்திலிருந்து தாம்பரம் ஸ்டேஷனுக்கு 'ஜல் ஜல்' சப்தத் துடன் இரட்டை மாட்டு வண்டி பறக்கும்.

காலேஜ் விட்டு வந்தவுடன் பூங்கொடி வீணையுடன் கொடி வீட்டுக்குப் போய் விடுவாள். வீணையின் நாதம் அந்த மாலை

வேளையில் அருகேயுள்ள மலைகளிலும் மடுக்களிலும் எதிரொலிக்கும். திருவாளர் பிள்ளைக்குப் பெண்ணைப் பற்றி ஒரு பக்கம் கவலையானாலும், மற்றொரு பக்கம் சந்தோஷம் ஏற்பட்டது.

வண்டிக்காரன் கூறிய ஒரு செய்தி அவரைத் திருப்திப்படுத்தியது. கல்யாணமே வேண்டாம் என்று கூறும் பூங்கொடி தன் வகுப்பு மாணவன் ஒருவனுடன் நேசமாக இருக்கிறாள் என்னும் விஷயத்தை வண்டிக்காரன் சொல்ல, 'ஏதோ சொல்லக்கூடாத சமாசாரம்' போல் கூறவும், திருவாளர் பிள்ளைத் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார்.

'போக்கிரிப் பெண் தன் கணவனைத் தானே தேர்தெடுக்க விரும்புகிறாள் போலும்!' என எண்ணினார். மறுகணம், 'ஐயோ! காதலாவது கத்திரிக்காயாவது... ஏதோ கதையையும், நாவலையும் படித்து விட்டு இந்தப் பெண் ஏமாந்து விடப் போகிறாளே' என்று கவலைக் கொண்டார். நேருக்கு நேர் இதைப் பற்றித் தன் பெண்ணைக் கேட்கவும் அவருக்குத் துணிவில்லை.

ஒரு வசந்தம் வந்து போய் இரண்டாவது வசந்தம் நெருங்கும் சமயத்தில் பூங்கொடியினிடம் பல மாறுதல்கள் தோன்றின.

''அப்பா! நான் காலேஜ் சிநேகிதர்களுடன் கொடைக்கானல் போய் வரப் போகிறேன். முந்நூறு, நானூறு செலவாகும். விடை கொடுங்கள்... பணமும் கொடுங்கள்'' என்று கேட்கவும் திருவாளர் பிள்ளை மௌனமாயிருந்தார்.

பெண் போக்கு அவருக்கு ஏனோ இப்பொழுது பிடிக்கவில்லை. மகளைக் கண்டிக்க வேண்டும் என்று தோன்றியது.

ஏதோ ஒரு வெறி அவரைச் சட்டெனப் பிடித்து ஆட்டவே மகளை நோக்கி அரைமணி நேரம் பிரசங்கம் செய்தார்; விவாதித்தார்; கர்ஜித்தார். அவருடைய காலேஜ் காதலனைப் பற்றிக் காலேஜ் பிரின்ஸிபாலுக்குப் புகார் செய்வதாகப் பயமுறுத்தினார்.

அன்று இரவு பத்தரை மணி பாஸஞ்சர் பத்தரை மணிக்குப் போக வில்லை. என்ஜின் கோளாறு காரணம். கொடி மல்லிகையின் மணத்தையும் காணோம்.

மூன்றாம் நாள், மலர்வனத்துப் பெருங்கிணற்றில் பூங்கொடி மிதந்து கிடந்தாள். அவளுடைய வாழ்க்கை நாவல் முற்று பெற்றது.

திருவாளர் பிள்ளை திக்பிரமை பிடித்தவரானார். இது என்ன உலகம் என்னும் வெறுப்பு மனப்பான்மை புகுந்தது. இந்த உலகத்தில் பூங்கொடி

எதற்காகவோ பிறந்து அந்தக் காரியம் நடத்தாமல் அரைகுறையாக மறைந்தது அவரை உலுக்கிவிட்டது.

**ம**னம் நொந்து, பிரமை பிடித்து, உலகத்தை வெறுத்து வீட்டை விட்டு வெளியே வராதிருந்த திருவாளர் பிள்ளைக்கு அனவரத விநாயகம் எப்படியோ சிநேகமானார்.

அ.வி. நாயகத்தைப் பற்றி இங்குச் சொல்வதென்றால் தனியே ஓர் அத்தியாயம் எழுத வேண்டும். அப்படி எழுதினாலும் ஆசிரியர் கத்திரிக் கோலுக்குத் தப்ப வேண்டும்.

பூங்கொடி இறந்த பிறகு அந்தக் கொடி வீட்டுப் பக்கமே யாரும் போவதில்லை. தோட்டக்காரன் கூடத் தண்ணீர் ஊற்றப் போவதில்லை. வேலைக்காரி சுத்தம் செய்யச் செல்வதில்லை.

பத்தரை மணிக்குப் பாஸஞ்சர் போன பிறகு, அங்குப் பூங்கொடி வருவதாகவும், அவளுடைய காதலன் அந்த நேரத்திற்கு வந்து காத்திருப்பதாகவும், வீணையின் இனிய நாதம் அந்தச் சமயம் மெல்லிய குரலொலியுடன் எழுவதாகவும் ஊரார் சொல்ல ஆரம்பித்தனர். அதனால்தான் பாஸஞ்சர் வண்டி கூட அந்த இடம் வரும் முன்பே 'கூ' என்று கத்திக் கொண்டு அதிவேகமாக ஓடி மறைவதாகவும் ஊரார் கூற ஆரம்பித்தார்கள்.

இதை அ.வி. நாயகம், திருவாளர் பிள்ளையிடம் கூறவும், பிள்ளை அழுது விட்டார். ''பூங்கொடி பத்தரை மணிக்கு அங்கு வரும் நீ இந்த அப்பாவை மறந்து விட்டாயா? நான் என்ன தவறு செய்தேன்?'' என்று விம்மினார்.

அ.வி. நாயகம் தினம் தினம் புதுப்புதுச் செய்திகள் கொண்டு வருவார்... ''என்னங்க அந்தப் பயல் நேற்று வரவில்லை போலிருக்கிறது. உங்கப் பெண் அதே உடை உடுத்திக் கட்டுப் பூ தலையில் குலுங்க வந்து காத்துப் பார்த்து அவனைக் காணாமல் இப்படியே மதிளைத் தாண்டி, ரயில்வே லயனைத் தாண்டி போய் மறைந்து விட்டாள். ரயில் ஊதல் சப்தம் வேறு கேட்டது. அந்த என்ஜின் விளக்கொளியில் வேக வேகமாக அந்தத் தடியன் ஓடி வருவதைப் பார்த்தேன். அப்படியே தோளைப் பிடித்துக் குலுக்கிக் கன்னத்தில் இரண்டு பளாரென விடலாமா என ஆத்திரம் வந்தது'' என்று அபிநயத்தார்.

''என்ன நாயகம்! அந்தப் பயலைச் சும்மா விட்டு விட்டீரே... கட்டி வைத்து உதைக்க வேண்டாமா? என் மகள் மாள அவன்தான் காரணம்.

அவளைச் சாகடித்ததோடல்லாமல் இப்பொழுது அவளை ஆவி ரூபத்திலிருக்கும் போதும் துன்புறுத்துவது என்ன நியாயம்?'' - திருவாளர் பிள்ளைக்கு இன்றைக்குத்தான் கோபம் வந்தது.

அ.வி. நாயகம் நிமிர்ந்து உட்கார்ந்தார். ''என்ன பிள்ளைவாள்... எனக்கும் அந்த எண்ணம் இல்லாமலில்லை. உங்கள் மகளின் பூர்வ ஜென்மக் காதலன் பூங்கொடியின் ஆவியுடனும் பேசுகிறான். அவனை அடித்து விரட்டி விட்டால் பூங்கொடியின் ஆவி வந்து தேடும். அவன் வராததை எண்ணி, உங்களை வந்துப் பிடித்து, பிறகு என்னை வந்து ஆட்டி... ஓ... ஓ... ஓ... ஓ...'' என்று சிரித்து, அ.வி. நாயகம் பயங்கரமாக முகத்தை மாற்றிக் கொண்டு பேசினார்.

''சீ... சீ... என்னப்பா... ஆம்பளை இப்படிப் பயப்படுகிறீர்! அந்தப் பயலை உதைத்து அனுப்பிவிட்டால் பூங்கொடி ஆவி ரூபத்தில் அப்பாவிடம் வருவாள். என் கண்ணு வரும். அவளைக் கொஞ்ச வேண்டும் போலிருக்கிறது. நாயகம் நீங்கள் உடனே அடியாளைத் தயார் செய்து பத்தரை மணி பாஸஞ்சர் போன பிறகு அந்தப் பயல் குணராமன் வரும்போது முதுகுத் தோலைப் பிய்த்து விடுங்கள்.''

''அதற்கென்ன, பௌர்ணமிக்கு இரண்டு நாள் முன்னமே செய்ய வேண்டும். ஒரு நூறு ரூபாய் செலவாகும்.''

''நூறா... இந்தாரும் ஆயிரம். என் மகள் சுகப்பட வேண்டும்... என்னைத் தேடி வர வேண்டும்'' என்றார் திருவாளர் பிள்ளை.

பத்தரை மணி பாஸஞ்சர் போன பிறகு, கொடி வீட்டின் யுவனும் யுவதியும் வந்த பேசுவது உண்மைதான். ஊரார் பூங்கொடியின் ஆவி என்றும், அவள் காதலன் குணராமன் கண்ணுக்கு மட்டும் தெரிவதாகவும் நம்பினர்.

அ.வி. நாயகம் இன்னும் சமாசாரம் சேகரித்து, திருவாளர் பிள்ளையிடம் நெருங்கிப் பேசி மேலும் ஆயிரம் ரூபாய் கிடைக்கும் வரை புதுப்புதுக் கோணங்களில் கதை கதையாகக் கூறினார்.

அ.வி. நாயகம் அன்று ஒன்பது மணிக்கு கொடி வீட்டுக்கருகே மறைவிடத்தில் ஆட்களுடன் காத்திருந்தார்.

யாரோ வரும் ஓசை கேட்டது. 'யாரோ ஆம்பளை' என்று குசுகுசுத்தான் மறைந்திருந்தவரில் ஒருவன். 'கட கட'வென்று பத்தரை மணி பாஸஞ் சர் ஓடி மறைந்தது. 'கம்'மென்று மல்லிகை மணம், வளையல் ஓசையின் மென்மையான ஒலி, முத்துகள் குலுங்குவது போன்ற நகைப்பொலி.

கொடி வீட்டிலே சிரிப்பின் ஒலி, இசையின் நாதம், பேச்சரவம் அரைமணி நேரம் நீடித்தது.

'இப்படியே போய் அந்தப் பூங்கொடியின் ஆவியையும், குணராமனையும் கையுங் களவுமாகப் பிடித்து விட்டால் என்ன?' என்று ஓர் எண்ணம் திருவாளர் நாயகத்துக்கு எழுந்தது.

'ஆவி... வி... - ஆவியை எப்படிப் பிடிப்பது? வேண்டாம், வேண்டாம்... அந்தக் குணராமனைப் பிடித்து அவனை வைத்தே இரு தரப்பிலும் பணம் சம்பாதிக்க வேண்டும்' என்ற முடிவுக்கு வந்த நாயகம், பூங்கொடியின் ஆவி போகும் வரை காத்திருந்தார்.

கொடி வீட்டினின்று வளையல் ஒலி வரும் ஓசை கேட்கவும், ஆவியைக் காணக் கூடாதெனக் கண்ணை மூடிக் கொண்டனர்.

ஐந்து நிமிடம் கழித்து மறைந்திருந்த அனைவரும் வீட்டினுள் பாய்ந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த குணராமனைப் பிடித்தனர்.

தொலைவில் ஜன்னல் வழியாக திருவாளர் பிள்ளை கொடி வீட்டருகே நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் இதயம் படபடத்தது.

அந்த மங்கிய நிலவிலே பெண்ணுருவம் கொடி வீட்டிற்குள் போவதையும், பிறகு திரும்பி வருவதையும் பார்த்தபோது 'பூங்கொடி' என்று கூவி விட்டார்.

வேலையாட்கள் அவசரமாக ஓடி வந்தனர். "வாங்க... வாங்க... அந்தப் பயல் அகப்பட்டு விட்டான்" என்று பெருமூச்சு வாங்கக் கூறினர்.

குணராமன் - அழகானு களை சொட்டும் முகம். பளபளக்கும் கிராப். அவனை இரண்டு பேர் பிடித்துக் கொண்டு நின்றனர்.

திருவாளர் பிள்ளை ஹரிகேன் விளக்கு, டார்ச் சகிதமாகப் போனார்.

"படுபாவி என் மகள் மாளக் காரணமான நீ, ஏண்டா இன்னும் என் வீட்டிற்கு வருகிறாய்? உன் மேல் ஆசை கொண்ட அவள் ஆவி ரூபத்தில் வந்து சுற்றுகிறாள். என்னைக் கூட காண்பதில்லை" என்று கர்ஜித்தார் திருவாளர் பிள்ளை.

"செம்தியாகக் கொடுத்தால் ஐயா இந்தப் பக்கம் தலை வைத்துக் கூட படுக்க மாட்டார்" என்றான் அடியாட்களில் ஒருவன்.

''டேய் சுப்புக்குட்டி எங்கேடா அந்தச் சவுக்கு?'' என்று கேட்டார் நாயகம் அவர்கள்.

குணராமன் வெலவெலத்துப் போனான். ''நான்... நான்...'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

''பேசாதேடா உதை விழும்'' என்றார் திருவாளர் பிள்ளை.

''என் மகள் என்னடா சொல்கிறாள். அப்பாவை நினைவில் வைத்திருக்கிறாளாடா... சொல்லடா!'' என்று பரபரப்புடன் கேட்டார்.

குணராமன் திகைத்தான். அவனுக்குப் புரியவில்லை.

''மௌனமாக இருக்கிறாயா... இதோ வரது பாரு'' என்று சாட்டையை ஓங்கினார்.

யாரோ சிலர் வேகமாக வரும் ஓசை கேட்டது. மங்கிய வெளிச்சத்தில் அவர்களுடன் பெண் ஒருத்தி வருவதும் தெரிந்தது.

பூங்கொடியின் ஆவியோ!

எல்லாருக்கும் குலை நடுக்கம். திருவாளர் பிள்ளையின் உடல், ரயில் போகும் இடத்துக்கு அருகில் இருக்கும் வீடு போல் அதிர்ந்தது.

''என்ன பிள்ளைவாள்! இது என்ன காரியம்? தாங்களா இப்படிச் செய்வது?'' என்று கேட்டுக் கொண்டே பிரபல மிராசுதாரும் அவர் ஆட்களும் வந்தனர்.

''வாங்க வாங்க நாயுடுகாரு! இந்தப் பையனைப் பாருங்க... என் மகள் பூங்கொடியைக் காதலித்தான். என் மகளைக் கண்டித்தேன். அதனால் துர் மரணமாச் செத்துப் போன விஷயம் உங்களுக்குத் தெரியும். தினம் ராத்திரி பாஸஞ்சர் போன பிறகு இவன் இந்தக் கொடி வீட்டுக்கு வரான். என் மகள் ஆவி தான் இங்கேயே சுத்திண்டிருக்கிற விஷயம் தான் ஊர் பிரசித்தமாச்சே... இவன் ஏன் வரானுன்னுதான் கேள்வி?'' என்று படபடத்தார் பிள்ளை.

''ஹோ... ஹோ...'' என்று சிரித்தார் நாயுடுகாரு.

''இந்தக் குணராமன் பூங்கொடியின் ஆவியின் காதலனா? அது சரி; இவள் என் பெண் செண்பகவல்லியைத் தெரியுமில்லையா! செண்பகமும், இந்தக் குணராமனும் நண்பர்கள். இந்தக் காலப் பாஷையில் காதலர்கள். குணராமன் என் சகோதரியின் மகன்தான். செண்பகவல்லி வீணை பயில்கிறாள். குணராமன் போஸ்ட் ஆபீஸில் வேலை செய்கிறான். கிளாஸ் முடித்து தாம்பரத்தில் காத்திருந்து தினமும்

இவன்தான் என் மகளை அழைத்து வருகிறான். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, பழகிப் பின் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கோஷ்டியைச் சேர்ந்தவன் நான். உங்களுக்குத் தெரியுமே... மகாகவி பாரதியார் 'காதல் செய்வீர் உலகிரே' என்று பாடியிருக்கிறாரே... தினம் பஸ்ஸில் இந்த இடத்தில் இறங்கின பிறகு உங்கக் கொடி வீட்டு மல்லிகையும், தோட்ட அழகும் அவர்கள் மனத்தைக் கவரவே பத்து நிமிடம் தங்குவது அவர்கள் வழக்கம். ஏன் லேட்னு நான் கேட்கவே மாட்டேன். அப்படியிருக்கும்போது எங்க வீட்டு மருமகப் பிள்ளையா வரப் போறவரை நீங்க இப்படிச் செய்யறது நல்லா இல்லை!'' என்று நாயுடு முடிக்கவும், திருவாளர் பிள்ளையின் முகம் சிறுத்துக் கறுத்தது.

''அப்ப... என் பெண்ணின் ஆவி!'' என்றார் உடைந்த குரலில்.

''ஆவியாவது மண்ணாங்கட்டியாவது இந்த அணுகுண்டு யுகத்திலா நீங்க இருக்கீங்க... எம்பொண்ணு தோட்டத்திலே வந்ததைப் பார்த்து ஆவின்னு நினைச்சுட்டீங்க...''

''நான் நினைக்கவேயில்லை ஐயா... அதோ அந்த அ.வி. நாயகம் கடந்த பல மாதங்களாக என்னை என்னென்னவோ சொல்லி மயக்கி விட்டார்'' என்று கூறி விட்டு, அனவரத விநாயகம் பக்கம் திரும்பினார். அ.வி. நாயகம் அங்கு இருக்க அவருக்கென்ன பைத்தியமா?

''அனவரத விநாயகம் தானே! அவர் பெண்ணைக் குணராமனுக்குக் கொடுக்க விரும்பினார். குணராமன் அவரை மதிக்கவில்லை. அதனால் குணராமனை அவமானப்படுத்த இப்படிச் செய்திருக்கிறார்'' என்று கூறவும், அங்கே சிரிப்பொலி சூழ்ந்தது.

''நல்லவேளையா நீ என் அப்பாவை அழைச்சுண்டு வந்தாயோ நான் பிழைத்தேனோ'' என்று குணராமன் செண்பகவல்லியைப் பார்த்துக் கூறினான்.

''அப்படின்னா பூங்கொடியின் ஆவி இல்லை என்று சொல்லுங்க'' என்று செண்பகவல்லியைப் பயம் கலந்த கண்ணுடன் திருவாளர் பிள்ளை பார்க்கவும், செண்பகவல்லி முத்துப் பற்கள் தெரிய ''ஆமாம்... ஆமாம்... நான் ஆவியேதான்!'' என்றாள்.

சிலர் சிரித்தனர்; பிள்ளை சிந்தித்தார்!

பிறகு... கிணற்றில் மிதந்த உடல்..?!

● ● ● ●

# 83. கள்ளியின் உள்ளம்

அறையில் உள்ள கட்டிலில் லோகநாதன் படுத்துக் கொண்டிருந்தான். முத்துசாமி எங்கோ வெளியே சென்றிருந்தான். தூங்கியும் தூங்காமலும் இருந்த அந்தப் பகல் வேளையில் யாரோ அவனைத் தாண்டி உள்ளே நுழைந்தது போன்ற உணர்ச்சி அவனுள் எழுந்தது.

சட்டென்று கண்விழித்து, அறையுள் நுழைந்து யாராயிருக்குமென்று ஒரு கணம் நோக்கினான். அவள்தான் வள்ளி. அந்தக் கள்ளிதான்.

சரி; அவள் என்னதான் செய்கிறாள் பார்ப்போம் என்று அயர்ந்துத் தூங்கும் பாவனையில் இருந்தான். பாதிக் கண் மூடியபடி இருந்தது. மீதிப் பாதிதான் நடப்பதை ஆவலுடன் கவனித்தது.

அறைக்குள் நுழைந்த வள்ளி ஒரு விநாடி சுற்று முற்றும் பார்த்தாள். பரபரவென்று சட்டை தொங்குமிடம் சென்று பையினின்று பர்ஸை மெல்ல எடுத்தாள்.

லோகநாதன் நெஞ்சு ஒரு விநாடி துணுக்குற்றது. அந்த வீட்டிற்குக் குடி வரும்போதே சிலர் சொன்னார்கள், அந்த இடம் வேண்டாமென்று. லோகநாதனுடைய நண்பன் முத்துசாமிதான் பிடிவாதம் பிடித்தான்.

'மாடியில் உள்ள அறையில் நல்ல காற்று வருகிறது; யார் தொல்லையும் இல்லை; வாடகை குறைவு' என்று அடித்துப் பேசி லோகநாதனை ஒப்புக் கொள்ளுமாறு செய்து விட்டான். அவனும், முத்துசாமியும் உள்ளூர்க் கோவாபரேடிவ் வங்கியில் வேலை பார்ப்பவர்கள். ஒரே ஆபீஸிற்கு வெளியூரினின்று வந்தவர்களாதலால் பேச்சுத் துணையாக இருக்குமென்று சேர்ந்தே இடம் வாடகைக்குப் பார்த்தார்கள்.

அந்த வீட்டில் கீழ்ப் பாகத்தே குறைந்தது எட்டுக் குடித்தனங்களாவது இருக்கும். மேலே இந்த மாடி அறை ஒன்றுதான்.

அந்த வீடு காலியாக இருக்கிறது என்று சொன்னவரே இந்த வீட்டில் குடியிருக்கும் தாயையும் மகளையும் பற்றிக் கூறினார். தாய் ரொம்பவும் சண்டைக்காரி என்றும், பெண் வள்ளி துடுக்குக்காரி மட்டுமன்றித்

திருடி என்றும் கூறினார். இதைக் கேட்ட முத்துசாமி சிரித்தான். 'யாராவது வேண்டாதவர் பட்டம் கட்டியிருப்பார்கள். திருடியென்றால் எழுதியா ஒட்டியிருக்கிறது அவள் முகத்தில்' என்று கேலியாகப் பேசினான். ஆனால், புகார் சொன்னவர் அசந்து விடவில்லை.

'அப்படியில்லை ஐயா, தொழில் திருடியல்லள். ஆனால், தொல்லைக் கொடுப்பதற்காக எதையாவது எடுத்து ஒளித்து விடுவாள். அது அவளுக்குப் பழக்கமா வியாதியா என்று தெரியவில்லை. அத்துடன் வயது வந்து பெண். நாம் நெருங்கிக் கண்டிக்கவும் முடியாது' என்றார் அவர்.

எப்படியோ குடி வந்தாகிவிட்டது. அவர்கள் இருக்கும் அறையின் ஜன்னல் இருந்து பார்த்தால் அந்த வீட்டுக் குடித்தனப் பெண்கள் தண்ணீருக்காகத் தவம் கிடப்பதைக் காணலாம். குடி வந்து இரண்டொரு தினங்கள் வள்ளி யார் என்றே முத்துசாமிக்குத் தெரியவில்லை. ஒருநாளை காலையில் குழாயடியில் சந்தடி கேட்டது. முகத்தைத் துடைத்துக் கொண்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். லோகநாதன் தூங்கிக் கொண்டிருந்தான்.

குழாயடியில் எல்லாரையும் விட அதிகமாகப் பேசும் அவள்தான் வள்ளியாக இருக்க வேண்டும் என்று முத்துசாமி முடிவு செய்து கொண்டான்.

இளவயது; பேரழகியாக இல்லாவினும், துறுதுறுப்பு இல்லையென்று கூற முடியாது. பேசிக் கொண்டே கண்ணைச் சுழலவிட்ட அவள் ஜன்னல் வழியாக முத்துசாமி கவனிப்பதைக் கண்டுவிட்டாள். அப்பொழுதுதான் அவளுக்கு மாடியில் புதுக்குடித்தனம் வந்திருப்பது நினைவுக்கு வந்தது.

சந்தடி ஒரு வழியாக அடங்கிக் குழாயின் சொட்டுதலும் நின்று விட்டவுடன் முத்துசாமி கண்ணாடி அருகே நின்று தலைவாரிக் கொண்டிருக்கையில், யாரோ மாடிப் படிக்கட்டேறி வரும் ஓசை கேட்டது. தொடர்ந்து கதவருகே யாரோ வந்து நிற்கும் நிழல் தெரிந்தது.

''வரலாமாங்க?'' என்ற குரல் கேட்டுத் திரும்பிய முத்துசாமிக்கு ஆச்சர்யம் அதிகம் தோன்றியதா இல்லையா என்று கூற முடியவில்லை. சிறிது நேரம் அவளையே விழுங்கி விடுபவன் போல பார்த்த அவன் சட்டென்று நிலையை வெளிக்காட்டாமல், ''என்ன வேண்டும்?'' என்று அதட்டும் குரலில் கேட்டான். குரல்தான் அதட்டல்! ஆனால், முகத் தோற்றமோ... இது வள்ளிக்கா தெரியாது!

''இந்த அறையைப் பூட்டியிருந்த பூட்டு வீட்டுக்காரருடையது. அதை வாங்கிப் போக வந்தேன்.''

அத்துடன் பழைய கூஜா இருந்தது. துடைப்பம்... தினம் அவர்கள் அந்த அறையைப் பெருக்கப் பயன்படுத்தி வந்தனர். அறையைப் பூட்ட அந்தப் பூட்டுதான் பயன்படுகிறது.

சரி கொடுத்து விடுவோம் என்று பூட்டையும் கூஜாவையும் கையில் எடுத்துக் கொண்டான். ''இந்தா'' என்று கூறி அவற்றைக் கொடுத்து விட்டான். மின் வெட்டைப் போன்று கணமும் தாமதிக்காமல் இறங்கிச் செல்லும் வள்ளியைக் கண் இமைக்காமல் முத்துசாமி பார்த்துக் கொண்டே இருந்தான். தன் நிலை தெளிவதற்குள் வள்ளி மீண்டும் திரும்பி வந்து, ''ஆமாம்... பூட்டையும் கூஜாவையும் கொடுத்து விட்டீங்களே... தண்ணிக்கு நீங்க என்ன செய்வீங்க?'' என்று கேட்ட வளுக்கு முத்துசாமி பதில் கூறியிருக்கலாம். ஆனால், ஏனோ கூறவில்லை.

லோகநாதன் விழித்துக் கொண்டு விட்டான். பூட்டும், கூஜாவுமாக நின்ற முத்துசாமியைப் பார்த்துக் கண்டித்தான். அந்தப் பெண்ணுடன் பேச்சுக் கொடுத்து மேலே வருமாறு பழக்கப்படுத்தினால் மிக்க ஆபத்துதான் என்று எச்சரித்தான். முத்துசாமிக்கு ஒரு சமயம் சரி எனப்பட்டது. மறுகணம் அவள் வருவதால் என்ன தவறு என்று தோன்றியது. அவனால்தன் மனத்தையே புரிந்து கொள்ள முடியவில்லை. அவளைப் பற்றி அபாண்டம் கூறியது சுத்த மடத்தனம் என்று முடிவு செய்தான். வள்ளி வருவதை அவன் தடுக்கவில்லை. மறுநாளைக்கு மறுநாள்... காலையில் எழும்போதே குழாயடியினின்று கூச்சல் கேட்டது. பெருத்த வாக்குவாதம் நடப்பதுபோல் காணப்பட்டது. வள்ளியின் குரலும், அவள் தாயின் உரத்த குரலும் கேட்டன. சிறிது நேரம் ஜன்னல ருகே நின்ற முத்துசாமிக்குக் கீழே நடக்கும் சண்டை யின் விவரம் புரிந்தது.

அந்த வீட்டு முன் அறையில் குடியிருக்கும் வள்ளியின் வயதொத்த பெண்ணின் ரவிக்கையைக் காணவில்லையாம். இரண்டு நாள் கழித்து அந்த ரவிக்கையை வள்ளி அணிந்திருப்பதை கண்டவுடன் அந்த வீட்டுக்காரி சண்டைக்கு வந்துவிட்டாள். வள்ளியோ மெத்தே மேலே குடிவந்திருக்கிற ஐயா வாங்கித் தந்ததாகத் தன் தாயிடம் கூறியிருக்கிறாள். தன் மகள் திருடிவிட்டாள் எனக் குடியிருப்பவள் குற்றம் சாட்டுவதைக் கேட்டதும் தாய்க்குக் கோபம் வந்து விட்டது. கூச்சல்... சண்டை! கூச்சலினிடையே மற்றொரு செய்தி முத்துசாமியின் காதில் வீழ்ந்ததும் அவன் ரொம்பவும் திடுக்கிட்டு விட்டான்.

''நான் ஒன்றும் திருடியில்லை. உங்க வீட்டுப் பெண்ணும் நானும் தான் அந்த மாடி வீட்டு ஐயாக்கிட்டே போய்ப் பேசிண்டிருப்போம். அந்த ஐயா தான் ரெண்டு பேருக்கும் இந்த மாதிரி ரவிக்கைத் துணி வாங்கித் தந்தார். ரெண்டு பேரும்தான் தைச்சுண்டோம். நான் போட்டுண்டி ருக்கேன். உங்க மகள் வித்துட்டாள்!'' என்றவுடன் அந்த இடத்துக் கூச்சல் பட்டென்று நின்றுவிட்டது. முன் அறைக்காரர்களுக்கு அவமானமாகப் போய்விட்டது. முத்துசாமிக்கோ கோபம் கோபமாய் வந்தது. வள்ளியின் அந்தக் கற்பனை அவனைத் திடுக்கிடச் செய்தது.

கீழே சந்தடி அடங்கிவிட்டது. லோகநாதன் வெளியே போய் விட்டான். குடித்தனக்காரப் பெண்ணின் தந்தை அவளுக்கு அடி உதை கொடுப்பதால் அவள் அழும் ஒலியும், அதைத் தொடர்ந்து யாரோ மாடிப்படி ஏறிவரும் ஓசையும் கேட்டன. வள்ளி கூஜாத் தண்ணீருடன் அங்கு வந்தாள். அவளை யாரும் தண்ணீர் கேட்கவில்லை. முத்துசாமி உடனே கீழே இறங்கு எனக் கட்டளையிடலாம் எனத் துடித்தான். ஏனோ கோபம் உடனே வரவில்லை.

ஆனால், அதற்குள் வள்ளி முந்திக் கொண்டு, ''ஐயா... ஐயா என்னை மன்னிச்சுடுங்க. கொஞ்ச நேரத்துக்கு முன்பு ஒரு பெரிய பொய் சொல்லிட்டேன். அதைச் சொல்லும்போது, அதனால் உங்களுக்கு எத்தனை அவமானம் என்பதை நினைக்கவில்லை. தயவுசெய்து என்னை மன்னிச்சுடுங்க'' என்றாள்.

முத்துசாமி ஒன்று'ம் பேசவில்லை. திருடி, வாயாடி, துடுக்குக்காரி... ஆனால், அவள் உள்ளம் மட்டும் ஏன் குழந்தை மாதிரி இருக்கிறது என எண்ணினான். பேசாமல் நடந்து போய் அறையின் மேஜை அருகே உட்கார்ந்தான். வள்ளி தொடர்ந்து வந்தாள்.

முத்துசாமிக்கு என்னென்னவோ பேசத் தோன்றியது. ஆனால், வெளிவந்த வார்த்தைகளோ கொஞ்சம்தான்... ''ஆமாம். இவ்வளவு தெளிவான புத்தி உடையவள் நீ. இப்படி ஏன் கள்ளிப்பட்டம் வாங்குகிறாய்? உன் அறிவை வேறு விதத்தில் பயன்படுத்தலாமே'' என்றான்.

வள்ளியின் கண்கள் கலங்கின. இதை எதிர்பார்த்தவள் போலவே அவள் மறுமொழி கூறத் தொடங்கினாள்: ''ஐயா! என்னை நீங்கக்கூட புரிஞ்சுக்கலை. 'திருடி திருடி' என்று என்னை எல்லாரும் சொல்வது தெரியும். இப்போ விவரம் தெரிஞ்சு நான் யார் வம்புக்கும் போகலை. திருடவும் இல்லை. என்னையும் ஊரு, உலகம் போல அம்மா நல்லா வளர்ந்திருந்தா இப்படி யாரும் சொல்ல மாட்டாங்க. எனக்கு விவரம்

தெரிஞ்சு இரண்டு வருஷத்துக்குள்ளேயே எங்கப்பா செத்துப் போயிட்டாரு. அவரு இருந்தும் ஒண்ணுதான். இறந்தும் ஒண்ணுதான். இருக்கற வரை அம்மாவைத் தொல்லை படுத்திண்டே இருந்தார். அப்பா செத்துட்ட பிறகு, அம்மா இங்கே வந்து சேர்ந்தாள். கஷ்டப்பட்டு சாப்பாட்டுக்கு வழி செய்வாள். என்னை எங்கே கவனிக்க முடியும் அவளுக்கு? இந்த வீட்டுக்கு நாங்க வர்றபோ எட்டணா வாடகை. இப்போ நாலு ரூபா. எப்படியோ நாங்க பட்டினி கிடந்தாவது வாடகையைக் கொடுத்துடுவோம். அதனாலே இந்த வீட்டு வாடகையை வாங்கிக் கொடுக்கற பொறுப்பை எங்களிடமே இந்த வீட்டுக்காரர் கொடுத்துட்டார். இது ரொம்ப பேருக்குப் பொறாமை. வாடகைச் சரியாக் கொடுக்க மாட்டாங்க. சண்டை, சச்சரவு. எங்கம்மா சண்டைக்காரின்னு பெயர் வாங்கிட்டா. எனக்கு வேளைக்குச் சரியா சாப்பாடு கிடைக்குமுன்னு சொல்ல முடியாது.

சின்ன வயசில் நான் பாட்டுக்கு விளையாடிண்டிருப்பேன். என்னையொத்த வயசுப் பெண்கள் ரிப்பனும், மாலையுமா போட்டுண்டிருக்கறப்போ நான் சும்மா பரட்டைத் தலையுடன் இருப்பது எனக்கே பிடிக்காது. அழுவேன்; ஆத்திரம் வரும். குழந்தைகளிடமிருந்து பிடுங்கிக் கொள்வேன். பிறகு வீசிப் போட்டுடுவேன். சில சிநேகிதக் குழந்தைகள் தன் ரிப்பனைக் கொடுக்கும். ஆசையோடு நான் வைத்துக் கொண்டு அழகுப் பார்ப்பேன். சிறிது நேரம் கழித்து அதன் அப்பாவாவது, அம்மாவாவது வந்து 'திருடி... என் பொண்ணு ரிப்பனைத் திருடினியா?'ன்னு அடிச்சுத் திட்டிப் பிடுங்கிண்டு போயிடுவாங்க. ரிப்பனுக்கு ரிப்பன் போச்சு... பட்டப் பெயரோ அழியாம சுமந்து விடும். இப்படியே வளர்ந்தேன். நாளு ஆக ஆக வயசு ஆக ஆகத் துடுக்குத்தனமும் வளர்ந்தது.

இரண்டு தினங்களுக்கு முன்பு ஆத்தங்கரையிலே இந்த வீட்டின் முன் வீட்டுக் குடித்தனக்காரப் பெண் குளிச்சிண்டிருந்தா. நான் சிறிது தள்ளி ஏதோ யோசனையுடன் செடி மறைவா நின்னுண்டிருந்தேன். அப்ப அவ ரவிக்கை ஆத்து தண்ணியிலே ஓடிவந்து கரையோரமா என் பக்கம் ஒதுங்கியது. எனக்கு இரண்டு நாளா பெரிய வருத்தம். என்னைப் போன்ற வயசுப் பொண்ணுங்க மானத்தை மறைக்க ரவிக்கை இல்லைன்னா என்னங்க பண்றது? கிழிஞ்ச ரவிக்கையை எப்படிப் போட்டுக் கொள்வது? அவள் என் வயதுதான். அவளிடம் ஏழெட்டு ரவிக்கையாவது இருக்கும். ஒருநாள் ஒண்ணே ஒண்ணு கேட்டேன். என்னைக் கேலி செய்தா. ஆத்தோட ரவிக்கை அடிச்சுண்டு போறது எனக்கு ரொம்பச் சந்தோஷமாத்தான் ஒருகணம் இருந்தது. மறுகணம்

மாறியது. நான் இருப்பது அவளுக்குத் தெரியாது. ஒரு குச்சியால் ரவிக்கையைக் கரைக்கிழுத்து எடுத்து வந்து விட்டேன். தோய்த்து உலர்த்தி நேற்றுதான் அணிந்தேன். என்னை அவள் திருடி என்கிறாள். நான் விவரத்தைச் சொல்லியிருக்கலாம். அவளை அவமானப்படுத்தவே கதை கட்டிக் கூறினேன். அதைக் கூறும்போது அது உங்களுக்கும் அவமானம் தானே என்பதை மறந்து விட்டேன். ஐயா, மன்னிச்சுடுங்க! உங்கக்கிட்டே என் எண்ணத்தையெல்லாம் சொல்லி ஒரு குரல் அழ வேண்டும் போலிருந்தது. என்னை வெட்கமில்லாதவள்னு நினைச்சுண்டாலும் பரவாயில்லை'' என்று வள்ளி கூறினாள். கண்ணீர் தாரை தாரையாக கண்களிலிருந்து வடிந்தது. அவள் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று முத்துசாமியின் கரங்கள் துடித்தன.

லோகநாதன் மாடிப் படியேறி வரும் ஓசை கேட்டது. வள்ளி அங்கிருந்து புறப்பட்டாள். மீண்டும் லோகநாதன் முத்துசாமியைக் கிண்டல் செய்தான்; எச்சரித்தான்; கோபித்தான்.

''வேண்டுமானால் பார்... உன்னிடமே அவள் தன் கைவரிசையைக் காட்டி விடுவாள். அவள் மீது பரிதாபப்படும் நீயும் பெருங்கோபம் கொள்வாய்''என்றான் லோகநாதன். அவன் சொல்லி முடித்து நான்கு நாள்கள் ஆகியிருக்கலாம். அன்று பகல் முத்துசாமி வெளியே போயிருக்கும்போது, லோகநாதன் அறையில் படுத்து உறங்குகையில் வள்ளி மெல்ல உள்ளே நுழைந்தாள். லோகநாதன் பாதித் திறந்த கண்களுடன் வள்ளி செய்வதைக் கவனித்தான். துணிவுடன் வள்ளி சட்டைப் பையில் கைபோட்டு பர்ஸை எடுத்தாள்.

முதல் நாள்தான் முத்துசாமி சம்பளம் வாங்கி இருக்கிறான். அப்படியே பர்ஸில் இருந்தது அது. லோகநாதனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. எத்தனையோ தடவை நாம் சொல்லியும் இவன் கேட்கவில்லை. இதோ முத்துசாமியிடமே தன் கைவரிசையைக் காட்டி விட்டாளே. இவளைச் சும்மா விடக்கூடாது. கையும் களவுமாகப் பிடித்துக் கொடுத்து விடுவோம் என எண்ணினான். அதே நிலையில் கையும் களவுமாகப் பிடித்தால், அவள் ஏகக் கூச்சல் போட்டு ஊரைக் கூப்பிட்டு இன்னும் வேறு அபாண்டம் சுமத்தி விட்டால் என்ன செய்வது என்று பயந்து லோகநாதன் சட்டென்று துள்ளி எழுந்தான். அறையின் கதவை வெளிப்பக்கம் தாளிட்டு விட்டு போலீஸ் ஸ்டேஷனை நோக்கி விரைந்தான்.

திரும்பி வரும்போது அவனுடன் இரு போலீஸ்காரர்கள் வந்தனர். அவன் வீட்டுப் படியேறுவதற்கும், முத்துசாமி வருவதற்கும் சரியாக இருந்தது.

லோகநாதனுக்குப் பெருமை தாங்கவில்லை. கையும் களவுமாக வள்ளியைப் பிடித்து விட்டோம் என்ற பெருமை!

போலீஸ்காரர்கள் மாடியேறுவதன் காரணம் முத்துசாமிக்கு ஒரு கணம் விளங்கவில்லை. அதிர்ச்சியுடன் நின்ற முத்துசாமியை நோக்கி, "ஏம்பா நிக்குறே. மாடியிலே உன் 'பெட்'டோட வண்டவாளம் தெரியப் போகிறது. ஐயோ முத்துசாமி!" என்று அவன் முதுகில் ஷொட்டுக் கொடுத்த வண்ணம் மாடியை அடைந்தான். முத்துசாமியும் படி ஏறி வந்தான்.

கதவைத் திறந்ததும் வள்ளி திகிலுடன் அங்கே நின்று கொண்டிருப் பதை எல்லாரும் கண்டனர். "இவள்தான் கைது செய்யுங்கள்" என்று கொக்கரித்தான் லோகநாதன்.

ஒரு விநாடியில் எல்லாவற்றையும் புரிந்து கொண்ட முத்துசாமி, சட்டென குறுக்கே புகுந்து, "ரொம்ப நல்ல வேடிக்கை. என்ன விபரீதம் செய்ய இருந்தாய் லோகநாதா! என் பர்ஸை எடுத்து வருமாறு நான்தான் வள்ளியிடம் கூறினேன். ஹோட்டலுக்குச் சாப்பிடப் போனேனா... டிக்கெட் புஸ்தகம் தீர்ந்து விட்டது அப்போதுதான் தெரிய வந்தது. பணம் எடுத்து' வரவில்லை. வள்ளி அந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தாள். அவளைக் கைதட்டிக் கூப்பிட்டு விவரம் கூறி பர்ஸை எடுத்து வருமாறு கட்டளையிட்டேன். நான் இப்போது வராமல் போயிருந்தால் இவளை ஜெயிலிலேயே தள்ளியிருப்பாய்ப் போலிருக் கிறதே" என்றான்.

லோகநாதன் அசந்து விட்டான். போலீஸ்காரர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு திருப்பி அனுப்பாமல் அவன் என்ன செய்ய முடியும்? அன்று மாலை அந்த இடமே வேண்டாம் என்று 'குட்பை' போட்டுக் காலி செய்து விட்டான். முத்துசாமியும் வெளியே சென்றிருந்தான்.

மறுநாள் காலை, முத்துசாமி பெட்டிப் படுக்கைகளைக் கட்டிக் கொண்டிருந்தான். படியேறி வந்த வள்ளி விநாடி திகைத்து நின்றாள்.

"எங்கே பயணம்?" என்றாள்.

பதிலில்லை. ரொம்பவும் படபடக்க, "என்னங்க... என் மேலே கோபமா? உங்களை நேத்துச் சாயங்காலமே பார்த்துப் பேசணும்னு அம்மாவும் நானும் நினைச்சோம்..."

"... ... ... ... ..."

"எத்தனை பெரிய ஆபத்திலிருந்து காப்பாத்தினீங்க. இனி என் ஜென்மத்துக்கு அதுமாதிரித் தப்பெண்ணம் நினைக்க மாட்டேன்.

'திடுட்டுத்தனம்' என்பதை மறந்திருந்தேன். ஆனால், விதி மாற்றி விட்டது. ஆறு மாசமா நாங்க வாடகையே கொடுக்கலை. கீழே குடித்தனக்காரங்களுக்கெல்லாம் எங்க மேலே விரோதம். இதான் சமயம்னு மற்ற குடித்தனக்காரர்கள் வீட்டுக்காரரிடம் ஒன்றுக்கு இரண்டா சொல்லியிருக்காங்க. அவர் நேற்று வந்து கத்திட்டுப் போயிட்டார். மறுநாள் பணம் தராவிடில் வீட்டை விட்டு விரட்டி விடுவதாகப் பயமுறுத்திட்டார். அம்மாவுக்குக் காய்ச்சல். நாங்க எங்கே போக முடியும்? உங்களைப் பணம் கேட்கணும்னு வந்தேன். கீழே யாராவது வந்துடப் போறாங்களோ என்கிற பயத்துல, நீங்க இல்லாதது தெரிஞ்சது அவசரமா பர்ஸை எடுக்கத் துணிஞ்சேன். ஐயோ... எத்தனை பெரிய பொய் சொல்லி என்னைக் காப்பாத்தினீங்க... ஐயா, ஐயா என்னை மன்னிச்சுடுங்க. இனிமே சத்தியமா திருட மாட்டேன். என் பொருட்டு வீட்டைக் காலி செய்யாதீங்க'' - வள்ளி, முத்துசாமியின் காலில் விழுந்தாள்.

முத்துசாமி சாவதானமாகத் திரும்பினான். ''நான் வேலையை ராஜினாமா செய்து விட்டேன். எங்கச் சொந்த ஊரிலேயே நல்ல வேலை கிடைச்சிடுத்து. போறேன்'' என்றான்.

வள்ளி விம்மிய வண்ணம் ''என்னாலா?'' என்றாள்.

''ஆமாம்... உன்னால்தான். கள்ளி, பெரிய திருடி, பக்காத் திருடி, உன்னால்தான்'' என்றான் முத்துசாமி அவளை நோக்கிய வண்ணம்.

திடுக்கிட்ட வள்ளியை நோக்கி முத்துசாமி மீண்டும், ''நீ கள்ளிதான். சந்தேகமே இல்லை. உன் உள்ளத்தை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டேன். என் இதயத்தையே நீ திருடிவிட்டாய் இல்லையா'' என்றான்.

சட்டென தலை நிமிர்ந்தாள் வள்ளி. இப்பொழுது அவள் கண்களினின்று தாரை தாரையாக நீர் பெருகியது. சட்டென்று அவள், அவன் மார்பின் மீது புதைந்து, ''ஐயா! என்னையும் உங்களுடனே அழைத்துப் போங்கள். உங்களைத் திருடிய பிறகு நான் இங்கே திருடுவதற்கு ஒன்றுமில்லையே'' என்றாள்.

அவள் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று முன்னமே துடிதுடித்த முத்துசாமியின் கரங்கள் ஈரமாயின.

● ● ● ●

# 84. கட்டாய தர்மம்

செல்வராஜன் மரத்தடியில் நின்று கொண்டிருந்தான். அவன் சிந்தனை எங்கெங்கோ விரிந்து கிடந்தது. சைக்கிள் ரிப்பேர் கடையில் சைக்கிளைக் காற்றடிப்பதற்காக நிறுத்தி விட்டு, பிளாட்பாரம் ஓரமாக வந்து நின்று கொண்டான். அவன் பையிலே ஓரணா நாணயம் கிடந்தது. எதிர்ப் பிளாட்பாரத்தில் கூடையிலே பூ வைத்துக் கொண்டு ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். அவளருகே பட்டாணி, வேர்க்கடலை வைத்திருக்கும் சிறு பெட்டி வண்டியிருந்தது.

'பூ வாங்கிச் செல்வோமே' என்று எண்ணினான் செல்வராஜன். வழக்கத்துக்கு விரோதமாக அன்று ஆபீஸ் ஹெட்கிளார்க் நான்கு மணிக்கே வீட்டிற்குச் சென்று விட்டார். செல்வராஜன் ஆபீஸ் கதவைச் சீக்கிரமாகவே இழுத்துப் பூட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டான். ஆபீஸ் பியூனாக அவன் வந்து நான்காண்டுகளுக்கு மேலாகிவிட்டன. தொழில் மாறுதல் இல்லையென்றாலும், பொறுப்பு பல சேர்ந்து அவனை முக்கியஸ்தனாக மாற்றி விட்டன. செல்வராஜன் சிந்தனை விரிந்தது.

''சாமி! தர்ம சாவுங்க...'' - கையிலே புதிய மண் தட்டு. அதிலே நான்கைந்து அரையணா, ஓரணா நாணயங்கள்.

செல்வராஜன் திரும்பிப் பார்த்தான். சிறுவன் ஒருவன் பக்கத்திலே யாரோ ஒருவரிடம் யாசித்துக் கொண்டிருந்தான்.

''தர்ம சாவு...'' - செல்வராஜனின் உதடுகள் முணுமுணுத்தன. சாவிலும் பல வகை இருக்கின்றனவா? ஏன் இல்லாமல்... அந்த ஆபீஸுக்கு அவன் வேலைக்கு வந்த புதிது. அந்த இருபது ரூபாய்ச் சம்பள வேலைக்கும் எத்தனை போட்டி!

ஒருநாளாவது அவனால் வீட்டிற்குச் சீக்கிரம் போக முடியாது. இரவு எட்டு, ஒன்பது என்றாகிவிடும். இப்பொழுதிருக்கும் அதே ஹெட்கிளார்க்தான். ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி நேரம் கடத்தி

விடுவார். கல்யாணமாகி அவனுக்கு அப்பொழுது இரண்டு வருடங்கள் ஆகியிருந்தன. நிறைமாத கர்ப்பிணியான அவன் மனைவி, தினமும் வாசல் வரையில் நடக்க முடியாது நடந்து வந்து, 'சீக்கிரம் வந்துடுங்க' என்று கூறும்பொழுது தலையசைத்து விட்டு டிராம் வண்டியில் ஏறினால்... அத்துடன் இரவு எட்டு மணிக்குத்தான் திரும்ப முடியும்.

தினமும் அவன் மனத்தில் பரபரப்பு தாங்காது. துணையாக இருந்தத் தன் சகோதரியை அழைத்திருக்கிறான். பழைய கதை ஏதாவது ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு சண்டைக்கு ஆரம்பம் செய்ய முயலுவாளே தவிர, உதவி ஏதும் செய்ய மாட்டாள். மனைவிக்கு நெருங்கிய உறவினர்களும் இல்லை. இதையெல்லாம் நினைக்கையில் கடவுள் விட்ட வழியென்று அவர் மீது பாரம் சுமத்தித் தினமும் காலையில் புறப்படுவதைத் தவிர வேறு வழியில்லை செல்வராஜனுக்கு.

அன்று ஆபீஸிலிருந்து வழக்கம்போல் புறப்பட நேரமாகி விட்டது. செல்வராஜனுக்கு மனசே சரியாக இல்லை. இந்த வேலைக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டால் என்ன என்று கூட எண்ணினான். ராயபுரம் போகும் கடைசி டிராமை ஓடிப் போய்ப் பிடித்து விட்டான். டிராமுக்கு அவன் அவசரம் எங்கே தெரியப் போகிறது! இவன் வீடு போய்ச் சேரும்போது இவன் வசிக்கும் போர்ஷனில் விளக்கே இல்லை.

குடித்தனக்காரர்கள் பரபரப்புடன் வந்தார்கள். அவர்கள் கூறிய செய்தியைக் கேட்டவுடன் செல்வராஜனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் மனைவிக்குத் திடீரென பிரவச வலி எடுத்ததாகவும், குடித்தனக் காரர்கள் ஆஸ்பத்திரியில் போய்ச் சேர்த்தும் பயனில்லை. 'குழந்தை இறந்து பிறந்தது; தாயும் இறந்தாள்' என்று அறிந்தபோது அவனுக்கு எப்படியிருக்கும். செல்வராஜனுக்கு விஷயத்தைக் கூற சென்றவன் அலுவலக விலாசம் தெரியாமல் வெறும் கையுடன் திரும்பினான்.

அத்தனை நேரத்துக்கு மேல் வந்த செல்வராஜனுக்கு வேதனை தாங்க முடியவில்லை. பறந்தோடினான் ஆஸ்பத்திரிக்கு. 'உறவினர்கள் யாரும் இல்லை' என்ற குறிப்புடன் தன் மனைவியின் பிரேதம் கிடத்தப்பட்டு இருப்பதைக் கண்டவுடன் துடிதுடித்துப் போனான். அநாதை போல் கடைசியில் கணவனையும் பார்க்க முடியாமல் அவள் போய்ச் சேர்ந்தாளே!

மனைவி இறந்த பிறகு செல்வராஜனால் ஆபீஸை விட முடிந்ததோ முடியவில்லையோ... டிராமில் செல்வதைத் தவிர்த்தான். சைக்கிள் வாங்கிக் கொண்டான். மறு வருடமே மற்றொரு கல்யாணம் நடந்தது. பழையபடிதான் ஆபீஸோ ஆபீஸ்!

அன்று வழக்கத்துக்கு விரோதமாகச் சீக்கிரம் புறப்பட்டு அந்த மரத்தடியில் நின்று கொண்டிருந்த செல்வராஜன் கண்ணிலே பூக்கடையும், அந்த வேர்க்கடலை வண்டியும்தான் உறுத்திக் கொண்டிருந்தன. சட்டைப் பையை துழாவிப் பார்த்தான். அந்த ஓரணாதான்..

'பூ வாங்கலாமா... மனைவிக்குப் பிடித்த வேர்க்கடலை வாங்கலாமா?' - அவன் சிந்தனை முடிவுறவில்லை.

'சாமி! தர்ம சாவுங்க' - அந்தச் சிறுவன் எதிரே வந்து நின்றான்.

''சாமி! தர்ம சாவுங்க... எதனாச்சும் காசு போடுங்க சாமி! நாலு பேரிடம் தர்மம் வாங்கித்தான் பொணம் எடுக்கணும்'' - அந்தப் பையனின் குரலில் உண்மைத் துயரத்தின் தழுதழுப்பிருந்தது. சிறிது தொலைவில் மரத்தடியில் ஓர் உடல் கிடந்தது. தலை முதல் கால் வரைப் போர்த்தப்பட்டிருந்தது. தலைமாட்டில் ஒரு செவ்வந்திப்பூ மாலை... எதிரே விரிக்கப்பட்டிருந்த துணியில் ஏழெட்டுக் காலணாக்கள்... ஊதுவத்தி புகைந்து கொண்டிருந்தது.

''ஏண்டா தர்ம சாவுங்கிறீயே... யாரும் மனுஷங்க இல்லையாடா?'' என்றான் செல்வராஜன் ரொம்பவும் கவலையுடன்.

''அதனுடைய புருஷன் ரிக்ஷா இழுக்கறவனுங்க. எங்கேயோ சவாரி... காலையிலே போனவரு. இதுவரையிலும் வரலை சாமி. அதுக்குள்ளே இது இப்படியாயிடுச்சு. அவர் வந்தாலும் இப்படி எதனாச்சும் தர்மம் வாங்கித்தாங்க எடுக்கணும். சாமி... மவராசங்களே... எதனாச்சும் போடுங்க சாமி...'' - அந்தச் சிறுவன் தட்டை நீட்டினான்.

செல்வராஜன் கையில் ஓரணா நாணயம்தான் இருந்தது. எதிரே பூக்கடையின் கவர்ச்சி; வேர்க்கடலையின் ருசி... இங்கோ ஓர் அநாதைப் பிணம்; அதற்கான தர்ம எண்ணம். அவன் உள்ளம் மாறி மாறிச் சிந்தித்தது. எதிர்ப் பிளாட்பாரம் நோக்கி மெல்ல நடந்தான்.

அந்தச் சிறுவனும் தட்டுடன் பின் தொடர்ந்தான். பூக்கடையில் பூ வாங்கிக் கொண்டு இளம் தம்பதியர் கலகலவென்ற சிரிப்புடன் சென்றது செல்வராஜனின் இதயத்தில் பாய்ந்தது.

இங்கே நடுத்தெருவில் நின்று கொண்டிருக்கிறோமே... சீக்கிரம் சென்றாலாவது தினமும் முகத்தைத் தூக்கிக் கொள்ளும் மனைவியின் கோபமாவது தணியுமே; அத்துடன் பூவையும் வாங்கிப் போனால்... செல்வராஜன் ஒரு முடிவுக்கு வந்தவன் போல் மறுபாதித் தெருவைக் கடந்தான். அந்தச் சிறுவனும் தொடர்ந்தான்.

செல்வராஜன் ஒரு கணம் யோசித்தான். வேகமாக வந்த காருக்காகச் சிறிது ஒதுங்கி நின்ற அவன் மனசு மாறியது.

பாவம்... அநாதைப் பிணம். நாம் கொடுக்கும் இந்த ஓரணா உதவி கடுகத்னையானாலும் காலத்தில் செய்த உதவியாச்சே என்று திரும்பினான்.

அந்தப் பையன் இவனை விடாமல் தொடர்ந்தான்.

செல்வராஜன் மறுபடியும் கேட்டான்: "தம்பி! அவ புருஷன் வந்த பொறவு தானே எடுப்பீங்க?" என்றான். ஏனோ அவனுக்கு ஆதங்கம்.

"உம்... அவ புருஷன் இன்னிக்கு வரானோ இல்லையோ... அதுவரை எப்படிக் காத்து கிடக்கறது? ஒங்களைப் போல தர்மவானுங்க யாருனாச்சும் கொடுத்தாங்கன்னா..." - சிறுவன் பேச்சை முடிக்க வில்லை.

செல்வராஜன் கையிலிருந்த காசை அந்தத் தட்டில் போட்டான். 'கிணிங்' என்ற ஓசையுடன் இதர நாணயங்களுடன் ஓரணாவும் சேர்ந்து கொண்டது. பரமதிருப்தி அவனுக்கு.

சைக்கிள் காற்றடிக்கப்பட்டுத் தயாராக இருந்தது. செல்வராஜன் நிறைந்த மனத்தோடு பெடலை மிதித்தான். சிறிது தொலைவு கூடப் போயிருக்க மாட்டான்.

'பட்'டென்று டயர் வெடித்தது. செல்வராஜன் இறங்கி விட்டான்.

சைக்கிளை வீட்டு வரையில் தள்ளிக் கொண்டு போவதா, மீண்டும் சைக்கிள் கடைக்கே போவதா என்று ஒரு கணம் யோசித்தான்.

மீண்டும் சைக்கிள் கடைக்கே வந்தான்.

இருட்டி விட்டது. தெரு விளக்கும் போடப்பட்டு விட்டது.

அந்தத் தர்ம சாவு அப்படியே அந்த மரத்தடியில் கிடந்தது. அதைப் பார்க்கப் பார்க்கப் பழைய சம்பவம் அவன் கண்முன் வந்தது.

அவன் முதல் மனைவி... அதுபோல்தானே யாருமே அருகே இல்லாமல்...

சே... அந்தத் துன்ப நினைவை மாற்றிக் கொள்ளக்கூடாதா...

'இந்த இடத்தை விட்டுச் சீக்கிரம் நகர வேண்டும்' என எண்ணினான்.

மழை பிசுபிசுவென்றுத் தூற ஆரம்பித்தது.

விளக்கு வெளிச்சத்தில் மழையின் பிசுபிசுப்புத் தெளிவாகத் தெரிந்தது.

''சைக்கிள் டியூப் பஞ்சருங்க... இருட்டிப் போச்சே... வண்டியை விட்டுட்டுப் போங்க. நாளை காலை சரி பண்ணித் தர்றேன்...'' என்றான் சைக்கிள் கடைக்காரன்.

செல்வராஜன் நினைவு அங்கில்லை.

மழை பலத்தது.

புதுச் சட்டியைத் தூக்கிக் கொண்டு 'தர்ம சாவு' என்று யாசித்துக் கொண்டிருந்த சிறுவன் தடதடவென்று ஓடினான்.

'ஐயோ பாவம்' என எண்ணினான் செல்வராஜன்.

'மழை வேறு பெய்ய ஆரம்பித்து விட்டது. அந்தப் பிணம் மழையில் நனைந்து வெயிலில்காய வேண்டுமா? ஐயோ என்ன உலகம்!' - அவன் தர்ம சிந்தனை குழம்பியது.

ஓடிய சிறுவன் மரத்தடியிலே கிடந்த 'தர்ம சாவு' பிணத்துக்கருகே விரிக்கப்பட்டிருந்த துணியிலிருந்து காசுகளை வேகமாகப் பொறுக்கினான்.

தர்ம சாவு - பிணம் எழுந்தது. உடம்பை ஒரு தடவை உதறிக் கொண்டது. முக்காடிட்டு ஓடியது. எதிரே இருந்த ஒரு சந்தில் புகுந்து மறைந்தது.

''டேய்... டேய்... என்னடா இது அநியாயம்!'' என்று தன்னையும் அறியாமல் கூவினான் செல்வராஜன்.

''அது அப்படித்தானுங்க... சாவும் இல்லை; பிணமும் இல்லை. எல்லாம் தர்மத்துக்குத்தானுங்க. மனுஷ மனம் இரக்கப்படுவதற்குக் காரணம் ஏதாவது உண்டாக்க வேண்டாமா? சாதாரணமாக என்றால் தர்மம் போட மாட்டார்கள். கட்டாயமாகப் போடுமாறு செய்ய இது ஒரு தந்திரங்க...'' என்றான் கடைக்காரன்.

செல்வராஜன் காதில் இது விழ்ந்ததோ இல்லையோ... அவன் தர்ம சாவு ஓடிய சந்தை வெறித்து நோக்கிப் பெருமூச்சு விட்டான்.

● ● ● ●

# 85. ஆசை வலை

அடுத்த கிராமத்துக்குக் கோழி கூவிய குரல் அந்த மங்கிய ஒளியில் ஒற்றையடிப் பாதை வழியாக நடந்து கொண்டிருந்த பிரபாகரன் காதில் விழாமலில்லை. அதிகாலையிலேயே அந்த ஊர் ஸ்டேஷனில் வந்து நின்ற ரயிலில் இறங்கி அவன் அரைமணி நேரம் நடந்தால்தான் ஊர் எல்லையை அடைய முடியும்.

மலைச்சாரல் ஊரானபடியால் இலேசாகக் குளிர் எடுத்தது. பனித் துளிகள் ஒற்றையடிப் பாதையின் ஓரத்தில் படர்ந்திருந்த கொடிகளின் மீதும் புல் மீதும் படிந்திருந்தன. விழிக்கலாமா, கூடாதா என்று பார்த்து விட்டுச் சிறகை அடித்துக் கொள்ளும் புள்ளினங்கள் ஏற்படுத்திய ஓசையும் மெல்லிய இளங்காற்றில் காட்டு மரங்களின் இலைகள் அசையும் ஓசையும் பிரபாகரனின் பூட்ஸ் ஒலிக்குச் சுருதி போடுவது போலிருந்தது.

கையில் வைத்திருந்த தோல் பையை அவன் இந்தக் கையிலிருந்து அந்தக் கைக்கு மாற்றிக் கொண்டான். அவன் நினைவு எங்கோ வட்டமிட்டவண்ணமிருந்தது. 'லீலா... அந்த சர்க்கஸ் கம்பெனியிலா இருக்கிறாள்!' - அவன் நினைவு எதையோ எட்டிப் பிடிக்க முற்படுவது போல் பின்னுக்குச் சென்றது.

ஆனைமலையை அடுத்த சிறு கிராமத்தில் அவன் பெற்றோர் வசித்த வீட்டிற்கு அடுத்த வீட்டில்தான் லீலாவின் பெற்றோர் வசித்து வந்தனர். மலை மண்ணைத் திருத்தி உழுது பயிர் செய்யும் இரண்டு உழவர்க் குடும்பங்களும் எத்தனையோ தலைமுறையாக ஒற்றுமையாகத்தான் வாழ்ந்து வந்தன. இன்பமும் துன்பமும் இரு குடும்பங்களுக்கும் சேர்ந்தே வந்தன. நிலத்தில் இரு குடும்பங்களுக்கும் வருவாய் ஒரே மாதிரிதான் இருந்தது. ஆனால், அந்தக் குடும்பத்துக்கு லீலா பெண்ணாய்ப் பிறந்ததும், இந்தக் குடும்பத்துக்குப் பிரபாகரன் அவதாரமும்தான் வித்தியாசம். பிரபாகரன் - லீலா இருவரும் வளர்ந்தார்கள்.

பிரபாகரன் சென்னைக்கும், லீலா பெங்களூருக்கும் படிக்கப் போய் விட்டனர். அந்தக் கல்லூரிப் படிப்பின் காலம்தான் எத்தனை இன்ப மயமானது. பிரபாகரனுக்கு எப்பொழுது நினைத்தாலும் அந்த நாள் புது மகிழ்ச்சியை அளிக்கத் தவறுவதில்லை. லீலாவின் பெங்களூர் அனுபவம் மட்டும் என்ன குறைவா? இருவரும் மணிக்கணக்காக பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொள்வர். ஆனால், பிஞ்சுப் பிராயப் பழக்க வழக்கங்கள் அப்படியே தொட முதிர்ந்த மனம் விடுவதில்லையே.

''பழனிக் கவுண்டா! வயசு வந்த பிள்ளையோடு உம் பையன் பேசறது நல்லா இல்லை. யானைப் பள்ளப் பாறை மீது இருவரும் உட்கார்ந்து சிரிச்சுப் பேசறாங்களாம்'' என்றான் சுப்பக் கவுண்டன்.

பழனி மௌனமாயிருந்தான். நரைத்துப் போன தன் மீசையைத் தடவி விட்டுக் கொண்டே சிறு கனைப்புக் கனைத்தான். ''என்ன நான் சொல்றது காதில் விழலையா?'' என்று தொடர்ந்து கேட்டான் சுப்பக் கவுண்டன்.

''அதுக்கு நாம என்ன செய்யலாம்? அது அவங்க இஷ்டம்'' என்று சாவதானமாகப் பதில் சொன்னான் பழனிக் கவுண்டன்.

சுப்பக் கவுண்டன் மறுத்தான். பழனி சிரித்தான். சுப்பக் கவுண்டன் கோபம் கொண்டான். பழனிக் கவுண்டன் மீண்டும் சிரித்தான். சுப்பக் கவுண்டன் தன் பிடிவாதப் பேச்சை அழுத்தி வற்புறுத்தினான். பழனிக் கவுண்டன் 'ஹா ஹா ஹா'வெனக் குலுங்கக் குலுங்கச் சிரித்தான்.

பழனிக் கவுண்டன் சிரிப்பு வலுத்தது. பின் அடங்கியது. கடைசியாகக் கூறினான்: ''சுப்பா! நீயும் நானும் போன தலைமுறை. நம் குழந்தைகள் அதோ ஆகாசத்துலே திரியுமே அந்த பறவைகள் மாதிரி. குழந்தையல்லர் நம் செல்வங்கள். உன் மகளோடு எம் பையன் பேசுவது தவறன்று சுப்பா! உன் மகள் வேற்று மனுஷனோடயா பேசினாள்?'' என்று கூறவும் சுப்பக் கவுண்டனுக்கு ஆத்திரம் அதிகமாகியது. குபீரென எழுந்து அந்த இடத்தை விட்டுச் சென்றான்.

இரண்டு நாள் கழித்துக் குடும்பத்துடன் அவர்கள் வேறு ஊருக்குப் போய் விட்டனர். எங்கே போனான்; ஏன் போனான் என்று பழனிக் கவுண்டன் விசாரிக்கவில்லை. லீலா சொல்லிக் கொள்ளாமல் போனது பிரபாகரனுக்கு ஆச்சர்யமாயிருந்தது.

'காதல்... காதல்' என்கிறார்களே... அந்த இனம் புரியா அனுபவம் அப்பொழுது அவர்களிடையே ஏற்பட்டிருக்கவில்லை. அவனைக் கண்டால் அவளுக்குப் பிடித்தது. அவளைக் கண்டால் அவனுக்குப்

பிடித்தது. அவ்வளவுதான். எனினும் பிரபாகரனுக்கு மட்டும் ஏதோ தன்னை விட்டுப் பிரிந்திருப்பது போன்ற ஓர் உணர்வு. ஆனால், அந்த உணர்ச்சியின் நினைவு மறைந்து கொண்டே வந்தது. பிரபாகரன் பட்டணம் போய் விட்டான்.

அவன் காலேஜில் மேல் படிப்புப் படிக்கும் சமயம் அவன் பெற்றோர் பிளேக் நோயால் மாண்டார்கள். மேலே படிக்க வேண்டும் எனும் எண்ணத்தை மறந்தான். மருந்துக் கம்பெனியொன்றில் ஆர்டர் சேகரிப்பவனாக வேலைக்கு அமர்ந்தான். பெரிய பட்டணம் முதல் சிறிய குக்கிராமம் வரை ஒவ்வோர் இடமாக விஜயம் செய்தான். பல ஜில்லா மக்களோடு பழகும் சந்தர்ப்பம் அவனுக்குக் கிடைத்தது. தனியாக ஹோட்டலில் தங்கும்போது நெறி தவறி வழுக்கி விழுவதற்கான வாய்ப்புகள் கிடைத்தன. அதனால் ஏற்பட்ட சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொள்ளவில்லை அவன்.

அவனுக்கு லீலாவின் அழகிய தோற்றம் சில சமயம் கண்முன் வந்து நிற்கும். இளம் வயதில் இதயத்தில் புகுந்த அவளை, அவன் அடிக்கடி நினைவில் கொண்டு வராமல் போனாலும் எப்பொழுதாவது அவன் ஆசை வலை விரியும்போது அதிலே அவள் நினைவு முகம் சிக்காமல் இருப்பதில்லை.

மருந்துக் கம்பெனியில் ஆர்டர் சேகரிக்கும் வகையில் அவன் காடாம் புதூருக்கு வந்திருந்தபோதுதான் அந்த சர்க்கஸைக் காண நேரிட்டது. பொழுதைக் கழிக்க ஒன்றே கால் ரூபாய் டிக்கெட் வாங்கிக் கொண்டு கூடாரத்துக்குள் நுழைந்தான்.

மலையடிவாரத்திற்கும் காட்டிற்கும் அருகாமையிலுள்ள அந்தச் சுற்று வட்டாரக் கிராமத்து ஜனங்கள் காலரி டிக்கெட்டுக்கு மேல் வாங்க முடியாதவர்கள். பிரபாகரன் மட்டும் நாற்காலி டிக்கெட்டில் கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தான். நாடகம், சினிமா போன்ற தன்று சர்க்கஸ். 'நடிப்பு' அதில் செல்லாது. கண்கூடான திறமை தான் பரிமளிக்கும். மிருகமும் மனிதனும் கூட்டுறவுடன் தங்கள் திறமையைக் காட்டும் வாய்ப்பு அங்கேதான்.

அந்த சர்க்கஸ் கம்பெனியின் கோஷ்டிப் பெண்கள் பலவித 'பார்' வேலைகளைச் செய்தனர். அதற்குத் தலைமையாயிருந்து அபூர்வ செயல்களைப் புரிந்த பெண் பிரபாகரனின் கவனத்தைக் கவர்ந்தாள். ஒருமுறை, இருமுறை, மும்முறை அவள் சர்க்கஸ் வட்டத்தைச் சுற்றிக் குதிரை மீது சவாரி செய்து கையைக் குலுக்கி வந்தாள். அவளும் பிரபாகரனைக் கவனித்திருக்க வேண்டும்.

சர்க்கஸ் முடிந்த பிறகு பிரபாகரன் ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தான். அப்பொழுது பத்து மணிக்கு வரும் ரயிலில் ஏறி விட்டால் பத்தரைக்கெல்லாம் அவன் தங்கியிருக்கும் இடத்திற்குப் போய் விடலாம்.

அன்று இரவெல்லாம் சிந்தனையிலேயே கழித்தன. லீலா தான் அந்த சர்க்கஸ் பெண் என்று முடிவு கட்ட அவனுக்கு வெகு நேரம் பிடித்தது. லீலாவாக இருந்தால் போய்ச் சந்தித்து நேரே விடக் கூடாது என எண்ணினான். மீண்டும் காலை நாலரை மணிக்கு வண்டி. அதில் ஏறி அதிகாலையில் அந்த ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி சர்க்கஸ் கூடாரத்தை நோக்கி நடந்தான். அந்த இளங்காலை வேளையில் உலகத்தின் துயில் திரை நீங்கும் தருணத்தில் சர்க்கஸ் கூடாரம் அமைதி யாக இருந்தது. கூடாரத்தில் யானைகள் கம்பீரமாக துதிக்கையை அசைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தன. கூண்டுப் புலியும் ஒரு மூலையில் சுருட்டிக் கொண்டு கிடந்தது. குதிரைகள் எப்பொழுதுதான் உறங்குமோ? நின்றவாறு அலைப் புல்லைச் சுவைத்த வண்ணமிருந்தன.

கையில் தோல் பையுடன்... சர்க்கஸ் காம்பவுண்டிற்குள் நுழைந்த பிரபாகரனுக்கு ஏன் வந்தோம், எதற்கு வந்தோம் என்பதே புரியவில்லை. யாராவது கேட்டால் என்ன சொல்வது, என்ன சொல்வதென்ன... 'யானைப் பாதத்துக்கு மருந்து, குதிரைப் புண்ணுக்குத் தைலம், உடம்பு வலிக்கு இன்ஜக்ஷன்' என்று மருந்து விற்பனையைத் தொடங்கினால் போச்சு..!

கூடாரத்துக் கேட்டுக்குள் நுழைந்து பத்தடி கூடப் போயிருக்க மாட்டான். யாரோ குதிரைக் கொட்டகையினின்று வரும் காலடி அரவம் கேட்டது. அது... அவள்... அவள்தான் லீலா!

பிரபாகரனுக்கு இப்பொழுது தெளிவாக விளங்கி விட்டது. அதே லீலாதான்! ஆனால், முன்பை விட இப்பொழுது வெகுவாக மாறிப் போயிருந்தாள். கடினமான வித்தைகளை வெகு சுலபமாகச் செய்ய வேண்டி நேர்ந்ததால் அவள் உடலமைப்பில் சிறிது முரட்டுத்தனம் சேர்ந்திருந்தது.

பிரபாகரன் ஸ்தம்பித்து நிற்பதைக் கண்ட லீலா திடுக்கிடவில்லை. ஆழ்கடலின் தெளிவு அவளிடம் அச்சமயம் இருந்தது. கொந்தளிக்காத... ஆனால், மோதல் மிக்க மன எழுச்சியுடன் அவள் உதடுகள் புன்னகையைப் பூத்தன. இமை இரண்டும் விழியைப் பாதுகாக்க மறுத்து விட்டன. விசாலமான முதல் கேள்வியும் ஆச்சர்யமும் நிறைந்த சுருக்கங்களால் உயர்ந்தன.

ஒருவருக்கொருவர் நல விசாரிப்புகள் நடந்தது. லீலா, பிரபாகரனை அங்கேயே நிற்க விடவில்லை. அழைத்துக் கொண்டு மலைச்சாரலை ஒட்டிய சர்க்கஸ் கொட்டகையின் பின் பக்கத்துக்குப் போனாள். அங்கு ஒரு மேடையில் இருவரும் அமர்ந்தனர்.

நீண்ட நாள்களுக்குப் பிறகு இருவரும் வெவ்வேறு கோலத்தில் சந்தித்ததால் என்ன பேசுவதென்றே இருவருக்கும் புரியவில்லை. பிரபாகரன்தான் முதலில் பேசினான். காலேஜை விட்ட பிறகு பெற்றோர் இறந்து விட்டதையும், மருந்துக் கம்பெனியில் சேர்ந்ததையும், நேற்று சர்க்கஸ் ஆட்டத்தில் அவளை - லீலாவைக் - கண்டது வரையில் கூறினான். லீலாவுக்குப் பேசத் துணிவு வந்து விட்டது.

''பிரபாகர்! நீங்களும் நானும் சந்திக்கக்கூடாது என்று என் தந்தை தடை விதித்த உடனே குடும்பத்துடன் கிளம்பி விட்டோமில்லையா? முன் பின் பழக்கமில்லாத குக்கிராமத்தில் வந்து நாங்கள் தங்கினோம். அந்தக் கிராமத்துக்கு அருகே எங்களுக்குக் கொஞ்சம் நிலம் இருந்தது. அப்பாவே உழுதுப் பயிரிடத் தொடங்கினார்.

இன்டர் பரீட்சையின் முடிவு எனக்குத் தெரிந்தது. மேலே படிக்க அப்பாவைத் தொந்தரவு செய்தேன். அவர் சம்மதிக்கவில்லை. அந்தக் கிராமத்தில் ஒரு நாள் கழிவது ஒரு யுகம் கழிவது போலிருக்கும். உங்களுக்குக் கடிதம் போடலாம் என்று ஒவ்வொரு சமயம் தோன்றும். ஆனால், அந்தப் பொட்டல் காட்டில் கார்டு, கவரை எங்குத் தேட? நாள்கள் ஓடின. என் இதயபீடத்தை விட்டு உங்கள் இன்ப உருவை நான் எடுக்கவில்லை.

ஒரு நாள் நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த அப்பாவின் மீது அடுத்த காட்டினின்று வந்த சிறுத்தைப் புலி தாக்கியது. வயதானாலும் உடல் வலிமை குன்றாத தந்தை அதனோடு எதிர்த்துப் போராடி விரட்டினார். ஆனால், அவர் உடலில் ஏற்பட்ட காயங்களால் அவர் படுத்த படுக்கையாகிக் கண்ணை மூடி விட்டார்.

அம்மாவும் நானும் தான் அங்கு. எனக்கு அந்தக் கிராம வாசமே பிடிக்கவில்லை. அப்பாவைப் புலி கொன்றது என்ற உடனேயே எனக்கு இந்தத் துண்டு விலங்குகள் மீது அசாத்தியக் கோபம். நான் சர்க்கஸ் கம்பெனியில் சேர அதனால்தான் சந்தர்ப்பம் ஏற்பட்டது. நான் நாட்டியம் பயின்றவள். உடல் வனப்பமுடனிருந்த என்னை சர்க்கஸ் கம்பெனி சொந்தக்காரருக்குப் பிடித்தது. சர்க்கஸ்களில் சில கோஷ்டிப் பெண்களுக்கு நடனம் பழக்கித் தர நான் நியமிக்கப்பட்டேன். ஒவ்வொரு ஊராகக் கம்பெனி பிரயாணம் செய்தது. சர்க்கஸில்

கேளிக்கைகளும் வேடிக்கைகளும் பார்க்க வருபவர்களின் முகங்களும் ஆரவாரமும் எனக்கு ஆனந்தத்தை அளித்தன.

ஆனால், எந்நேரமும் களிப்பில் மூழ்கியிருக்க விடாதபடி தொல்லைக் கொடுத்தான் சர்க்கஸ் மானேஜர். அவன் மூஞ்சியையும் முகரக் கட்டையையும் எனக்குப் பிடிக்கவில்லை. சர்க்கஸ் கம்பெனியில் இருப்பவர்கள் எல்லாருடனும் நான் சிரித்துப் பழகுவதைக் கண்டு அவன் என்னைத் தவறாக எண்ணி விட்டான்.

கம்பெனியின் மானேஜராச்சே என்று நான் அவனுடைய முறைகேடான பேச்சுக்கும் தவறான நடத்தைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்தேன். இருந்தும் வருகிறேன். இதோ நீங்கள் வந்திருக்கிறீர்கள்...'' என்று லீலா ஒரே மூச்சில் நடந்தவற்றை கூறி முடித்தாள்.

பிரபாகரன் அவளருகே சற்று நெருங்கியமர்ந்தான். ஏதோ பேச வாயெடுத்தான். அதற்குள் யானையின் பிளிறலும், சிங்கத்தின் கர்ஜனையும் கேட்கவே லீலா பரபரப்புடன் எழுந்து, ''அதோ அந்தக் குரங்கு மானேஜர் வருகிறார். சர்க்கஸ் கம்பெனியில் இருப்பவர்கள் வெளியாட்கள் எவருடனும் பழக்கம் கொள்ளக்கூடாது என்பது கடுமையான உத்தரவு. தயவுசெய்து போய் விடுங்கள். பிறகு சந்திக்கலாம்'' என்று கூறி வேகமாகப் போய்விட்டாள்.

பிரபாகரன் மெல்ல எழுந்து மீண்டும் ஒற்றையடிப் பாதையை நோக்கி நடக்கலானான்.

**மீ**ண்டும் மீண்டும் பிரபாகரனும் லீலாவும் சந்தித்தார்கள்.

''நான் உங்களைச் சந்திப்பதை அந்த மானேஜர் குரங்கு எப்படியோ தெரிந்து கொண்டு கண்டித்தது. பயமுறுத்துகிறது'' என்றாள் லீலா முகத்தைச் சிணுங்கியவண்ணம்.

''என்ன கண்டித்தான்? உன் கார்டியனா அவன்? பயமுறுத்துகிறானா? உன்னையும் அவன் சர்க்கஸ் மிருகங்கள் என்று எண்ணி விட்டானா? என்ன செய்கிறேன் பார் அவனை!'' என்று குதித்தான் பிரபாகரன்.

லீலா பொறுமையுடன், ''நாம் ஒன்றும் செய்வதற்கில்லை பிரபாகர். நான் ஓர் ஒப்பந்தம் கையெழுத்திட்டிருக்கிறேன். அதன்படி மூன்று வருடங்கள் பூர்த்தியாகும் வரை சர்க்கஸ் கம்பெனியை விட்டு விலகுவதற்கில்லை.''

''மூன்று வருடங்களா? இப்பொழுது எத்தனையாகியிருக்கிறது?''

“இரண்டு வருடமும் முந்நூற்றிருபது நாள்களும்.”

“இன்னும் கொஞ்ச நாள்கள்தாமே...”

“அதைத்தான் நானும் சொல்கிறேன். இன்னும் கொஞ்சம் நாள்களுக்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது என்று.”

“அதற்காக அவன் இஷ்டப்படி நடக்கவிட முடியுமா?”

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. இருவரும் எழுந்து நின்றனர். மானேஜர் வேட்டை நாய் ஒன்றை அருமையாகத் தடவி விட்ட வண்ணம் பிரபாகரனைப் பாராத வண்ணமாகவே, “லீலா... இப்படி ‘ரெஸ்ட்’ எடுத்துக் கொள்ளும் வேளையில் உடம்புக்குத் தொல்லைக் கொடுத்துக் கொண்டிருந்தால் ‘பிளே’யில் கஷ்டம்தான்... ஹூம்...” என்று கூறி விட்டு நகர்ந்து கொண்டேயிருந்தான்.

பிரபாகரன் உதட்டைக் கடித்தான்.

மீதி நாள்களும் எப்படிக் கழியும் ஒப்பந்தம் முடிந்தவுடன் எப்படி அந்த இடத்தை விட்டு நழுவி விடலாம் என்று பிரபாகரனும் லீலாவும் திட்டமிட்ட வண்ணமிருந்தனர்.

ஒரு வாரத்திற்கு முன்பு பிரபாகரன் லீலாவைத் தேடி சர்க்கஸ் கூடாரத்தின் வேலியின் பக்கமாக வர முயன்றான். கதவு தாளிடப் பட்டிருந்தது.

வேலியைத் தாண்டிக் குதித்தபோது பயங்கரமான முனகல் சப்தம் வந்து கொண்டிருந்ததைக் கண்டான். யானைகள் கட்டப்பட்டிருந்த இடத்தருகே யானையொன்றின் பாதத்தின் கீழ் சர்க்கஸ் கம்பெனி மானேஜர் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்தான். இரவு சர்க்கஸில் காட்டும் புதிய வித்தைக்காகப் பழகிக் கொண்டிருக்கையில் அவன் மார்பின் மீது வைத்த காலை யானை எடுக்கவே இல்லை.

பிரபாகரன் திடுதிடுவென ஓடினான். யானையின் பின்புறமாகப் போய் அருகே இருந்த அங்குசத்தால் குத்தினான். யானை பிரம்மாண்ட மாகப் பிளிறியது. காலைத் தூக்கித் திருப்பித் துதிக்கையை வேகமாக அசைத்துப் பிரபாகரன் பக்கமாகப் பாய்ந்தது. பிரபாகரன் வெகு லாகவமாகத் தப்பி வேலியைத் தாண்டி ஓடிவிட்டான். யானை பிரபாகரன் பக்கம் திரும்பியவுடன் மானேஜர் அதன் காலடியினின்று ஒரு கணத்தில் விடுபட்டுக் காலுடன் பிணைக்கப்பட்டிருந்த சங்கிலியை விநாடியில் கம்பத்தில் கட்டிவிட்டான்.

மறுநாள் பிரபாகரனும் லீலாவும் அங்கிருந்து சொல்லாமல் கிளம்பி விடுவதாகத் திட்டமிட்டிருந்தனர். லீலாவுக்கு இப்பொழுது தைரியம் ததும்பி நின்றது. சாலை மார்க்கமாகப் போனால் சர்க்கஸ் ஆட்களும் இதரர்களும் பார்த்துவிட்டால் காரியம் கெட்டுவிடும் என்றெண்ணிய அவர்கள் காட்டின் குறுக்குப் பாதை வழியாகச் செல்லத் திட்டமிட்டு இருந்தனர்.

பொழுது புலரா முன்னம் பிரபாகரனும் லீலாவும் ஒற்றையடிப் பாதை வழியாக விரைந்தனர். சிறிது தொலைவு சென்றவுடன் ஒற்றையடிப் பாதை முடிந்தது. அடர்ந்த புதர்கள் இருந்தன. வழி தெரியவில்லை. அந்தச் சமயம் பின்னால் குதிரைக் காலடிச் சப்தம் கேட்டது.

''லீலா... வா, வா விரைந்து செல்வோம்'' என்று லீலாவின் கரங்களைப் பற்றி இழுத்து இரண்டடி வைத்த பிரபாகரன் காலில் ஏதோ சிக்கியது. ஒரு காலை எடுக்க முயன்றவுடன் மற்றொரு காலும் சிக்கிக் கொண்டது. கீழே வலை விரிக்கப்பட்டு அதன் மேல் தழைகள் பரப்பப்பட்டிருந்தன.

லீலா பதறினாள், ''ஐயோ! என்ன... என்னாச்சு... யாரோ வலை விரித்து வைத்திருக்கிறார்கள். பார்க்காது சிக்கிக் கொண்டோமே. குதிரை வரும் ஓசை கேட்கிறதே. ஒருவேளை அந்தச் சர்க்கஸ் கம்பெனி மானேஜராக இருந்தால் நமது ஆசை வலை அறுந்து விடுமே'' என்று கதறினாள். பிரபாகரன் எழ முயன்றும் முடியவில்லை.

இவர்கள் எதிர்பார்த்தபடி குதிரையில் சர்க்கஸ் மானேஜர் வந்திறங்கினான். அவன் முகத்தில் குறும்புத்தனம் துடித்தது. லீலாவை அவன் நெருங்கிக் காதோடு ஏதோ கூறவும் லீலா வெகுண்டு, ''பாதகனே! இனி ஒன்றும் என்னைச் செய்ய முடியாது. நேற்றுடன் உன் வேலை 'ஒப்பந்தம்' முடிந்து விட்டது. என் இதயத்தில் பிரபாகரன் ஒருவருக்குத்தான் இடமுண்டு. உன் மோக வலையில் என்னால் சிக்க முடியாது'' என்று கர்ஜித்தாள்.

சர்க்கஸ் மானேஜர் கேலிச் சிரிப்புடன், ''ஐயோ பெண்ணே! கணக்கைத் தவறாகப் போட்டு நேற்றுடனேயே முடிந்து விட்டதாக முடிவு செய்தாய். இந்த வருஷம் பிப்ரவரி மாதத்துக்கு இருபத்தெட்டு நாள்கள்... ஞாபகமிருக்கட்டும். நாளை மறுநாளுடன்தான் உன் ஒப்பந்தம் முடிகிறது. அதுவரை ஒப்பந்தத்தை மீற முடியாது. இவ்வளவு காலம் ஒழுங்காக நடந்த நீ கடைசியில் சிக்கலில் ஈடுபட வேண்டுமா?'' என்றான்.

லீலா சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். பிரபாகரனைத் திரும்பிப் பார்த்தாள். பிறகு அமைதியாக "சர்க்கஸ் கம்பெனிக்கும் சர்க்கஸ்காரி லீலாவுக்கும்ஒப்பந்தமேயொழியசர்க்கஸ்மானேஜருக்கும்பிரபாகரனின் காதலி லீலாவுக்கும் ஒப்பந்தமல்ல; நீ உன் துர் எண்ணத்தை என்னிடம் காட்ட முயல்கிறாய். அது பலிக்காது. இதோ பார்" என்று இடுப்பிலே பளபளத்த பிச்சுவாளை எடுத்தாள்.

சர்க்கஸ் மானேஜர் அசந்து விடவில்லை. "அவசரம் அனைத்தும் நாசம். பேசாமல் என்னைப் பின் தொடர்" என்று கூறிக் கையைத் தட்டினான். சர்க்கஸ் சேவகர்கள் தயாராக வந்து நின்றனர். குனிந்த தலையுடன் லீலா பின் தொடர்ந்தாள்.

பிரபாகரன் காலை எடுக்க முடியாமலும் பதில் பேச முடியாமலும் தவித்தான். பிரபாகரன் இருக்குமிடத்துக்கு காபி, பலகாரம் வந்தது. அதை வீசி எறிந்தான். எவ்வளவு நேரம் அப்படியே இருந்தானோ கண்ணைத் தூக்கமும் பசி மயக்கமும் அழுத்த அப்படியே வலையில் சிக்கித் துவண்ட பிராணி போல் செடி, கொடி மீது விழுந்தான்.

பகல் மூன்று மணிக்குத்தான் வலையில் கிடப்பதற்குப் பதிலாகக் கூடாரத்துக் கயிற்றுக் கட்டிலில் கிடப்பதை உணர்ந்தான். சர்க்கஸ் பேண்டின் முழக்கம் சர்க்கஸ் கூடாரத்துக்குள் கேட்டது.

சர்க்கஸ் கம்பெனி வேலையாட்கள் ஏதோ பேசிக் கொண்டது கனவு போலிருந்தது. உடலில் உண்டான புது பலத்தால் உந்தப்பட்ட பிரபாகரன் துள்ளி எழுந்தான். மானேஜர் அறையை நோக்கி விரைந்தான்.

கூடாரத்தில் தனது அறையில் மானேஜர் உட்கார்ந்து ஏதோ கட்டளை யிட்டுக் கொண்டிருந்தான். அன்று மாலையே சர்க்கஸ் கம்பெனியை அவ்வூரை விட்டுப் புறப்பட முயல்கிறான் என்றும் கல்யாணம் அடுத்த வாரம் என்றும் அதற்காக சர்க்கஸ் கம்பெனி ஊழியர்களுக்குப் பகல் விருந்து என்னும் பேச்சு காதில் விழவே பிரபாகரன் ஆவேசத்துடன் பாய்ந்தான்.

மானேஜர் சட்டையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி, "என்னிடம் உன் வாலாட்டம் வேண்டாம். ஒரு யுவதியைத் துன்பப்படுத்த முயன்றாய் என்று இப்பொழுதே போலீஸில் புகார் செய்து விடுவேன். லீலாவை இந்த ஜன்மத்தில் நீ அடைய முடியும் என எண்ணாதே. அவள் எனக்காகப் பிறந்தவள். யானையின் பாதத்தினின்று உன்னை நான் மீட்டிராவிடில் நீ இங்கிருப்பது ஏது... ஜாக்கிரதை!" என்று கர்ஜித்தான். இதற்குள் சர்க்கஸ் ஆட்கள் அங்குக் கூடி விட்டனர்.

பிரபாகரனை இருவர் பலவந்தமாக இழுத்துச் சென்றனர்.

சிறிது நேரத்தில் தன் இடத்தில் குனிந்த தலையுடன் யோசனை செய்து கொண்டிருந்தான் பிரபாகரன். சர்க்கஸ் பேண்டின் இசை முழக்கம் கேட்டது. யாரோ தன் எதிரே நிற்பதை உணர்ந்து தலைநிமிர்ந்த பிரபாகரன், மானேஜர் புன்முறுவலுடன் இருப்பதைக் கண்டான்.

''மிஸ்டர் பிரபாகர்! என் மீது நீங்கள் கோபப்பட்டதை அறிவேன். ஆனால், யானையின் பாதத்தினின்று என்னைத் தப்பிக்க வைத்து உயிரைக் கொடுத்த உங்களுடைய ஆசை வலையை அறுந்து போகச் செய்வேனா?

உங்களுக்கும் லீலாவுக்கும் காதல் என்பது எனக்குப் பொறாமையை விளைவித்தது உண்மைதான். நீங்கள் தப்பியோடத் திட்டமிட்டிருந்த தையும் அறிந்தே வலையை விரித்துச் சிக்க வைக்க முயன்றேன். யானையின் காலடியிலிருந்து என்னை நீங்கள் காப்பாற்றியதை நினைத்தேன். அந்தச் சமயம் நீங்கள் என்னைக் காப்பாற்றாமல் இருந்தால்? நசுங்கிச் செத்திருப்பேன். என் மனம் மாறியது. நான்விரித்த வலையை எடுப்பதற்கு முன்பே நீங்கள் வலையில் சிக்கி விட்டீர்கள்.

லீலாவை உங்களுடன் சேர்த்து வைக்க முயன்றேன். தக்க விருந்துபசாரங்களுடன் உங்களைக் கௌரவிக்க ஏற்பாடு செய்தேன். லீலாவிடம் நான் நடந்து கொண்ட முறைக்குப் பிராயசித்தமாக இந்த ஏற்பாடுகளைச் செய்யக் காலையில் திட்டமிட்டேன். தவறாக நினைத்து விட்டீர்கள்.

எழுந்திருங்கள்... அதோ பேண்டு வாத்தியம் முழங்குகிறது. லீலா உங்கள் வரவுக்குக் காத்திருக்கிறாள்'' என்றான்.

பிரபாகரனுக்கு இது கனவா, நனவா என்று புரியவில்லை. புன் முறுவலுடன் லீலா அங்கு வந்து நின்றாள்.

எப்படியோ தன் எண்ணம் நிறைவேறியது.

சர்க்கஸ் மானேஜர் விரித்த வலையில் சிக்காவிட்டாலும் காதல் வலையில் அவன் சிக்கி விட்டானே!

● ● ● ●

# 86. சங்குத்தேவனின் புனர்ஜென்மம்

வண்டி மெல்ல அசைந்தாடிய வண்ணம் சென்று கொண்டிருந்தது. வண்டிக்காரன் ஏதோ ஒரு பாட்டை அவனுக்கே உரிய அலாதியான ராகத்தில் முணுமுணுத்த வண்ணம் மாட்டை விரட்டிக் கொண்டிருந்தான்.

மரங்கள் அடர்ந்த அந்தச் சாலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடைவெளியின் வழியே கீழே விழும் நிலவின் வெளிச்சத்தில் அந்தச் சாலையின் பயங்கரம் இன்னும் அதிகமாகத்தான் தெரிந்தது.

கரி ஏறியிருந்த ஹரிக்கேன் விளக்கு வண்டிக்கு அடியில் கட்டப்பட்டிருந்தது. சில சமயம் இதோ அணைந்து விடுகிறேன் என்று 'குபுக் குபுக்' என்று கூத்தாடும். சிறிது நேரம் மௌனமாயிருக்கும்.

திடீரென்று ஒரு சிறு பள்ளத்தில் சக்கரம் பதிந்து எழும்போது வண்டி ஒரு குலுக்குக் குலுக்கி, வண்டிக்குள்ளிருந்த பொன்னம்பலமும் கிழவி மீனாட்சியாச்சியும் கூண்டிலே மோதிக் கொள்வர்.

''மருதமுத்து! பார்த்து ஓட்டப்படாதா?'' என்றார் பொன்னம்பலம்.

''என்னங்க... ரோட்டிலே பழக்கப்பட்ட எனக்கே தடம் புரியலை... மாட்டுக்கு என்ன தெரியும்?'' என்றான் வண்டியோட்டி ஏதோ சம்பந்தா சம்பந்தமில்லாமல்.

''அதுதான் விடிகாலையிலே வண்டியைக் கட்டினோமின்னா எத்தனையோ சௌகரியம்'' என்று மேலும் தொடர்ந்து கூறினான் மருதமுத்து.

''உன் பயத்தை உடைப்பிலே போடு. அப்போ பிடிச்சு நீ இதையே தான் சொல்லி வர்றே... எந்தக் கள்ளன் தைரியமா வழி மறிப்பான் பார்த்துடலாமே. இந்த இன்ஸ்பெக்டர் பொன்னம்பலத்துக்கிட்டே

இந்தப் பகுதியிலே கைவரிசை காட்டினான்னு மூச்சு வந்தாக்கூட ஆளு ஒழிஞ்சான்'' என்றார் பொன்னம்பலம், கூண்டில் அடிபட்ட தன் வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டே.

வண்டிக்காரன் மருதமுத்து கூறியதில் தவறொன்றுமில்லை. அந்தப் பிராந்தியத்தில் சங்குத்தேவன் கோஷ்டியாரென்றால் எல்லாருக்குமே குலை நடுக்கம்தான்.

அமாவாசை இருளிலே திருட மாட்டான்; நல்ல பௌர்ணமி நிலவு தான் அவனுக்குக் குதூகலத்தை அளிக்கும். அந்த முத்துப்பேட்டை, காரைக்குடி பாதையில் மாதம் இரண்டு முறை அல்லது மூன்று முறை தான் தன் கைவரிசையைக் காட்டுவான். மீதி நாள்களிலெல்லாம் நகரப் பணக்கார வீடுகளிலும், கிராமத்து மிராசுதாரர் வீடுகளிலும்தான் அவன் கண்!

அந்தப் பக்கத்தில், 'சங்குத்தேவன் சர்வ வியாபியாச்சே... இங்கே நாம் பேசிக் கொள்வதுகூட அவனுக்கு எட்டிவிடும்' என்று பேசிக் கொள்வார்கள்.

இதுவரையில் அவனை யாராவது நேரே பார்த்திருக்கிறார்களா என்றால் அந்தப் 'பாக்கியம்' யாருக்குமே கிடைக்கவில்லை. மிகவும் தெரிந்தவர்கள் போல் 'சங்குத்தேவன் ஆறடி உயரம்... நல்ல அடர்த்தியான மீசை... இடுப்பிலே பளபளக்கும் கத்தி' என்றெல்லாம் தங்கள் மனக் கற்பனையை அளப்பார்கள்.

முன் நிலா வேளைகளில் அந்தச் சாலையில் சாதாரணமாக யாரும் பிரயாணம் செய்ய மாட்டார்கள்.

அவ்வளவு பயம், இந்த இரண்டு வருஷங்களில் பரவிப் போயிருந் தது.

முத்துப்பேட்டைக்குப் புதிதாக வந்திருக்கும் சப் இன்ஸ்பெக்டர் பொன்னம்பலத்தின் கட்டளையென்றால் மருதமுத்து ஒப்புக் கொள்ள வேண்டியதுதானே!

சங்குத்தேவன் தொந்தரவு ரொம்பவும் அதிகமென்று மருதமுத்து சொல்லிப் பார்த்தான்.

'சங்குத்தேவனைப் பிடித்தால் எனக்கு எவ்வளவு பெரிய பதவி உயரும் தெரியுமா?' என்ற தன் அதிகாரத் தோரணையும் உடன் சுய நலத்தையும் வீசவே மருதமுத்து வண்டியைப் பூட்டி விட்டான் தைரியமாக.

பொன்னம்பலத்துடன், அவரது மாமியார் மீனாட்சியாச்சியும் வந்திருந்தார். வண்டி சிங்கம்பட்டிக் கால்வாயைத் தாண்டிவிட்டது. இனிதான் பயப்பட வேண்டிய கட்டம்.

இந்தப் பக்கம் பத்து மைல், அந்தப் பக்கம் எட்டு மைல் ஊரோ எதுவோ ஒன்றுமே இல்லை. அடர்ந்த மரங்களும், புதர்களுமாக அந்த இடத்துத் தனிமையுடன் சேர்ந்துக் கூடுதலான பயங்கரத்தை ஊட்டி வந்தன.

மருதமுத்துவின் மனத்துக்கு அதோ அந்த மரத்தடியின் புதரிலே ஏதோ சலசலத்த சப்தம் கேட்கத்தான் செய்தது. 'குன்றக்குடி முருகா!' என்று ஒருமுறை சொல்லிக் கொண்டான்.

வண்டியை விரட்டுவதற்காக மாட்டின் வாலை முறுக்கினான். கண்களையும் மூடிக் கொண்டான். கை நடுங்கியது.

''நில்'' என்ற குரல் கேட்டவுடன் மருதமுத்துவின் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. நாக்கு, மேல் அண்ணத்துடன் ஒட்டிக் கொண்டு விட்டது. அரைத் தூக்கத்திலிருந்த பொன்னம்பலம் சட்டெனக் கண் விழித்தார்.

அந்த மங்கி விழுந்த நிலவொளியில் மூன்று பேர் வஜ்ஜிரம் போன்ற உடலுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

''வண்டி எங்கே அண்ணே போகுது? வண்டியிலே எந்த ராஜா போறார்?'' என்றான் மூவரில் ஒருவன் கிண்டலாக.

பொன்னம்பலத்தின் கை ரிவால்வரைத் தடவியது. ஓ! இதோ தட்டுப் பட்டுவிட்டது. அவர் இன்ஸ்பெக்டர் உடையில் அப்பொழுது இல்லையானாலும் கெட்டித்த ரிவால்வரை கைவாகாகப் பையில் வைத்திருந்தார்.

''யாரடா அது? நில்லுங்கள் அப்படியே! ஓர் அடி நகர்ந்தால் உயிர் உங்களிடமில்லை'' என்று சொல்லிக் கொண்டே வண்டியினின்று குதித்தார் பொன்னம்பலம்.

சட்டென்று அவர் முன் பக்கமாக வருவதற்குள், உருவம் வெளிக்குத் தெரிந்ததும் தெரியாததுமாக நின்ற சங்குத்தேவன் வண்டியைப் பின்னுக்குத் தள்ள, இவர் திரும்புவதற்கும் சக்கரம் ரிவால்வர் மேல் மோதுவதற்கும் சரியாக இருந்தது.

சட்டென ரிவால்வர் கையிலிருந்து நழுவி விழுந்தது.

ஒரு விநாடியில் சங்குத்தேவன் எல்லாரையும் புரிந்து கொண்டான். இடுப்பிலே பலரும் சொல்வது போல் கத்தி மின்ன, மேலே போர்த்திய போர்வையுடன் சங்குத்தேவன் பொன்னம்பலத்தை நெருங்கினான்.

''அதற்குள்ளே அவசரப்படலாமா பொன்னம்பலம் அவர்களே!'' என்று கூறிக் கொண்டே கீழே விழுந்து கிடந்த ரிவால்வரை இடக் காலால் கையில் எடுத்து அதிலுள்ள தோட்டாக்களை ஆரஞ்சுப் பழக் கொட்டையை எடுப்பதுபோல் எடுத்து வீசி எறிந்தான்.

ஒரு கணம் பொன்னம்பலம் திடுக்கிட்டு விட்டார். சங்குத்தேவன் சாமான்யமான ஆளல்லன் என்பது அவருக்குத் தெரிந்தது. அத்துடன் அவனது குரல் எங்கோ கேட்டாற் போலிருக்கிறதே என ஒரு கணம் யோசித்தார்.

வண்டிக்கார மருதமுத்து மெல்ல நழுவிக் கொண்டிருந்தான்.

சங்குத்தேவன் பின்பக்கம் திரும்பி, ''அப்பனே! ஏன் நழுவப் பார்க்கிறாய்? நான் என்ன கரடியா, புலியா? உங்க எஜமானை நான் ஒண்ணும் செஞ்சுட மாட்டேன்'' என்றவுடன் சங்குத்தேவனின் ஆட்களில் ஒருவன் அவனைப் பிடித்து நிறுத்தினான்.

சங்குத்தேவன் தன் ஆட்கள் பக்கம் திரும்பி ஏதோ சைகை காட்டவே இரண்டு பேரும் இரண்டு திக்குகளில் புதர்களினூடே இறங்கி எங்கோ மறைந்து விட்டார்கள்.

ஒன்றும் புரியாதவராய் நின்ற பொன்னம்பலத்தின் அருகே நெருங்கி ''என்ன பொன்னம்பலம்... எப்படிப் பார்க்கிறீர்கள்? உங்கள் குறி தப்பி விட்டதென்றா? உங்கள் குறி அப்படியெல்லாம் தப்பி விடுமா? என்னை உங்களுக்குத் தெரியவில்லையா?'' என்று மேற் போர்வையையும், தலை முண்டாசையும் விலக்கினான். இடுப்பிலிருந்த 'டார்ச்'சையும் எடுத்து நீட்டினான்.

பொன்னம்பலத்துக்கு இப்பொழுது சந்தேகம் சிறிது நிவர்த்தியாகி விட்டது. ''சங்கரலிங்கமா?'' என்றார் நாக்குத் தடுமாற.

''ஆமாம்... ஆமாம்... அதே சங்கரலிங்கம்தான்! வண்டியில் ஏறுங்களேன். நானும் காரைக்குடி வரையில் வருகிறேன். என் உடலைத் தொட்டுப் பாருங்கள். இரண்டு தினங்களாக நல்ல குளிர் ஜுரம். நடக்க முடியாத நிலைதான். வண்டியில் ஏறிக்கொள் என்று சொல்லாவிட்டாலும் நானே ஏறத் தயார்தான்'' என்று கூறிக் கொண்டிருக்கையில், பொன்னம்பலம் வண்டியில் ஏறிக்கொண்டு சங்குவையும் ஏறச் சொல்லவும், சங்குவும் கடைசியாக ஒண்டிக் கொண்டான்.

வண்டி மறுபடியும் மெல்ல நகர்ந்தது. வண்டிக்காரன் மருதமுத்துவுக்கு இன்னும் நடுக்கம் தீர்ந்தபாடில்லை.

பொன்னம்பலம் மௌனமாகவே இருந்தார். அவருக்கே தன் கண்முன் நடப்பது கனவா, நனவா என்று தெரியவில்லை; விஷயம் புரியவில்லை.

சங்குத்தேவன்... ஆம் சங்குத்தேவன்... சங்குத்தேவனேதான்! ஆனால்... ஆனால்... இவன் குரல் சங்கரலிங்கத்தின் குரல் போலல்லவா இருக்கிறது?

இருபது வருடங்களுக்கு முன்... அவர் கவனம் உருண்டோடிச் சென்றது.

சங்கரலிங்கமும் தானும் ஒன்றாகப் பள்ளிக்கூடம் போன நாள்கள்... ஒன்றாக மாந்தோப்பில் கல் எறிந்து மாங்காய் பறித்த விளையாட்டுகள்... பள்ளிப் பிராயக் குறும்புகள்...யாவும் ஒன்றன் பின் ஒன்றாய் நினைவுக்கு வந்தன.

சங்குவுக்குத்தான் எத்தனை பலம் அப்பொழுது? ஒருமுறை அந்த மாந்தோட்டக்காரன் தன்னை அடித்து விட்டானென்று ஓங்கி முகத்தைப் பார்த்து ஒரு குத்து விட்டானே!

அதே பலம்தான் இப்பொழுதும் இருக்கிறது; அவன் பெயரில் பதின்மூன்று கொள்ளை... ஒரு கொலை... இதைத் தவிர ஒரு நூறு பயமுறுத்தல் குற்றங்கள்!

ஆள அகப்படாத... உருவத்தையே காட்டாத அந்தச் சங்குத் தேவனுடனா பிரயாணம் செய்கிறோம்!

பலவாறு எண்ணமிட்டு மௌனத்தில் ஆழ்ந்திருந்தார் பொன்னம்பலம். மீனாட்சியாச்சி உட்கார்ந்தபடியே நல்ல உறக்கத்தில் இருந்தாள்.

''என்ன பொன்னம்பலம்! பலமான யோசனை புரிகிறீர்கள்?'' என்று பேசி மௌனத்தைக் கலைத்தான் சங்குத்தேவன்.

'சங்குத்தேவனுடைய குரல் என்னவோ நம் போன்றவர்களின் குரல் போலத்தான் இருக்கிறது. இன்னும் கேட்டால் 'கீச்' என்று மெல்லிய குரல்தான். பின் என்ன சங்குத்தேவனென்றால் அப்படிப் பயப்படுகிறார்களே!' என்று எண்ணினான் மருதமுத்து.

''என்ன பொன்னம்பலம்! என்னை இந்த நடுநிசி வேளையில் இந்த இடத்தில் சந்திப்பாய் என்று கனவில் கூட நினைக்கவில்லையா?'' என்றான் மீண்டும் சங்குத்தேவன்.

இனியும் மௌனம் சாதித்தால் நல்லதன்று என்று ஈரம் காய்ந்து போயிருந்த உதட்டை நாக்கால் தடவிவிட்டுக் கொண்டு, ''அதெல்லாம் யோசிக்கவில்லை சங்கு! நாம் ஒன்று சேர்ந்து விளையாடிய அந்த நாள்களை நினைத்துக் கொண்டேன். காலம்தான் எவ்வளவு பொல்லாதது பார்த்தாயா? நீ வேறு, நான் வேறு என்று ஆக்கிவிட்டதே!

''அது கிடக்கட்டும் சங்குத்தேவா! இப்பொழுது நாம் வீண் கதை பேச நேரமில்லை. பழைய சங்கரலிங்கம்தானா என நிர்ணயம் செய்து கொள்ளவே எனக்கு இவ்வளவு நேரமாகிவிட்டது. அந்தக் குரலையும் கூர்ந்த கண்களையும் அடையாளம் கண்டுபிடிக்காவிடில் விளைவே வேறுதான்.

''நான் உன்னைச் சிறுவயதில் விட்டுப் பிரிந்து பட்டணக்கரைக்குப் போய்விட்டேன். பிறகு ஏதோ ஓரிரு முறை தான் சந்தித்தேன். பிறகு அது கூட இல்லை. பிறகு என்ன நேர்ந்தது? அதை எல்லாம் சொல்லு'' என்றார் பொன்னம்பலம் பொழுதைக் கழிக்க.

சங்குத்தேவன் தளர்ந்த போர்வையை மீண்டும் இழுத்துப் போர்த்திக் கொண்டு சொல்லத் தொடங்கினான்.

'பிறகு நேர்ந்ததைச் சொல்லு' என்றால் பழைய ரணத்தைக் கிளறு என்றுதானே அர்த்தம்!

''குதித்து விளையாடி, கும்மாளமாக இருந்த என் பருவத்து இன்ப சஞ்சரிப்புக்கு எங்கிருந்தோ துன்ப இடி விழுந்தது. என்னையும் என் அக்காளையும் விட்டுவிட்டு அம்மா இறந்து விட்டாள். அம்மா இறந்த ஆறு மாதத்துக்கெல்லாம் மதகுச் சண்டையிலே படுகாலிப் பய எவனோ என் அப்பனையும் குத்திக் கொலை செய்து விட்டான். அவனையும் எனக்குத் தெரியாமல் போகலை.

''அக்காவும் நானும்தான். அக்காவுக்காவது காப்பாத்த புருஷன் இருந்தான். அக்காவுக்கு எம்மேலே எத்தனையோ உசிரு. ஆனா, அவ என்ன செய்வா பாவம்! அவ புருஷனின் கட்டளைக் கீழ்ப்படியத்தானே வேணும்? 'பதினாறு வயதுக் குட்டிச் சுவருக்குச் சும்மா ஒக்காதத்திச் சோறு போட யாரலே ஆவும்?'னு அத்தான் ஒருநாள் கத்தி விட்டார். எதிர்த்து வாயாடத் துணிந்த என்னை நோக்கிக் கையை தூக்கி வரத் தொடங்கினார்.

''அதனால் நான் வீட்டை விட்டு வெளியேறி அப்போது போனவன் தான்! கோடிக்கரைக்குத் திருட்டு ரயில் ஏறிப் போய் கண்டிக்குக் கள்ளத் தோணி ஏறிட்டேன். அக்கா, அத்தானுக்கு ஒரு கடுதாசி கூடப் போடலை. கடுதாசி போட எனக்கு ஏதாவது ஒழிவு ஒய்ச்சல் இருந்தால் தானே! எங்கெங்கோ அலைஞ்சேன். வயது வளர்ந்தது. வர வரத் துணிச்சலும் வளர்ந்து வந்தது.

''சிங்கப்பூர், பினாங்கு, கோலாலம்பூர்னு சுத்தியலைஞ்சேன். எப்படியோ பதினேழு, பதினெட்டு வருஷம் கழிஞ்சுப் போச்சு. நாட்டுப் படகுத் துடுப்பைத் தள்ளித் தள்ளி உடலில் வஜ்ஜிரம் பாய்ஞ்சிடுச்சு. பெயரும் சங்குத்தேவன் ஆச்சு. அதோட கள்ளச் சாமான் ஏத்தி ஏத்தி அந்தத் தொழிலும் அத்துபடியாகிவிட்டது.

''நாங்க நாலு பேர் கூட்டாகச் சேர்ந்துக்கிட்டு எவ்வளவோ ஜகஜ்ஜால மெல்லாம் செய்துட்டோம். எவ்வளவு பணம்! எவ்வளவு பணம்! இந்தக் கை நிறையப் பணத்தை அள்ளி அள்ளிப் பெட்டியில் போடுவதில் குறைவேயில்லை. சுதந்திரமாக வாழ்க்கையை நடத்தினேன். கல்யாணமென்று மேளதாளங் கொட்டி ஒன்றும் நான் செஞ்சுக்காமப் போனாலும், நம்ம ஊர்க் குடும்பத்து அநாதைப் பெண் ஒருத்தி என் கைப் பிடிச்சாள். அவள் என் கை பிடித்த வேளையோ என்னவோ... கல்யாணங்கட்டி ஒரு வருஷத்திற்குள் அந்த அநாதை அநாதையாகவே போய் விட்டாள்.

''திருட்டுச் சாமான் கடத்துவதைக் கண்காணிக்க எத்தனையோ பந்தோபஸ்து ஏற்படுத்தத் தொடங்கி விட்டார்கள். எங்கள் தொழிலைச் சுதந்தரமாகச் செய்ய முடியவில்லை. இருபது வருடக் கடல் கடந்த நாட்டு வாழ்க்கையில் கொஞ்சங் கொஞ்சமாகக் கசப்பு ஏற்படத் தொடங்கியது. துண்டை உதறிப் போட்டுக் கொண்டு எப்படி அக்கரைச் சீமைக்குக் கிளம்பினேனோ... அதே நிலையில்தான் திரும்பி ஊருக்கு வரலானேன். ஆனால், ஒரு வித்தியாசம்... முன்பு தன்னந்தனியாகச் சென்றேன். இப்பொழுது சகபாடிகள் நான்கு பேருடன் திரும்பி வந்தேன். கால் காசு கிடையாது. 'எப்படி அண்ணே பிழைக்கிறதா உத்தேசம்' என்று கேட்ட என் கூட்டாளிகளுக்கு வஜ்ஜிரம் பாய்ந்த கையை மடக்கிக் காட்டினேன். 'சும்மா முஷ்டியைக் காட்டிட்டா சரியாப் போச்சா? அதை உபயோகிக்க இடம் வேண்டாமா?' என்று அவர்கள் கேட்ட பிறகு எல்லாருமாகக் கலந்து ஆலோசித்தோம்.

''இடையிடையே என் ஊரின் ஞாபகம் வரும். ஒரு சமயம் கிராமப் பக்கம் போயிருந்தேன். பாதி வீடுகள் பூட்டிக் கிடந்தன. சில இடிந்து

விழுந்து கிடந்தன. என் அக்கா என்ன ஆனாளோ, எங்கிருந்தாளோ... ஒரு விவரமும் சொல்ல ஆள் யாருமில்லை. எல்லாம் புதுப் பண ஆசாமிகள்.''

பொன்னம்பலம் பெருமூச்சு விட்டார். மீனாட்சியாச்சி சங்குத் தேவனுக்கு உதவினாள் என்பதையும் இங்கே சொல்லி விட வேண்டும் என்று துடிதாய்த் துடித்தார் பொன்னம்பலம். இதற்கு முன்பு ஏதோ பேச்சு வாக்கில் தனது நண்பனின் சகோதரி மகளைத்தான், தாம் கல்யாணம் செய்து கொண்டுள்ளோம் என்பதை அறிந்திருந்தார். ஆனால், தன் நண்பன் இப்படி ஊர் நடுங்கும் சங்குத்தேவனாக வரப் போகிறானென்று தெரியுமா?

''சங்கு! அதெல்லாம் சரி. மளமளவென்று இவ்வளவு களவுகள் செய்து விட்டாயே... ஒரு கொலை கூட உன் பேரில் பதிவாகி இருக்கிறது. உன்னைப் பிடிப்பவர்களுக்குப் பரிசு வேறு கொடுக்கிறோமென்று அறிவித்திருக்கிறார்கள் டிபார்ட்மென்ட்டிலே! இதெல்லாம் எப்படி வந்தது?'' என்றார் பொன்னம்பலம். அவர் மனசே ரொம்பவும் கலங்கியிருந்தது.

மெல்ல சிரித்தான் சங்குத்தேவன். ''தொழிலைத் தொடங்கினால் வியாபாரம் மளமளவெனச் செய்ய வேண்டியதுதானே? நானாக எந்தத் திருட்டுத்தனத்தையும் செய்ததேயில்லை. எல்லாம் திட்டம், யோசனையோடு நின்று விடும். என் கட்டளைக்குப் பணிந்து மற்றவர்கள் காரியத்தை நிறைவேற்றி விடுவார்கள்.

''ஆனால், ஒருத்தனுக்கு ஒருத்தன் பணிகிற சாலமெல்லாம்தான் போச்சே! என் கூட்டாளிகளுள் சில பேருடைய நடவடிக்கைகள் எனக்குப் பிடிக்கவே இல்லை. துரோகமிழைத்து என்னையே காட்டிக் கொடுத்திருந்தாலும் பரவாயில்லை. என்னை அவமானப்படுத்தத் துணிந்து, என் கௌரவத்தைக் குலைக்க முற்பட்டவுடன் என் தொழிலைச் செய்வதில்லை என முடிவு செய்து விட்டேன்.

''நான் எந்தத் திட்டத்தைச் செய்யாதே என்று கூறுவேனோ அதைச் சிலர் செய்து முடித்து விடுவார்கள். சின்னப்பட்டி மிராசுதாரரைத் தெரியுமா? என் தகப்பனாரை ஆள் வைத்துக் கொன்ற மகாபாவி அவன்தான். வயசும் எழுபது ஆச்சு... மூன்றாம் கல்யாணம் வேறே!

''சிங்கப்பூரிலிருந்து நான் திரும்பி வந்தவுடனேயே என் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள என் இதயம் துடிதுடித்தது. என் ஆத்திரத்தை எப்படியாவது தீர்த்துக் கொள்ளச் சமயத்தைஎதிர்பார்த்துக் கொண்டிருந்

தேன். ஆனால், வஞ்சத்தை ஒரேயடியாகத் தீர்க்கக்கூடாது என்று முடிவு செய்தேன். பணம் தேவையான போதெல்லாம், அவரைப் பயமுறுத்திப் பறித்து வந்தேன்.

''பாவம்... அவருடைய இளம் மனைவி சோகமே உருவாயிருப்பதைக் காணும்போது என் உள்ளம் துடிக்கும். ஒருமுறை அந்தக் கிழ மிராசுதாரர் பணம் தருவதற்கு மறுத்து விட்டார். அத்துடனில்லாமல் என்னைப் போலீஸில் பிடித்துக் கொடுக்க முயன்றார். அவரை ஒரேயடியாகத் தீர்த்து விடுவது தான் சரி என்ற நோக்குடன் பௌர்ணமிக்கு இரண்டு நாள் முன்பு அவர்கள் வீட்டுக் கொல்லைப் புறத்துச்சுவர் வழியே ஒண்டி நடந்து வந்தேன். கிணற்றங்கரையோரமாக இளம் பெண் ஒருத்தி ஏதோ யோசித்த வண்ணம் உட்கார்ந்திருக்கக் கண்டேன்.

''என் காலடிச் சப்தம் கேட்டோ என்னவோ சட்டெனத் திடுக்கிட்டு எழுந்தாள் அவள். 'கூச்சல் போட்டால் குத்தி விடுவேன்... சங்குத்தேவன்' என்றேன். அவள் விழிகள் மருண்டன; கலங்கின. 'உன் கிழக் கணவன் எங்கே?' என்று அதிகாரத்துடன் கேட்டேன்.

''அவள் நாக்கு குழறியது. கண்களினின்று தாரை தாரையாக நீர் பெருகியது. 'என்ன செய்யப் போகிறீர்கள் அவரை?' என்று விம்மினாள் அவள். 'பணம் வேண்டுமானால் என்னைக் கேளுங்கள்... அவர் இன்றோ நாளையோ என்று படுத்த படுக்கையில் இருக்கிறார். இந்தச் சமயத்தில் அவரைக் கலவரத்துக்குள்ளாக்கி நாளை போகும் உயிரை இன்றே போக்காதீர்கள். நாளை இழக்கப் போகும் என் வாழ்வை இன்றே இழக்கச் செய்யாதீர்கள். அவரைச் செய்யப் போவதை என்னைச் செய்யுங்கள் அண்ணா!' என்று கதறி என் காலைப் பிடித்துக் கொண்டாள்.

''நான் இரக்கமற்றவன்தான். ஆனால், என் இதயம் இளகிவிட்டது. அண்ணா என்றவுடன் எங்கிருந்தோ பாசம் வந்து புதைந்து கொண்டது. வஞ்சம் தீர்க்க வந்த வழியை மறந்தேன். நாளைச் சாகப் போகிறவரை இன்று துன்புறுத்தி 'பிரம்மஹத்தி தோஷம்' அடைவதுதான் மிச்சமாகும் என்று எண்ணினேன்.

''என் மகள் போன்றும் தங்கை போன்றும் தோன்றிய அவள் கைகளிலே என் கையை அடித்து 'பெண்ணே! உன் கணவர் என் விரோதி; ஆனால், உனக்காக அவரை ஒன்றும் செய்ய மாட்டேன். யாரையும் ஒன்றும் செய்ய விடமாட்டேன். இது சத்தியம்!' என்றேன்.

''அவள் முகத்திலே எத்தனை மகிழ்ச்சி! 'சங்குத்தேவனைப் பற்றி எத்தனை கொடூரமாக வர்ணிக்கிறார்கள்? அந்தச் சங்குத்தேவனா நீங்கள்? உயிரைக் கொடுத்தீர்கள்' என்று தன் நன்றியைத் தெரிவித்தாள். நானும் சட்டென்று ஒரு நொடியில் அவ்விடம் விட்டு மறைந்தேன். வாழ்க்கையிலேயே மகத்தான தியாகம் செய்ததாக என் நினைப்பு.

''ஆனால், மறுநாள் மாலை சின்னப்பட்டி மிராசுதாரர் ரத்த வெள்ளத்தில் மாண்டு கிடந்தார் என்றும், பாவி சங்குத்தேவன் கொலை செய்து விட்டானென்றும் எல்லாரும் பேசிக் கொண்டபோது, என் தலையில் இடி விழாமல் என்ன செய்யும்?

''எனக்கு அந்த மர்மம் புரியாத புதிராய்த்தானிருந்தது. அந்தப் பெண் சங்குத்தேவனைச் சபித்தாளாம். நடந்த விஷயம் முழுவதையும் எல்லாருக்கும் கூறி விட்டாளாம். சத்தியம் செய்த பாவி என்று தூற்றினாளாம். அத்துடன் தன்னையும் பலாத்காரம் செய்ததாக வேறு பறை சாற்றியிருக்கிறாள்.

''என் மனக்குழப்பம் தாங்க முடியவில்லை. என் கூட்டாளிகளுள் ஒருவனான சுருளியாண்டிதான் அந்தக் கொலையைச் செய்தவன் எனத் தெரிந்தது. மிராசுதாரரை நான் கொல்லப் போகிற விவரமும், அந்தப் பெண்ணோடு பேசியதையும் மறைந்திருந்து தெரிந்து கொண்டிருக்கிறான் அவன். நெல் விற்ற பணம் அன்று வீட்டில் ரொக்கமாக இருப்பதையும் அறிந்து அவரைக் கொன்று, பணத்தையும் அபகரித்துச் சென்றிருக்கிறான். அவன் எங்கோ மறைந்து விட்டான்.

''ஊர் உலகம் என்னைத் தூற்றுவதையும், செய்யாத தவறுக்கு என் பேரில் குற்றம் சாட்டப்பட்டதையும் காணவிம்மி விம்மி அழலாமாவெனத் தோன்றிவிட்டது. இந்த வாழ்க்கையே வேண்டாம் என்று முடிவு செய்து விட்டேன்.

''என்னைப் பிடிக்கப் பலமாக வலை வீசப்பட்டது. ஆனால், அது மட்டும் முடியாத காரியம். இருந்தாலும் நீ, சப் இன்ஸ்பெக்டராக சென்ற வாரம் மாற்றி வந்ததாக அறிந்தேன். முன்னரே ஒருமுறை நன்றாக உன்னைப் பார்த்தேன். பழைய நண்பன் பொன்னம்பலம் தான் என அறிந்தேன்'' என்று கூறிச் சட்டென்று நிறுத்தினான் சங்கு. பொன்னம்பலம் ஏதோ கேட்கத் துடியாத் துடித்துக் கொண்டிருந்தார்.

'ஐயோ... சங்கு! நீ பெரிய தவறு செய்து விட்டாயே... நான் என்ன செய்வது?' என்று கூறிவிட நெஞ்சு துடிதுடித்தது. எனினும் அடக்கிக்

கொண்டு, ''சங்கு! என்னை முன்பே நீ தெரிந்து கொண்டு விட்டாயா? ஹூம்... இதோ தூங்குகிறார்களே ஆச்சி யார் தெரியுமா? ஐயோ... உன் சகோதரிதான்... அவர்கள் மகளைத்தான் மணம் புரிந்து கொண்டேன். என்னைப் படிக்க வைத்து முன்னேற்றியதே அவர்கள்தான்.

''அவர்கள் உன்னை நினைக்காத நாளில்லை. 'அவன் இருந்தால் உன் வயதுதான் ஆகும். ஒரு விவரம் கூடத் தெரியவில்லையே... பதினெட்டு வயசிலே காணாமே போனான். போயே போய்விட்டான்' என்று வருத்தப்படுவார்கள். அடிக்கடி உன்னை நினைக்காமல் எப்படி இருந்திருக்க முடியும்?

''நீ என்னைச் சந்திக்காமல் இருந்திருக்கக்கூடாதா? பதவியை எண்ணி உயர உயர ஏற முயன்று கொண்டிருக்கும் என் எதிரிலே ஏன் வந்தாய்? பதவி கிடக்கட்டும். நீ என் அருமை நண்பன்... அருமை நண்பன் கிடக்கட்டும்... ஆச்சியின் அருமைத் தம்பி... உன்னைக் கண்டவுடன் அவர்கள் எப்படி மகிழ்வார்கள் தெரியுமா? இவ்வளவும் இருக்கும்போது ஒரு கொள்ளைக்காரனை - போலீஸ் இலாகா சல்லடை போட்டுச் சலிக்கும் ஒரு குற்றவாளியை - கடமையைக் காப்பாற்ற ஒரு பெரும் பதவியில் நான் இருக்கும்போது என்னுடன் வலியப் பேசி வரும் ஒரு மகா கொள்ளைக்காரனைக் கைது செய்யாது விடுத்தது மகா குற்றமாகுமே சங்கு! இந்தப் பதவிக்கே - கடமையை முக்கியமானதெனக் கருத வேண்டிய இந்த வேலைக்கே - அது தவறான வழியைக் காட்டியதாகுமே சங்கு!

''ஆனாலும் நீ என் நண்பன்; உறவினன்; பளிங்கு போன்ற உள்ளத்தோடு உண்மையைக் கூறியவன்; குற்றம் செய்யாதவன். உன்னை எப்படிக் கைது செய்ய முடியும்? அப்படி நேர்ந்துவிட்டால் ஆச்சியின் மனம் என்ன பாடுபடும்?

''சங்குத்தேவா! என்ன இப்படி என்னைத் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தி விட்டாய்? உன்னை எப்படியாவது பிடித்துக் கொடுத்துப் பெரும் பதவியை அடைய எண்ணினேன். அந்தப் பதவி வேண்டாம். நீ இப்பொழுதே குதித்து ஓடிப் போய் விடு. என் எதிரில் நிற்காதே சங்கு! சங்கு... உடனே செய்... உடனே செய்'' - பொன்னம்பலத்தின் குரலிலே வர வர வேகமும் பதற்றமும் அதிகமாகின.

'ஹோ... ஹோ...'வென்று சிரித்தான் சங்குத்தேவன். அந்தச் சிரிப்பு அந்தத் தனிமையான சாலையிலே ரீங்காரம் செய்து எதிரொலித்தது. பயங்கரமாக இருந்தது.

‘‘பொன்னம்பலம்... மிஸ்டர் பொன்னம்பலம்... கடமையிலிருந்து தவறப் போகும் பொன்னம்பலம்! உன்னிடம் நானாக வந்து பேச எனக்கென்ன பைத்தியமா? எனக்கும் கடவுள் புத்தியைக் கொடுத்திருக்கிறார். என் கதையை நான் கூறியும் உனக்கு என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லையே!

‘‘நான் செய்தது ஐம்பெரும் குற்றங்களல்லவா? வெளியே உலாவி குற்றத்தை அதிகமாகச் செய்து கொண்டு போகும் எனக்கு ஒரு முடிவு வேண்டும். அது கூடாது என்று கூறுவது மகாபாவம் செய்வது ஆகும். எப்பொழுது அந்த மிராசுதாரர் கொலைச் செய்யப்பட்டாரோ அன்றே நான் புனர்ஜென்மமெடுத்து விட்டேன். இந்த உலகில் இனித் திருடனாக உலாவுவதில்லை என்று முடிவு செய்து விட்டேன். போலீஸிடம் நானே சரணடைந்து அவர்கள் என்னைச் செய்யும் சித்ரவதைகளுக்கு ஆளாகி, எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் சிறையில் கழித்து, புது வாழ்வை நிம்மதியாகக் கழிக்கத் திட்டமிட்டேன். ஆனால், அந்தப் புனர்ஜென்மம் உன்னால்தான் வரட்டுமே என முடிவு செய்தேன். என் சகோதரியின் மருமகன் நீ என்று முதலில் எனக்குத் தெரியாது. முக்கிய நண்பன் என்ற எண்ணம்தான். ஆனால், இப்போதோ இன்னும் என் எண்ணம் திடமாகி விட்டது. என் சகோதரியின் மருமகனுக்குப் பதவி உயர்ந்தால் என் சகோதரி மகிழ்வாள்... என் சகோதரிக்கு நான் செய்யும் பெரும் தொண்டல்லவா அது?

‘‘அத்துடன் இந்த உலகத்தில் யாருக்காக நான் இருக்க வேண்டும்? ஒன்று, குற்றஞ்செய்து கொண்டு வாழ வேண்டும்... அல்லது மாள வேண்டும். இனி ஒரு சிறு குற்றஞ் செய்யக்கூட என்னால் முடியாது. நான் புனர்ஜென்மமெடுத்து விட்டேன்.

‘‘பொன்னம்பலம்! நீ என்னவோ யோசிக்கிறாய்... என் கதையை நான் கூறாமல் என்னைக் கைது செய் என்றால் எவ்வளவு ஆவலுடன் செய்திருப்பாய்? மீனாட்சியாச்சிக்கு நான் வந்ததும் தெரியாது. போனதும் தெரியாது. நான் சொல்வதைக் கேள்... முடிவாகக் கேள்... நான் இப்பொழுது இந்த இருளோடு இருளாகப் போய் மறைவேன். நாளைய தினம் காலை காரைக்குடியில் உன் எதிரே தோன்றுவேன். எனக்குப் புனர்ஜென்மம் கொடு. நீ கொடுக்காவிட்டால் நான் எந்தப் போலீஸிடமும் சரணடைய மாட்டேன். இந்தத் துப்பாக்கிதான் எனக்கு வாழ்வளிக்கும். யோசிக்காதே பொன்னம்பலம்!’’ என்று கூறிக் கொண்டே வண்டி யினின்று குதித்தான் சங்குத்தேவன்.

வண்டிக் கடக் கடக் என்ற ஒலியுடன் நின்றது.

சங்குத்தேவன் அந்த மங்கிய பின் நிலவொளி இருளில் மறைவதைப் பார்த்துக் கொண்டே இருந்தார் பொன்னம்பலம்.

அவர் விழிகள் நிலைபெற்று விட்டனவோ அப்படியே...

அதோ மீனாட்சியாச்சி விழித்துக் கொண்டு ''காரைக்குடி வந்து விட்டதா?'' என்று கேட்டதற்கு பொன்னம்பலத்தின் உதடுகள் என்னவோ முணுமுணுக்கின்றனவே... என்ன வார்த்தையாயிருக்கலாம் அது?

'புனர்ஜென்மம் கொடு... சங்குத்தேவன்...' ஆச்சிக்கு அது என்ன புரியப் போகிறது?

கிழக்கே விடிவெள்ளி முளைத்து விட்டதைக் கண்டு ஆச்சி கந்தரனுபூதியை முணுமுணுக்கத் தொடங்கிவிட்டாள்.

மருதமுத்து இந்த உலகிலேயே இல்லை. உட்கார்ந்தபடியே நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

வண்டியோ மெல்ல ஆடி அசைந்து சென்று கொண்டிருந் தது.

வழக்கமாக முருகாற்றுப் படையை முணுமுணுக்கும் பொன்னம் பலத்தின் முகத்தில் ஈயாடவில்லை.

காரைக்குடியில் பொன்னம்பலம் எதிர்பார்த்தபடியே சங்குத்தேவன் வந்தான். அவன் வருவதும் போவதும் யாருக்கும் தெரியாது. எதிரே நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். ஆச்சி அடுத்த தெருவுக்குச் சென்றிருந்தார். நல்ல வெளிச்சத்தில் அந்த முகத்தைப் பொன்னம்பலம் உற்று நோக்கினார்.

அதிலே பஞ்சமாபாதகங்கள் செய்யும் தீயரேகைகள் ஏதும் தாண்டவ மாடவில்லை.

இருவரும் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்கள்.

சங்குத்தேவன் புன்முறுவல் பூத்தான். அவன்தான் பேச்சைத் தொடங்கினான்.

''என்ன முடிவு செய்து விட்டீர்களா?'' என்றான் சங்கு.

என்னவோ பொன்னம்பலத்தின் தொண்டடையை அடைத்தது. மென்று விழுங்கிக் கொண்டே... ''சங்கு... சங்கு! யோசித்தேன். உனக்குப் புனர்ஜென்மம் கொடுப்பதில் தடையில்லை. ஆனால், குற்றவாளியைக் கைது செய்ய இது என் எல்லையன்று. காரைக்குடிப்

போலீஸார்தான் செய்ய வேண்டும்'' - பொன்னம்பலம் இந்த வார்த்தைகளை கூறுவதற்குள் சங்குத்தேவன் துள்ளியெழுந்தான்.

''முடியாது... முடியாது... கண்டவர்கள் கையில் அகப்பட சங்குத்தேவன் ஒரு காலும் சம்மதிக்க மாட்டான். முடிந்தால் நீ செய்... இல்லையேல்...''

''சங்கு... சங்கு! அவசரப்படாதே. இன்று நான் ஆபீஸ் வேலையில் வரவில்லை. சொந்த முறையில் வந்தேன். நாளை முத்துப்பேட்டையில் காலை பதினோரு மணிக்கு இருப்பேன். அங்கே வா...'' - பொன்னம்பலம் முழுவதையும் சொல்வதற்குள் அவர் நா தடுமாறியது.

''சரி'' என்றான் சங்கு.

சட்டென அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். நகர்ந்தான் என்பதைவிட மறைந்தான் என்பதுதான் சரி.

**மீ**னாட்சியாச்சிக்குச் சங்குத்தேவன் வந்ததும் போனதும் தெரியாது. இது மாதிரி வந்து போகிறவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் அவர் அவ்வளவு கவலைப்படுவது கிடையாது.

மறுநாள் சங்குத்தேவன் குறித்த நேரத்தில் முத்துப்பேட்டை போலீஸ் நிலையத்தில் தோன்றினான். பெரிய முண்டாசு கட்டியிருந்தான்.

''சப் இன்ஸ்பெக்டர் பொன்னம்பலத்தைப் பார்க்க வேண்டும்'' என்றான்.

அங்கே 'டியூட்டி'யில் இருந்தவரிடம் உருவத்தை மாற்ற முயலவில்லை. எப்படியும் அன்று போலீஸிடம் தன்னைக் காட்டிக் கொள்ள போகிறானே!

''சப் இன்ஸ்பெக்டர் இல்லை'' என்று அவரிடமிருந்து அதிகாரமான குரல் வந்தது.

''இன்னும் சிறிது நேரம் கழித்து வருகிறேன். சங்குத்தேவன் வந்து போனான் என்று சொல்லுங்கள்'' என்று மிடுக்குடன் கூறிச் சிறிது தூரம் சென்றிருப்பான்.

''ஸார்!''

''சங்குத்தேவன்...''

ஏட்டு விழித்துக் கொண்டார்.

''தூக்கு துப்பாக்கியை... துரத்திப் பிடியுங்கள்... 'ஷுட்' என்று

கூச்சலிட்டார். ஏட்டு அந்த நல்ல சமயத்தை நழுவ விடுவாரோ?

துப்பாக்கியிலிருந்து கிளம்பிய தோட்டா சர்ரென்று எழுந்து கோணல் மாணலாக ஸ்டேஷன் கதவில் பாய்ந்தது. அந்தக் கட்டடமே பூகம்பம் நேர்ந்ததுபோல் குலுங்கியது.

ஆனால், சங்குத்தேவன் இவர்கள் கைகளிலா அகப்படுவான்?

மறுநாள் வெளியான தினசரிப் பத்திரிகைகளில் வெவ்வேறு இடங்களில் கிழ்க்காணும் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

## முத்துப்பேட்டை

இந்த வட்டாரங்களில் பிரபல கொள்ளைக்காரனும், பல கொலைக் குற்றங்களுக்காகத் தேடப்பட்டு வந்தவனுமான சங்குத்தேவன், நேற்று திடீரென போலிஸ் ஸ்டேஷனில் தோன்றி போலீஸ்காரர்கள் ஓடிப் பிடிக்கும் முன் தன் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு மாண்டான்.

முத்துப்பேட்டைக்குப் புதிதாக மாற்றப்பட்டு வந்த சப் இன்ஸ்பெக்டர் பொன்னம்பலத்திற்குத் திடீரென சித்தப்பிரமை ஏற்பட்டதால் வேலையை நேற்று ராஜினாமா செய்து விட்டார்.

● ● ● ●

# 87. செங்கோடனின் மகள்

"நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே!" - அந்தக் குடிசையின் வெளியிலிருந்து மகுடியின் நாதம் வந்து கொண்டிருந்தது. ஒட்டிய கன்னங்கள் நிறைந்திருந்த காற்றால் 'புஸ்' என்று உப்பியிருந்த அந்தக் கிழவன் வெகு சுவாரஸ்யமாக மகுடியை ஊதிக் கொண்டிருந்தான்.

"தாத்தா... தாத்தா! ஏ... தாத்தா!" என்று குடிசையின் உள்ளிருந்து அழைத்த குரல் மகுடியின் நாதத்தையும் தாண்டி அங்கே கேட்டது.

அந்த மலைச்சாரல் பக்கம் எழும் எந்தச் சிறு ஒலியும் ஒன்றுக்குப் பத்தாக விரிந்து எதிரொலிக்கும். குடிசைக்குச் சற்று ஒட்டி ஓடும் அந்தக் காட்டாற்றின் சலசலப்பும், மரங்களிலிருந்து காலை நேரத்தே பாடும் புள்ளினங்களின் இன்குரலும், எங்கோ மேயும் ஆடுகளின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் சிறு மணிகள் குலுங்கும் ஓசையும் அந்தத் திக்குத் திசாந்தரங்கள் எங்கும் பரவி மலைச்சாரலின் அமைதியைக் கலைத்துக் கொண்டிருக்கும்.

அந்தக் காலை நேரத்திலும் 'சுள்'ளென்று அடிக்கும் மஞ்சள் வெயிலின் மோகன ரூபத்தை அனுபவிக்க அந்தக் குடிசையினின்று குரல் எழுப்பிய பொன்னி விரும்பினாலும் அந்தப் பக்கத்துப் பேரமைதி அவளைக் கலக்கிவிடும்.

அமைதியை மாற்றும் அந்த ஒலிகளும், அவ்வப்போது அவள் மனத்துக்கு மகிழ்ச்சியை அளிக்கத் தோன்றும் பழனியின் இன்முகமும் இருந்தனவோ, பிழைத்தாளோ!

"தாத்தா..."

மீண்டும் நான்காவது முறையாகப் பொன்னியின் குரல் அடித் தொண்டையினின்று வந்தாகிவிட்டது.

கிழவன் குடிசைக்குள் நுழைந்தான். "தாத்தா... தாத்தான்னு அடிச்சுக்கிறியே... நான் இல்லாட்டிப் போனா என்ன பண்ணுவே?"

என்றான் கிழவன், தனது பஞ்சடைந்த கண்களை ஒருமுறை அவள் பக்கம் திருப்பி.

பொன்னியின் மஞ்சள் முகம் சட்டென்று சிறுத்தது. இருள் நிறைந்த அந்தக் குடிசையின் மேற்கூரையில் இருந்த பொத்தல்கள் வழியே கீழே விழும் அந்த மஞ்சள் வெயிலின் மெல்லிய ஒளியில் தாத்தாவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள் பொன்னி.

அவள் கண்களில் நீர் திரண்டது. பதில் பேசாமல் அந்தக் கஞ்சி கலயத்தையும் பக்கத்துச் செடியில் காய்த்திருந்த பச்சை மிளகாயையும் கொண்டு வந்து வைத்தாள்.

"ஆமாம்... வெடிஞ்சு எம்மாம் நேரமாகுது? சும்மாக்காட்டியும் ஊதிக் கிட்டிருந்தா சரியாப் போச்சா? காலங்காத்தாலே வெளியே போனா தானே பொழுது உச்சி ஏறுதுக்குள்ளே வந்துடலாம்... அதுக்குத்தான் கூப்பிட்டேன்" என்று சொல்லிவிட்டு மண்குடத்தைத் தூக்கிக் கொண்டு காட்டாற்றை நோக்கிப் புறப்பட்டாள்.

கிழவன் தனக்குள்ளே சிரித்துக் கொண்டான். மீசையை இடக்கையால் விலக்கிக் கொண்டே கஞ்சியை ஒரு வாய் குடித்தான். மிளகாயைக் கடித்துக் கொண்டான். ஒருமுறை குடிசையின் வெளிப்புறம் திரும்பிப் பார்த்தான்.

வெளியே அந்தக் காலை வெயிலின் கதகதப்பு அவன் உடலில் சிறிது தெம்பை ஊட்டியிருந்தது. வயதும் ஆகிவிட்டதே. வெளியே பிழைப்புக்குப் போக வேண்டுமென்றால் உடம்புத் தள்ளாமையையும் இப்பொழுது கவனிக்க வேண்டித்தானிருக்கிறது.

உம்... இந்தப் பிழைப்பு வேஷமா? அவனது பரம்பரைத் தொழில்!

காலம்தான் எப்படி எப்படியெல்லாம் சுழன்று, எந்தெந்தப் பாதையில் எல்லாமோ இழுத்துச் சென்று எப்படி எப்படியெல்லாமோ திருப்பி விடுகிறது!

விளையாட்டுப் போல் இந்த மஞ்சள் மலைச்சாரலுக்கு வந்து எட்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டன. பொன்னி அப்பொழுது விவரமறியாப் பெண். அவளுக்குத்தான் எத்தனை கஷ்டம்!

ஒரே மாத்தில் தாயை இழந்த அவள், கிராமத்துக் குழந்தைகளோடு குழந்தையாக விளையாடி வளர்ந்து இத்தனை நாள் புருஷன் வீடு போயிருக்க வேண்டியவள். ஆனால், இந்தக் காட்டுப் பிரதேசத்தில் கல்லிலும், முள்ளிலும், காட்டு விலங்குகளின் மத்தியிலும் காலம்

பனையூர் கிராமத்தில் சின்னப்பன், அங்குள்ள சில நிலங்களுக்குக் கூலிக்கு ஏற்றமிறைத்துப் பிழைத்து வந்தான். அவனுடைய பரம்பரையில் யாரும் எந்த அடாத செயலுக்கும் போனதில்லை.

கிடைக்கிற கூலியைக் கொண்டு மானமாகப் பிழைத்து வந்தான் அவன். அவனது மனைவி இறந்து போனதால் ஏற்பட்ட சலனத்தைத் தவிர வாழ்க்கையில் அமைதியைக் குலைக்க வந்தது போலவே செங்கோடன் பிறந்தான்.

சிறு வயதிலேயே துறுதுறுப்பாகவும், துள்ளிக் குதித்தும் துடிப்பாக இருந்த தன் மகன் ரொம்பவும் சாமர்த்தியசாலியாக விளங்குவான் என்று சின்னப்பன் எண்ணியிருந்தான். ஆனால், மகன் வளர வளர மிகுந்த போக்கிரித்தனத்துடன் வீண் சண்டை இழுப்பவனாகக் காணப்பட்டதைக் காண, சின்னப்பனுக்கு வருத்தமாக இருந்தது. தாயற்ற பிள்ளை என்று செல்லம் கொடுத்ததும் அந்தப் போக்குக்குக் காரணம் எனலாம்.

பனையூர் சரகத்துக்கு அருகேயுள்ள அடர்ந்த காடுகளிலிருந்து கள்ளத் தனமாக விறகு வெட்டி வருவது, திருட்டுத்தனமாகச் சாராயம் காய்ச்சுவது எல்லாம் செங்கோடனுடைய நாள்தோறும் செய்யும் தொழிலாயின.

வீட்டிற்குச் சரிவர வர மாட்டான். சின்னப்பனுக்கோ வயது மேலிட்டால் தொழில் செய்வதில் உடலில் தக்க பலம் இல்லாமல் போய் விட்டது. ஏற்றத்தின் மீதேறி மிதிக்கவும் முடியவில்லை. வேலை செய்தால்தானே வருமானம்?

மகனின் இந்தப் போக்கை எப்படியாவது மாற்றக் கல்யாணம் செய்து வைத்தால் சரியாகிவிடுமென்று எண்ணினான் சின்னப்பன். ஆனால், செங்கோடனோ கல்யாணமாகி ஓரிரு வருடங்கள் வரையில் தகப்பனுடன் ஒத்துழைத்து வேலை செய்து ஒழுங்காக இருந்தான்.

அவன் மனைவியும் பொன்னியைப் பெற்றெடுத்த ஒரு வாரத்துக் கெல்லாம் இறந்து விட்டாள். செங்கோடனுக்கு அடக்க முடியாத வருத்தம்தான்.

அந்தத் துயரத்தை மறக்கவே அவன் வெளியே சுற்றலானான். பல மாதங்கள் செங்கோடனைப் பற்றிய விவரமே தெரியாது. ஒருநாள் திடீரென்று பெருங்கூச்சல் கேட்கும் குடிசை வாயிலிலே.

செங்கோடன் யாருடனாவது இரைந்து கொண்டிருப்பான். வேலப்பன், செங்கோடனின் நெருங்கிய நண்பன். திருட்டுச் சாராயம் காய்ச்சுவதில், விறகுகள் வெட்டுவதில் அவன்தான் கூட்டாளி.

இரண்டு பேரும் சண்டை போடுவார்கள். பிறகு சமாதானமடைந்து விடுவார்கள்.

சின்னப்பனுக்கோ இரண்டு பேரையுமே தீர்த்து விட்டாலென்ன என்று தோன்றும். பிறந்திருக்கும் அந்தக் குழந்தை - பேத்திக்காகத் தான் தன் கோபத்தை அடக்கிக் கொண்டான்.

ஆனால், வருடமாக ஆக சின்னப்பனின் உடலில் தள்ளாமை அதிகமாகியது. அந்தப் பக்கத்திலேயே மழை பெய்து பல வருடங்களாகி விட்டன. பூமியெல்லாம் பாளம் பாளமாக வெடித்து விட்டது. 'பஞ்சம், பஞ்சம்' என்று எல்லாரும் பேசிக் கொண்டனர்.

வேலை செய்யாமல் பிழைப்பது மட்டும் சுலபமா? சின்னப்பன் தன் பேத்தியைக் காப்பாற்ற மிகவும் கஷ்டப்பட்டான்.

செங்கோடன் எப்போதாவது வருவான்; 'இந்தா கஞ்சி காச்சத் துட்டு' என்பான்.

அது திருட்டுச் சாராயம் காய்ச்சியதில் கிடைத்த காசு என்பது சின்னப்பனுக்குத் தெரியும். அதைச் சுழற்றி அவன் முகத்தின் பேரிலேயே அடிப்பான். கோபமாகக் கத்துவான்.

செங்கோடன் அந்த இடத்தை விட்டுப் போன பிறகு கண்களில் நீர் தளும்ப வீசி எறிந்த காசைப் பொறுக்கி எடுப்பான். அன்றைய கஞ் சிக்கு அதுதான் உதவும்.

செங்கோடனை ஒரு வாரமாக அந்தப் பக்கமே காணவில்லை. ஒருநாள் இரவு வேலப்பன் வந்து, "திருட்டுச் சாராயம் காய்ச்சியதற்காக செங்கோடனைப் போலீஸார் கைது செய்து கொண்டு போய் விட்டனர்" என்றான்.

மேலையூரான்தான் காட்டிக் கொடுத்தான் என்று கேள்விப்பட்டதும் அவனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. வேலப்பனின் தலை மயிரைக் கெட்டியாகப் பிடித்து உலுக்கி, "பாவி உன்னால்தானே என் மகன் பாழானான்... இப்ப அவன்தானே அகப்பட்டுக் கொண்டான்" என்று கூவினான்.

வேலப்பனுக்குத் தெரியும். கிழவனுக்குக் கோபம் வந்தால் அது

விபரீதத்தில்தான் போய் முடியுமென்று. சட்டென்று சமாளித்து விடுவித்துக் கொண்டு கொஞ்சமும் கவலைப்பட வேண்டாமென்றும் தான் எப்படியாவது செங்கோடனைத் தப்பிக்க வைத்து விடுவதாகவும் கூறிச் சென்றான்.

சின்னப்பனுக்கு ஆத்திரமும் வருத்தமும் தாங்கவில்லை. வறுமை வேறு அவனைப் பிடித்து ஆட்டவே, தன் மகன் மீது ஏற்பட வேண்டிய கோபம் மகனைக் காட்டிக் கொடுத்த மேலையூரான் மீது பாய்ந்தது.

செங்கோடனுக்கு ஒரு வருடக் கடுங்காவல் விதித்து விட்டார்கள். அந்த ஒரு வருஷமும் கழிவது சின்னப்பனுக்கு யுகம் கழிவது போலிருந்தது.

ஒரு வருஷத்திற்குப் பிறகு செங்கோடன் வரும்போதே வைராக்கியத்துடன் வந்தான். தன்னைக் காட்டிக் கொடுத்த மேலையூரானைத் தீர்த்துப் போடாவிட்டால் செங்கோடன் தானில்லை என்று மீசை முறுக்கினான். சின்னப்பன் பதிலே பேசவில்லை.

செங்கோடனுக்கு வீட்டு நினைவே இல்லை. வேலப்பனுடன் சேர்ந்து கொண்டு மேலையூரானைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆலோசிக்கலானான். மேலையூரானின் நடவடிக்கைகளை நோட்டம் காணத் தொடங்கினான்.

ஒருநாள் கிராமத்துக் காளிக் கோயில் பக்கமாக மேலையூரான் வரும்போது நன்றாக இருட்டிவிட்டது.

செங்கோடன், வேலப்பன் இன்னும் நான்கைந்து பேர் மேலையூரானைச் சூழ்ந்து கொண்டனர். பலமான அடியுடன் குற்றுயிரும் குலையுயிருமாக வீழ்ந்த அவனை அப்படியே போட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர்.

இதயம் படபடக்க செங்கோடன் ஓடிவந்து மேலையூரானின் கதியைக் குறித்துத் தந்தையிடம் கூறவும், சின்னப்பனுக்குத் திகில் பிறந்தது. கத்தி, குத்து, கொலை என்று கிழவன் வாயால் பேசுவானே தவிர, இதுபோல் உண்மையிலேயே நடந்து விடும் என்பது தெரியாது.

''பாவி மவனே! என்னடா செஞ்சுப்பூட்டே... அவனைக் கொன்னுப் பூட்டியே... போலீஸ் உடனே வந்து புடிச்சுக்கிட்டுப் போனா கழுத்துக்குக் கயிறாச்சேடா...'' என்று கதறினான் கிழவன்.

பொன்னி - ஏழு வயதுச் சிறுமி - ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள். செங்கோடனுக்கு உண்மையிலேயே பயம் பிடித்தது.

தன் மகளின் பால்வடியும் முகத்தைப் பார்த்தான். பயத்தாலும் ஆத்திரத்தாலும் கடுகடுப்புடனிருக்கும் தந்தையின் முகத்தைப் பார்த்தான். என்ன செய்வது என்று துடித்தான்.

சின்னப்பனும், செங்கோடனும் யோசனை செய்தனர். இரவோடு இரவாக அந்தக் கிராமத்தை விட்டுக் கிளம்பினர். பொன்னியைக் கிழவனும் செங்கோடனும் மாறி மாறிச் சுமந்து சென்றனர்.

காட்டுப் பாதை வழியாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பல மைல் தொலைவு நடந்து இந்த மஞ்சள் மலைச்சாரலுக்கு வந்து சேர்ந்தனர்.

மஞ்சள் மலைப்பிராந்தியத்தில் புகுந்து கொள்பவர்களைத் தேடிப் பிடிக்க யாராலும் முடியாது. அத்துடன் இவர்கள் முன்னர் வசித்த ஊருக்கும் இந்த இடத்துக்கும் பாட்டை வழியாக வருவதாக இருப்பின் நூறு மைல்களுக்கு மேலாகும். குறுக்கு வழியிலே வெகு சீக்கிரம் அந்த இடத்தை அடைந்து விட்டனர்.

அந்த இடத்துக்கு வந்த பிறகு ஓரிரு வாரங்கள் செங்கோடன் அங்கேயே தங்கியிருந்தான். பிறகு ஒருநாள் எங்கோ போனவனைக் காணவில்லை.

சின்னப்பன் தனக்காக இல்லாவிடினும் பொன்னிக்காகவாவது ஏதாவது தொழில் செய்து தீர வேண்டியிருந்தது.

அந்தப் பக்கத்தில் ஒரு பாம்பாட்டிச் சித்தன் கிழவனுக்குச் சிநேகமாகவே மகுடியொன்றை அவனிடமிருந்து சம்பாதித்துக் கொண்டு, பாம்பையும் ஆட்டப் பழகிக் கொண்டான்.

பக்கத்துக் கிராமத்தில் பாம்பாட்டிப் பிழைத்து 'பிடாரன்' என்ற பெயரும் பெற்று விட்டான்.

பொன்னி வளர வளர கிழவனின் தள்ளாமை அதிகமானதோடு, பொன்னியைக் காப்பாற்ற வேண்டிய கவலையும் அதிகமானது.

செங்கோடன் ஒரே வழியாக ஒழிந்தே போய்விட்டான் என்றே தான் முடிவு செய்தான்.

இவற்றையெல்லாம் எண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டே கிழவன் பாம்புக் கூடையுடனும் மகுடியுடனும் பாறை மீது ஏறி, கீழே இறங்கிக் கொண்டிருந்தான்.

மண்குடத்தை எடுத்துக் கொண்டு காட்டாற்றினின்று தண்ணீர்

எடுக்கச் சென்ற பொன்னி சட்டென்று திடுக்கிட்டாள். பழனி அங்கே நின்று கொண்டிருந்தான்.

அவளது பானையைப் பிடுங்கி அவள் இடக்கையைப் பற்றப் போன அவனைத் தடுத்து, பொன்னி தன் உதட்டின் மேல் விரலை வைத்து, "உஸ்... இந்தச் சமயத்திலே ஏன் வந்தே? நான் இப்போ தண்ணி எடுக்க வந்தது நிஜமாத்தான்... நான்தான் சொல்லியிருக்கேனே... வெயில் கொஞ்சம் மலை ஏறும்போது வா... பொய்க்கோசரம் தண்ணிக் குடத் தோடே வருவேன்னு சொன்னேனே... இப்போ... தாத்தா பார்த்துச் கண்டா என்னையும் உன்னையும் இங்கேயே பலியாக்கிடும்" என்றாள்.

பழனி சிரித்துக் கொண்டே, "பலி... நன்னா ஆக்கட்டுமே... இன்னும் எத்தினி நாளைக்கு மறஞ்சு மறஞ்சு பாத்துக்கறது? தாத்தாவைத்தான் நான் கேட்டுப் பூடறேன். அப்படிப் பலியாக்கினா ரொம்ப நல்லதாப் போச்சு. என் அப்பன் போன இடத்துக்குப் போறேன்" என்றான் பழனி சிரித்துக் கொண்டே.

பிறகு அருகே இருந்த ஒரு பாறையின் மீதமர்ந்து தன் உள்ளங்கால்களை ஒருமுறை தடவிக் கொண்டான். அதில் பல இடங்களில் ரத்தம் கசிந்து கிடந்தது.

"ஐயோ... என்னது?" என்று பரபரப்புடன் சொல்லிக் கொண்டே குனிந்தாள் பொன்னி.

அவனது உள்ளங்காலைத் தனது மெல்லிய விரல்களால் தடவி விட்டது பழனிக்கு எங்கோ நினைக்க முடியாத இன்பபுரிக்குச் செல்வது போன்றிருந்தது.

"என்னவா? 'ஏன் வந்தே' என்று கேட்டியே... அந்தப் பேச்சைக் கேட்கறதுக்குத்தானே இந்தக் காட்டில் குறுக்குப் பாதை வழியா விழுந்தடிச்சு ஓடியாந்தேன். அதன் விளைவு இது. உன்னைப் பார்த்து ஒரு மாசமாச்சேன்னு வந்தா... நீ சொன்னது ஒண்ணே போதும்" என்றான் பழனி.

பொன்னி மெல்லச் சிரித்தாள். "நான் என்ன செய்றது? தாத்தாவுக்கு இப்போ எல்லாம் அசாத்தியக் கோபம் வந்து போடறது. 'உங்கப்பன் போன எடமா பார்த்து போயிடக்கூடாதா'ங்குது. எங்கப்பா கொலை செஞ்சு போட்டு ஓடினா... நான் என்ன பாவம் செஞ்சேன்? வரவர எனக்கு இந்தக் காடும் மலையும் பிடிக்கவே இல்லை. ஒண்ணு தோணுது. எங்காவது போய் சின்னக் குடிசையா காட்டிலே போட்டுட்டுப்

பிச்சை எடுத்தாலும் பரவாயில்லை. இந்த இடம் வேண்டாம்னு'' என்று பேசிக் கொண்டே போனாள் பொன்னி.

குடத்திலே இருந்த தண்ணீர், குடம் சாய்ந்ததால் கொஞ்சம் கொஞ் சமாகச் சிந்தி ஆற்று நீருடன் கலந்து கொண்டிருந்தது.

பழனி மெல்ல பொன்னியின் கையை வருடினான்.

சிறிது நேரம் சலனமற்றிருந்த பொன்னி, சட்டென்று அவன் பிடியினின்று தன்னை விடுவித்துக் கொண்டு, ''ஐயோ... தாத்தா வெளியே போற நேரமாச்சு'' என்று பானையைத் தூக்கிக் கொண்டு ஓடினாள்.

பழனி அவள் போவதையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தான்.

பொன்னி ஓடிப் போய்க் குடிசைக்குள் நுழைவதற்கும் பிடாரக் கிழவன் மீண்டும் பாறை மீதிருந்து கீழே மற்றொரு மனிதனுடன் பேசிக் கொண்டு இறங்குவதற்கும் சரியாக இருந்தது.

கிழவனுடன் வந்தவன் தலை பரட்டையாக இருந்தது. அடர்த்தியான தாடியுடன், சிவந்த கண்களுடன் அவன் அடிக்கடி 'ஹோ ஹோ' என்று சிரித்தவாறு தாத்தாவுடன் பேசிக் கொண்டு வருவதைப் பார்த்தாள் பொன்னி.

முதல் நோக்கிலேயே அவளுக்கு அந்தப் புது மனிதனைப் பிடிக்கவில்லை.

பொன்னி குடிசைக்குள் நுழைந்து சற்று மறைவாக நின்றாள்.

''பொன்னி!'' என்று கூப்பிட்ட தாத்தாவின் குரல் கேட்டு பொன்னி வெளியே வந்தாள்.

தன் தகப்பனாரின் நண்பர் அந்தப் புது மனிதர் என்பதைத் தாத்தா சொல்லவும், பொன்னி அந்த மனிதரைத் தன் கடைக்கண்ணால் ஏற இறங்கப் பார்த்தாள்.

வேலப்பன் என்னென்னவோ பேசிக் கொண்டே இருந்தான். பேச்சின் இடையே, மேலையூரானைக் கொன்றதற்காகத் தனக்கு ஏழு வருடங்கள் தண்டனைக் கிடைத்ததாகக் கூறும்போது கிழவன் திடுக்கிட்டான்.

''அடப்பாவி! நீயா அவனைக் கொன்றாய்? ஐயோ... என் மவன்தான் கொன்றதாக அன்று பயத்தால் ஓடி வந்து நடுங்கிப் போனேனே.

போலீஸுக்குப் பயந்து அன்று ஓடி வந்தவங்கதானே நாங்க? ஐயோ... நாட்டிலே வாய்க் கூழு குடிச்சிட்டாவது இருந்திருக்கலாமே... இந்தப் பொண்ணையும் கஷ்டப்படுத்திட்டு இந்த மலைக்காட்டிலே காலத்தைக் கழிக்கிறோமே...'' என்று கிழவன் கூவினான். வரவர அவன் குரல் கம்மியது.

திடீரென்று வேலப்பனின் தோளைப் பிடித்து உலுக்கி, ''டேய் நீங்கள்லாம் ஒழுங்கா இருந்தா இத்தனை கஷ்டம் உண்டாடா? என் மவன் எங்கோ போனவன் இன்னிவரை காணலைடா... காணலைடா...'' என்று இன்னும் பலமாகக் குலுக்கினான் கிழவன்.

வேலப்பன் மெல்ல கிழவனிடமிருந்து தன் தோளை விடுவித்துக் கொண்டு பேச்சை மாற்ற எண்ணி... ''சுற்று வட்டாரக் கிராமம் எல்லாம் 'பிடாரத் தாத்தா.. பிடாரத் தாத்தா'' எனறு ஒரேயடியாப் புகழறது... நானோ சீர்கெட்டு போயிட்டேன்... பெண்டாட்டியும் ஜெயிலிலே இருந்தப்ப செத்துப் போயிட்டா. மவனையும் காணோம். அவனைத் தேடித் தேடி காணாம அலுத்துப் போச்சு. தாத்தா உன் மவனையும் காணோம். என் மவனையும் காணோம். தாத்தா... அந்தக் குட்டி ஒம் பேத்தியா? செங்கோடன் மவளா? எம்மாம் பெரியவளாவளர்ந்திருக்கா?'' என்று தன் விழிகளைப் பொன்னியின் பக்கம் திருப்பினான்.

கிழவன் பதிலே பேசவில்லை.

அன்றைய தொழில் வீணாச்சு என்று தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

பொன்னியும் மெல்ல அந்த இடத்தை விட்டு நழுவினாள்.

என்னவோ நினைத்துக் கொண்டவள் காட்டாற்றங்கரையை நோக்கிப் போனாள்.

பழனி இன்னுமா அங்கு இருப்பான்?

வேலப்பன் ஏழெட்டு வருஷங்களாக ஜெயிலில் இருந்தாலும் அவனது உணர்ச்சிகள் ஏதும் செத்துப் போகவில்லை.

அடர்ந்த தாடி மீசைகளுக்கிடையே உள்ள முகத்தில் விளங்கும் இரு கண்களும் ஏதோ ஏக்கத்தில் இருந்தன.

பொன்னியைக் காணும்போது அது மலர்ந்தன.

அவனும் கல்யாணமாகி மண வாழ்க்கையில் சுகப்பட்டவனல்லன். ஒரு குழந்தைக்குத் தகப்பனாகி, அவன் வளர்ந்து நாலைந்து

வயதாகும் வரையில் மிக நல்லவனாக இருந்திருக்கிறான். தன் மகனின் பதினான்காவது வயதில்தான் ஜெயிலுக்குப் போக நேர்ந்தது.

இடையில் பத்து வருஷங்களும் அவன் கண்டபடி சுற்றித் திருட்டுக் கோஷ்டிகளுக்கெல்லாம் தலைமை வகித்தான். அந்தப் பக்கத்துக் காடும் மலையும் அவனுக்கு பழக்கமான இடங்களாயின.

பொன்னியைப் பார்த்தவுடனே அவனுக்குச் சபலம் தட்டியது. தன் தோழன் செங்கோடன் இருந்தால் துணிந்து அவனிடம் உன் மகளை எனக்குக் கட்டிக் கொடுத்துவிடு என்று கேட்டிருப்பான். ஆனால், அவனைத்தான் காணவில்லையே!

ஆனால், இப்படியே காலம் செல்லவில்லை.

கிழவனின் மனசு மிகவும் துக்கப்பட்டு, துக்கப்பட்டு ஒடுங்கி வந்து கொண்டிருந்தபோது ஒருநாள் அதிகாலையில் செங்கோடன் திரும்பி வந்து விட்டான்.

அவன் இப்பொழுது மிகவும் இளைத்திருந்தான்.

வரும்பொழுதே அவனுக்குக் கோபம் ஏற்படும்படியான சம்பவம் அங்கு நிகழத்தான் செய்தது.

குடத்துடன் ஆற்றங்கரைக்குச் செல்லும் தன் மகளை யாரோ வழி மறித்துப் பேசுவதை அவன் மேற்குப் பாறையினின்று இறங்கும்போது பார்த்து விட்டான்.

நல்லவேளையாக அது வேலப்பன் என்று அறிந்த பிறகுதான் அவன் கோபம் இன்னும் அதிகமாகவில்லை. சிறிது அடக்கிக் கொண்டான்.

அவன் எப்படி இங்கு வந்தான் என்பது செங்கோடனுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

சின்னப்பன், செங்கோடன், வேலப்பன் மூவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்போதுதான் செங்கோடன் வேலப்பனின் தண்டனை விவரத்தை அறிந்தான்.

மேலையூரானைக் கொலை செய்தது தான்தானேன்று அவன் சொல்லும்போது செங்கோடனுக்கு உள்ளத்தே பொறாமை எழுந்தது.

இரண்டு மூன்று நாள்கள் குஷியும் கும்மாளமுமாகச் சென்றன.

ஆனால், செங்கோடனுக்கு மட்டும் வேலப்பன் பேரில் சொல் லொண்ணா ஆத்திரம் கொஞ்சம் கொஞ்சமாக எழுந்து வந்தது.

அதுவும் அவன் தன் மகளுடன் நெருங்கிப் பேசுவதும், கண் சிமிட்டிப் பேசுவதும் செங்கோடனுக்கு அறவே பிடிக்கவில்லை.

இடையே பொன்னியும் பழனியும் யாருமறியாமல் சந்திக்கத் தவறுவதே இல்லை.

பொன்னியும் வந்திருக்கும் புது மனிதர்களைப் பற்றி அதிகம் சொல்லாவிடினும் அந்த வேலப்பக் கோட்டானின் மூஞ்சியைக் கண்டால் பிடிக்கவில்லை என்று மட்டும் கூறுவாள்.

ஒருநாள் மாலை. சூரியன் மறைவதற்கு ஒரு நாழிகை இருந்தது.

மஞ்சள் வெயில் இலேசாகப் பாறைகளின் மீது படிந்திருந்தது. வானத்தில் மேகங்கள் இல்லாததால் தெளிவாக இருந்தது.

கிழவன் குடிசை வாசலில் உட்கார்ந்து கொண்டு மண்வெட்டியின் காம்பைச் சரி செய்து கொண்டிருந்தான்.

திடீரெனக் கீழ்ப்பாறையில் அருகிலிருந்து கோரமான சப்தம் கேட்டது.

இடையிடையே பொன்னியின் கீச்சுக்குரலும் எழுந்து அந்தப் பயங்கரத்தை அதிகமாக்கியது.

கிழவன் சட்டென்று மண்வெட்டியைத் தட்டுவதை நிறுத்தி சப்தம் வந்த திக்கை நோக்கிக் காது கொடுத்துக் கேட்கலானான்.

அதே சமயம்... பொன்னி 'தாத்தா தாத்தா' என்று அலறிக் கொண்டே ஓடி வந்தாள்.

கிழவன் பரபரப்புடன் கையில் மண்வெட்டியுடன் எழுந்து ஓடினான்.

பாறையின் மீதிருந்து பார்த்தால் செங்கோடனும், வேலப்பனும் ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துப் புரண்டு கொண்டிருந்தனர்.

செம்மண் புழுதி அந்த இடத்திலிருந்து கிளம்பிக் கொண்டிருந்தது. இருவர் உதடுகளும் பயங்கரமாக எதையெதையோ முணுமுணுத்தன.

இருவரின் உடலின் பல பாகங்களினின்றும் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

இப்பொழுது வேலப்பன், செங்கோடனைக் கீழே தள்ளி விட்டான். தன் பலம் கொண்ட மட்டும் அவன் தலையைப் பூமியில் தாக்கிக் குரல்வளையைப் பிடித்து அழுத்தி, ''சாவுடா எம்மவனே...

ஒழிடா... என்ன பண்ணிப் போட்டேன் உன் மவளே... பிசாசே...'' என்று பயங்கரமாகக் கர்ஜித்தான்.

பொன்னி 'கீச்'சென்று பயம் தாங்காமல் கூவினாள்.

கிழவன் ஒரே எட்டில் கீழ்ப் பாறையினின்று கீழே இறங்க முயன்றான். ''டேய்... என்னடா அது கொலைகாரச் சண்டை'' என்று அதட்டினான்.

கிழவனின் குரலைத் திடீரென்று கேட்ட வேலப்பன் சட்டெனத் திரும்பவே செங்கோடன் தன் பலம் முழுவதையும் உபயோகித்துத் தன் காலால் அவனை உதைத்துத் தள்ளி, கண்மூடித் திறப்பதற்குள் கிழவன் கையில் வைத்திருந்த மண்வெட்டியைப் பறித்து, வேலப்பன் தலையைப் பலம்கொண்ட மட்டும் உலுக்கி, அவன் மண்டையைப் பாறையோடு பாறையாகச் சேர்த்துத் தாக்கு தாக்கென்று தாக்கினான்.

மண்டையினின்று பாய்ந்த குருதி ஊற்று அவன் முகத்திலே, பாறையிலே, அந்தப் பாறை இடுக்கில் வளர்ந்திருக்கும் பசுஞ் செடிகளிலே தெறித்தன.

தலை தொங்க தொப்பென்று விழுந்த வேலப்பனைப் பார்த்து செங்கோடன் என்னவோ முணுமுணுத்தான்.

ஆனால், இந்தப் பக்கம் திரும்பினால் பொன்னி யாரோ ஒரு வாலிபனின் மார்பிலே பயத்தால் முகத்தைப் புதைத்திருக்க, அந்த வாலிபன் மீசை துடிக்க நின்று கொண்டிருந்தான்.

அவன்தான் பழனி என்று கூறவும் வேண்டுமா?

செங்கோடனுக்கு இன்னும் ஆத்திரம் தீர்ந்தபாடில்லை. அவன் பிரமை பிடித்தவன் போல் மாறி மாறிப் பார்த்தான். ஆனால், அவனால் மகளையும், அந்தப் புது மனிதனையும் நோக்கி ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை.

சூரியனும் மங்கி மயங்கி மலைவாயில் விழுந்தபோது, செங்கோடனும் மயங்கி விழுந்தான்.

அந்தப் புது வாலிபனை யார் என்று அறியக் கிழவன் துடித்தாலும், அந்தச் சமயம் செங்கோடனைத் தூக்கிக் குடிசைக்குக் கொண்டு செல்ல அவன் உதவி தேவையாயிருந்ததால் கிழவன் ஒன்றுமே பேசவில்லை.

உடலெங்கும் காயத்துடன் குற்றுயிராய்க் கிடந்த செங்கோடனை பழனியும், கிழவனுமாகச் சுமந்து கொண்டு போய்க் குடிசையில்

கிடத்தினார்கள். கிழவனோ பல மூலிகைகளைக் கொண்டு வர பரபரப்புடன் வெளியே ஓடினான்.

பழனியும் பொன்னியும் ஒருவரையொருவர் ஒரு விநாடி பார்த்துக் கொண்டனர். இருவர் கண்களிலும் ஏனோ நீர் துளிர்த்தது. சில நாழிகைகளில் நடந்துவிட்ட அந்தப் பயங்கர சம்பவம் பொன்னிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

எப்பொழுதும்போல் அவள் பாறையின் பக்கம் புல்லைச் செதுக்கிக் கொண்டிருந்தபோது, வேலப்பன் பின்னால் வந்தான். இவ்வளவு நாள் பொன்னியைத் தொடுவதற்குச் சற்று தயங்கிய அவன், அப்பொழுது மிகவும் துணிவோடு அவள் கையைப் பிடித்தான்.

வேலப்பனைத் தன் தாத்தாவைப் போல் மற்றொரு தாத்தா என்று எண்ணிய அவள், இந்த அடாத செய்கையைக் கண்டவுடன் திடுக்கிட்டாள். அந்த இரும்புப் பிடியினின்று எப்படியும் தப்பாவிடில் மறுகணம் தான் மானபங்கம் செய்யப்படுவோம் என்று அஞ்சினாள்.

அவளால் கூவக்கூட முடியவில்லை. ஆனால், அந்தச் சமயம் செங்கோடன் திடீரென அங்கு தோன்றினான். இருவருக்கும் துவந்த யுத்தம் நடந்தது.

பழனியும் அந்தப் பயங்கர யுத்தத்தைப் பார்க்க எதிர்பாராமல் வந்ததைக் கண்டு பொன்னி கூட திடுக்கிட்டாள். ஆனால், அவனோ மிகவும் கலவரத்துடன், துடிப்புடன் சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்தான். தனக்கு வேண்டியவர் யாரோ சண்டையிடுவதாக அவனுக்குத் தோன்றியிருக்கலாம். ஆனால், வேலப்பன் பயங்கரமாக நசுங்குண்டு கிடந்ததைப் பார்த்தவுடன்தான் பழனி திடுக்கிட்டான். அவன் உடல் துடித்தது.

செங்கோடனின் அருகில் உட்கார்ந்து கொண்டு பச்சிலைச் சாற்றைப் பிழிந்துக் கொண்டிருக்கையில் பழனி துக்கம் நிறைந்த குரலில் கூறினான்:

''சிறு வயதில் என்னையும் தாயையும் திடீரென விட்டுவிட்டு ஜெயிலுக்குப் போன பிறகு என் அப்பனையே அடியோடு மறந்தேன். திரும்பி எங்கே வரப் போகிறார் என்று நினைத்தேன். பல இடங்களைச் சுற்றி என் காலத்தைத் தள்ளி வந்த என் மனத்திலே பொன்னி புகுந்து விட்டாள். அன்று வழக்கம்போல் பொன்னியைச் சந்திக்க வந்தேன். பொன்னியைப் பார்க்க வந்து எப்படியாவது அவள் தாத்தாவிடம் அவளைக் கட்டிக் கொடுக்கிறதைப் பற்றிக் கேட்க வந்தவன், பயங்கரக்

கூச்சலுடன் யாரோ சண்டைப் போடுவதைக் காணச் சென்றபோது நான் கண்ட காட்சி என்னை அப்படியே கல்லாக்கிவிட்டது. யாரை மறந்ததாக நான் எண்ணினேனோ, அதே தகப்பனார் இங்கே பயங்கரச் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். இன்னொரு மனிதரோ சிறு வயதில் நான் பார்த்த அதே செங்கோடன்தான். என் அப்பன் செத்துப் போனான். எனக்குச் செங்கோடன் மேல் பழிவாங்கக் கோபம்தான். ஆனால், என் பொன்னி செங்கோடனின் மகள் என்று தெரிந்தவுடன் நான் என்னத்தைப் பண்ணுவது?'' - பழனியின் நெஞ்சு தழுதழுத்தது. கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகியது. கைகள் பச்சிலையைச் சாறாகப் பிழிந்து கொண்டிருந்தன..

''வேலப்பனின் மகனா?'' என்று சின்னப்பன் கூவினான். மெல்லக் கண்விழித்த செங்கோடனும் அதைப் புரிந்து கொண்டான். ஆனால், உடல் முழுமையும் ஏற்பட்டிருந்த காயத்தின் அதிர்ச்சியால் அவனால் ஒரு வார்த்தைக்கூடப் பேச முடியவில்லை.

தன் மகள் கையை வாஞ்சையுடன் பற்றினான். தன் தகப்பனை ஒரு முறை பார்த்து அவர் கையைப் பிடிக்கும் நினைவாக பழனியின் கரத்தைப் பிடித்தான். பொன்னியின் கரத்தோடு இணைத்தான்.

''இனிமே நீதான்'' என்று மரணத்தின் கடைசி வார்த்தைகள் குளறிக் குளறி வந்தன. பழனியும் பொன்னியும் 'கோ'வெனக் கதறினர். வேலப்பனைப் புதைத்த இடத்திற்குப் பக்கத்திலேயே செங்கோடனையும் புதைத்தனர்.

ஒரு வாரம் கழித்து அதே குடிசையின் வாயிலில் கிழவன் உட்கார்ந்திருந்தான். ''நாதர் முடி மேலிருக்கும்'' மகுடியினின்று மெல்லிய குரலில் இசையை எழுப்பிக் கொண்டிருந்தான்.

எதிரே பெட்டியிலுள்ள பாம்பு ஆடிக் கொண்டிருந்தது. ஆனால் பழனியோ, பொன்னியின் கண்களையே பார்த்துக் கொண்டு தன் வசமிழந்து நின்று கொண்டிருந்தான். இப்பொழுது பொன்னிதான் பழனிக்கு மகுடி ஊதிக் கொண்டிருக்கிறாள்.

● ● ● ●

# 88. அவள் ஒரு குழந்தை அவளுக்கு ஒரு குழந்தை!

டாக்டர் வீட்டில் அன்று கூட்டம் குறைவு. மணி எட்டாகி விட்டது. யாராவது நோயாளிகள் இருக்கிறார்களா அல்லது வீட்டிற்குப் போகலாமா என்றெண்ணி டாக்டர் கோபால் 'ரிசப்ஷன்' ஹாலை எட்டிப் பார்த்தார்.

இளம் பெண் ஒருத்தி கையில் குழந்தையுடன் 'தேமே' என்று உட்கார்ந்திருந்தாள். அவளை உள்ளே அழைத்தார் டாக்டர்.

''உனக்கு என்னம்மா உடம்புக்கு?'' என்று கேட்டு அவளை ஏற இறங்கப் பார்த்தார். வயது பதினெட்டு, பத்தொன்பதுதான் இருக்கும் அவளுக்கு.

'களுக்'கென்று சிரித்தாள் அவள். சிரிப்பினாலோ அல்லது மூச்சு விடுவதனாலோ அவள் இதயபீடம் விம்மித் தணிவது வயதான அந்த டாக்டரின் கண்களினின்று தப்பவில்லை.

''எனக்கில்லை டாக்டர்! இதோ...'' என்று தன் மடியிலிருந்த குழந்தையைச் சுட்டிக் காட்டினாள். குழந்தை பிறந்து எட்டு மாதங்கள் ஆகியிருக்கலாம். மீண்டும் சிரித்தாள்.

டாக்டர் கோபால் மெல்லப் புன்முறுவல் பூத்தது அவளுக்குத் தெரிந்திருக்க முடியாது.

''உன் குழந்தையா? அல்லது உன் அம்மாவின் குழந்தையா?'' என்று டாக்டர் கேள்வி மேல் கேள்வி கேட்கிறாரே தவிர, என்ன உடம்புக்கு என்று கேட்கக் காணோமே...

''ஏன் டாக்டர் அப்படிக் கேட்கிறீர்கள்? என் குழந்தைதான்! என் அம்மாவுக்கு இனி குழந்தை பிறக்காது. நான் எட்டாவது குழந்தை'' என்றாள் அந்தச் சின்ன அழகி சுதா.

டாக்டர் கண்ணாடியைக் கழற்றி மெல்லத் துடைத்துக் கொண்டு கேட்டார்: ''அதுதானே கேட்டேன்! 'நீயே ஒரு குழந்தை; உனக்கு ஒரு குழந்தையா?' என்று நினைத்தேன்.''

சுதாவின் முகம் நாணத்தால் மாறியது. அதுகூட அழகாகத்தான் இருந்தது.

அமுதப் பாலைப் பருகி முடித்த பாலகன் தூங்கிக் கொண்டிருந்தான். கடை வாயிலிருந்து வழிந்தது மெல்லிய பால் ரேகை. சுதா தலைப்பை இழுத்து மூடிக் கொள்ளக் கூட மறந்தாள். இளமையின் சின்னம் டாக்டரைப் பார்த்துப் பரிதவிக்க வைத்தது.

''ஆமாம் டாக்டர்! நான் அம்மாவுக்குச் செல்லக் குழந்தை. எனக்குப் போன வருஷமே கல்யாணம் செய்து கண்குளிரப் பார்த்து விட்டாள். இந்த வருஷம் பேரனையும் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறாள்!'' என்றாள் சுதா. மீண்டும் சிரிப்பு!

''அது சரி... உன் கண்ணுக்கடியில் உள்ள கரு வளையம்... இன்னொரு பேரனையோ... பேத்தியையோ பார்த்து விடுவாள் உன் அம்மா'' என்று கூறியவாறு ஸ்டெதாஸ்கோப்பைக் குழந்தையின் முதுகில் வைத்தார்.

ஒரு கையால் முகத்தை மூடிக் கொண்டாள் சுதா.

''குழந்தைக்கு மார்பில் சளி. பால் கொடுக்கும் தாய் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உன் அமுதத்தை அது சாப்பிடுகிறது. அமுதம் படைக்கும் நீ... கவனமாக, பத்திரமாக, சற்றே எச்சரிக்கையாக...'' என்று கூறிக் கொண்டே போனவர் சுதாவின் நாடியையும் மெல்லப் பார்த்தார்.

''குழந்தை! நான் உன்னை அப்படித்தான் அழைக்கப் போகிறேன். உன் வயதில் எனக்கு ஒரு பெண் இப்போது காலேஜில் படிக்கிறாள். உனக்கோ கல்யாணமாகி ஒரு குழந்தை பிறந்து மற்றொரு குழந்தைக்கும் நீ தாயாகப் போகிறாய்... உன் கணவருக்கு என்ன வேலை? அவர் உன்னுடன் வரவில்லையா?'' என்று சுதாவின் குடும்பக் கதையை மெல்லக் கேட்கத் தொடங்கினார் டாக்டர் கோபால்.

சுதாவுக்குச் சற்றுக் கஷ்டமாக இருந்தது. தூங்கும் குழந்தையைக் குனிந்து அருகில் உள்ள பெஞ்சில் விடப் போனவள் அப்பொழுதுதான் உணர்ந்தாள், இடப்புறத்து அமுதத்தைக் குழந்தைச் சுவைத்த பிறகு அமுத கலசத்தை மூடி மறைக்கவில்லை என்று. அவளுக்கு நாணம் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை 'ஜிவ்'வென்று பாய்ந்தது.

தான் இன்னும் குழந்தைதானே? அம்மாவும் பலமுறை கூறியிருக்கிறாளே?

'சுதா! தூங்கும்போது சற்று மாராப்பு மீதும் கவனமிருக்கட்டும். குழந்தைத்தனம் இன்னும் போகவில்லை' என்று.

அதை நினைத்துக் கொண்டாள். டாக்டரிடம் சற்று மனம் விட்டுப் பேச வேண்டும் போலிருந்தது.

"டாக்டர்! மூன்று மாதம் உண்டாகியிருப்பதை இரண்டு நாள்களுக்கு முன்புதான் உணர்ந்தேன். என் வயதே ஆகும் என் சிநேகிதிகள் சாடையாக என்னைக் கேலி செய்கிறார்கள்..."

"குழந்தை பெற்றால் நீயாவது குழந்தைக்குப் பால் தருகிறாய். இந்தக் காலத்தில் குழந்தை வாயில் ஒரு ரப்பரைத் திணித்து விடுகிறார்கள். அது சரி... உன் கணவருக்கு எங்கே வேலை என்று கூறினாய்?"

"மில்லில் வேலை... ஷிப்ட் டியூட்டி..."

"உன் கணவர் உன்னிடம் பிரியமாக இருப்பாரா?"

டாக்டரின் இந்தக் கேள்விக்குப் பதில் கூறாமல் முகத்தை மறைத்துக் கொண்டாள்.

சுதாவின் கணவன் ரங்கதுரை... அவள் மேல் உயிரையே வைத்திருந்தான் என்று கூறலாம்.

இருபத்து மூன்று வயதுதான். சுருள் சுருளான தலைமுடி. சிரித்த முகம். சுதாவுக்கு அவனது கிராப்புத் தலையின் மீதும், மார்பில் படர்ந்திருக்கும் உரோமக் கொடி மீதும் மோகம். எவ்வளவு நேரம் கழித்து 'டியூட்டி'யினின்று வந்தாலும் சிரித்துப் பேசி மகிழ்ந்து குலாவிய பிறகுதான் படுக்கைக்கே செல்வார்கள்.

'அப்படி என்னதான் பேச்சும் சிரிப்பும் இருக்குமோ!' என்று அடுத்த போர்ஷன் குடித்தனக்காரர்கள் அங்கலாய்க்கும் அளவுக்கு அவர்களது இரவு லீலை இருக்கும்.

முதல் பிரசவத்திற்குப் பிறந்த வீட்டிற்கு அனுப்ப முடியாது என்று கணவன் பிடிவாதம் செய்தது இப்பொழுதும் சுதாவின் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது.

குழந்தை போல் சுதாவின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, "சுதா! உன் அம்மாவைத்தான் இங்கே பிரசவத்திற்கு உதவியாக வந்து விடச் சொல்லேன். உங்க ஊர் ஆஸ்பத்திரியை விட எங்க மில் ஆஸ்பத்திரி

யில் வசதி அதிகம், சுதா!'' என்று குழைந்ததும் அதற்கு அவள் பல பல சமாதானம் கூறி மறுத்ததும், ''சுதா... சுதா! உன்னை விட்டு என்னால் எப்படிப் பிரிந்திருக்க முடியும்?'' என்று அவன் கெஞ்சியதும் கொஞ்சியதும் இப்பொழுது கூடக் கண் முன்னால் நின்றன.

சுதா தலைப் பிரசவத்திற்குப் பிறந்த வீடு போனாள்.

அவள் போன நாற்பத்தைந்து நாள்களிலிருந்தே, 'எப்பொழுது வருகிறாய்? எப்பொழுது வருகிறாய்?' என்று ரங்கதுரை கடிதம் எழுதத் தொடங்கி விட்டான்.

சுதாவுக்கும் தன் கணவனை விட்டுப் பிரிந்திருக்க முடியவில்லை. பிஞ்சுக் குழந்தையை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தாள்.

அன்றிரவிலிருந்தே குழந்தையின் அழுகைச் சப்தமும், அந்த இளம் தம்பதியின் கலகலப்பு ஒலியும் கேட்கத் தொடங்கிவிட்டன.

அதன் விளைவு? சுதாவின் வயிற்றில் மற்றொரு சிசு.

''சுதா... உன் உடம்பு பலவீனப்படும். இந்தக் குழந்தை ஏற்கெனவே நோஞ்சானாக இருக்கிறது'' என்றார் டாக்டர்.

டாக்டரை ஏறிட்டுப் பார்த்தாள் சுதா. என்ன செய்வதென்ற கேள்வி அதில் தொனித்தது. டாக்டர் என்ன செய்வார்? மருந்து, மாத்திரை எல்லாம் எழுதிக் கொடுத்தார்.

''என்னை வந்து பார்க்குமாறு உன் கணவனிடம் மறக்காமல் சொல்லு'' என்று கூறியது எழுதாத மருந்துச் சீட்டு!

சுதா குழந்தையைத் தூக்கத் தெரியாமல் தூக்கிக் கொண்டு ரிக்ஷாவில் ஏறி வீட்டுக்குப் புறப்பட்டாள்.

குழந்தையை வைத்துக் கொண்டு ரிக்ஷாவில் ஏறுவதற்குக் கூட அவளுக்குத் தெரியவில்லை.

டாக்டரைப் பார்க்க சுதாவின் கணவன் வந்தான். பால் வடியும் வதனம் என்பார்களே... அது இன்னும் அவனிடம் மாறவில்லை. மீசையை ஒழுங்காக வெட்டி இருந்தான். அதிகமான பாலுணர்வு இருப்பது அவன் கண்களில் தெரிந்தது.

டாக்டர் அவனிடம் என்னென்னவோ பேசிக் கொண்டிருந்தார். கடைசியாகச் சொன்னார்: ''என் அட்வைஸ் என்னவென்றால் இன்னும் மூன்று வருடங்களுக்காவது மற்றொரு குழந்தை கூடவே கூடாது.

உங்கள் மனைவியின் உடல்நிலை மோசமாகி விடும்.''

சுதாவிடம் இரவு பேசிக் கொண்டிருக்கும்போது டாக்டர் கூறிய வற்றைச் சொன்னான். தொடர்ந்து, ''அதெப்படி முடியும் சுதா?'' என்றான் ரங்கதுரை, அவள் கன்னத்தைக் கிள்ளியவாறு.

அவள் மீது சாய முற்பட்ட அவனை, ''உச்... ஜாக்கிரதை! பாப்பா வயிற்றிலிருந்து கோவிச்சுக்கும்'' என்றாள் சுதா. தொடர்ந்து காதல் சிரிப்பு.

''சரிதான்... நீயும் டாக்டர் பேச்சைக் கேட்டு மனம் மாறத் தொடங் கிட்டே'' என்று சிணுங்கினான் அவன்.

அவன் கழுத்தைத் தழுவிக் கொண்ட சுதா, ''என் கண்ணு! எனக்கு என்னமோ இப்பொழுதெல்லாம் உடம்பு முடியலை. நாம எப்பவுமே பிரியாம இப்படியே இருக்கணும் என்பதுதான் என் ஆசை. டாக்டரோ, கடவுளோ யார் சொன்னாலும் நான் சம்மதிக்க மாட்டேன்'' என்றாள்.

சுதா மற்றொரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். பிறக்கும் பொழுதே நாலரைப் பவுண்டுதான் இருந்தது குழந்தை. சுதாவுக்கும் உடல் பலவீனப்பட்டு விட்டது. பழைய சோபை குறைந்தது. டாக்டர் வந்து பார்த்து, குறைந்தது ஆறு மாதத்திற்காவது பூரண ஓய்வு வேண்டும் என்று வற்புறுத்திக் கூறி விட்டார்.

அவன் சம்மதிப்பானா? சுதா பிறந்த வீட்டிற்குப் போகக் கூடாது என்று அவன் கண்டிப்பாகக் கூறிவிட்டான்.

டாக்டர் கூறிய எல்லாவித டானிக்குகளையும், மாத்திரைகளையும் வாங்கிக் குவித்து விட்டான்.

ஆனாலும் சுதாவின் தாயார் அவளை ஊருக்கு அழைத்துச் சென்று விட்டாள். மருமகனிடம் சற்றுக் கோபிக்கவும் தவறவில்லை.

இரண்டு மாதங்கள்தான் சென்றிருக்கும். ரங்கதுரைக்கு இருப்புக் கொள்ளவில்லை. கடிதம் மேல் கடிதம் போட்டான். ஒருநாள் ஊருக்கே புறப்பட்டுச் சென்று அடுத்த வண்டியிலேயே சுதாவை அழைத்து வந்து விட்டான். முதல் குழந்தை சுதாவை விட்டுக் கீழே இறங்க மறுத்தது. இரண்டாவது குழந்தை சதா அழுது கொண்டேயிருந்தது.

வண்டியில் பரிதாபமாகப் பலர் பார்த்தனர்... ''பாவம் சவலை! அதனால்தான் எப்பொழுதும் சிணுங்கிக் கொண்டு அழுகிறது'' என்று வண்டியில் இருந்தவர்கள் பேசிக் கொண்டனர்.

மறுநாள் சுதாவுக்கு டாக்டரின் நினைவு வந்துவிட்டது. உடனே டாக்டரைப் போய் பார்க்க வேண்டுமென்று தோன்றியது.

''சுதா... சௌக்கியமா?'' என்று டாக்டர் வரவேற்றார்.

''சௌக்கியமாயிருந்தால் டாக்டரிடம் வருவார்களா ஸார்?'' என்று சுதா ஒரு போடு போட்டாள். நகைச்சுவையாகப் பேசி உடல் உபாதையைத் தீர்த்துக் கொள்ள விரும்பினாள்.

''பரவாயில்லை! நன்றாக ஜோக் அடிக்கிறாயே! இனி நீ குழந்தை யில்லை பெரியவள்!'' என்றார் டாக்டர்.

''அப்ப இன்னொரு குழந்தை'' என்று சுதா சொல்லிச் சிரித்தாள்.

''ஊஹூம்! அதுதான் கூடாது சுதா! நீ எப்படியாகி விட்டாய்? ஒரு வருடத்திற்கு முன்பு இருந்த சுதாவா நீ? இன்னொரு குழந்தையா? நோ... நோ... ஆமாம் சுதா... நான் கேட்கிறேன் என்று தவறாக நினைக்காதே. உன் கணவருக்கு வேற எண்டர்டெயின்மெண்ட்டே கிடையாதோ? நீதான் அவக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். மனசை வேறு திசையில் திருப்பிக் கொள்ள வேண்டும். நீ வீட்டிலே என்ன செய்கிறாய்?'' என்று சற்றுக் கோபமாகவே கேட்டார்.

சுதாவின் கண்கள் கலங்கியிருந்தன. ''டாக்டர்! அது சம்பந்தமாகத் தான் உங்களிடம் நான் யோசனை கேட்க வந்தேன். ஒரு வேலையும் இல்லாமல் வீட்டில் இருந்தாலே மனம் அலை பாய்கிறது. 'டியூட்டி'யில் இருந்து பகல் ஒரு மணிக்கு வந்தால் உடனே அவர் என்னைக் கூப்பிடுகிறார். ஒரு யோசனை சொல்லுங்கள் டாக்டர்!''

டாக்டர் சிரித்தார். ''அந்த யோசனையைச் சென்ற வருடமே நீ செய்திருக்கலாம். நான் ஒன்று சொல்கிறேன். பேசாமல் டீச்சர்ஸ் டிரெய்னிங்கில் சேர்ந்து விடு. அங்கேயே தங்கிப் படிக்கலாம். இரண்டு வருடங்கள் படிப்புக்குப் படிப்பு. பிற்கால வாழ்விற்கு நல்ல திட்டம்.''

சுதா தன் கணவனிடம் டாக்டர் கூறியதைச் சொன்னதும் அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

''இரண்டு வருடமா? சுதா! என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்கவில்லையா?'' என்று ரங்கதுரை கேட்டான்.

''ரொம்பவும் பிடிக்கிறது. வருங்காலத்தில் நாம் நன்றாக வாழ வேண் டாமா? நம் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டாமா?''

''ஏன்... என்னால் வளர்க்க முடியாது என்கிறாயா? சம்பள உயர்வும், போனஸும் யூனியன் மூலமாகக் கேட்கிறோம். அது கிடைத்தால்

இரண்டு என்ன... ஐந்து குழந்தைகளைக் காப்பாற்ற முடியும்!'' என்றான் வீராப்புடன்.

சுதா மறுபடியும் டாக்டரிடம் சென்றாள். உடல் நிலைக்காக இல்லை, மனநிலையைப் பற்றியே.

டிரெயினிங் பள்ளியில் சேர்வதற்குச் சிபாரிசுக் கடிதம் கேட்டு வாங்க.

இதை அறிந்த ரங்கதுரை மிகவும் கோபப்பட்டான்.

''ஏய்... சுதா! டிரெயினிங்கில் சேர முடிவு செய்து விட்டாயா? இரண்டு வருஷங்கள் என்னைப் பிரிந்திருக்க உனக்கு எப்படி மனம் வந்தது?'' என்று ரங்கதுரை சீறினான்.

சுதா பேசவில்லை.

''சுதா! இன்னும் இரண்டு நாள்கள் பொறு. சம்பள உயர்வு, போனஸ் விஷயம் முடிவாகிவிடும். பணத்திற்காகத்தானே டீச்சர் வேலைக்கு நீ படிக்கப் போகிறாய்? அந்த அவசியமே ஏற்படாது'' என்று குழைந்தான்.

டிரெயினிங் பள்ளியில் சேர நான்கு நாள்கள் இருந்தன.

குடும்பம் நடத்த மேலும் பணம் போதவில்லை என்பதற்காகப் படிக்கப் போகிறாளா? மற்றொரு குழந்தையைத் தடுப்பதற்காக அவள் பிரிந்திருக்க விரும்புகிறாளா என்பது அவனுக்கு எப்படித் தெரியும்?

இரண்டு நாள்கள் ஓடிப் பறந்தன.

மூன்றாம் நாள் மாலை ரங்கதுரை தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

''சுதா! மில்லை மூடி விட்டார்கள். ஏற்கெனவே நஷ்டத்தில் ஓடுகிறதாம். வேலையில்லாமல் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நடுத் தெருவில் நிற்கிறார்கள்'' என்று கூறும்பொழுது அவனுக்கு ஏனோ நெஞ்சு தழுதழுத்தது.

அவனுடைய முகத்தில் ஈயாடவில்லை. கலகலப்பான பேச்சைக் காணோம். சுதா தன் இருபுறமும் இரு குழந்தைகளைப் படுக்க வைத்துக் கொண்டு அவர்களை அழாது தூங்க வைப்பதிலேயே இரவுப் பொழுதைக் கழிப்பாள்.

டிரெயினிங்கில் சேர்ந்து விட்டால் குழந்தைகளை யார் காப்பாற்றுவார்கள்?

குழந்தைகளைப் பார்த்துக் கொள்வது இருக்கட்டும்; குடும்பத்தைக் காப்பாற்ற வருமானம்?

ரங்கதுரை வீட்டிலேயே தங்குவதில்லை. வேலை தேடி அலையாத இடமில்லை.

''சுதா! எனக்குக் கவலையாக இருக்கிறது. குழந்தைக்குப் பால் பவுடர் வாங்கக் கூட பணமில்லை. வருமானம் இருண்டு தோன்றுகிறது'' என்று ரங்கதுரை கண் கலங்கினான்.

குழந்தை போல் கண்ணீர் விடும் அவன் தலையை மெல்லக் கோதி மடி மீது கிடத்தி, ''இதற்கெல்லாம் வருத்தப்படலாமா? நாளைக்கு நான் டிரெயினிங்கில் சேரப் போகிறேன். இரண்டு வருடங்கள் ஓடி விடும். அதற்குள் கடவுள் கண் திறக்காமல் போய் விடுவாரா?'' என்று தேற்றுவாள்.

ரங்கதுரைக்குப் புதுதெம்பு பிறக்கும். அவன் அவளை மெல்ல நெருங்குவான். அவன் கரங்கள் பழைய குறும்புகளைச் செய்யத் தொடங்கும்.

''உச்... பார்த்தீர்களா... கொஞ்சம் இடத்தைக் கொடுத்தால் பழைய படி நெருங்கி விட்டீர்களே! கண்ணனுக்கு மூன்று வயது ஆகும் வரை மூச்' என்று அவனிடமிருந்து விலகிக் கொண்டாள்.

அவளுக்கே ரங்கதுரையைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது.

''சுதா! ஒரு நல்ல செய்தி! எனக்கு வேலை கிடைத்து விட்டது. மும்பையிலே வேலை. ஆறாயிரம் ரூபாய் சம்பளம். கவலையே இல்லை'' என்று சந்தோஷமாகக் குதித்துக் கொண்டே வந்தான் ரங்கதுரை.

சுதாவின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை.

''ஏன் சுதா ஒரு மாதிரியாக இருக்கிறாய்?''

''புதிதாக இந்த வருடம் டிரெயினிங் வகுப்பு தொடங்கப் போவ தில்லையாம்'' என்று அழாத குறையாகக் கூறினாள். அவள் கவலை அவளுக்கு!

டிரெயினிங்கில் இடம் கிடைக்காமல் வீட்டிலேயே இருந்தால், மீண்டும் ரங்கதுரையின் தொந்தரவு அதிகமாகி...

''ஏன் சுதா? ஏன் கவலைப்படுகிறாய்? உனக்கு இடம் கிடைக்காததில் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. உன்னை விட்டு விட்டு எப்படிப் போவது

என்ற கவலையில் இருந்தேன். வேண்டாத தெய்வமில்லை'' என்று ரங்கதுரை கூறிக் கண் சிமிட்டும்போது சுதா நடுநடுங்கினாள்.

''சுதா! மும்பை போனவுடனே இடம் பார்த்து அழைத்துக் கொள்கிறேன். ஒரே மாதம்தான். ஓடிப் போய்விடும்'' என்று ரங்கதுரை அன்பாக அவளை நெருங்கினான்.

''ஊஹூம்... ஊஹூம்... மும்பைக்குப் போன பிறகுதான். இவனுக்கு ஐந்து மாதம்கூட ஆகவில்லை. பால் மறக்கவில்லை'' என்று சுதா கூறும்போது துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

சுதா டாக்டர் கோபாலனைத் தேடி இரண்டு குழந்தைகளுடன் சென்றாள்.

''வாம்மா குழந்தை! உன் குழந்தைகள் சௌக்கியமா?'' என்று டாக்டர் வரவேற்றார்.

சுதா நடந்த விவரங்களைக் கூறி, ''மும்பையில் அவருக்கு இடம் கிடைத்து விட்டதாம். அங்கு போகவும் தோன்றவில்லை. போகாமல் இருக்கவும் தோன்றவில்லை. டாக்டர்... ஏதாவது மருந்து இருந்தால் கொடுங்களேன்'' என்று கேட்டாள்.

டாக்டர் மெல்லச் சிரித்தார்.

சுதாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''நீ பத்திரிகை, புத்தகங்கள் படிப்பதில்லையா?'' என்ற கேட்டார்.

சுதா ஏதும் படிப்பதில்லை. ரங்கதுரைதான் அவளுக்குப் பத்திரிகை, புத்தகங்கள் எல்லாம்.

''மருந்தா... நோ... நோ... அதெல்லாம் உடம்பைக் கெடுத்து விடும். மன அடக்கம்தான் மருந்து. சந்தோஷமா போயிட்டு வா... என்றுமே குழந்தை போலவே நீ இருக்க வேண்டும். ஆனால் மற்றொரு குழந்தை வேண்டும் என்று நினைக்கவே கூடாது'' என்று நல்லுரை கூறி அனுப்பினார்.

தாதரில் ரங்கதுரை சுதாவை அழைத்துப் போக வந்திருந்தான். டாக்ஸியிலேயே அவனது சேஷ்டைகள் சொல்லத் தரமின்றி இருந்தன.

மும்பையின் நெருக்கடியில் சிறிய 'பிளாட்'தான் கிடைத்தது.

இரவு வந்தது. படுக்கையை அறைக்கு வெளியே போட்டு, ''நீங்கள் இங்கே... நான் உள்ளே'' என்றாள் சுதா.

''ஏன் சுதா... பிரிவினைத் திட்டம்?''

''ஆமாம்... இன்னும் இரண்டாண்டுகளுக்குப் பேசக் கூடாது. எனக்குப் பயமாயிருக்கு.''

ரங்கதுரை ஹோ... ஹோ என்று சிரித்தான். ''குழந்தை மாதிரி பயப்படறியே... உனக்கு என்னால் ஒருவிதத் தொல்லையும் கிடையாது'' என்று கூறி அவள் காதருகில் 'கிசுகிசுத்த'வாறே சுவரில் உள்ள ஒரு படத்தைக் காட்டினான்.

சுதாவின் முகம் மலர்ந்தது. புதுத் தெம்பு வந்தது. நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். அவள் இனிப் பயப்படவே வேண்டாம்.

மும்பைக்கு வந்தவுடனேயே ரங்கதுரை குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் செய்து கொண்டு விட்டான். அதற்குப் பிறகுதான் வாடகைக்கு வீடு தேடினான்.

சுதா கலகலவென்று சிரித்தாள்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த 'நாம் இருவர், நமக்கு இருவர்' என்ற வாசகம் கொண்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் விளம்பரமாக வெளியிடப்பட்ட பழைய படமும் அவர்களைப் பார்த்துச் சிரித்தது.

● ● ● ●

# 89. யாருக்குக் கல்யாணம்?

“ராஜி” என்று குரல் கேட்ட உடனேயே வெளியே சுகுணா வந்திருக்கிறாள் என்பது ராமமூர்த்திக்குத் தெரிந்துவிடும். படிக்கட்டுகளில் ஏறி கதவருகே வரும்பொழுதே ராஜி என்று அழைத்துக் கொண்டு வருபவள் சுகுணாவைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது. அந்தக் குரலில் ஒரு நளினம்; கூப்பிட்டுவிட்டு மெல்ல எட்டிப் பார்க்கும் பொழுது முன்னால் வந்து விழும் இரட்டைப் பின்னலில் ஒன்றை மட்டும் பின்பக்கம் எடுத்துப் போட்டுக் கொள்ளும் அழகும் அலாதிதான். அவள் வரும்பொழுது ஒன்று ராஜி குளிக்கும் அறையில் இருப்பாள். இல்லாவிட்டால் அன்று அணிந்து கொள்ள வேண்டிய உடைகளைத் தாம் வாரியாகப் பிரித்து எடுத்து வைப்பதில் முனைந்திருப்பாள். ராமமூர்த்தி அவள் மனத்துக்குப் பிடித்தமான எல்லாவிதமான ஆடைகளையும் வாங்கிக் கொடுத்திருந்தார். நைலான், நைலக்ஸ், காஞ்சிபுரம் பட்டு, டெரிலின், டெரிகாட்டன் போன்ற புதுப்புது வகைகள் ஒவ்வொன்றிலும் மூன்று நான்கு புடைவைகளுக்குக் குறையாமல் அவளுக்கு இருக்கும். முன்பெல்லாம் பாவாடை கட்டி மேலே சிற்றாடைதான் அணிந்திருந்தாள். இந்தச் சுகுணா வந்து பிறகுதான் அந்தப் பழக்கத்தை மாற்றிக் கொண்டாள்.

“ராஜி கண்ணு! சுகுணா வந்துவிட்டாள்” என்று ராமமூர்த்தி குளியல் அறைக் கதவருகே சென்று குரல் கொடுத்துவிட்டு தன் வேலையைக் கவனிப்பார் அவர் காலையில் காபி போடுவது; பிறகு குளிக்கச் செல்வது; அதற்குள் காய்ந்து கொண்டிருக்கும் உலை நீரில் அரிசியைப் போட்டுவிட்டு அன்றைய குழம்பிற்கு உண்டான காய்கறிகளை உட்கார்ந்து நறுக்குவது... இந்த வேலைகளை ராஜி செய்யலாம். ஆனால், அவளை ஒரு சிறு வேலை செய்யக்கூட அவர் அனுமதிப்பதில்லை. தாயில்லாக் குழந்தையாக வளர்ந்துவிட்ட அவளை இது மாதிரியான சமையல் சங்கடங்களில் ஈடுபடுத்த வேண்டாம் என்று தாமே ஏற்றுக் கொண்டார். உதவிக்கு வருவதாக இரண்டு மூன்று முறை ராஜி சொல்லியும் கூட அவர் அந்தக் கோரிக்கையை வலிய வரும்

உதவியை ஏற்றுக் கொள்ளவில்லை. ராஜியின் அத்தையை அழைத்து வந்து உதவிக்கு வைத்துக் கொள்வதற்கும் அவர் சம்மதிக்கவில்லை. பல வருடங்கள் இப்படியே ஓடிவிட்டன. இனிமேல் 'இன்னொருத்தி' சமையலுக்காகவும் உதவிக்காகவுமா வந்து சேர வேண்டும்? ராமமூர்த்திக்கு அந்தச் சமையல் உத்தியோகம் அப்படி ஒன்றும் கஷ்டமாகத் தெரியவில்லை. கையிலே தினசரி பத்திரிகையை வைத்துக் கொண்டே அவர் அடுப்பில் வைத்திருக்கும் ரசத்தையோ, சாம்பாரையோ கவனித்துக் கொள்வார். ரேடியோ செய்தியைக் கேட்டுக் கொண்டே காய்கறி நறுக்குவார். ஈஸிசேரில் உட்கார்ந்து கொண்டே பாடத்தில் சந்தேகத்தைக் கேட்கும் தன் பெண்ணுக்குக் கற்றுத் தருவார்.

போன மாதத்திற்கு இந்த மாதம் ராஜியிடம் அவர் வளர்ச்சியைக் காண்கிறார். இப்போதுபோல்தான் இருக்கிறது. அவள் சிறுமியா யிருக்கும் பொழுது தன்னுடைய ஸ்கூட்டரின் பின்புறம் உட்கார்ந்து கொண்டு பள்ளிக்கூடம் போய் 'டாடா' என்று கையை அசைத்துக் கொண்டே இறங்கியது. அவள் காலேஜ் வாசல்படியை வந்து மிதித்து இப்போது இரண்டு ஆண்டுகளாகிவிட்டன. டாக்டருக்குப் படிக்க வேண்டுமென்ற கொள்ளை ஆசை ராஜிக்கு. ஏனெனில் அவளுடைய சிநேகிதி சுகுணாவும் டாக்டருக்குத்தான் படிக்கப் போகிறாள். எப்பொழுதும் அவளுக்குச் 'சுகுணா சுகுணா' என்று சுகுணா ஜபம்தான்! அது என்ன சுகுணாவின் மேல் ராஜிக்கு அவ்வளவு ஆசையோ! ராமமூர்த்தி தன் மகளை ஒருமுறை அது பற்றிக் கேட்டார்.

''பாவம் அப்பா அவள்! சுகுணாவிற்கு அப்பா அம்மா கிடையாது. அத்தை வீட்டில்தான் இருக்கிறாள். அவள் படித்து ஏதாவது ஒரு வேலைக்குப் போனால்தான் அந்தக் குடும்பத்திற்கே விமோசனமாம்! இங்கேயாவது நீங்கள் இருந்து எனக்கு வேண்டியதையெல்லாம் செய்து, கவனித்துக் கொள்கிறீர்கள். பாவம்... அவள் சில நாள்கள் வரும்போது வழியிலேயே ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வருகிறாளாம்'' என்று மிகவும் கவலை நிறைந்த குரலில் ராஜி கூறினாள்.

ராமமூர்த்தி 'ஐயோ பாவம்' என்று ஒருமுறை சொல்லிக் கொண்டார். அடுத்த நாள் சுகுணா வரும்பொழுது ''சுகுணா சாப்பிட்டாயா?'' என்று அவர் கேட்டார். இதுவரை சுகுணா ராமமூர்த்தியிடம் பேசியது கிடையாது. ராமமூர்த்தியும் சுகுணாவிடன் பேசியது கிடையாது. ராமமூர்த்தியைப் பார்க்கும்பொழுது சுகுணாவுக்கு எங்கிருந்தோ ஒருவித நாணம் வந்து சூழ்ந்து கொள்ளும். உரக்கவே பேச மாட்டாள். ராஜி குளித்துக் கொண்டிருக்கிறாள் என்று சொன்னால் சுகுணா சாலையைப் பார்த்திருக்கும் ஜன்னல் அருகே நின்று கொண்டு ராஜி

வரும் வரையில் வீதியில் வருவோர் போவோரை எண்ணிக் கொண்டிருப்பாள். அல்லது ராஜி சாப்பிட்டுக் கொண்டிருந்தால் நூறு முறையாவது அன்றைய தினசரி பேப்பரை வேகமாகப் புரட்டிக் கொண்டிருப்பாள். ராஜி கிளம்பும் நேரத்திற்கு தான் வந்தால் போதும் என்று ஒரு சமயம் அவள் நினைப்பாள். ஆனால், அவளால் அப்படியே 'கொட்டு கொட்டெனு' இருக்க முடியவில்லை.

''ராஜி! அப்பாவிடம் என்னைப் பற்றிச் சொல்லி விட்டாயா? 'சாப்பிட்டாயா?' என்று என்னை உன் அப்பா திடீரென்று கேட்டாரே'' என்று சுகுணா பொய்க் கோபத்துடன் ராஜியைக் கேட்டாள்.

''அப்பா கேட்டாரா? எனக்குத் தெரியாதே. நான் ஒன்றும் சொல்லவில்லையே. அவர் இதுவரையில் உன்னிடம் பேசக்கூட மாட்டாரே'' என்று ராஜி வியப்புடன் வினவினாள்.

''அதென்னமோ ராஜி... இன்று உன் அப்பா கேட்டு விட்டார்.''

''நீ என்ன பதில் சொன்னாய்?''

''நல்ல வேளையாக நீ வந்து விட்டாய். இல்லாவிட்டால் நான் பதில் சொல்வதற்கு திக்குமுக்காடிப் போயிருப்பேன்''... அப்படிச் சொன்னாலே தவிர, சுகுணாவிற்கு ராமமூர்த்தியிடம் பேச வேண்டும் போல்தான் தோன்றியது. அவள் வரும்பொழுதெல்லாம் சமையலறையிலிருந்து அவர் வெளியே வந்தாலும் மடிப்புக் கலையாத ஷர்ட்டும் வெள்ளை வெளேர் என்ற பேண்ட்டும், அவர் வயதைப் பத்து வருடங்கள் குறைத்துக் காட்டும். இழைய இழைய வாரிவிட்ட - அந்தக் கிராப்பு சுகுணாவை வியப்படையச் செய்யும். ராஜியின் அண்ணா என்றுதான் ராமமூர்த்தியைச் சொல்வார்கள்!

''ஆமாம் சுகுணா! என் அண்ணா வடக்கே கௌஹாத்தியிலிருந்து ஒரு வாரம் இங்கே வந்திருந்தான். அவன் சென்னையை விட்டுப் போய் ஏழு, எட்டு வருஷங்களுக்கு மேலாகி விட்டன. அம்மா காலமான பிறகு அவன் வரவேயில்லை. அவனும் அப்பாவும் தெருவிலே போகும்பொழுது அவனைப் பார்த்து, 'உங்களுடைய எல்டஸ்ட் பிரதரா சார்?' என்று பல பேர் கேட்டார்களாம். 'ஆமாம்' என்று என் அப்பாவும் சொல்லி விட்டாராம். என் அப்பா எப்பொழுதும் குறும்புக்காரர். அவர் இப்படி மௌனமாக இருக்கிறாரே என்று நினைக்காதே. சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். இன்றைக்கெல்லாம் அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். ஆனால், என் அண்ணன் ஒரு வார்த்தை வாயைத் திறக்க மாட்டான். என் அப்பாவின் பிள்ளையா என்று கூட சந்தேகப்பட்டு

விடுவாய்'' என்று ராஜி சொல்வதை சுகுணா வியப்புடன் கேட்டவாறிருப்பாள். மறுநாள் ராஜியின் வீட்டு ஹாலில் மாட்டப்பட்டிருந்த போட்டோவில் அவன் சகோதரனையும், அவள் தந்தையையும் மாறி மாறிப் பார்க்கும்பொழுது இருவரில் யார் இளையவர் என்ற கேள்வி சுகுணாவின் உள்ளத்தில் எழும். மற்றொரு முறை அந்தப் போட்டோவைப் பார்க்க வேண்டும் என்ற அவா அவளிடம் தோன்றும்.

''ராஜி இருக்கிறாளா?'' என்று கேட்டுக் கொண்டே சுகுணா அன்று வந்தாள். ராஜி அடுத்த தெருவிற்கு ஏதோ ஒரு வேலையாகச் சென்றிருந்தாள். ராமமூர்த்தி மட்டும் நாற்காலியில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். அன்று அவர் அலுவலகத்திற்கு விடுமுறை. ''வா சுகுணா'' என்று ராமமூர்த்தி அழைத்து அருகேயிருந்த நாற்காலியில் அவளை உட்காரச் சொன்னார். சுகுணா உட்காரவில்லை. அவளுக்கு 'குப்'பென்று வியர்த்து விட்டது. கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். அவள் கால் கட்டை விரல்கள் தரையிலே கோலம் போட முயன்றன. அங்கிருந்து உடனே போய் விட வேண்டும் என்ற பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், தன் வேலையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆவலும் எழுந்தது. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

''ராஜி இன்று காலேஜுக்கு வர மாட்டாள் சுகுணா!'' ராமமூர்த்தி சொன்னவுடன் சுகுணா திடுக்கிட்டாள். இவ்வளவு காலமாக தனியாக சுகுணா காலேஜ் சென்றதில்லை. வீட்டிலிருந்து புறப்பட்டு வருவது; பிறகு பஸ்ஸில் ஏறிக் காலேஜுக்குச் செல்வது; பிறகு காலேஜ் விட்டதும் இருவரும் ஒன்றாகக் காலேஜிலிருந்து பஸ்ஸில் திரும்பி வருவது என்று பழக்கமே தவிர, ஒருநாள் கூட அவள் தனியே சென்றது கிடையாது.

சுகுணா சற்றுத் தயங்கினாள். ''நீ வந்தால் உன்னை ஸ்கூட்டரில் கொண்டு போய் காலேஜில் விடுமாறு ராஜி சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள் என்று அவள் சொன்னாள். அதே போல் சாயங்காலமும் நீ காலேஜ் விட்டவுடன் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிரு. நான் அந்த நேரத்திற்கு வந்து உன்னை அழைத்துக் கொண்டு வருகிறேன்'' என்று ராமமூர்த்தி சொன்னார். ராஜி இவ்வளவு தூரம் சொல்லி விட்டுப் போய் இருப்பாளா என்று சுகுணாவிற்கு ஆச்சர்யமாக இருந்தது. அவளால் மறுக்க முடியவில்லை.

ஸ்கூட்டரில் போவது இன்பமாகத்தான் இருக்கிறது. அதே சமயம் வேகமாகப் போகும்பொழுது இதயத்தை யாரோ காற்றில் பிடித்து

இழுத்துக் கொண்டு போவது போன்ற உணர்ச்சி. ஒரு சமயம் அவருடைய தோளைப் பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அப்பொழுது சுகுணாவின் கை நடுங்கியது. ''கூச்சப்படாதே சுகுணா! தைரியமாக உட்கார்ந்து கொள்'' என்று ராமமூர்த்தி சொல்லியது அவள் நடுக்கத்தை இன்னும் அதிகப்படுத்தியது. சொல்லி வைத்தாற்போல் மாலையில் அவர் பஸ் ஸ்டாண்டிற்கு அருகே ஸ்கூட்டருடன் காத்திருந்தார். ஸ்கூட்டரின் பின்புறம் ஏறி அமர்ந்தபோது சுகுணாவின் உடல் வியர்த்தது. நாணத்தால் ஒரு வித நடுக்கம் ஏற்பட்டாலும் ஒரு புத்துணர்ச்சியும் உண்டாகியது. ராமமூர்த்தி வீடு வரை வரவில்லை. தெருமுனையில் சுகுணா இறங்கிக் கொண்டு நன்றி தெரிவித்து விட்டுப் போய் விட்டாள்.

மறுநாள் 'ஸ்கூட்டர் சவாரி'யைப் பற்றி சுகுணா சொன்னபொழுது ராஜிக்கு ஆச்சர்யமாக இருந்தது. தான் சொல்லாமலேயே சுகுணா விற்குத் தன் தகப்பனார் செய்த உதவியை எண்ணிச் சந்தோஷப்பட்டாலும் சுகுணா இவ்வளவு தைரியமாகத் தந்தையின் பின்புறம் அமர்ந்து சென்றதை நினைத்து வியப்புற்றாள். ஆனால், அந்த ஆச்சர்யம் நாளாக நாளாக ஒரு புதுவிதமான கேள்விக்குறியை ராஜியின் உள்ளத்தில் ஏற்படுத்தியது.

இப்பொழுதெல்லாம் அடிக்கடி சுகுணா ராஜியின் வீட்டிற்கு வருவதில்லை. ஆனால், தன் தகப்பனாரும் அவளும் மாலை வேளைகளில் சந்தித்துப் பேசுகிறார்கள் என்பது மட்டும் ராஜிக்குத் தெரிந்து விட்டது. அவளுக்குத் 'திக்' என்றிருந்தது. ஒன்றும் அறியாதவள், அறியாதவள் என்று தன் தோழியை நினைத்துக் கொண்டிருந்தது போக... இப்படி அவள் செய்வாள் என்று நம்ப முடியவேயில்லை. தன் தகப்பனாரை எப்படிக் கேட்பது என்றும் அவளுக்குப் புரியவில்லை. தைரியமும் வரவில்லை. என்னவென்று கேட்பாள்? 'சுகுணாவுடன் நீங்கள் அடிக்கடி ஸ்கூட்டரில் போகிறீர்களாமே?' என்று கேட்பாளா? 'அப்படி மணிக்கணக்காகப் பேசுவதற்கு என்ன இருக்கிறது?' என்று கேட்பாளா? 'ஸ்கூட்டரில் ஏற்றிக் கொண்டு செல்கிறீர்களே... இப்பொழுதெல்லாம் என்னை ஒரு நாளாவது ஏற்றிப் போனதுண்டா?' என்றா கேட்பாள்? ராஜி மனத்திற்குள்ளே விம்மி வேதனையுற்றாள். தன்னுடைய உள்ளக் கொதிப்பை யாரிடமாவது சொல்லிக் குமுறி அழ வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது. இந்தச் சமயத்தில் அண்ணா இங்கே இருக்கக் கூடாதா என்று எண்ணினாள். அப்பாவின் குணம் பிடிக்காமல்தான் அண்ணா வடக்கேயே இருந்து விட்டானா? கடிதம் எழுதி அவனை

வரவழைத்தால் என்ன என்று கூட அவளுக்குத் தோன்றியது. திடீரென்று அதுபோல் செய்து அண்ணாவை வரவழைத்தால் தகப்பனார் ஏதாவது நினைத்துக் கொள்வார் என்று எண்ணி தன் சகோதரன் சமீபத்தில் இங்கே வருவானா என்று கேட்க விரும்பினாள். "அண்ணனிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா அப்பா?' என்று மட்டும் ராஜி, ராமமூர்த்தியைக் கேட்டாள்.

ஒரு வார காலமாக தன் மகள் தன்னிடம் சரியாகப் பேசாமல் இருந்தவள் இப்பொழுது திடீரென்று இப்படிக் கேட்பதை நினைத்துச் சந்தோஷப்பட்டார் ராமமூர்த்தி.

"தெரியவில்லையே அம்மா! நானும் எவ்வளவோ கடிதம் போட்டு விட்டேன். இரண்டு மூன்று இடத்தில் அவனுக்கு வரனும் பார்த்து விட்டேன். காலாகாலத்தில் அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டால் பிறகு எனக்குள்ள பொறுப்பு ஒன்றே ஒன்றுதான்" என்று கூறி ராஜியைப் பார்த்து மெல்லச் சிரித்தார்.

ராஜிக்கு ஆத்திரமாக வந்தது. 'காலா காலத்தில் அவர் தன் மகனுக்குக் கல்யாணம் செய்து வைக்கப் போகிறாரா அல்லது தானே செய்து கொள்ளப் போகிறாரா?' என்று உதட்டைக் கடித்துக் கொண்டாள் ராஜி. வெளியே இருப்பவர்கள், கீழ் வீட்டுக் குடித்தனக்காரர்கள், மாடியில் எதிர் பிளாக்கில் குடியிருப்பவர்கள் மாடிப்படி இறங்கும்பொழுது ஜாடை மாடையாக விவாதிப்பதுபோல் அவர்கள் கேட்பது ராஜி நெஞ்சை அறுப்பது போல் தோன்றும்.

மறுநாள் ராஜி கேட்காமலேயே ராமமூர்த்தி அவளிடம் கேட்டார்... "ராஜி! நீயாவது உன் அண்ணாவுக்குக் கடிதம் எழுதக் கூடாதா? அவன் எவ்வளவு நாள்களுக்குத்தான் இந்தப் பக்கமே வராமல் வடக்கேயே இருந்து காலத்தைக் கழிக்கப் போகிறானாம்? என் மேல் அவனுக்கு என்ன கோபம் என்றே தெரியவில்லை" என்றார்.

"நான் எழுதினால் அவன் வருவானா அப்பா! நீங்கள் எழுதுவதற்கே செவி சாய்க்காதவன் எனக்கு மட்டுமா ஒப்புக் கொள்ளப் போகிறான்?" என்று ராஜி சொன்னாளே தவிர, உடனே அன்றைய தபாலிலேயே தன் சகோதரனுக்குக் கடிதம் எழுதிப் போட வேண்டுமென்று துடித்தாள்.

நெருப்பில்லாமல் புகையாது. ராமமூர்த்தியும் சுகுணாவும் சேர்ந்து பேசுவது இன்னும் அதிகமாகியது. வதந்திக்குக் கால், கை முளைத்து, கடைசியில் ஓர் உருவமாகவே அது மாறியபொழுது அதன் தோற்றம் பார்க்கப் பயங்கரமாக இருந்தது. ஒருநாள் அந்த செய்தி வெடித்து எல்லாரையும் திடுக்கிட வைத்தது.

ராமமூர்த்தியும் சுகுணாவும் திருநீர்மலையில் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்களாம் என்ற செய்தி கேட்ட ராஜி துடிதுடித்துப் போனாள். அது அவளுக்கு மிகவும் தாமதமாகத்தான் எட்டியது. மறுநாள் காலையில் நடக்கப் போகும் கல்யாணச் செய்தி முதல்நாள் மாலையில்தான் அவள் செவிக்கு வந்து சேர்ந்தது. தகப்பனார் நேரம் கழித்துத்தான் இரவு வீட்டுக்கு வந்தார். அவராக ஏதாவது சொல்வாரா என்று பார்த்தால் ஒன்றுமே சொல்லவில்லை. இரண்டு பெரிய அட்டைப் பெட்டிகளை அவர் எடுத்துக் கொண்டு வந்திருந்தார். ஒன்றில் பளபளப்பான புதுவிதமான பட்டுப் புடைவை. மற்றொன்றில் விலை உயர்ந்த சூட்டும் கோட்டும். ராஜிக்கு அப்படியே வீறிட்டுக் கத்தலாம் போல் இருந்தது.

'இவ்வளவு நாள் கழித்து இப்படி நீங்கள் செய்யலாமா அப்பா!' என்று குமுறிக் கேட்க வேண்டும் போல் தோன்றியது. 'என்னிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு சுகுணாவைக் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாதா?' என்று கதற வேண்டும் போல் அவளுக்கு ஆத்திரம் எழுந்தது. 'கல்யாண வயதிலே ஒரு பையனை வைத்துக் கொண்டு அம்மா இறந்து பல வருஷங்கள் கழித்துத் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தது நியாயம்தானா?' என்று ஆத்திரத்துடன் கர்ஜிக்க வேண்டும்போல் அவளுக்குத் தோன்றியது. ஆனால், ராமமூர்த்தி சாமர்த்தியசாலி. படித்துக் கொண்டிருந்த ராஜியின் அருகே வந்து நின்றார். "ராஜி, என் கண்ணே! உனக்கு ஓர் ஆச்சர்யகரமான செய்தியைச் சொல்லப் போகிறேன். ஆனால், அந்த ரகசியத்தை இப்பொழுது உன்னிடம் சொன்னால் காரியம் கெட்டு விடும். அதனால் நாளைய தினம்தான் அந்தப் புதிரை அவிழ்க்கப் போகிறேன். நாளைக் காலையிலே திருநீர் மலைக்கு நாம் போகப் போகிறோம். நான் சற்று முன்னதாகச் செல்ல வேண்டியிருக்கும். என் நண்பர்கள் சிலர் காரிலே இங்கே வருவார்கள். அவர்கள் உன்னை அழைத்து வருவார்கள். காபி, சாப்பாடு எல்லாம் அங்குதான். ஏன், எதற்கு என்று இப்பொழுது நீ என்னைக் கேட்க மாட்டாய் என்று நினைக்கிறேன். விடுகதையின் முடிவை முதலிலேயே சொல்லக்கூடாது அல்லவா?" என்று கூறியவர் மறுபடியும் எங்கோ வெளியே சென்று விட்டார். அவர் திரும்பி வரும்பொழுது இரவு வெகு நேரமாகிவிட்டது.

'என்ன பெரிய புதிர்? எனக்குத் தெரியாதா? இவ்வளவு வருஷம் கழித்துக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் எனும் ஆசை கொண்டவர் அதை நேரிடையே சொல்வதற்கு ஏன் வெட்கப்படுகிறார்? நான் திடுக்கிட்டு விடுவேனாம். என்னுடைய சிநேகிதியைத் தான்

மணந்து கொள்ளப் போவதை முன்கூட்டியே ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? அவர்தான் சொல்லவில்லை. இந்த சுகுணா மகா கெட்டிக்காரி. என் தந்தையுடன் அவள் பழகுவதைப் பற்றி இன்று வரை வாயைத் திறந்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே! நெஞ்சழுத்தக் காரி. இப்படிப்பட்டவளுடன் நான் உயிருக்குயிராய்ப் பழகினேனே... அவள் கல்யாணத்திற்கு நான் வர வேண்டுமாம். சேச்சே! ஒரு நாளும் நான் போக மாட்டேன்' என்று அழுத்தமாக முடிவு செய்தாள் ராஜி.

திருநீர்மலையில் நடக்கவிருக்கும் திருமணத்தைக் காண்பதற்கு மூடியிருந்த மேகங்களுக்கிடையேயிருந்து சூரியனும் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். உள்ளூர் நாயனக்காரர் ஒருவர் தனக்குத் தெரிந்த ராகத்தில் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருந்தார். திருநீர்மலை நண்பர் பாஷ்யம் அய்யங்கார் நிமிடத்திற்கு ஒருமுறை வந்து அவர் அருமையான விருந்தைத் தயாரித்து வைக்கப் போகிறார் என்பது பேச்சின் மணத்திலிருந்தே தெரிந்தது.

ராமமூர்த்தியின் நண்பர்கள் ஒவ்வொருவராகக் காரிலே வந்து கொண்டிருந்தனர். இரண்டாவது கல்யாணத்திற்கு இவ்வளவு ஆடம்பரமா? 'அவர்கள் எல்லார் கையிலும் பெரிய பெரிய பரிசுப் பொருள்கள் கொண்டு வருகிறார்களே... இது என்ன நியாயம்? கல்யாண வயதில் ஒரு மகனும் மகளும் இருக்கும்பொழுது இவர் கல்யாணம் செய்து கொள்வதா? இவர்கள் எல்லாம் சாட்சியாக இருந்து ஆதரிக்கப் போகிறார்களா? அரங்கநாதரே! நீங்கள் சொல்லுங்கள். இப்படி நீங்கள் மௌனமாகப் படுத்துக் கொண்டிருப்பது நியாயமா? அதிக வயது வித்தியாசமுள்ள பெண்ணை - வயதான ஆடவர் மணந்து கொள்ளப் போகிறாரே... இது உங்களுக்கே தகுமா? இதோ சுகுணா வந்து விட்டாள். அவள் அத்தைதான் அவளை அழைத்துக் கொண்டு வருகிறாள். கூட இன்னும் யாரோ வருகிறார்கள். அவர்களுக்குத் தெரிந்தவர்களாக இருக்கலாம். ராமமூர்த்தி நிறைய சம்பளம் வாங்கும் விஷயத்தைத் தெரிந்து கொண்டு கல்யாணம் செய்து வைக்கிறார்களே... ஒருவேளை சுகுணாவிற்குத் தாய், தந்தை இருந்திருந்தால் இப்படிப்பட்ட திருமணத்திற்கு ஒப்புக் கொண்டிருப்பார்களா? சீர்திருத்தம், புரட்சி என்றெல்லாம் பேசுகிறார்களே... ஒரு சீர்திருத்த இளைஞராவது வந்து இந்த திருமணத்தை நிறுத்த மாட்டாரா?'

ஏன் நிறுத்த மாட்டார்கள்? அப்படி ஒன்றும் இளைஞர்கள் இன்னும் பழைய மௌடீகத்தில் இருக்கவில்லை. அதோ இரண்டு கார்கள் வேகமாக வருகின்றன பாருங்கள்! மலை மீதிருந்து பார்த்தால்

தொலைவிலே புழுதியைப் பறக்க விட்டுக் கொண்டு முன்னே செல்லும் பஸ்ஸை 'வழி விடு வழி விடு' என்று பலத்த குரலொலியை ஒலித்துக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் வரட்டும் பாருங்கள்!

இரண்டு பெரும் கார்களும் மலையடிவாரத்தில் வந்து நின்றன. அந்தக் காரிலிருந்து அடைபட்டிருந்த இளைஞர்கள் குதித்தார்கள். மிடுக்காக உடையணிந்து கொண்டிருந்தார்கள். 'நிறுத்துங்கள்... நிறுத்துங்கள்...' என்று கத்திக் கொண்டே முதலில் ஓடுகிறானே அவன்தான் ராமமூர்த்தியின் திருக்குமாரன் சுந்தர். தன் தந்தை இப்படி இளம் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் செய்தி அவனுக்கு எட்டியதும் பஸ்ஸிலும், ரயிலிலும், ஆகாய விமானத்திலும் பறந்து வந்து - சென்னைக்கு - உரிய நேரத்தில் வந்து சேர்ந்து விட்டான். ஆனால், வீட்டை அடையும்பொழுது ராஜி சோகமே உருவாய் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. தன் தகப்பனார் செய்யப் போகும் நீதியற்றச் செயலைப் பற்றித் தன் தங்கை கூறியபொழுது அவன் வீராவேசம் கொண்டான். தன் நண்பர்களையெல்லாம் நொடியில் தேடிப் பிடித்து அழைத்துக் கொண்டான். சில நண்பர்கள் முன் ஜாக்கிரதையாக தடிகளையும், கத்திகளையும் காரின் பின்புறம் வைத்துக் கொண்டிருந்தார்கள். ராஜியையும் அழைத்துக் கொண்டார்கள். கார் பறந்தது. இதோ தக்க சமயத்தில் வந்து சேர்ந்தும் விட்டார்கள். இனிமேல் திருமணம் நடக்குமா?

''நிறுத்துங்கள்'' என்று கூவிக் கொண்டே நண்பர்கள் சூழ திருமண மேடை அருகே வந்து நின்ற சுந்தர், ''இது உங்களுக்கே நியாயமாக இருக்கிறதா? என் தாயார் இறந்தவுடனேயே நீங்கள் திருமணம் செய்து கொண்டிருந்தால் உங்களை யாரும் கண்டித்திருக்க மாட்டார்கள். இதோ இருக்கிறாளே என் தங்கை ராஜி... அவள் வயதுதான் இந்த மணப்பெண் சுகுணாவுக்கும். பெற்ற மகளைப் போன்ற ஒரு மங்கையை என் தாயாரின் ஸ்தானத்தில் கொண்டு நிறுத்த முயன்று விட்டீர்களே? இது நியாயமா? நான் ஒருகாலும் இவளைச் சிற்றன்னையாக நினைக்க முடியாது. இது நீதிதானா? சென்னையிலே சீர்திருத்தம் செத்தா விட்டது? இந்தத் திருமணம் நடக்க நான் அனுமதிக்க மாட்டேன். நீங்கள் சுகுணாவைக் கல்யாணம் செய்து கொள்ள நான் ஒருபொழுதும் சம்மதிக்க மாட்டேன்'' என்று கூவினான்.

மேளக்காரனும் வாயடைந்து நின்று விட்டான். தட்டிலே வைத்திருந்த மாலை அப்படியே 'திரு திரு'வென்று விழித்துக் கொண்டிருந்தது. மற்றொரு தட்டிலே புதுப் புடைவையும் பேண்ட்டும் கோட்டும் யார் வரவையோ எதிர்பார்த்திருப்பது போல் காத்திருந்தன. நன்றாக உற்றுப்

பார்த்தால் ராமமூர்த்தி புத்துடை அணியவில்லை. அவரிடம் உற்சாகமும் இல்லை.

இவ்வளவு நேரம் கவலை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தவர் இப்பொழுது முகத்திலே புத்தொளி பரவ எழுந்து நின்று கொண்டு, ''ஆமாம்... நானும் அனுமதிக்க மாட்டேன். இந்தக் கல்யாணம் நடப்பதை நானும் அனுமதிக்க மாட்டேன்'' என்று கூவினார். பிறகு, ''குழந்தே! நீ எப்போது வந்தாய்? உன்னைப் பார்த்து ஐந்து வருஷங்களுக்கு மேலாகின்றன. எவ்வளவு கடிதங்கள் நான் போட்டேன். நீ அதற்கெல்லாம் செவி சாய்க்காமல் 'கல்யாணம்' என்றவுடன் ஓடி வந்து விட்டாயே... அது போதும்! நீ சொல்வது போல் இவளை எப்படி உன் அம்மாவாக நீ ஏற்றுக் கொள்ள முடியும்? முடியாதுதான்! கூடாதுதான்... கூடவே கூடாதுதான்! அதனால்தான் இந்த முகூர்த்த வேளையில் உனக்கும் சுகுணாவிற்கும் திருமணம் நடத்துவதற்கு நான் முடிவு செய்து விட்டேன். முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பிறகு மற்றவற்றைப் பேசிக் கொள்ளலாம். இப்புத்தாடை அணிந்து சுகுணாவின் கழுத்தில் மாங்கல்யம் கட்டு சீக்கிரம். யாரப்பா மேளக்காரர்? கெட்டி மேளம் முழங்கட்டும்... முழங்கட்டும்'' என்று கூவினார்.

மேளக்காரனுக்குக் கூட ஒருகணம் ஒன்றும் புரியவில்லை. இது என்ன ராமமூர்த்திக்குச் சித்தப்பிரமை பிடித்திருக்கிறதா? அல்லது ஏதாவது நாடகம் ஆடுகிறாரா? எல்லாரையும் ஏமாற்றுவதற்கு ஏதாவது சூழ்ச்சி செய்கிறாரா? அல்லது தன்னுடைய தவற்றை மறைக்க இப்படி தன் மனத்தை மாற்றிக் கொண்டு விட்டாரா? அந்தப் பெண் சுகுணா என்னவானாள்? அவளுக்கு இங்கு ஏற்பட்ட திடீர் மாறுதல் அவளைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டதா?

அப்படியெல்லாம் ஒன்றும் நேரவில்லை. சுகுணா புன்முறுவலுடன் தான் ராஜியைப் பார்த்தாள். ராமமூர்த்தி சொன்ன விஷயம் எல்லாம் நாடகம் போல் தோன்றின.

''நான் இவ்வளவு வருடங்களாக உனக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன். வடக்கே வேலை வேண்டாம். இங்கேயே புறப்பட்டு வந்துவிடு. உனக்கு உறுதுணையாக - ஆறுதலாக ஒரு கல்யாணம் செய்து கொள் என்று எவ்வளவு கடிதங்கள் போட்டேன்? 'உடம்புக்கு அதிகமாகி விட்டது. மரணப்படுக்கையில் இருக்கிறேன்' என்று கூட ஒரு தந்தி கொடுத்தேனே... வந்தாயா? இப்பொழுது பார்... நீயே ஓடி வந்து விட்டாய். நான் போட்ட திட்டம் நிறைவேறி விட்டது.

சுகுணாவை நான் முதலில் ராஜியுடன் பார்க்கும்பொழுதே புரிந்து கொண்டு விட்டேன். அவளுடைய நடை, உடை, பாவனைகளை யெல்லாம் கவனித்தேன். வீட்டிற்கு வரும் மருமகள் சிறந்த குணவதியாக இருக்க வேண்டும் என்னும் லட்சியம் நிறைவேறியது. உன்னை வரவழைப்பதற்காக என்ன அபாயம் நிறைந்த இந்த நாடகத்தை நடத்த முனைந்து விட்டேன். ஆனால், சரியான நேரத்தில் நீ வந்துவிடுவாய் என்று எனக்குத் தெரியும். என் நண்பர்களையெல்லாம் எதற்காக வரச் சொல்லியிருந்தேன்? இதோ எல்லாரும் உன் திருமணத்தை வாழ்த்திப் பரிசுப் பொருள்கள் வழங்கச் சித்தமாய் இருக்கிறார்கள். உம் சீக்கிரம்; புழுதி படிந்த உன் உடைகளை மாற்றிக் கொள். மேளக்காரரே! இன்னுமா உங்களுக்கு நம்பிக்கை வரவில்லை? கெட்டி மேளம்... கெட்டி மேளம்...'' என்று ராமமூர்த்தி கூவினார்.

ராமமூர்த்தியின் திருக்குமாரன் சுந்தரின் உடை முழுவதும் புழுதியால் அழுக்கடைந்து கிடந்தது. அவனுக்காகவே எடுக்கப்பட்ட பேண்ட்டையும் 'கோட்'டையும் அவன் அணிந்ததும் எல்லாரும் மகிழ்ந்தனர்.

'டும் டும்' என்று மேள வாத்தியம் முழங்க... சுகுணாவின் கழுத்தில் மூன்று முடிச்சுகளை, உயிர்த் தோழியாக இருந்து நாத்தனாராக மாறி விட்ட ராஜியின் உதவியுடன் போட்டான் ராமமூர்த்தியின் திருக்குமாரன் சுந்தர்.

புரட்சி நடக்கப் போகிறது... அடி, தடி, குத்து, வெட்டு எல்லாம் நடக்கப் போகின்றன என்ற பரபரப்பில் வந்த இளைஞர்கள் குழுவுக்குச் 'சப்'பென்றாகிவிட்டது. அதனால் ரசத்தில் கொஞ்சம் கூடுதலாக உப்பும், சாம்பாரில் கொஞ்சம் காரம் அதிகமாகவும் போட்டுச் சாப்பிட்டு, ''வாழ்க ராமமூர்த்தி... வாழ்க சுந்தர் தம்பதி'' என்று வாழ்த்திச் சென்றனர்.

● ● ● ●

# 90. புலிக்குகை

சண்முகம் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். அவன் மீசை துடித்தது. முன் இரண்டு தங்கப் பற்கள் கம்பீரமாகப் பளிச்சென்று தெரிய, ''பழனி! நீ சொல்ல மாட்டியா? உனக்குத் தெரியும்... அவன் எங்கே ஒளிஞ்சுண்டு இருக்கான்னு'' என்று கர்ஜித்தான்.

பழனியம்மாள் பதில் பேசவே இல்லை. வேகமாக அவளை நெருங்கி அவள் தோள் பட்டையை குலுக்கி, ''இதோ பாரு... நான் உன் அண்ணன். அண்ணனுக்கு வைக்கிற மரியாதை இதுதானா?'' என்று கர்ஜித்தான்.

பழனியம்மாள் அண்ணன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். ''எனக்குத்தான் தெரியாது; தெரியாது என்கிறேனே... தெரிஞ்சுக்கோ'' என்று பதில் கூறி விட்டு அண்ணனைத் திரும்பிப் பாராமலேயே வாயிற் புறம் விரைந்தாள்.

சண்முகம் ஒரு விநாடி உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றான். அந்த வேலுசாமியை வெல்லவே முடியாதா? அவனால் எப்பவுமே தொந்தரவுதானே என்றெண்ணும்போது தன் பலத்தின் மீது சண்முகத்துக்குச் சந்தேகம் வந்தது. சந்தேகம் ஆத்திரமாக மாறியது.

மாரப்ப கவுண்டர் இறந்து போகும்போது அவர் வேலுசாமியை சண்முகத்திடம் ஒப்படைத்தார். 'நம்ப வீட்டுப் பிள்ளையைப் போலவே காப்பாத்துடா. பழனியை என் காலத்துலேயே அவனுக்குக் கட்டி வச்சுடணும்னு பார்த்தேன். முடியலை. பழனியைக் கட்டிக் கொடுத்து இரண்டு பேரையும் ஜாக்கிரதையாக் காப்பாத்து. அந்தப் புலிப்பாறை கிட்டே மட்டும் போகவிடாதே' என்றார்.

சண்முகம் தலையை அசைத்தானே தவிர... அவனுக்கு வேலுசாமி மீது உள்ளூற அடங்காத ஆத்திரம். பத்து வருடங்களுக்கு முன்பு செங்குன்றருகே வேலுசாமி புலியால் அடிப்பட்டு குற்றுயிராயும் குலையுயிராயும் கிடந்தபோது மாரப்பன் தன் வீட்டிற்கு அவனைத் தூக்கி வந்து காப்பாற்றினார்.

வேலுசாமியின் தந்தையையும் புலிதான் கொன்றுவிட்டது. யாருக்கும் பிடிபடாத அந்தப் புலியை எப்படியாவது கொன்று விட வேண்டும் என்று பதினைந்து வயது நிரம்பாத வேலுசாமி சபதம் செய்தான். அதன் விளைவுதான் அவன் செங்குன்றருகே குற்றுயிராய்க் கிடந்தது.

தன் தகப்பனார் வேலுசாமி மீது அதிக அன்பு கொண்டிருப்பது ஏனோ சண்முகத்துக்கு ஆதியிலிருந்தே பிடிக்கவில்லை. அதிலும் பழனியம்மாளை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும் என்று தந்தை திட்டமிட்டிருந்தது அவனுக்கு வேலுவின் மீது ஆத்திரத்தைத்தான் வளர்த்தது. இனம் புரியாத பொறாமை அவன் மீது ஏனோ வளர்ந்து விட்டது.

தந்தை இறந்த பிறகு சண்முகம் தனிக்காட்டு ராஜா. தந்தை சொல்லியதை அவன் எங்கு நிறைவேற்றப் போகிறான்? ஆனால், பழனியம்மாளின் மனசை மட்டும் அவனால் மாற்றவே முடியவில்லை. வேலுசாமியிடம் சிறு வயதிலேயே உள்ளத்தைப் பறிக் கொடுத்து அவளைப் பருவம் வந்த பிறகு மாற்ற சண்முகத்தால் முடியுமா? இதனாலெல்லாம் சண்முகத்துக்குத் தனி ஆத்திரம் வளர்ந்தது. வேலுசாமியை அலட்சியமாகவே நடத்தலானான்.

கிணற்றில் ஏற்றச்சால் பிடித்துத் தண்ணீர் இறைக்க வைத்திருந்த ஆளை நிறுத்திவிட்டு வேலுவை அந்த வேலை செய்யக் கட்டளையிட்டாள். வேலுசாமி எந்த அவமரியாதைக்கும் அஞ்சுவதில்லை. அவனுக்கும் இந்த உலகில் யார் இருக்கிறார்கள்? என்னதான் அலட்சியப் படுத்தினாலும் பழனியம்மாளைக் கல்யாணம் செய்து கொடுத்த பிறகு கூடவா மரியாதையாக நடத்த மாட்டான் என்றெண்ணிச் சகித்துக் காலம் தள்ளி வந்தான்.

திடீரென்று ஊரிலுள்ள ஆடுகள் காணாமல் போயின. யாரோ வேற்று ஊரான் வந்து திருடுவதாக எண்ணினர். அருகில் பாதி தின்ற ஓர் ஆட்டின் உடலைக் கண்ட பிறகுதான் புலி நடமாட்டம் மீண்டும் தொடங்கிவிட்டது என்பதை யாவரும் அறிந்து கொண்டனர்.

வேலுசாமிக்கும் பழைய நினைவு மீண்டது. தன் தந்தையைப் புலி கொன்று உடலைக் கூட காட்டாது இழுத்துப் போனதையும் தன்னையும் அடித்துப் போட்டதையும் நினைத்துக் கொண்டான். அவன் சபதம்... மாரப்பன் மட்டும் இல்லாவிட்டால் அவன் செங்குன்றுப் பக்கம் சுற்றி அந்தப் புலிக்குகையைக் கண்டுபிடித்து அந்தக் குகைக்குள்ளேயே நுழைந்து புலியுடன் சண்டையிட்டுக் கொன்றிருக்க மாட்டானா?

இப்பொழுது ஊரில் புலிப்பயம் ஏற்பட்டவுடன் வேலுசாமிக்குப் பழைய சபதம் வேகமாய் உதித்துக் கொண்டிருந்தது.

சண்முகத்திடம் இதைப் பற்றிக் கூறியதும் அவனும் உற்சாகமுள்ளவன் போல் ஆதரித்தான். அப்படியாவது புலிக்குகைப் பக்கம் சென்று புலியால் தாக்குண்டு மாளட்டுமே என்றுதான்.

பழனியம்மாளின் முறைக்காரன் செங்கோடனும் சண்முகத்தைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தான். தங்கையைக் கட்டிக் கொடுத்தால் சண்முகத்துக்குத் தனியே நிலம் எழுதி வைப்பதாக ஆசை காட்டினான். பரிசம் கூட அதிகம் போடுவதாக வாக்களித்தான். இதற்குக் குறுக்கே நிற்கும் வேலுசாமியைத் தீர்த்தாலல்லவா மீதிக் காரியம்?

எத்தனை நாள் செங்கோடனுக்குச் சமாதானம் கூற முடியும்?

செங்கோடனிடம் வேலுசாமிக்குத்தான் பழனியை மணம் செய்து கொடுக்க வேண்டும் என்று தந்தை கூறியுள்ளதாகவும், உற்றாரெல்லா ருக்கும் தெரியும் என்றும், வேலுசாமி உயிரோடு இருக்கும் வரையில் தன்னால் ஏதும் செய்ய முடியாதென்றும் ஒருநாள் தெரிவித்தான். செங்கோடன் தீவிரமாக யோசித்தான். வேலுசாமியை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

வேலுசாமியைக் கவனித்துக் கொள்ளும் 'பொறுப்பை'ச் செங்கோடன் ஏற்றுக் கொண்டான். ஏதோ சதித்திட்டம் உருவானதைப் பழனியம்மாள் மறைந்திருந்து கேட்டிருந்தவள் வேலுசாமியையும் எச்சரித்து வைத்தாள். வேலுசாமியோ வேலை செய்தது போக ஓய்ந்த நேரத்தில் புலியைத் தேடித் திரிந்தான்.

வழக்கம்போல் அன்று பொழுது சாயும் வேளையில் வேலுசாமி செங்குன்றுப் பக்கமாகப் புலியைத் தேடி அலைந்து வரும்போது பாறையின் மறைவில் யாரோ ஒதுங்குவது போன்ற அரவம் கேட்டது.

ஒருவேளை புலிதானோ என்று எதிர்க்கத் தயாரான வேலுசாமியை சட்டென்று பின்பக்கமிருந்து இருவர் தாக்கினர். அடி பலமாயிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது வேலு திருப்பித் தாக்கினான். பலத்த போராட்டத்தினிடையே தாக்கிய இருவரில் ஒருவன் ஓடி விட்டான். மற்றொருவன் படுகாயத்துடன் கீழே சாய்ந்தான்.

இதற்குள் தப்பி ஓடியவன் செங்கோடனுக்கும் சண்முகத்துக்கும் விஷயத்தை எட்ட விடவே வேலுவை ஒழிக்க இதுதான் வழியென்று முடிவு செய்தனர். அடுத்த சரகத்துப் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஆள் பறந்தது.

வேலுசாமி பழனியிடம் நடந்ததை விளக்கினான். புலியை விட மனிதனின் பொறாமை பயங்கரமாக இருப்பதையும் அந்தப் பொறாமைக்குத் தான் பரிசளித்து விட்டதாகவும் கூறினான். இதனால் விளைவது இன்னும் அதிகமாக இருக்கும் என்றும் இந்த இடத்தை விட்டே போய்விடப் போவதாகவும் கூறினான்.

பழனியம்மாள் விம்மினாள். தனக்காகவா இத்தனை தொல்லையும் துன்பமும் என்பதை எண்ணும்போதே அவளுக்கு என்னவோ செய்தது. துன்பம், துயரம் என்பது அவருக்கு மட்டும்தானா? தனக்கில்லையா? தானும் அவனுடன் வந்துவிடுவதாகக் கெஞ்சினாள்.

ஆனால், வேலு ரகசியமாக அவள் காதோடு காதாக ஏதோ கூறிய பிறகுதான் அவள் முகம் சிறிது மலர்ந்தது. எனினும் எதிர்கால விளைவு அவளைப் பயங்கரத்தில் ஆழ்த்தியது.

வேலுசாமி அங்கிருந்து மறைந்து விட்டான். செங்கோடனின் ஆள் ஒருவனைப் படுகாயப்படுத்திய குற்றம் அவன் மீது சுமத்தப்பட்டது. அவன் தலைமறைவானதால் அவனைக் கைது செய்ய 'வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டது.

வேலுசாமி எங்கோ ஓடி விட்டான் என்றறிந்தவுடன் சண்முகத்துக்கு ஆத்திரம் தாங்கவில்லை. தான் விரித்த வலையினின்று அவன் தப்பி விட்டான் என்றறிந்தவுடன் அவனது ஆக்ரோஷம் அதிகமாகியது. தன் தங்கை அவன் இருப்பிடத்தை அறிவாள். எப்படியாவது அவள் மூலம் வேலுசாமியைப் பிடித்து விடுவது என்று அவளைப் பலவிதங்களில் கேட்டுப் பார்த்தான்; பயனில்லை.

அந்தக் கிராமத்தில் புலியின் அட்டாகம் அதிகமாகிவிட்டது. ஆடு, மாடுகளை அடித்துக் கொன்று இழுத்துப் போனதல்லாமல் கிராமத்தில் முக்கியமானவர்கள் இருவரையும் கொன்று விட்டது. பாதை வழியாக மாலை வேளையில் செல்லவே பயப்பட்டனர்.

சண்முகத்தை அழைத்துக் கிராமத்தில் எல்லாரும் கூட்டம் போட்டனர். சண்முகத்துக்குப் புலியை விட வேலுசாமியைக் கண்டு பிடிப்பதிலேயே கவனம் முழுவதும் இருந்தபடியால் புலியைப் பிடிக்கும் கூட்டத்தில் அவன் யோசனை ஏதும் கூறவில்லை.

கிராம மக்களின் வேண்டுகோளின் பேரில் நான்கு போலீஸ் உத்தியோகஸ்தர்கள் கிராமத்தில் துப்பாக்கி சகிதம் முகாம் போட்டனர். ஆனால், புலியைப் பிடிக்க முடியவில்லை. அதன் அட்டகாசம் குறையவில்லை.

சண்முகம் எப்படியாவது வேலுவைக் கண்டுபிடிப்பதில் முனைந்திருந்தான். அத்துடன் போலீஸும் கிராமத்திலேயே இருந்தது.

அன்று வழக்கத்துக்கு விரோதமாக வெளியே இருந்து வந்த சண்முகம் வீட்டில் தன் தங்கை இல்லாததைக் கண்டான். அவன் சிந்தனை விரிந்தது. வெகு நேரம் கழித்தே பழனி வீட்டிற்கு வந்தாள்.

சண்முகம் எதையும் கேட்கவே இல்லை. இதை வைத்தே வேலுவைப் பிடிக்க வேண்டும் எனத் திட்டமிட்டான். வேலு சமீபத்தில் எங்கோதான் ஒளிந்திருக்கிறான். அவனுக்கு உணவு கொண்டு கொடுக்கத்தான் பழனி போய் வருகிறாள் என்பது அவனுக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது.

மறுநாள் சூரியன் மலை வாயில் விழ வெகு நேரமிருந்தது. பழனி கையில் உணவுப் பாத்திரத்துடனும், தந்தை வெகுகாலம் பாதுகாத்த சிறு கத்தியுடனும் வீட்டை விட்டுக் கிளம்பினாள்.

மாரியம்மன் கோயிலருகே மறைந்திருந்த சண்முகம் மற்றும் இரண்டு போலீஸ்காரர்களை அழைத்துக் கொண்டு பின் தொடர்ந்தான்.

ஒற்றையடிப் பாதை வழியாக விரைந்து சென்ற பழனி தன்னைத் தொடர்ந்து யாராவது வருகின்றனரா என்று திரும்பிப் பார்த்த வண்ணம் சென்றாள்.

செங்குன்றருகே பாறையருகே நின்றாள். கையிலிருந்த பாத்திரத்தையும் கீழே வைத்தாள். சுற்று முற்றும் அவள் பார்த்தது வேலு அங்கே காணப்படாததால்தான். வேலுவைக் காணாதது அவளுக்குப் பரபரப்பை அளித்தது.

பொழுது சாய்வதற்குள் திரும்பி விட வேண்டும். வேலுவின் பிடிவாதம் அவளுக்கு இரண்டொரு நாளாகப் பிடிக்கவில்லை. புலிக்குகைளை அவன் கண்டுபிடித்து விட்டான். அது வெளிக் கிளம்பும்போது தாக்க அவன் திட்டமிட்டிருப்பது அவளுக்கு வேதனையை அளித்தது.

'மறைந்திருந்து புலிவாயில் அகப்பட வேண்டும்; வெளியே வந்தாலோ தண்டனை! எப்படியாவது காப்பாற்று பழனியாண்டவனே!' என்று வேண்டாத பொழுதில்லை.

பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. பழனி பரபரப்படைந்தாள். பாறையின் மீது ஏறிக் கீழே கிடுகிடு பாதாளம் போல் சரிவாக உள்ள இடத்தை நோக்கினாள்.

கீழே ஏதோ உறுமும் ஓசை கேட்டது.

அதோ... நன்றாகத் தெரிகிறது... வேலுவேதான்!

வேலு பாய்வதற்குப் புலியை நோக்கிக் கையில் கத்தியுடன் ஆக்ரோஷமாக நின்று கொண்டிருந்தான்.

பழனி திகிலுடன் கிரீச் என்ற ஒலியுடன் "வேலு... வேலு... ஜாக்கிரதை" எனக் கூவினாள்.

பின்னால் காலடியோசை கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினாள் பழனி. சண்முகமும் மற்றும் இரு போலீஸ்காரர்களும் நின்றிருந்தனர். அவளுக்கு இதயமே நின்று விடும் போலாகிவிட்டது.

சண்முகம் பயங்கரமாகச் சிரித்தான். கீழே கர்ஜிக்கும் புலியின் குரலை விடப் பயங்கரமாக இருந்தது அது.

"தெரியாது என்றாயே கள்ளி!" என்று பல்லைக் கடித்தான். "இந்த நாடகம் எனக்குத் தெரியாது என்று பார்த்தாயா? இங்கே ஒளிந்து கொண்டிருக்கும் அவனுக்குத்தானே சாப்பாடு?" - மீண்டும் சிரித்தான்.

ஆனால், பழனியின் கைகள் எதையோ சுட்டிக் காட்டின. எல்லாரது கண்களும் கீழே நோக்கின. அந்தப் பள்ளத்தாக்கில் அந்தக் கொடும் புலியுடன் கட்டிப் பிடித்து உருண்டு கொண்டிருந்தான் வேலு. எவருக்கும் ஒன்றும் தோன்றவில்லை.

வேலுவின் உடலில் புலியின் கூரிய நகங்கள் ரத்தக் கோட்டைக் கிழித்திருந்தன. அதன் பொல்லாத பற்கள் பதிந்து சதை அப்படியே அப்படியே பிய்த்து தொங்கின.

புலியின் உடலில் வேலுசாமி குத்து மேல் குத்து விட்டுக் கொண்டிருந்தான்.

அந்தக் குத்து மட்டும் அவன் விடாதிருந்தால் அந்தப் புலியின், கடைசித் தாக்குதல் வேலுவைக் களைப்படையச் செய்திருக்கும்.

புலி துள்ளித் துவண்டு கீழே சாய்ந்தது. வேலுவும் தள்ளாடித் தள்ளாடி பாறை மேலே ஏறி வர முடியாமல் சுருண்டு விழ்ந்தான்.

அவன் கண் விழித்தபோது பெரிய ஆஸ்பத்திரிக் கட்டிலில் உடல் முழுவதும் கட்டுகளுடன் கிடப்பதையும் சண்முகமும் குறிப்பெடுக்கும் போலீஸ் அதிகாரிகளும் சூழ நிற்பதையும் கண்டான்.

அவன் உதட்டில் புன்னகையைத் தவழ விட்டவுடன் டாக்டர், ''இனி அபாயமில்லை'' என்றார்.

அங்கிருந்து அகலும் முன் போலீஸ் அதிகாரி, ''இவன் உடம்பு சரியானவுடன் பழைய 'வாரண்டை' உபயோகிக்கலாம்'' என்றார்.

பழனி கட்டிலின் அருகே இருந்து விம்முவது இலேசாகக் கேட்டது.

சண்முகம் தழுதழுத்த குரலில் கூறினான்: ''அந்த 'வாரண்டை' எப்படியாவது ரத்து செய்து விடுங்கள். வேலுசாமி அவர்களை அடிக்கவில்லை. தற்காப்புக்குத்தான் தாக்கினான். காயங்கள் ஆறி உடல்நிலை தெளிந்த அவர்கள் வேலுவின் மீது குற்றமில்லை என்கிறார்கள். விவரம் தெரியாமல் நான் வேலுவின் மீது பழியைச் சுமத்தினேன். தயவுசெய்து வராண்டை ரத்து செய்து விடுங்கள் ஐயா... இந்தக் கிராமத்துக்கே பெரிய அபாயமாயிருந்த புலியைக் கொன்றதோடல்லாமல், என் மனத்திலுள்ள பொறாமை என்னும் புலிக்குகையை வெளிச்சமாக்கி மாற்றிய வேலுசாமிக்கும் துரோகம் செய்ய மாட்டேன். அப்பாவின் விருப்பத்தையும் மீற மாட்டேன்'' என்று விம்மினான்.

வேலுசாமிக்குப் புலியைக் கொன்றதற்காக அரசாங்கப் பரிசுடன், சண்முகமே முன்னின்று நடத்தி வைத்த கல்யாணத்தில் பழனியம்மாளும் பரிசாகக் கிடைத்தாள்.

● ● ● ●

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in



தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

பல சிறுகதைத் தொகுதிகளை முன்பே வெளியிட்டிருக்கும் பெரியவர் விக்கிரமன் அவர்களின் இந்தச் சிறுகதைத் தொகுதி முற்றிலும் வித்தியாச மானது. நூறாவது சிறுகதையை உள்ளடக்கியது. 85 வயதைத் தொட்டு நிற்கும் ஆசிரியர் இந்தக் கதைகள் பலவற்றை எழுதிய காலம் காதலும் மீசையும் அரும்பிய காலம்.

ஏறத்தாழ அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு மன்னர் எழுதப்பட்ட கதைகளும் உண்டு. 1945ல் 'கல்கி' வார இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் தேர்வாகி வெளியான கதையும் இவருடைய 100 கதைகள் தொகுதியில் இருக்கிறது.

இளமை மாறாமல் அவர் இன்னும் எழுதவேண்டும். குறிப்பாக சிறுகதைகள் எழுதவேண்டும். துரதிர்ஷ்ட வசமாக நல்ல சிறுகதை எழுதுகிறவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகத் தோன்றுகிறது.

கதை கட்டுரை ஆசிரியர் **திரு. சுப்ரபாலன்**